
ம.பொ.சிவஞானம்

கம்பரிடம் யான் கற்ற அரசியல்



பூங்கொடி
பதிப்பகம்

கம்பரிடம் யான் கண்ட அரசியல்

சிலம்புச்செல்வர்
ம.பொ.சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்
22, வி. எஸ். வி. கோயில் தெரு
மயிலாப்பூர் : சென்னை-4

முதற் பதிப்பு : 26-5-79
உரிமை ஆசிரியருக்கு

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களின்
74-ஆம் ஆண்டு பிறந்தநாள் வெளியீடு—2

விலை ரூ 8-50

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்
சென்னை-14

முன்னுரை

கவிச்சக்கரவர்த்தி கம்பர் இயற்றியருளிய இராமாயண காப்பியத்தில் எனக்கு மிகுந்த பற்றுண்டு. எனக்குள்ள தமிழ்ப்பற்றுக் காரணமாகவும் நான் கம்பனிடம் காதல் கொண்டேன். நாட்டில் நடைபெறும் கம்பர் விழாக்களிலே கலந்துகொண்டு யான் பேசியவற்றையும், 'செங்கோல்' வார இதழில் யான் அவ்வப்போது எழுதியவற்றையும் தொகுத்து, "கம்பனிடம் யான் கற்ற அரசியல்" என்னும் பெயரில் இந் நூலை வெளியிட்டுள்ளேன்.

"கம்பனிடம் யான் கற்ற அரசியல்" என்ற தலைப்பில் இந்நூலில் தனியாக ஒரு பகுதி உள்ளது. அது, யான் புதுவை கம்பர் விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவாகும். அதையே இந் நூலின் தலைப்பாக்கி இருக்கின்றேன்.

கம்பனைப் பல கோணங்களிலிருந்து பார்த்தபோது என் மனத்தில் எழுந்த புதிய புதிய எண்ணங்களை இந்நூலில் தந்துள்ளேன்.

இலக்கிய ரசிகர்களுக்கு எனது 74-வது பிறந்த நாள் விருந்தாக இந்நூலை அளிக்கிறேன்.

இந்நூலைச் சிறந்த முறையில் வெளியிட்டுள்ள பூங்கொடி பதிப்பகத்தாருக்கு எனது பாராட்டு.

சென்னை
6—6—79

ம. பொ. சிவஞானம்

பொருளடக்கம்

முப்பெருங் கவிஞர்களின் பாராட்டு

கம்பர், மகாகவி. பன்னீராயிரம் கவிதைகளால் ராமாயணத்தைப் பாடியவர். வழிநூல்தான் என்ருலும், மூல நூலான வான்மீகத்தையும் வென்று நிற்கின்றது. கம்ப ராமாயணம், இந்து மத—அதிலும், வைணவ சமயக் காப்பியந்தான் என்ருலும், சமயங் கடந்த நிலையில், இந்துக்கள்—இஸ்லாமியர்—கிறித்துவர் ஆகிய எல்லோராலும் போற்றப்படும் பொதுக் காப்பியமாகி விட்டது.

வெற்றி வீரர்!

வேறு எந்தக் காப்பியத்திற்கும் தோன்ருத அளவில் பயங்கரமான எதிர்ப்பு கம்ப ராமாயணத்திற்கு ஏற்பட்டது என்ருலும், அந்த எதிர்ப்பு மறைந்து, எதிர்த்தவர்களாலும் போற்றத்தக்க வகையில் வெற்றி வாகை சூடியிருக்கிருர் கம்பர். ஆம்; இப்போது கம்பரை எதிர்ப்போரில்லை. தன்னை எதிர்த்தவர்களின் ஆட்சியும் தனக்கு சிலை நிறுத்தி விழாக்கொண்டாடு மளவுக்குக் கம்பர் வெற்றி பெற்று விட்டார்.

''கம்பனேடு கவிதை போயிற்று'' என்று நாட்டில் ஒரு பழமொழியுண்டு. சுப்பராம தீட்சிதர் மீது பாடிய இரங்கற் பாவிலே, "உயர் கம்ப நாடனுடன் கவிதை போயிற்று'' என்ற வாசகத்தைச் சேர்த்து, அந்தப் பழமொழிக்கு இலக்கிய மெருகேற்றினுர் பாரதியார்.

"கம்ப நாடன் கவிதையைப் போல் கற்ருேர்க்கிதயம் களிக்காதே!''—இது, பண்டிதர் போற்றும் பாடல் மொழி. "விருத்தப் பாவுக்குத் திருத்தக்க தேவர்'' என்பது பழமொழியாயினும், அந்தத் திருத்தக்க தேவரையும் வென்று

'விருத்தப் பாவின் வேந்தன்'' என்று சொல்லத்தக்க பெருமையைக் கம்பர் பெற்றுவிட்டார்.

கம்பனென்ற மானிடன்

பாரதப் பெருநாட்டின் பெருமைக்கு வடபுலத்தில் பிறந்த காளிதாசனையும், பாணினியையும், பாஸ்கரனையும் சான்று காட்டும் பாரதியார், அந்தப் பட்டியலிலே கம்பரை யும் சேர்த்து மகிழ்கின்றார்.

''கம்ப னென்றொரு மானிடன் வாழ்ந்ததும்
காளிதாசன் கவிதை புனைந்ததும்
உம்பர் வானத்துக் கோளையும் மீனையும்
ஓர்ந்த ளந்ததோர் பாஸ்கரன் மாட்சியும்
நம்ப ருந்திற லோடொரு பாணினி
ஞால மீதில் இலக்கணங் கண்டதும்''

என்பது பாரதியாரின் வாக்கு.

மரபு மொழி படைத்தவன்

''கம்பனென்றொரு மானிடன் வாழ்ந்ததும்'' என்ற வரி யிலே கம்பரை மானிடனாகக் கூறியிருப்பினும், அது கம்பனு டைய தெய்வத் தன்மையைக் குறைத்ததாகாது. ''கம்பன் இசைத்த கவியெலாம் நான்'' என்று தெய்வமே சான்று புகன்றதாகச் சாதித்தவரல்லவா? அவர், ''கம்பனென்றொரு மானிடன்'' என்று கூறியது, அவன் பிறந்ததால், மனித சமுதாயம் பெருமை பெற்றுவிட்டதென்பதனை உணர்த்தத் தான்! திருமால் மானிட வடிவில் இராமனாக வந்து மண்ணில் பிறந்ததால், தேவ குலத்தையும் வென்று விட்டது மானிட சமுதாயம் என்பதனை சுக்ரீவனைக்கொண்டு கம்பர் கூறுகிறார்.

தேறினான் 'அமரர்க்கு எல்லாம்
தேவர் ஆம் தேவர் அன்றே;
மாறி, இப் பிறப்பில் வந்தார்
மானிடர் ஆகி மன்னோ;

ஆறு கொள் சடிலத்தானும்
அயனுமென் றிவர்கள் ஆதி
வேறுள குழுவை எல்லாம்
மானிடம் வென்றது' அன்றே!

இது, சுக்ரீவனின் சிந்தையாக நட்புக் கோட்படலத்துள் கம்பர் தரும் செய்தி.

"அரி, அரன், அயன், மற்றுமுள்ள தெய்வங்கள் ஆகியோரை மானுடம் வென்றது" என்பது கம்பர் கருத்து. அதையே கம்பருக்கும் பொருத்தி, "கம்பனென்றொரு மானிடன் பிறந்ததால் தேவ குலத்தைத் தமிழ் இனம் வென்று விட்டது" என்கிறார் பாரதியார்.

கம்பருக்குப் பின் தோன்றிய கவிஞர் பெருமக்கள் எல்லாம் அவரையே முன்னோடியாகக் கொண்டு, கவிதைகளையும் காப்பியங்களையும் படைத்துள்ளனர். இஸ்லாமியருக்கென உமறுப் புலவர் இயற்றிய சீறாப் புராணத்திலே, கம்பருடைய கை வண்ணத்தைக் காண முடிகின்றது. கிறிந்துவருக்கென வீரமா முனிவர் படைத்துள்ள தேம்பாவணிக் காப்பியத்திலேயும் கம்பருடைய சாயலைக் காண முடிகிறது.

கம்பனைப் பற்றிய பழமொழிகள் கூடப் பிறந்துவிட்டன. "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்பது பழமொழி. கவிதையின் சிறப்பைப் பற்றி விவாதிக்கும் போது, "அது என்ன கம்ப சூத்திரமோ?" என வினா எழுப்புவது வழக்கமாகி விட்டது.

இந்திரசித்தனை வீழ்த்திய இலக்குவனைப் பார்த்து, "தம்பி உடையான் பகையஞ்சான் என்னும் மாற்றம் தந்தனையால்" என்கின்றான் இராமபிரான். இதில் உள்ள 'தம்பி உடையான் பகை அஞ்சான்' என்ற உரை, நாட்டிலுள்ள கல்வி வாசனையற்ற பாமரர்களும் சொல்லும் பழமொழியாகி விட்டது. இப்படி, எத்தனை எத்தனையோ பழமொழிகள் கம்பன் புகழைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

வாரிசுகளைப் பெற்றவன்

இந்த நூற்றாண்டில் நம்மிடையே வாழ்ந்து மறைந்த சுப்பிரமணிய பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை ஆகியவர்கள் கம்பனைப் போற்றிப் பாக்கள் பாடியுள்ளனர். 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ் நாடு' என்கிறார் பாரதியார். கம்பன் பிறந்ததால் தமிழ்நாட்டுக்குப் பெருமை ஏற்பட்டு விட்டதாம். அயல் நாடுகளுக்குச் சென்றால், அங்குள்ளவர்கள், "காந்தி நாட்டி லிருந்தா வருகிறீர்கள்?" என்று கேட்கின்றனர். அதுபோல, கம்பன் நாட்டவர் என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளவும் நமக்கு உரிமையுண்டு.

கண்ணபெருமான் 'கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்' என்று சொல்வதாக பாரதியார் கற்பனைசெய்துள்ளார். ஆம், கம்பர் இசைத்த கவிதைகளிலே ஒவ்வொன்றும் தெய்விகமானது என்பது பாரதியாரின் கருத்து. தெய்வத் தமிழிலல்லவா பாடியிருக்கிறார்.

கம்பரை அறியாத ஆங்கிலங் கற்றவர்களைப் பார்த்து, 'கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததை உணராதவர் களுக்கு என்ன கூறி மற்றெங்கண் உணர்த்துவேன், இங்கிவர்க் கெனதுள்ளம் எரிவதே!' என்கிறார் பாரதியார். கம்பர் காப்பியத்தைக் கற்றறியாதவர்களைக் கற்றவர்கள் என்று சொல்லக்கூடா தென்பது அவர் கொள்கைபோலும்.

கவிமணி தேசிக விநாயகனார், கம்பனுக்கு எதிர்ப்பு தோன்றியபோது, கம்ப ராமாயணத்தைக் கொளுத்துவதற் கென்றே மாநாடு நடத்தப்பட்டபோது,

"ஓலை எரியும் தாளெரியும்
உள்ளத் தெழுதி வைத்துநிதம்
காலை மாலை ஓதுகவி
கனலில் வெந்து கரிந்திடுமோ?"

என்று வேதனை உள்ளத்தோடு வினா எழுப்பினார். 'இன்று

தமிழுக்குள்ள பெருமைக்கு தலைக் காரணம் கம்பன்தானே?' என்றும் கேட்கிறார் கவிமணி.

பாரில் பெயரோங்கு
　　பன்மொழிக்கும் நாணுது
நேரில் நிமிர்ந்து தமிழ்
　　நிற்பதுதான்—சீருயர்ந்து
ஏறுபுகழ் கம்பன்
　　இராமகதை யால்வந்த
வீறுகொண் டென்று விளம்பு.

அம்புவிக்கு வாய்த்த
　　அருட்கவி; ஐயமின்றி
உம்பரமு தொத்த
　　உயிர்க்கவி—கம்பனுந்தன்
மந்திரச் சொல்லால்
　　வனைந்தகவி என்றேனும்
வெந்திடுமோ, தீயால் விளம்பு.

இந்தக் கவிதையிலே வரிக்கு வரி கவிமணியின் இதயம் பேசுகிறது.

கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளையவர்கள் கம்பனைப் புகழ்ந்து ஒரு பதிகமே பாடியுள்ளார். அது வருமாறு:

எண்ணி எண்ணித் திட்டம்போட் டெழுதி னானே!
　　எண்ணாமல் எங்கிருந்தோ கொட்டி னானே!
புண்ணியத்தால் உடன்பிறந்த புலமை தானே!
　　போந்த பின்னர் ஆய்ந்தறிந்து புகன்ற தாமோ!
தண்ணியல்சேர் தமிழணங்கின் தவமே தானே!
　　தயரதனும் சனகனுமே தரித்த நோன்போ!
விண்ணமுதின் சுவைகெடுத்த கம்பன் பாடல்
　　விரிந்தவிதம் என்றென்றும் வியப்பே யாகும்!

மால்கடிந்த தவமுனிவான் மீகிஎன்பான்
வனத்திடையே தான்கண்டு கொண்டு வந்த
பால்படிந்து, முள்அடர்ந்து, பருத்து நீண்டு
பரிமளிக்கும் பலவின் கனி பாருக்கு ஈந்தான்
மேல்படிந்த பிசின்அகற்றி, மெல்லக கீறி
மெதுவாகச் சுளை எடுத்துத் தேனும் வார்த்து
நூல்படித்த மனத்தவர்க்கு விருந்து வைத்தான்
கம்பன்என்ற தமிழ்த்தாயார் நோற்ற மைந்தன்

கம்பர் தம்முடைய கவிதைகளிலே கடவுளையே காட்டு கிறார் என்கிறார் கவியரசர் பாரதியார். அவர் தமது காப்பியத்தில் போதிக்கும் ஒழுக்க நெறிகளைக் கடைப் பிடித்து வாழ்ந்தால் மானுடர் தேவராகலாம் என்பது பாரதி யின் நம்பிக்கை. 'தமிழ்ச்சாதி' என்னும் தலைப்பிட்டுப் பாடிய கவிதையிலே,

''விதியே! விதியே! தமிழ்ச் சாதியை
என்செயக் கருதி இருக்கின் றாயடா?''

என்று விதிக்கு வினா விடுக்கின்றார்.

''எல்லையொன் றின்மை, எனும்பொரு ளதனைக்
கம்பன் குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும் முன்புநான் தமிழ்ச்
சாதியை ''அமரத் தன்மை வாய்ந்தது'' என்று
உறுதிகொண் டிருந்தேன''

என்கிறார் பாரதி. கம்பருடைய கவிதையால் தமிழ்ச் சாதி மரணத்தை வெல்லும் சக்தி படைத்து விட்டதாம். இது, பாரதியின் நம்பிக்கை.

சர்வகலா வல்லவன்

மொழிப் பற்றும் நாட்டுப்பற்றும் தெய்வப் பற்றும் நெஞ்சில் நிறைந்திருந்தால் மட்டுமே கம்பனைப் புரிந்து கொள்ள முடியும். கவிதை நயத்துக்காக மட்டும் கம்பனை

அணுகுவது அவனைச் சரியாகப் புரிந்து கொள்ளப் பயன் படாது. அவன் வெறும் கவிஞன் மட்டுமல்லன், தத்துவ மேதையுமாவான், ஆன்ம ஞானியுமாவான்.

குரங்குகளைப் பேச வைக்கும்போது, அதற்கென ஒரு தனிப் பாணியைக் கையாள்கிறான். அரக்கர்களைப் பேச வைக்கும்போது, அவர்களுடைய பண்பின்மையை வெளிப் படுத்துகிறான். அரண்யத்து முனிவர்களைப் பேச வைக்கும் போது, அவர்களுடைய வாக்கிலே மெஞ்ஞான ஒளியைக் காட்டுகிறான். காப்பிய நாயகனான இராமனின் வாக்கிலே தெய்விக ஒளியைப் புலப்படுத்துகிறான். அசோக வனத்தில் சிறைப்பட்ட சீதையின் பேச்சிலே, பெண்மையின் பெருமை யைக் காட்டுகிறான். ஆம்; கம்பன், சர்வகலா வல்லவன்.

தமிழ்ப் புலவர்களிலே அவனுக்கிணை அவன்தான். அவன் வடமொழி அறிந்தவன். வடமொழியைக் கற்றதால் அவனுக்கும் தமிழுக்கும் இழுக்கோ இழப்போ ஏற்பட்டு விடவில்லை. அவன் பெருமை உயர்ந்தது. தமிழின் வளத்தை உலகறிய முடிந்தது. முதல் நூலான வான்மீகி இராமா யணத்தை வடமொழிப் புலவர் ஒருவர் மொழி பெயர்த்துச் சொல்லக் கேட்டு, தமிழில் வழிநூல் படைக்கவில்லை கம்பன். தானே வடமொழியில் நிறை புலமைபெற்று, வான்மீகி ராமாயாணத்தைப் படித்து, அந்த மகாகவியின் உள்ளத்தை உணர்ந்து வழிநூல் படைத்தான். அது, முதல் நூலுக்குரிய பெருமையைப் பெற்று விட்டது.

அமரர் தலைவன் ஆயிரங்கண் பெற்றதேன்?

கம்ப ராமாயணத்திலுள்ள அகலிகைப் படலமானது ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு உரியதாக அமைந்துள்ளது. அந்தப் படலம் முதல் நூலான வான்மீகி ராமாயணத்தில் உள்ளது தான் என்றாலும், அகலிகையின் வரலாற்றைச் சொல்வதிலே வான்மீகி ராமாயணத்தி லிருந்து பெருமளவுக்கு வேறுபடு கின்றது கம்ப ராமாயணம். இந்த வேறுபாடானது சங்க காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கியங்களையும் ஆராயத் தூண்டுகிறது. அப்படி ஆராய்ந்தும் தெளிவுபெற முடியாதபடி ஐயப்பாடுகள் இருக்கின்றன.

அகலிகையின் கதை

முதலில் கம்ப ராமாயணத்திலுள்ள அகலிகையின் வரலாற்றை ஆராய்வோம். கௌதம முனிவருடைய பத்தினி யான அகலிகைபால் மோகம் கொண்ட இந்திரன், முனிவர் இல்லாத இரவு நேரத்தில், அவரைப் போன்று உருவங்கொண்டு ஆசிரமத்தினுள் நுழைகின்றான். அவனை கௌதமர் என்றே கருதி, அவனது இச்சைக்கு ஆட்படுகிறாள் அகலிகை. இந்நிலையில், அகலிகை எதிர்பாராத விதமாக கௌதமர் ஆசிரமத்திற்கு வர, பூனை வடிவம் கொண்டு அவரது பார்வையிற்படாமல் தப்பியோட முயல்கிறான் இந்திரன்.

நடந்தவற்றை யெல்லாம் தமது ஞான திருஷ்டியால் கண்டறிந்து, இந்திரன்பால் அடங்காச் சினங்கொண்டவராகி, "ஆயிரம் மாதர்க்குள்ள அறிகுறி உனக்கு உண்டாக!" என்று முனிவர் சபிக்கிறார். பெண்குறியை விரும்பி முனிவர் மனைவியை வஞ்சித்த இந்திரனுடைய உடல் முழுவதிலுமாக ஆயிரம் பெண் குறிகள் தோன்றின.

இந்திரன் சாபம் பெற்றதையறிந்த பிரமன் முதலான தேவர்கள் கௌதமரை அணுகிச் சாபவிமோசனம் தருமாறு அவரை வேண்டினர். அவரும் மனமிரங்கி, "பெண் குறிகள் ஆயிரமும் பிறர் பார்வையிலே ஆயிரம் கண்களாகத் தெரியட்டும்" என்று கூறினர். இத்துடன் அமையாமல், தன் மனைவி அகலிகையின்பாலும் சினங்காட்டி, "விலைமகளான நீயும் கல்வடிவமாகுக" என்று முனிவர் சபித்தார். அவளும் சாபவிமோசனம் வேண்ட,

'தசரதராம னென்பான்
கழற்றுகள் கதுவ, இந்தக் கல்உருத் தவிர்தி'

என்று கூறி, சாப விமோசனம் தந்தார்.

இது, கம்ப ராமாயணத்திலுள்ள அகலிகைப் படலம் கூறும் கதை. வான்மீகியிலுள்ள அகலிகை வரலாற்றையும் அறிவோம்.

வான்மீகி கம்பர் வேறுபாடு

வான்மீகியிலே, கௌதமர் உருவங்கொண்டு ஆசிரமத்துள் புகுந்த இந்திரனை, அவன் இந்திரன் என்பதை அறிந்தே அவனது இச்சைக்கு உடன்பட்டு, கற்பை இழக்கிருள் அகலிகை. இந்நிலையில், கௌதமர் ஆசிரமத்தை அணுக, அவரது வருகையை அறிந்த அகலிகை, முனிவர் கண்ணில் படாமல் சென்று விடுமாறு இந்திரனுக்கு ஆலோசனை கூறுகிருள். அவன், தன் இயற்கை வடிவத்திலேயே ஆசிரமத்தை விட்டு வெளியேற முயல்கிருன். எதிரில் வந்த கௌதமர் அவனைக் கண்டுவிட்டார். அவர், ஞான திருஷ்டியால் நடந்ததையறிந்து, "நீ உன் பீஜங்களை இழப்பாயாக!" என்று சபித்தார். அகலிகையை நோக்கி, "நீ விபசாரம் புரிந்ததால், பிறர் கண்களுக்குத் தெரியாத அரூபியாகி, காற்றை உண்டு, பல ஆண்டுகள் வாழ்ந்து, பின்னர், இராமனது வருகையால் பழையபடி பெண் உருவம் பெறுவாயாக!" என்று முனிவர் சபித்தார்.

வான்மீகியிலே, முனிவரின் பார்வையிற் படாமல் தப்பி யோட முயன்ற இந்திரன் பூனை உருவம் கொள்ளவில்லை. தன் சுய உருவத்துடனேயே தப்பியோட முயல்கிறான். கம்பரோ, பூனை உருவம் கொண்டதாகக் கூறுகிறார். வான்மீகியிலே 'ஆண்மையை இழப்பாயாக!' என்றுதான் இந்திரனை முனிவர் சபிக்கிறார். கம்பரோ, "ஆயிரம் மாதர்க்குள்ள குறி நினக்கு உண்டாகுக!" என்று சபிக்கிறார்.

வான்மீகியிலே, சாபம் பெற்ற இந்திரன் சாபவிமோசனம் எதையும் முனிவரிடம் வேண்டவும் இல்லை; அவர் தரவும் இல்லை. கம்பனிலே, இந்திரன்பால் அனுதாபங்கொண்டு பிரமன் முதலிய தேவர்கள் சாப விமோசனம் வேண்ட, "பெண் குறிகள் ஆயிரமும் கண்களாக பிறர் பார்வைக்குத் தோன்றுவனவாக" என்று முனிவர் கூறுகிறார்.

சங்க இலக்கியங்களிலே...

கம்பனில் காணப்படும் வேறுபாடுகள் அவனுடைய சொந்தக் கற்பனைகள் என்று புலவர்களில் பலர் கருதுகின்றனர். ஆனால், ஆராய்ச்சியிலே அந்த நம்பிக்கை பொய்த்து விடுகிறது. காலத்தால் வான்மீகிக்குப் பிற்பட்டதும் கம்பனுக்கு முற்பட்டதுமான "பரிபாடல்" என்னும் சங்க இலக்கியத்திலே,

> **"இந்திரன், பூசை; இவள் அகலிகை; இவன்**
> **சென்ற கவுதமன்; சினன உறக கல்உரு**
> **ஒன்றிய படியிது"** (பரிபாடல் 19: 50—52)

என்ற வரிகள் காணப்படுகின்றன.

திருப்பரங்குன்றத்திலுள்ள முருகன் கோயில் சுவற்றிலே அகலிகை வரலாற்றைக் காட்டும் சித்திரம் பற்றிய செய்தி இது.

இதனால், பூனை வடிவத்துடன் இந்திரன் தப்பியோட முயன்றதாக வான்மீகியிட மிருந்து வேறுபட்டு கம்பர் கூறுவது, அவரது சொந்தக் கற்பனை அன்று; பரிபாடலி

லிருந்து எடுத்துக் கொண்டது என்பது புலப்படுகின்றது. ஆனால், பரிபாடலிலும் இந்திரன் ஆயிரம் பெண் குறிகள் தன் உடலில் தோன்றுமாறு சாபம் பெற்றதாகச் செய்தி இல்லை.

நக்கீரரின் திருமுருகாற்றுப் படையிலே வரும் "நூற்றுப் பத்தடுக்கிய நாட்டத்து" என்னும் வார்த்தைக்கு, "ஆயிரம் கண் என்றவாறு" எனப் பொருள் கூறுகிறார் உரையாசிரியர் நச்சினார்க்கினியர். இது, இந்திரனுக்கு ஆயிரங்கண்கள் இருந்ததுபற்றிய குறிப்பாகும்.

சிலப்பதிகாரத்திலேயும், இந்திரனுக்கு ஆயிரங்கண்கள் உண்டு என்ற செய்தி கிடைக்கிறது.

"ஆயிரங் கண்ணோன் செவியகம் நிறைய" (சிலம்பு 6:20)

"ஆயிரங் கண்ணோன்
அருங்கலச் செப்பு" (சிலம்பு: 14-68)

சிலம்பிலுள்ள இந்த வரிகள், இந்திரன் தனது உடலிலே ஆயிரம் கண்களைப் பெற்றிருந்தான் என்பதனை உறுதிப் படுத்துகின்றன. ஆனால், திருமுருகாற்றுப் படையிலும் சரி; சிலம்பிலும் சரி; கௌதமர் தந்த சாபத்தால்தான் இந்திரன் தனது உடம்பில் ஆயிரங் கண்களைப் பெற்றான் என்று கூறப் படவில்லை.

ஆயிரங்கண் பெற்றதெப்படி?

இதனால், அகலிகை காரணமாக இந்திரன் சாபம் பெற்ற தற்கும் அவனது உடலில் ஆயிரம் கண்கள் அமைந்ததற்கும் தொடர்பு இருக்க முடியாது என்றே தோன்றுகிறது. தேவர் தலைவனானதால், தெய்விகக் காரணத்தால், அவனது உடலில் ஆயிரம் கண்கள் அமைந்திருக்கலாம். வான்மீகி யிலும் இந்திரனுக்கு ஆயிரம் கண்கள் உண்டு என்ற செய்தி அகலிகைப் படலத்திலேயே கிடைக்கிறது. ஆனால், அதற்கும் கௌதமரிடம் இந்திரன் பெற்ற சாபத்திற்கும் தொடர்பு சொல்லப்படவில்லை.

இந்திரன் தனது உடலில் ஆயிரங் கண்கள் பெற்றதற்கு ஒரு இலக்கியத்திலும் சான்று கிடைக்கவில்லை. திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரரோ, சிலம்பு அருளிய இளங்கோவடிகளோ இந்திரனுக்கு ஆயிரம் கண்களைத் தாங்களாகவே கற்பித்துக் கூறினார்கள் என்றும் சொல்வதற்கில்லை. ஏனெனில், இதனை உவமைப் பொருளாகவே அவர்கள் கையாண்டுள்ளனர்.

திருமுருகாற்றுப் படையிலும் சரி; சிலம்பிலும் சரி; இந்திரன் தமிழ் மக்களின் வழிபாட்டுக்குரிய தெய்வமாகவே கூறப்படுகிறான். ஆகவே, அவன் ஆயிரம் கண்கள் பெற்றதற்கும் சாபக் கதைக்கும் சம்பந்தம் இருப்பதற்கில்லை. இந்திரனாவன் தனது உடலில் ஆயிரம் கண்களைப் பெற்றது எதனால் என்பதனை அறிய வடமொழி இலக்கியங்களைத்தான் ஆராயவேண்டும் போலும்!

கம்பர் தந்த கடுந்தண்டனை!

இது எப்படியாயினும், இந்திரனுடைய உடம்பில் ஆயிரம் பெண் குறிகள் அமையவேண்டுமென்று கௌதமர் சபித்ததாகக் கம்பர் கூறுவது, முழுக்க முழுக்க அவருடைய சொந்தக் கற்பனையேயாகும். கௌதம முனிவரின் பத்தினியைக் கற்பழித்த இந்திரனுக்குக் கடுந்தண்டனை விதிக்க வேண்டுமென்று கம்பருக்குத் தோன்றுகிறது. ஆண்குறி அற்றுப் போகுமாறு வான்மீகி தண்டித்தது, குற்றத்திற்கேற்ற தண்டனையல்ல என்று கம்பர் கருதியிருக்கக் கூடும். அதனால், அவன் எதை விரும்பினானோ அதையே அவன் உடல் முழுவதும் படைத்து, அவனைக் காண்போர் கை கொட்டிச் சிரிக்குமாறு அவனுக்குக் கம்பர் கடுந்தண்டனை விதித்துவிட்டார். ஆயிரம் பெண் குறிகளும் கண்களாக மாறும் வகையில் கௌதமர் சாப விமோசனம் தந்தார் என்று கம்பர் கூறுவது, சங்க இலக்கியங்களிலுள்ள செய்தியை அகலிகையால் இந்திரன் சாபம் பெற்ற கதையோடு பிணைத்துச் சொன்னதாகும்.

மந்தரையாள் கிழவியா?

ராமாயணக் கதையில் வரும் மந்தரையைப் படுகிழவி யாகக் காட்சிப்படுத்துகின்றனர் நாடக, திரைப்படக் கலைஞர்கள். வான்மீகியிலோ, கம்பனிலோ இதற்குச் சான்று இல்லை. அரசர், செல்வந்தர் ஆகியோரின் அரண்மனைகளில் கூனரும் குறளரும் இருப்பதுண்டு. அந்த வகையில்தான் கைகேயியின் அரண்மனையில் மந்தரை இருந்து வந்தாள். அவள் பிறவியிலேயே கூனி. முதுமையிலே கூன் விழுவது வேறு. பிறப்பிலேயே முதுகு கூனிப்பிறப்பது வேறு. மந்தரை முதுமையால் முதுகு வளைந்த கூனியன்று; பிறப்பிலேயே கூனி யாகப் பிறந்தவள். இராமனுடைய முடிசூட்டு விழாவைத் தடுக்க மந்தரை சதி செய்தபோது, அவள் கிழவியல்லள்; பருவ மங்கைதான்!

கைகேயியின் வருணனை

வான்மீகியிலே, மந்தரையின் வலையில் விழுந்துவிட்ட கைகேயி, அவளை அழகிய மங்கையாகவே வருணிக்கிறாள் இதோ :

''கூனிகள் மிகக்கொடிய கெட்ட நடவடிக்கையுள்ளவர்க ளென வழங்கப்படுகின்றார்கள். யாவராலும் விரும்பப் படு கின்றதாகிய குணமொன்றைக் கொண்டு, தாமரை மலர் எப்படியோ அப்படியே முதுகு வளைந்துள்ள நீ ஒருத்தி நல்லவர்களுக்கு ஓர் உதாரணமாய் விளங்கப் போகின்றனை.

''கூனி! உனது மார்பு தோள்வரையிலும் உயர்ந்து அழகாய் விளங்குகிறது. அதற்குக் கீழே அழகு வாய்ந்த கொய் பூழையுடைய வயிறும் வெட்கம் கொண்டது போன்றதாகி இளைத்து உள்ளடங்கி இருக்கிறது.

"மந்தரே! நீ எவ்வளவு அழகாய் விளங்குகின்றனே? முதுகின் கீழ்ப்பாகம் அகன்று விசாலமாய் இருக்கின்றது. கொங்கைகள் இரண்டும் அழகாய்ப் பருத்திருக்கின்றன. முகம் மாசில்லாத சந்திரனுக்கு நிகராய் விளங்குகின்றது.

"உனது இடுப்பு அரை நூல் ஒட்டியாணத்தால் பிரகாசிக் கின்றதாய் மிக்க அழகாய் விளங்குகின்றது.

"தொடைகள் இரண்டும் நன்ருய் இசைந்திருக்கின்றன. கால்கள் இரண்டும் நீண்டிருக்கின்றன.

"மந்தரே! என் முன்னே நீண்ட தொடைகளுடன் வெண் பட்டாடை யணிந்தவளாய் வந்து சேர்ந்திருக்கிற நீ அரச அன்னம்போல விளங்குகின்ருய்."

கம்பரும் கூனியைக் கிழவியாகக் காட்டவில்லை. கைகேயி தசரதனை மணந்து, அயோத்திக்கு வந்தபோது, அவளுடன் தோழிப் பெண்ணுக மந்தரையும் வந்தாள் என்கிருர் கம்பர். கைகேயியை வசப்படுத்த முயலும்போது, "நீ என்தோழி யல்லவா? என் துணைவியல்லவா?" என்கிருள் கூனி.

கூனியின் வலையில் விழுந்துவிட்ட கைகேயியானவள், 'கூனியை உவந்தனள்; உயிருறத் தழுவினள்; நிரைத்த மாமணி ஆரமும் நீட்டினள்' என்கிருர் கம்பர். மந்தரையின் கழுத்தில் அழகிய மணியாரத்தைக் கைகேயி அணிவித்தாள் என்ருல், அவள் கிழவியாக இருக்க முடியுமா?

இப்படி, அழகிய பருவ மங்கையாகக் கவிஞர்கள் வருணித்த கூனியை, கையில் தடியூன்றி, நடுங்கும் உடலுடன் நடமாடும் படுகிழமாக நாடகக்காரர்கள் மாற்றிவிட்டனர்.

சிலப்பதிகாரத்திலும் ஒரு கூனியைப் பார்க்கிருேம். அவள் மாதவியின் தோழி. அவளையும் கிழவியாக அல்லாமல் பருவ மங்கையாகவே படைத்துள்ளார் இளங்கோ. அவளை, "மானமர் நோக்கி கூனி" என்கிருர். "மான் போன்று மருட்சி

யுடன் பார்க்கும் கண்ணுடையவள்'' என்பது இளங்கோவின் வருணனை. இப்படிப்பட்டவள் படுகிழமாக இருக்க முடியுமா? நாடகாசிரியர்கள்.

இராமாயணக் கதையிலே வான்மீகியோ கம்பரோ சொல்லாத இன்னொன்றையும் அவர்கள் சொன்னதாகக் கற்பித்துள்ளனர்.

நாடகக் கலைஞர் செய்த மற்றொரு தவறு

தாடகை வதைப் படலத்திலே பெண் என்ற காரணத்தால் தாடகைமீது அம்புவிடத் தயங்குகிறான் இராமன். அப்போது, "இவள் பிறப்பால் பெண்ணாயினும், பெற்ற குணங்களால் ஆண் போன்றவள். ஆதலால், இவளைக் கொல்வதில் பாவமில்லை'' என்று விசுவாமித்திரர் கூறியதாகச் சொல்கின்றார் வான்மீகி.

கவியரசர் கம்பரும் வான்மீகியையே பின்பற்றியுள்ளார். 'பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைத்தான்' என்கிறார் கம்பர். தாடகை மீது அம்பெய்யத் தசரதன் மகன் தயங்குவதை அறிந்த விசுவாமித்திர முனிவர், "இக்கொடியாளையும் மாது என்று எண்ணுவதோ, மணிப்பூணினாய்?'' என்று இராமனைக் கேட்கின்றார். "இவள் உருவத்தால் பெண்ணாயினும் உள்ளத்தால் ஆணை ஒத்தவளே'' என்றும் கூறுகின்றார். அவள் இந்திரனை வென்ற செய்தியையும் சொல்லுகின்றார்.

பிற்கால நாடகக்காரர்கள், "இராமா! இவள் பெண்ணல்ல; பேய்!'' என்று விசுவாமித்திரர் கூறுவதாக சுவைமிக்க சொற்களால் கவிதை படைத்தனர். அதனால், வான்மீகியும் கம்பருமே தாடகையைப் பேய் என்று சொன்னதாக மக்கள் தவறாகக் கருதுகின்றனர்.

அண்மையில் நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலின் போது ஒரு பெரிய கட்சியின் தலைவர், தனக்குப் பிடிக்காத

இன்ஞெரு கட்சியின் பெரும் புகழ் பெற்ற தலைவியை, "இவள் பெண்ணல்ல; பேய்!" என்ற இராம நாடக வசனத்தை வான் மீகியும் கம்பரும் சொன்னதுபோல வருணித்துச் சொன்னூர்.

இது, இராமாயணக் காப்பியத்தின்—ஏன், இராமாவதா ரத்தின் தரத்தையே குறைத்து விடக்கூடிய கற்பனையாகும். ஒரு பேயைக் கொல்வதற்கா திருமால் இராமனாக வர வேண்டும்? ஒரு பேயை அழிக்க முடியாமலா, விசுவா மித்திர முனிவர் இராமனுடைய உதவியை நாட வேண்டும்?

வான்மீகியிலே, இராமனுக்கு இளவரசுப் பட்டம் கட்டு வதற்குத்தான் தயரதன் முடிவு செய்கிருன். இது, மாபெரும் இராம கதை தோன்றுவதற்கான சரியான அடிப்படையாகக் கம்பனுக்குத் தோன்றவில்லை. அதனுல், இராமனைச் சக்கர வர்த்தியாக்கி தான் வானப்பிரஸ்த நிலையை மேற்கொள்ள முடிவு செய்தான் என்று கூறுகிருர். இந்த மாறுதல் கூனி யின் கலகத்திற்கு நல்ல அடித்தளமாக அமைகிறது.

இராமன் இளவரசனாக வருவதைத் தடுக்க கூனி துணிந்ததற்கு வான்மீகியிலே சரியானகாரணம் சொல்லப்பட வில்லை. ஆனுல், கம்பனிலே சரியான காரணம் கற்பிக்கப்பட் டுள்ளது.

உண்டை வில்லால் வந்த வினை

இராமன் சிறுவனுயிருந்தபோது, தன் கை வில்லைக் கொண்டு மண் உண்டையைக் கூனியின் முதுகின்மேல் அடித் தான். அதனுல், அவன் மீது வஞ்சங்கொண்டிருந்த கூனி, காலம் பார்த்து அவனைப் பழி வாங்க முனைந்தாள் என்பது கம்பரது கற்பனை.

"பண்டை நாள் இராகவன்
பாணி வில்உமிழ்
உண்டை உண்டதனைத் தன்
உள்ளத்து உள்ளுவாள்"

இது, கம்பர் வாக்கு.

கிஷ்கிந்தா காண்டத்தில் வரும் அரசியல் படலத்திற் சுக்ரீவனுக்கு அரசு நெறிகளைப் போதிக்கும் இராமன், தனது பிள்ளைப் பருவத்தில், கூனியின் முதுகில் தான் மண்ணுண்டை தெறித்ததனைக் கூறுகின்முன். அது வருமாறு:

"சிறியரென் றிகழ்ந்து நோவு
செய்வன செய்யல்; மற்று, இந்
நெறியிகழ்ந்து, யானோர் தீமை
இழைத்தலால், உணர்ச்சி நீண்டு,
குறியது ஆம் மேனி ஆய
கூனியால், குவவுத் தோளாய்!
வெறியன எய்தி, நொய்தின்
வெந்துயர்க் கடலில் வீழ்ந்தேன்!"

பிள்ளைப் பருவத்தில் விளையாட்டுத்தனமாகக் கூனியின் முதுகில் மண்ணுண்டையை எறிந்ததானது மாபெரும் துயர்க் கடலில் தான் வீழ்வதற்குக் காரணமாகி விட்டதாக இராமன் சுக்ரீவனிடம் கூறுகிறுன்.

ஆட்சி புரிவோர் எளியோரை அலட்சியமாக நடத்தக் கூடாது என்பதற்குத் தனது இந்த அனுபவத்தைச் சுட்டிக் காட்டிச் சுக்ரீவனுக்கு இராமன் அரசு நெறி கூறுகின்முன்.

வான்மீகி ராமாயணத்திலே இந்த உண்டை வில் நிகழ்ச்சி இல்லாததால், கூனியானவள் இராமனுக்கு எதிராகச் சதி செய்யத் துணிந்ததற்குச் சரியான காரணம் அமையவில்லை. ஆகையால், ராமாயண ஆராய்ச்சியாளர்கள் வேறு எது எதையோ காரணம் காட்ட முயல்கின்றனர். இது எப்படியாயினும், இராமாயணத்தில் வரும் மந்தரை (கூனி), கிழவியல்ல என்பது மட்டும் உண்மை.

உத்தர காண்டம் பாடாதது ஏன்?

வான்மீகி, பால காண்டம் அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம் யுத்த காண்டம், உத்தர காண்டம் என ஏழு காண்டங்கள் கொண்ட இராமாயணத்தைப் படைத்துள்ளார். கம்பர் உத்தர காண்டம் பாடவில்லை.

கதை நீண்டது எதனால்?

'உத்தரம்' என்பதற்கு 'வடக்கு' என்று பொருள் சொல்லப்படுகின்றது. உத்தர காண்டத்திற்கு மட்டும் 'வடக்கு காண்டம்' என்ற பொருளில் உத்தர காண்டம் என்று பெயர் சூட்டுவானேன்?

இராமாயணக் கதை முழுவதுமே வடக்கில் தொடங்கி வடக்கிலேயே முடிவதுதானே! காப்பியத் தலைவனும் தலைவியும் வடபுலத்தவர்தானே! ஆராய்ந்து பார்த்தால், உத்தர காண்டத்தின் முற்பகுதி இலங்கையைத்தான் களமாகக் கொண்டிருக்கிறது. இராவணாதியரின் தோற்றம் பற்றியே அதில் விவரிக்கப்படுகிறது. இராமாவதாரத்தின்படிப் பார்த்தால், இராமாயணக் கதை யுத்த காண்டத் தோடு முடிந்து விடுகிறது. இராவண வதந்தானே இராமாவதாரத்தின் குறிக்கோள்! அது, யுத்த காண்டத் திலேயே முடிந்து, இராமனுக்கு அயோத்தியில் பட்டாபி ஷேகமும் நடந்து விடுகிறது. அத்துடன் காப்பியத்தை முடித்திருக்க வேண்டும்.

வான்மீகி பாடியதா?

உத்தர காண்டம் வடமொழியில் வான்மீகி செய்ததாகச் சொல்லப்படுவதனை வடமொழிப் புலவர்களிலேயே

சிலர் மறுக்கின்றனர். 'மகாகவியான வான்மீகி, இராவண வதத்தோடு இராமாவதாரத்தின் குறிக்கோள் முடிந்த பின், அதற்கு மேலும் கதையை நீட்டுவாரா?' என்று அவர்கள் கேட்கின்றனர். உத்தர காண்டம், மிகவும் பெரியதாகக்கூட இருக்கிறது. ஆனால், யான் வட மொழியில் புலமையற்றவனாதலால், வான்மீகி இயற்றியதல்லவென்று துணிந்து சொல்வதற்கில்லை.

கதை முடிந்த பின்னும் காப்பியம் நீளுவதற்கு மகாபாரதத்தையும் சான்றாகக் கொள்ளலாம். சிலப்பதிகாரத்திலும் கண்ணகியைத் தலைவியாகக் கொண்டு மதுரைக் காண்டத்தோடு கதை முடிந்து விடுகிறது. அப்படியிருந்தும், அதன் பின்னும் எட்டு காதைகளைக் கொண்ட வஞ்சிக் காண்டத்தைப் படைத்துள்ளார் இளங்கோ. புகார்க் காண்டத்தில் மானிடப் பெண்ணாக இருந்து, தன் கற்பின் திறத்தால் மதுரைக் காண்டத்தில் தெய்வமாக மாறிய கண்ணகியை மக்கள் வழிபடும் தெய்வமாகச் செய்வதற்காகவே இளங்கோ வஞ்சிக் காண்டத்தைக் கற்பித்துள்ளார்.

இதுபோல, வான்மீகியும் இராம பட்டாபிஷேகத்தோடு இராமாயணத்தை முடித்து விடாமல், "இராம ராஜ்யத்"தைக் கூறுவதற்காக உத்தர காண்டத்தைப் படைத்திருக்கலாம். ஆகவே, உத்தர காண்டத்தை வான்மீகியினுடையதாகவே கொண்டு, அதனை கம்பர் பாடாததற்கான காரணத்தைக் கண்டு பிடிக்க முயல்வோமாக!

தமிழில் ஒட்டக்கூத்தர் பெயரா லுள்ள உத்தர காண்டம் கம்பனால் செய்யப்பட்டதென்று கருதுவோரு முண்டு. இதனை நம்புவதற்கில்லை.

வான்மீகியைப் பின்பற்றி, இராமாயணக் கதைக்குத் தமிழில் வழிநூல் படைத்த கம்பர், வான்மீகியின் உத்தர காண்டத்தை மட்டும் அடியோடு விட்டு

விட்டது ஏன்? இதற்குக் கம்பர் காரணம் கூறியதாகத் தெரியவில்லை.

கம்பரும் ஒட்டக்கூத்தரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவ ரென்று கருதப்படுவதால், அந்த மகாகவியும் கூத்தரின் உத்தர காண்டத்தைப் பார்த்திருக்க வேண்டும். ஒரு காரணத்தால் கம்பருக்கு உத்தர காண்டம் தேவைப் படாமல் போய் விட்டது. அந்தக் காரணம் யாது?

தீண்டாத் திருமேனி

வான்மீகியில், இராவணன் சீதையைத் தன் வலிமை மிக்க கரங்களால் தொட்டுத் தூக்கி, தன் தொடைகளில் வைத்து இலங்கைக்கு எடுத்துச் சென்றதாகக் கூறப்படு கின்றது. இதனுல், வான்மீகியிலே, அயோத்தி நகரத்தார் சீதையின் கற்பைச் சந்தேகிப்பதற்குச் சந்தர்ப்பம் இருக் கிறது.

சீதையைத் தொட்டுத் தூக்கிச் சென்ற இராவணன், அவள் தன் காவலிலிருந்த காலத்திலே, அவளைத் தீண்டாமல் இருந்தான் என்பதை நம்புவது கடினந்தான். அதனுல், அவளைச் சந்தேகித்தனர் அயோத்தி நகரவாசிகள். ஆகவே, அயோத்தி வாசிகளைத் திருப்திப்படுத்த இராமன் சீதையை வனத்திற்கு அனுப்ப வேண்டிய அவசியமேற்பட்டது. அதனுல், உத்தர காண்டம் பிறந்தது.

கம்பனிலே, சீதை தீண்டாத் திருமேனியளாதலால் அவளை அயோத்தி மக்கள் சந்தேகிக்க சந்தர்ப்பமில்லை. அதனுல், கம்பர் உத்தர காண்டம் பாடவில்லை. ஆரண்ய காண்டத்தில் கம்பர் செய்த ஒரு சிறு மாறுதல் காரண மாக, உத்தர காண்டம் முழுவதுமே அவருக்குத் தேவை யற்றதாகி விட்டது.

கம்பனில் இராவணன் சீதையை எடுத்துச் சென்ற நிகழ்ச்சியைக் கூறும் செய்யுட்களைப் பார்ப்போம்.

ஆண்டு, ஆயிடை, தீயவன் ஆயிழையைத்
தீண்டான், அயன்மேல் உரை சிந்தை செயா;
தூண்தான் எனல் ஆம் உயர் தோள் வலியால்,
கீண்டான் நிலம்; யோசனை கீழொடு மேல்.

கொண்டான் உயர்தேர்மிசை கோல் வளையாள்
கண்டாள்; தனது ஆருயிர் கண்டிலளால்;
மண்தான் உறும் மின்னின் மயங்கினளால்;
விண்தான் வழியா எழுவான் விரைவான்.

உத்தர காண்டத்தைப் பாடாததனுல் நிறை கர்ப்பிணி யான சீதையைக் காட்டில் விட்ட பழியிலிருந்து இராமனைக் கம்பர் காப்பாற்றி விட்டார்.

சீதையை ஐயுற்றது யார்?

இங்கு இன்னெரு தகவலைத்தருவது என் கடமையாகிறது. இராவணனிட மிருந்து இராமனல் மீட்கப்பட்ட சீதையை அயோத்தி வாசியான ஒரு சலவைத் தொழிலாளி சந்தேகித்த தாக வான்மீகி கூறவில்லை. அயோத்தியிலே பரவலாக மக்களில் பலர் சீதையின் கற்பைச் சந்தேகித்துப் பேசுவதாகத் தான் இராமனுக்குத் தகவல் கிடைக்கிறது. இதனை, பிற்கால நாடகக்காரர்கள் சலவைத் தொழிலாளி மீது ஏற்றி விட்டனர். நாடகத்தின் வெற்றிக்கு இந்த மாறுதல் அவசியப் பட்டிருக்கலாம். ஆனல், சீதையை வனத்திற்கு விரட்டிய பாவத்திற்கு சலவைத் தொழிலாளியைக் காரணமாக்கியது சரியல்ல.

கட்டுக் கதை!

உத்தர காண்டத்தையும் கம்பர் பாடியதாகவும், பின்னர் ஒட்டக்கூத்தர் பாடியதைப் பார்த்துவிட்டு, தம்முடையதை விடவும் கூத்தருடையதே சிறப்பாக இருந்ததால், தாம் படைத்ததைத் தீயில் போட்டு எரித்துவிட்டதாகவும் ஒரு

கதை சொல்லப்படுகிறது. இது, கட்டுக் கதை. உண்மையில் கம்பருடைய இராம காதைச் செய்யுட்களோடு ஒட்டக் கூத்தருடைய உத்தர காண்டச் செய்யுட்களை ஒப்பு நோக்கு மிடத்து, இந்தக் கதையை நம்ப முடியவில்லை. புலமையிலே கம்பருக்குச் சமமானவரல்ல கூத்தர். ஆனால், அவரது புலமைக்கும் தனி மதிப்புத் தரக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கும்பகருணனைத் தூங்க வைத்ததேன்?

கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்கள் பற்றி இளம் புலவர்களுக்கும் இலக்கியம் பயிலும் மாணவர்களுக்கும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பண்டையோர் மூடர்களா?

நம்முடைய முன்னோரான பண்டைப் புலவர்களை மூடர்கள் என்று சொல்வது பகுத்தறிவு ஆகாது. நான் பகுத்தறிவின் பகைவனல்ல. எதையும் அறிவால் ஆராய்ந்து முடிவு காண்பதை நான் வரவேற்கிறேன். ஆனால், கற்பனை கலந்த காப்பியங்களைப் பகுத்தறிவால் ஆய்வது முறையாகாது. இறைவன் நமக்கு அறிவைக் கொடுத்ததுபோல, இதயத்தையும் கொடுத்திருக்கிறான். கம்பன், இளங்கோ போன்ற காப்பியக் கவிஞர்கள் நம்மோடு தங்கள் இதயத்தால் பேசுகின்றனர். நாமும் இதயத்தால் அனுபவிக்க வேண்டும். அறிவால் அளக்க வேண்டியதை அறிவால் அளக்கலாம். அது தவறல்ல. ஆனால், காப்பியங்களை இதயத்தால் அளந்து ஆய்ந்து அனுபவிக்க வேண்டும். இற்றைத் தலைமுறையினராகிய நாம் நம்முடைய தந்தை தலைமுறையினரை—பாட்டன் தலைமுறையினரை—முட்டாள்கள் என்று சொல்வோமானால், நம்முடைய பிள்ளைத் தலைமுறையும் பேரப்பிள்ளைத் தலைமுறையும் நம்மை முட்டாள்கள் என்று சொல்லும் காலமும் வந்தே தீரும். நம் முன்னோர்களுடைய சில நம்பிக்கைகள்—நடவடிக்கைகள் கால மாறுதல் காரணமாக நமக்குத் தேவையற்றவையாக இருக்கலாம். அவற்றைக் கைவிட்டு வாழவும் நமக்கு உரிமை உண்டு. அதற்காக, அவர்களை 'முட்டாள்கள்', 'மூட

நம்பிக்கை யாளர்கள்' என்று சொல்லுவது, நம்முடைய பகுத்தறிவைக் காட்டுவது ஆகாது.

கற்பனே, பொய்யல்ல!

காப்பியங்களிலே, நிகழாதவற்றை நிகழ்ந்தவையாகக் கவிஞர்கள் சொல்லியிருக்கலாம். அதெல்லாம் பொய்யல்ல; கற்பனே! பொய் வேறு; கற்பனே வேறு. கற்பனையை எந்த நோக்கத்துடன் கவிஞர் கூறியிருக்கிருர் என்பதை ஆராய்ந்து பார்த்து அந்த நோக்கத்தை அறிந்து கொள்ளவேண்டும். அப்படி ஆய்ந்து, கற்பனேயில் மறைந்து கிடக்கும் உண்மையை அறியாதவர்களே,

> **''அணிசெய் காவியம்**
> **ஆயிரம் கற்கினும்**
> **ஆழ்ந்தி ருக்கும்**
> **கவியுளம் காண்கிலார்''**

என்கிருர், பாரதியார்.

இராமாயணத்திலே, கும்பகருணன் பல நாட்கள் தூங்கிய வண்ணம் இருந்தான் என்கிருர் வான்மீகி. கம்பரும் இதனே அப்படியே ஏற்றுக்கொண்டு, கும்பகருணனே எழுப்புவதை அமானுஷ்யத் தன்மையில் கற்பனே செய்திருக்கிருர்.

'ஒரு மனிதன்—அவன் அரக்கனே யானுலும்—பல நாட்கள் தூங்க முடியுமா?' என்று நம் அறிவு கேட்கலாம். ஆனுல், இங்கு பாத்திரப்படைப்பிலுள்ள நுணுக்கங்களே ஆய்ந்தறிந்து அனுபவிக்க வேண்டும்.

அமைச்சரவை கூடியது!

இராம பக்தனை அனுமன் இலங்கைக்கு எரியூட்டிச் சென்ற பின், இராவணன் தனது அமைச்சரவையைக் கூட்டி,

மேலே செய்ய வேண்டியவற்றைப் பற்றி ஆலோசனை நடத்தினன்.

இராம—லக்குமணரால் தன் சகோதரியானசூர்ப்பணகை அவமதிக்கப்பட்டபோது, அதுபற்றி ஆலோசித்து மேல் நடவடிக்கை எடுக்க அவன் தனது அமைச்சரவையைக் கூட்டவில்லை. தன்னுடைய தங்கையின் விருப்பப்படி, தன் புலன்கள் போன வழியிலே போய் சீதையைக் கவர்ந்து வந்து சிறையில் வைத்தான்! அது காரணமாகப் போர் மூண்டபோது தான் தனக்கென ஒரு அமைச்சரவை இருப்பது அவனது நினைவுக்கு வருகிறது. அதைக் கூட்டி, ஆலோசனை கேட்கிருன்.

கும்பகருணன் கோபம்!

இராவணன் அமைச்சரவையிலே, அவன் தம்பியரான கும்பகருணனும் வீடணனும் மகஞன இந்திரஜித்தனும் இருக்கின்றனர். அவர்களிலே மூத்த தம்பியான கும்பகருணன் சீதையைக் கவர்ந்து வந்ததற்காக இராவணனைக் கண்டிக்கிருன்.

> "ஆசில்பர தாரமவை அஞ்சிறை அடைப்பேம்;
> மாசில்புகழ் காதலுறுவேம்; வளமை கூரப்
> பேசுவது மானம்; இடை பேணுவது காமம்;
> கூசுவது மானிடரை; நன்று, நம கொற்றம்!

என்று கும்பகருணன் இராவணனை வசை பாடுகின்ருன். பின்னர் தூங்கப்போய் விடுகின்ருன். பல நாட்கள் தூங்கிக் கொண்டே இருக்கின்ருன்.

போர்க் கோலம்!

போர் மூண்ட பின் தம்பி கும்பகருணனை எழுப்பச் செய்கிருன் இராவணன். எழுந்த கும்பகருணனுக்கு போர்க்கோலம் செய்யப்படுகின்றது. அவனுக்கு ஒன்றும்

புரியவில்லே. "எதற்காக எனக்கு இந்தப் போர்க் கோலம்? என்று கேட்கின்ருன்.

அதற்குப்பின், "போருக்குச் செல்வதற்காக" என்று தகவல் தரப்படுகிறது.அவன் சினம் கொள்கிருன். 'இன்னமும் சீதையைவிடவில்லையா?'என்று வியப்புடன்கேட்கிருன். இங்கு தான் கவிஞன் கும்பகருணனேத் தூங்க வைத்தது ஏன் என்பது புரிகின்றது. தூங்க வைத்தில்லேயானுல், அவன் வீடணனுடன் ஜோடி சேர்ந்து இராமனிடம் போய் அடைக்கலம் புகுந்திருப் பான். ஆம்; கும்பகருணனேத் தூங்க வைக்காமல் இருந்திருந் தால், நிச்சயம் அவன் "வீடணன் நெ. 2" ஆகியிருப்பான்! அதனுற்ருன், வீடணன் பிரிந்து செல்கின்றவரை கும்பகருண னேத் தூங்க வைத்து விடுகின்ருர் கவிஞர். ஒரு குணத்திற்கு இரண்டு பாத்திரங்களேப் படைப்பதை விரும்பாத கவிஞர் அதைத் தவிர்க்க வீடணன் பிரிந்து செல்லும் வரை கும்ப கருணனேத் தூங்க வைத்து விடுகிருர்.

சிவன் தந்த வரம்!

ஒரு மனிதன் நாட்கணக்கில் தூங்குவது சாத்தியமா? என்ற வினவைக் கவிஞரின் உள்ளமும் எழுப்பியிருக்க வேண்டும். அதனுல், சிவபெருமானிடம் 'நித்தியத் தத்துவம்' என்ற வரம் கேட்கப் போய், 'நித்திரைத் தத்துவம்' கேட்டுப் பெற்ருன் என்ற ஒரு செய்தியையும் ராமாயணத்தில் சேர்த்து வைத்திருக்கிருர்.

கவிஞரின் கற்பனேயை ரசிக்க விரும்பாத—ரசிக்கவும் முடியாத பகுத்தறிவாளர்களுக்கும் இராமாயணம் போன்ற பெருங்காப்பியங்களுக்கும் நெடுந்தூரம் என்பதை உணர வேண்டும். கற்பனேயும் வரலாறும் கலந்ததுதான் காப்பியம்- வரலாற்றை மட்டும் சொல்வதற்குக் கவிஞன் தேவையா?

கம்பன், மக்கள் கவி! *

காரைக்குடியில் கம்பர் விழா சரியான நேரத்தில் தொடங்குவது வழக்கமென்பது எனக்குத் தெரியும். 'கம்பன் அடிப்பொடி' ஒவ்வொரு மணித் துளியையும் பிரகடனம் செய்து, ஒரு மணித்துளியைக்கூட வீணடிக்காமல் விழா நிகழ்ச்சிகளை நடத்தி வைக்கும் பண்புடையவர். நான் ஒரு மணி நேரம் தாமதித்து வர நேர்ந்தது. அது என் பிழை யல்ல; நான் பயணம் செய்து வந்த ரயிலின் பிழை. அப்படியிருந்தும், அறத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களின் தொடக்க விழாப் பேச்சு முடிவதற்கு முன்பே வந்துவிட்டேன். ஆகவே, எனது தலைமையுரை தாமதப்படவில்லை. குறித்த நேரத்தில் நிகழ்த்து கிறேன்.

அறமும் அரசியலும்

அறமும் அரசியலும் பிணைந்திருக்க வேண்டும். இங்கே அறம் (அறத்துறை அமைச்சரைக் காட்டி) கடமையைச் செய்ய நேரத்தோடு வந்து விட்டது. அரசியல் (தம்மைக் காட்டி) தாமதித்து வந்தது. ஏனோ, அறமும் அரசியலும் இணைந்து செயல்படுவதிலே இன்னமும் சிக்கல் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆயினும், அறத்துறை அமைச்சரும் அரசியல்வாதியாகிய நானும் எதிரும் புதிரு மல்ல. நேர்க்கோட்டில் நடைபோடுபவர்கள். ஆயினும், ரயில் செய்த தவறால் எங்களுக்கு நடுவே சிறிதளவு இடை வெளி ஏற்பட்டுவிட்டது.

இராமாயணக் கதையே அரசியலுக்கும் அறத்துக்கும் நடந்த போராட்டந்தான். அறத்தைக் கொன்று அரசியல்

---

* 8-4-79 அன்று காரைக்குடி கம்பர் விழாவில் நிகழ்த்திய தலைமையுரை.

அதிகாரத்தைப் பெற முயன்ருள் கைகேயி. "அறமா, அரசியலா?" என்ற வினு எழுந்தபோது, அறத்தோடு சேர்ந்த அரசியலேயே இராமன் விரும்பினுன். என்ருலும், இரண்டி லொன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற நிலே ஏற்பட்டபோது, அரசியலேத் துறந்து அறத்தைக்கடைப் பிடித்து வனம் சென்ருன்.

இலங்கையிலும் இதே நிலேதான். அரசியல் அதிகார வெறி பிடித்து அறத்தைத் துறந்தான்—இல்லே, அறத்தை மறந்தான் இராவணேசுவரன், அவன் தம்பி வீடணனே, அறத்தைக் கடைப்பிடிக்க விரும்பி அமைச்சர் பதவியைத் துறந்தான்.

இன்று உலகெங்குமே அறத்துக்கும் அரசியலுக்கு மிடையேதான் போராட்டம் நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. அதிலே, அறத்தோடியைந்த அரசியலே நிலேநாட்டவே இராமாயணம் போன்ற காவியங்களே நாம் விரும்புகிருேம்.

மாயை!

எனக்கு முன் பேசிய அறத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் மகாகவி கம்பரை மனமாரப் பாராட்டினுர். என்ருலும், கம்பர் படைத்த காப்பியத்திலே அங்குமிங்குமாக நம்மோடு அவருக்குக் கருத்து வேற்றுமை இருப்பதுபோலப் பேசினுர். நம்மிலேயும் அமைச்சர் இராமா யணக் கதையில் ஈடுபாடில்லாதவர் என்று நம்புவோர் இருக்கலாம். இது, இருதரப்பினரையும் பிடித்துள்ள மாயை என்பேன்.

சமயத் தத்துவத்திலே "மாயை" என்ற சொல் இருப்ப தால்தான் சரியான இடத்தில் இங்கு அதை நான் பயன் படுத்த முடிகிறது. இல்லாத ஒன்றை இருப்பதாக நினேப்ப தற்குத்தான் "மாயை" என்று பெயர்.

அமைச்சர் அவர்களே முன்னெரு காலத்தில் கம்ப ராமா யணத்துக்கு எதிராக நடந்த போராட்டத்தையும், அதனேடு

தமக்குத் தொடர்பிருந்ததையும் எடுத்துக் கூறிவிட்டதால், நானும் அதிலே புகுவதில் தவறில்லை என்று நினைக்கிறேன்.

பழங் கதை!

ஒரு காலத்தில் தமிழரிலே ஒரு சாரார் கம்ப ராமாயணத்தை வெறுத்ததனை—எதிர்த்து இயக்கமே நடத்தியதனை—நானும் அறிவேன். அது பொய்யாய்—கனவாய்—பழங்கதையாய் போய்விட்டதென்றே நாம் கருத வேண்டும். அன்று இராமாயண எதிர்ப்பு நடத்தியவர்கள் இன்று நாடாளுகிறார்கள். அதன் காரணமாக, தங்களால் ஆளப்படும் பொதுமக்கள் போற்றுகின்ற மாகாப்பியத்தைப் படைத்த கம்பனை அவர்களும் ஆளுவோர் என்ற முறையிலே மதிக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்—மதிக்கவும் செய்கின்றனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் தாம் முதல்வர் பொறுப்பை ஏற்று ஓர் ஆண்டு முடிவதற்குள்ளேயே சென்னைக் கடற்கரைச் சாலையிலே கம்பனுக்குச் சிலை நிறுவினார். மாண்புமிகு எம்.ஜி.ஆர் அரசும், வள்ளலார்—கம்பர் ஆகியோரின் இலக்கியங்களைப் பரப்ப ஒரு நிறுவனத்தை அமைக்கப் போவதாக அறிவித்துள்ளது. இங்கு, ஒரு காலத்திலே கம்பனுக்கு எதிர்ப்பு காட்டிய பாரம்பரியத்தைச் சார்ந்தவராயிருந்தும் இன்று கம்பன் விழாவைத் தொடங்கி வைத்து அமைச்சர் என்ற முறையில் அந்த மகாகவிக்குப் புகழ்மாலை சூட்டியிருக்கிறார் அமைச்சர் ஆர். எம். வி. அவருக்கும் எனக்குமிடையே கருத்து வேற்றுமை இருப்பதாக நாங்கள் ஏன் நினைக்க வேண்டும்?

தவறல்ல !

கம்பனை மதிப்பது வேறு; அவன் படைத்த காப்பியத்தில் வரும் செய்திகளை அப்படியே ஏற்பது வேறு. நானோ, இந்த அரங்கில் குழுமியுள்ள பழமையில் பற்றுடைய தமிழ்ப்புலவர்களோ கம்பனுடைய காப்பியத்தை அப்படியே ஏற்கலாம்

மாண்புமிகு அமைச்சரோ, அவர் சார்ந்திருக்கும் இயக்கத்தில் உள்ள புலவர்களோ, கம்ப ராமாயணத்தில் காணும் குறை பாடுகளை எடுத்துக்காட்டி, நம்மோடு வாதிக்க விரும்பலாம். நான் சொல்வேன், ''அதில் தவறில்லை'' என்று.

ஏன், கம்பர் படைத்த காப்பியத்தின் தலைவனை இராமனைக் கடவுளாகவே கருதுகின்ற, கம்பனையும் தெய்வப் புலவனாக நம்புகின்ற நம்மிலேயும் சிலர், கம்பனிலே அங்கு மிங்குமாகக் கருத்து வேறுபாடு காண்பது உண்டுதானே! 'வாலியை இராமன் மறைந்திருந்து கொன்றது நீதி' என்று பலரும், அதை மறுத்து, 'அநீதி' என்று சிலரும் வாதிட வில்லையா? அது போல, திராவிட இயக்கத்தைச் சார்ந்த வர்களும் கம்பனையும் அவன் படைத்த காப்பியத்தையும் மொழிப்பற்று இனப்பற்றுக் காரணமாக பொதுப்படையாக ஏற்றுக்கொண்டு, சில விஷயங்களிலே கருத்து வேற்றுமை காட்டட்டுமே. இதெல்லாம் இலக்கியத் திறனாய்வுதானே!

அமைச்சரின் வினா!

அமைச்சரவர்கள் தமது தொடக்க வுரையிலே வேறு சில பிரச்சினைகளையும் எழுப்பி, அவற்றிற்கு என்னிடம் விளக்கங் களை எதிர்பார்ப்பதாகக் கூறினார்கள். உண்மையில் அவர் என்னிடம் எதிர்பார்க்கும் விளக்கங்களை நானே இங்கு விளக்குவதாகத்தான் எண்ணி வந்தேன். அவரும் கேட்டு விட்டதால் அதனைச் சற்று விரிவாகவே விளக்க விரும்பு கிறேன்.

அமைச்சர் எடுத்துக்காட்டிய விஷயங்களிலே எனக்கு அவரோடு கருத்து வேற்றுமை இல்லை என்பதை முதலில் சொல்லிக் கொள்கிறேன். இப்படிச் சொன்னால், ஏதோ ஆட்சியாளரைத் திருப்திப்படுத்துவதாகச் சிலர் எண்ணக் கூடும். அது அவர்களுடைய மனோபாவத்தைக் காட்டுவ தாகும்.

'ஒரு இலக்கியம் என்ருலே, அது சாதாரண மக்களிடம் செல்ல வேண்டும். அவர்களால் விரும்பப்படுவதாகவும் இருக்க வேண்டும். அத்தகைய மக்கள் இலக்கியந்தான் நமக்குத் தேவை' என்று சொல்லி, 'அத்தகைய மக்கள் இலக்கியமாகக் கம்ப ராமாயணம் இருக்கிறதா?' என்று அமைச்சரவர்கள் கேட்டார்கள்.

கம்ப ராமாயணம் இந்து மதத்தவரால் போற்றப்படுகிறது. அதனுல், இது மக்கள் இலக்கியமல்ல, மத இலக்கியம் என்ற எண்ணம் அமைச்சர் போன்ற சீர்திருத்த வாதிகளுக்கு ஏற்படுவது இயற்கை. வைணவர்களிலேயும் இராமாயணம் தங்களுக்கே சொந்தம் என்று கருதுவோருமிருக்கின்றனர்.

மதக் கவியா?

இன்னெரு வகையில் சொன்னுல், இராமாயணக் காப்பியத் தலைவனுன இராமன் திருமாலின் அவதாரமாகக் கருதப்பட்டு, பொதுவாக இந்துக்களால்—சிறப்பாக, வைணவர்களால் வழிபடப்படுகிருன். அந்த வழிபாட்டுக்கெனக் கோயில்களும் தோன்றிவிட்டன. அதனுல், இராமாயணத்தை மதக் காப்பியமாகவும், அதற்கு வழிநூல்படைத்த கம்பனை மதக்கவியாகவும் சீர்திருத்த வாதிகள் கருதும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இராம காதை தோன்றிய—மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட – காலத்திலே, இந்தியாவில் பல்வேறு மதங்கள் இருக்கவில்லை. அதனுல், மதவேறுபாடும் விரோதப்பாடும் நாட்டில் நிலவவில்லை. "என் தெய்வம், உன் தெய்வம்" என்று எங்கும் எதிர் வழக்கிடும் நிலைமையும் இருக்கவில்லை. இந்திய மக்கள் எல்லோருமே ஒரே மதம் என்றிருந்த சூழ்நிலையிலே வான்மீகி ராமாயணம் பிறந்தது. இது ஒன்றே, அது பிறந்தபோது இந்த மதத்தாருக்குச் சொந்தமானது, அந்த

மதத்தாருக்கு அயலானது என்ற நிலை இல்லை என்பதை உணர்த்தும்.

காலப் போக்கிலே மதங்கள் பலவாயின. அப்போதும் இந்துசமயத்திலிருந்து கிளைத்த சமணம் இராமாயணக் கதையைத் தனக்கும் உரியதாக்கிக் கொண்டது. சமண ஞானியர் "ஜெயின ராமாயணம்," படைத்தனர். பின்னர், பௌத்த மதம் தோன்றியபோது, பௌத்த முனிவர்கள் "பௌத்த இராமாயணம்" படைத்தனர்.

கம்பன் செய்த மாறுதல்

இந்தியாவில், புதிதாக, இந்து மதத்துக்குப் புறம்பாக—தோன்றிய மதங்களிலே எதுவும் இராமாயணத்தைப் புறக்கணிக்கவில்லை. தத்தம் மதத்தின் தத்துவ வேறுபாடுகளுக்கேற்ப இராமாயணக் கதையிலும் வேறுபாடுகளைக் கற்பித்தன.

தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டாலும், இங்கேயும் சமய வேறுபாடின்றி, அனைத்துச் சமயத்தினரும் கம்ப ராமாயணத்தை, தங்கள் தங்கள் சொத்தாக எடுத்துக் கொண்டு விட்டனர் எனலாம். கம்பன் தோன்றுவதற்கு முன்பு வைணவ ஆழ்வாராதியர், இராமனைத் திருமாலின் அவதாரமாகக் கொண்டு, வைணவர் வழிபடும் தெய்வமாகச் செய்துவிட்டனர். ஒரு மாகாப்பியத்தின் தலைவன் என்பதற்கு அதிகமாக தெய்வத்திற்குரிய இலக்கணங்களை எல்லாம் இராமனுக்குக் கற்பித்தனர். இப்படி அவர்கள் செய்தது மக்களுடைய நன்மையைக் கருதித்தான். ஆனால், கம்பன் தோன்றி நிலைமையை மாற்றி விட்டான்!

கம்பன், இராமன்திருமாலின் அவதாரமென்பதனை மறக்கவோ, மறுக்கவோ இல்லை. காண்டந்தோறும் படைத்துள்ள காப்புச் செய்யுட்களிலே இராமனை தெய்வமாகத்தான் காட்டுகின்றான். காப்பியத்துக்குள்ளேயும் பல்வேறிடங்களிலே, இராமனைத் தெய்வமாக வருணித்துக் காட்டவும்

கம்பன் தவறவில்லை. ஆனால், அவனை சக்கரவர்த்தி மைந்தனாகவும் இராமனைக் காட்டுகின்றான். இராம கதையின் பெரும் பாகத்திலே தயரதச் சக்கவர்த்தியின் மைந்தனாக வைத்தே நிகழ்ச்சிகளைக் கூறிக்கொண்டு செல்கிறான். சமய வட்டாரத்திலே சிறைப்பட்டுக் கிடந்த இராமாயணக் காப்பியத்தை அங்கிருந்து விடுவித்து சமுதாயப் பெருவெளிக்குக் கொண்டு வந்த பெருமை கம்பனுக்கே உரிமையாகும்.

சைவர்களின் சாதனை!

தமிழ் நாட்டிலே, தமிழறிந்த இஸ்லாமியரும் கிறித்துவரும்கூட, கம்ப ராமாயணத்திலே பெரும் புலமைபெற்று, கம்பன் விழாக்களிலே மேடையேறி, கம்பனுடைய அருமை பெருமைகளைப் புகழ்ந்துரைக்கக் கேட்கிறோம்.

சைவர், திருமாலை வழிபடும் தெய்வமாகக் கொள்வது வழக்கமில்லை. அவர்களிலும் வேளாளரானோர், அவர்களிலும் திருநெல்வேலி சைவ வேளாளரானோர், திருமாலை வழிபட முடியாத பரம வைதிகச் சைவர்களாவர். "வேளாளர்" என்றும், அதனை விரிவுபடுத்திச் "சைவ வேளாளர்" என்றும், அதையும் விரிவுபடுத்தித் 'திருநெல்வேலி சைவ வேளாளர் என்றும் நான் சொல்வதன் பொருளை அவையிலுள்ள புலவர் பெருமக்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன். அப்படிப்பட்ட வைதிகச் சைவர்களிடையேயும் கம்ப பக்தர்கள் தோன்றினர். டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, டி. கே. சிதம்பரநாத முதலியார் போன்ற திருநெல்வேலி சைவ வேளாளர் பலர் தங்கள் வாழ்நாள் முழுதும் கம்பனைப் பற்றி எழுதியும் பேசியும் வந்தனர்.

கம்ப ராமாயணத்துக்கு எதிராக வலிமை பொருந்திய ஓர் இயக்கமே உருவானபோது, அதனை எதிர்த்துக் கம்பன் புகழ் பாட மேடையேறிய பெருமை டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களுக்கு உண்டு. இன்னும், உ. வே. சாமிநாத

ஐயர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், தெ. பொ. மீனுட்சிசுந்தரஞர் போன்ற சைவப் பெரு மக்கள் பலர் கம்பன் புகழ் பரப்ப காலமெல்லாம் பாடுபட்டனர்.

இஸ்லாமியர் வரவேற்பு

தமிழிலே புலமைபெற்ற இஸ்லாமியர் பலரும் கம்ப ராமாயணத்தால் கவர்ச்சிக்கப்பட்டதுண்டு. அரசியல் வாதியாகவும், "தாருல் இஸ்லாம்" தமிழ் வாரப் பத்திரிகை யின் ஆசிரியராகவுமிருந்த ஜனுப் தாவூத்ஷா அவர்களோடு எனக்கு நெருங்கிய பழக்கமுண்டு. அவர் மேடையேறிப் பேசினுலே, கம்பன் கவிதைகளைச் சான்று காட்டாமல் பேச்சை முடிக்க மாட்டார். "இராமாயண சாயபு" என்ற சிறப்புப் பெயரையும் அவர் பெற்ருர்.

தமிழிலே புலமை பெற்ற கிறித்துவச் சான்ருேரிலும் பலர் கம்பன் புகழ்பாடுவதைத் தங்கள் வாழ்க்கை நெறியாகக் கொண்டிருந்ததனை நான் அறிவேன். இதே கம்பர் விழா மேடையிலே திரு. பால் நாடார் என்பவர் ஆண்டுதோறும் கம்பன் பெருமையைப் பேசிப் பேசி என் காதுகளால் நான் கேட்டிருக்கிறேன்.

இதனுலெல்லாம் ஒருஉண்மை வெளிப்படுகிறது. இராமா யணமானது, தான் தோன்றிய காலத்தின் சூழ்நிலையில் மத காப்பியமாக மதிக்கப்பட்டிருந்தாலும், காப்பியத் தலைவனுன இராமன் குறிப்பிட்ட ஒரு மதத்தார் வழிபடும் தெய்வமாக இருந்திருப்பினும், மதங் கடந்த மக்கள் இலக்கியமாகவும் இருந்து வந்திருக்கிறதென்பதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மத நம்பிக்கையும் தெய்வநம்பிக்கையும் இல்லாத வர்களும்கூட, மொழிப்பற்று காரணமாக கம்பனைப் போற்ற லாம், கம்ப ராமாயணத்தைப் பயிலலாம். இதே மேடையில், தெய்வ நம்பிக்கையற்ற பழுத்த கம்யூனிஸ்டான தோழர் ஜீவானந்தம் கம்பன் புகழ் பாடவில்லையா?

மக்களிடம் சென்ற முதற்கவிஞன்

கம்ப ராமாயணம் மக்களிடம் செல்ல வேண்டுமென்று விரும்புவது வரவேற்கத் தக்கதுதான். அந்தக் காப்பியம் தோன்றிய காலத்திலேயே அது மக்களிடம் சென்றுவிட்டது. அன்று தொட்டு இன்றுவரை அது மக்கள் மத்தியில் செல் வாக்குடன் இருந்து வருகிறது. கம்பநாடன், மகாகவி—கவிச் சக்கரவர்த்தி. அப்படியிருந்தும், தான் எழுதிய ஓலைச் சுவடிகளைக் கையிலெடுத்து, கக்கத்தில் வைத்து, ஊர் ஊராகச் சென்று, கோயில் மண்டபங்களிலே அமர்ந்து, ஏழை எளியவர்களைத் திரட்டி வைத்து, தான் புனைந்த கவிதைகளை தானே பாடிக் காட்டி, அவற்றிற்கு பொருளுரையும் கூறினான். இராமன்பால் அவனுக்கிருந்த பக்தியும் இப்படிப்பட்ட தொண்டில் அவனை ஈடுபடுத்தியது என்பதனை நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

அச்சுயந்திரம் தோன்றியுள்ள இந்நாளிலே எல்லோரும் ஏட்டுக் கல்வியைப் பெற முடிகிறது. கம்பன் காலத்திலே நிலைமை வேறு. இலக்கிய ஏடுகள் வீட்டுக்கு வீடு இருக்க வில்லை. ஊர்தோறும் இருந்ததென்று கூடச் சொல்வதற் கில்லை. எங்கோ சில பண்டிதர் மனைகளிலே ஓலைச் சுவடிகள் மறைந்து கிடந்தன.

நாடு சுற்றித் தேடியலைந்தும் சிலப்பதிகாரக் காப்பிய ஏடுகள் பன்னிரெண்டுதான் கிடைத்தன என்கிறார், ஐயர். அரும்பத உரை ஏடு ஒன்றுதான் கிடைத்ததாம். இப்படி, ஏடு கிடைப்பது அரிதாக இருந்த காலத்திலே, பட்டி தொட்டிகளில் வாழ்ந்த பாமரரெல்லாம் ஏட்டுக் கல்வி பெற வாய்ப்பு ஏது? ஏடு பெற்றவன் படித்துச் சொல்ல, பெறாதவனும் படிக்காதவனும் கேள்வி அளவி லேயே இலக்கியச் செல்வத்தைப் பெற முடிந்தது. அந்த நாளிலே. இதன் காரணமாகத்தான் புராணிகர்கள் தோன்ற லாயினர். கம்பனும் ஒரு பௌராணிகப் பிரசங்கியாக இருந்திருப்பான்.

பாடபேதம் மலிந்ததேன்?

தனது காப்பியத்துக்கு சாதாரண மக்களோடு கம்பன் ஏற்படுத்திக் கொடுத்த தொடர்பானது, அவனுக்குப் பின் மறைந்துவிடவில்லை. தொடர்ந்தது பௌராணிகர்களால், இன்றைய சூழ்நிலையிலே பௌராணிகர்கள் சமுதாயத்திற்குத் தேவையற்றவர்கள் என்று சிலர் கருதலாம். ஆனால், கம்பன் காலத்திலே, பட்டி தொட்டிகளில் வாழ்வோரெல்லாம் பண்டிதர்களாக ஆவதற்கு அவர்கள்தான் பாடுபட்டனர்—பயன்பட்டனர்.

கம்பன் கவிதைகளிலே பாட பேதங்கள் மலிந்து கிடக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள கம்பராமாயணப் பதிப்பிலே மிகவும் அரும்பாடுபட்டு பண்டைய பனை ஓலை ஏடுகளை ஆய்ந்து ஆய்ந்து பார்த்து பாட பேதங்களை எல்லாம் தொகுத்துக் கொடுத்துள்ளனர்.

அவ்வளவு பாட பேதங்கள் திருக்குறளுக்கோ, சிலப்பதிகாரத்துக்கோ இருக்கவில்லை. வள்ளுவர் தந்த திருக்குறள் இன்று உலகெலாம் பரவி இருக்கக் காண்கிறோம். சிலம்பும் மக்கள் மத்தியிலே செல்வாக்குத் தேடிக் கொண்டு விட்டது. இருந்தும், திருக்குறளிலே பாட பேதங்கள் அதிகம் இல்லை. சிலம்பிலேயும் பாட பேதங்கள் மிக மிகக் குறைவு. கம்பராமாயணத்திலோ, செய்யுளுக்குச் செய்யுள் வரிக்கு வரி—வார்த்தைக்கு வார்த்தை பாட பேதங்களைக் காண்கிறோம். இதற்குக் காரணம், அதிக அளவுக்கு மக்கள் மத்தியிலே கம்பராமாயணம் புழங்கி வந்திருப்பதுதான். பண்டிதர் மத்தியிலே மட்டும் கம்ப ராமாயணம் இருந்து வந்திருக்குமானால், இடைச் செருகல் மட்டும்தான் ஏற்பட்டிருக்கும். கம்ப ராமாயணத்திலே அதற்கும் குறைவில்லை. ஆனால், சொல்லிலே, எழுத்திலே பாட பேதம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? தமிழ் மொழியில் முழு அளவில் புலமை பெறாத, ஓரளவே புலமை பெற்ற சாமான்யர்களும் கம்பராமாயணத்தை ஏடு பெயர்த்து எழுதியும் படித்தும் பயன்படுத்தி வந்ததுதான்.

மக்களிடம் அந்த அளவுக்கு கம்ப ராமாயணம் மலிவுச் சரக்காக இருந்ததனுல்தான் பாடபேதங்கள் மலிந்திருக்கக் காண்கிருேம்.

முப்பெரும் புலவர்களை ஒப்பிட்டுப் பார்ப்பதா?

அறத்துறையமைச்சர் ஆர். எம். வீ. அவர்கள், இலக்கிய அறிஞர்களிலே சிலர், கம்பனேடு இளங்கோவை ஒப்பிட்டு, இளங்கோவைவிடவும் கம்பர் சிறந்தவர் என்று பேசுவதாகவும், கண்ணகியுடன் சீதையை ஒப்பிட்டு, கண்ணகியைவிடவும் சீதையே சிறந்த கற்பினளென்று பேசுவதாகவும் மிகுந்த வேதனையுடன் குறிப்பிட்டார்கள். இதிலேயும் நான் அமைச்சர் அவர்களின் உணர்விலே ஒன்றுபட்டவன்தான்.

வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகிய முப்பெரும் புலவர்களில் ஒருவரோடொருவரை ஒப்பிட்டு ஆராய்ந்து அவர்களிடையே உயர்வு தாழ்வு காண்பது தவறு.

வானம், பூமி, கடல் ஆகிய மூன்றையும் ஒப்பிட்டு ஆய்ந்து உயர்வு தாழ்வு காண முடியுமா? வானத்திற்கு உவமை வானந்தான்; பூமிக்கு உவமை பூமிதான்; கடலுக்கு உவமை கடல்தான். அதுபோல, வள்ளுவனுக்கு உவமை வள்ளுவன்தான்; இளங்கோவுக்கு உவமை இளங்கோதான்; கம்பனுக்கு உவமை கம்பன்தான். பூமியைவிடவும் கடல் சிறந்ததென்ருே, கடலைவிடவும் வானம்சிறந்ததென்ருே கூறஇயலாது. அதுபோல வள்ளுவனை விடவோ இளங்கோவைவிடவோ கம்பன் சிறந்தவனென்று சொல்ல முடியுமா? அப்படிச் சொல்வதற்காக நான் இந்தக் கம்பன் விழாவுக்கு வரவில்லை. ஒருநாள் கூத்துக்காக மீசையை அடித்துக்கொள்வதா?

வள்ளுவன் பிறந்திலனேயானுல், 'உலக இலக்கியச் சந்தையிலே உங்கள் தமிழ் இலக்கியம் ஏதேனும் விலை போனதுண்டா?' என்று யாரேனும் கேட்டால், தலையைத்தான் சொறியவேண்டி இருந்திருக்கும். அப்படிக்கின்றி, உண்டு;

அது வள்ளுவர் படைத்த திருக்குறள்' என்று இப்போது சொல்ல முடிகிறதே!

'உங்கள் தமிழுக்கென தனிக் காப்பியம் உண்டா?' என்று கேட்டால், 'உண்டு. அது சிலப்பதிகாரம்' என்று இப்போது சொல்கிறோம். அது இருந்தில்லையானால், வேறு எதைக் காட்டுவது? கம்பனுக்கு எவ்வளவுதான் புகழிருப்பினும், அவன் படைத்த ராமகதை வடமொழியில் பிறந்த வான்மீகி ராமாயணத்திற்கு வழிநூல்தானே! .

கம்பராமாயணம் இருந்தில்லையானால், காப்பிய உலகிலே தமிழ் மொழி தலை நிமிர்ந்து நின்றிருக்க முடியுமா? கம்பன் தோன்றியபின் கற்பனைக்கு, வருணனைக்கு, உவமைக்கு, உணர்ச்சிப் பெருக்குக்கு அவன் படைத்த ராம கதைதானே தமிழ் இலக்கியங்களிலே தலைமை தாங்குகிறது.

வ. வே. சு. ஐயர் கருத்து

"கம்பன் தனது திறமை அனைத்தையும் வாலிவதைப் படலத்தில் கொட்டி வைத்துவிட்டான். இந்த வாலிவதைப் படலத்தை மாத்திரம் எழுதி வைத்துவிட்டு, வேறு ஒன்றும் எழுதி வையாமல் கம்பன் இறந்திருந்தாலும்கூட அறிஞர் அவனை உலகத்துக் கவிகளின் வர்க்கத்தில் சேர்க்காமல் விடத் துணியார்" என்கிறார். பன்மொழிகளில் பாண்டித்யமுடைய வ. வே சு. ஐயர். இந்த வகையில் தனக்கு முன் தோன்றிய தமிழ்ப் புலவர்களிலிருந்து பிரிந்து தனித்து நிற்கின்றான் கம்பன். சந்த வேறுபாடுகளை, கற்பனைகளை, வருணனைகளை, பாத்திரப் படைப்பின் அற்புதங்களை கம்பனிடம் கண்டு வியக்கிறோம். அது அவனுக்குக் காலம் கொடுத்த சக்தி.

கம்பன் வடமொழியை 'தேவபாடை'யென்கிறான். வான்மீகியை 'தெய்வமாக்கவி' என்கிறான். ஆனால், தனது புலமைத் திறத்தால் தேவ பாஷையான வடமொழிக்கிணையான சில வகையில் மிகையான பெருமையைக் கம்பன் தமிழ்

மொழிக்குத் தேடிவிட்டான். அதுபோல தெய்வமாக்கவியான வால்மீகியினும் கம்பன் சிறந்து விளங்குகிறுன். இதுவும் காலத்தால் அவன் பெற்ற பேருகும்.

"வடமொழியில் வான்மீகி படைத்த ராமாயணத்திற்கு வழி நூல்தானே கம்பன் படைத்த ராமாயணம்?" என்று கேட்டு கம்பனை இளப்பமாக்கி மகிழ்வோரும் உண்டு. அவர்களுக்கு வ. வே. சு. ஐயர் சொல்கிருர்:

"ஒரு உத்கிருஷ்டமான கவிக்குப் பிறகு இன்னொரு கவி அதே கவிதையைப் பாடினுல், முதல் கவியின் போக்கும் வாக்கும் பின்னவன் காலைச் சுற்றி நிற்கும் ஈயத்தளை போலாகி விடுகின்றன. ஆனல் கம்பன் பூமண்டலத்தை ஓர் தலையால் தாங்கும் ஆயிரந்தலை ஆதிசேஷன்போல வால்மீகியின் கனத்தை அலக்ஷியமாய்த் தாங்கி நடப்பதோடு தன் உத்திரேகைஷகளை அலங்கரிக்கும் மணிப்பூண்களாகச் செய்து விடுகிறுன்."

பாரதியார் சொன்னதென்ன?

தமிழிலே வாழையடி வாழையென வழிவழி மகாகவிகள் பலர் தோன்றி வந்திருந்தும், அவர்களிலே வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகிய மூவரையே தேர்ந்தெடுத்து, இவர்களைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்கிறுர் பாரதியார். அந்தத் தேசியக்கவி கம்பரோடு வள்ளுவரையும் இளங்கோவையும் ஒப்பிட்டு ஆய்வு நடத்தி அவர்களிடையே உயர்வு தாழ்வு காண முயலவில்லை. ஒவ்வொருவருடைய தகுதியையும் திறத்தையும் தனித்தனியே அளந்து காட்டுகிறுன்-

எத்தனையோ பெருமைகள் தமிழ்நாட்டுக்கு உண்டென்றுலும் கம்பனைப் பெற்றெடுத்ததிலே தனிப்பெருமை உண்டென்

கிறார் பாரதியார் 'கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்பது அவரது வாக்கு.

"தமிழ்ச் சாதி" என்னும் பாடலிலே,

"எல்லையொன்றின்மையெனும் பொருள் அதனைக்
கம்பன் குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும் முன்பு நான் தமிழச்
சாதியை அமரத்தன்மை வாய்ந்தது என்று
உறுதி கொண்டிருந்தேன்"

என்றும் பாரதியார் கூறுகிறார்.

ஆம். கம்பன் தோன்றி ராம கதை என்ற காப்பியத்தைத் தமிழில் படைத்ததால், தமிழ்ச் சாதி மரணத்தை வென்றுவிட்டதாம். இதே பொருளில் 'உம்பர் அமுது ஒத்த கவி' என்று பாடுகிறார் கவிமணி தேசிக விநாயகனார். தேவர்கள் அமுதுண்பதால் சாவதில்லையாம்! அதுபோன்று கம்பர் தந்த அமுதை உண்பதால் தமிழ்ச் சாதி மரணமிலாப் பெரு வாழ்வு பெற்றுவிட்டதென்கிறார் பாரதியார். நாமக்கல் கவிஞரோ, 'கம்பன், தமிழ்த்தாய் தவமிருந்து பெற்ற மகன்' என்கிறார்.

பெண்மைக்குப் பெருமை

அறத்துறையமைச்சர் கம்பனிலே பெரியார் போதித்த சீர்திருத்தக் கருத்துக்களைக் காண முயலலாம். இங்குள்ள நாவலாசிரியர் திரு. செயகாந்தன், பொதுவுடைமைக் கருத்துக்களைக் காண முயன்றார். அவர்களுக்கு நான் சொல்லுவேன், கம்பனிலே இல்லாத முற்போக்குக் கருத்துக்களே இல்லை என்று.

கம்பன், பெண்மைக்குப் பெருமை தருவதால்தான் வான்மீகி வடமொழியில் படைத்த ராமாயணத்துக்குத் தமிழில்

வழி நூல் தந்தான் என்பேன். கற்புடைய ஒரு பெண்ணுக்குத் தீமை செய்தால், அப்படிச் செய்தவன் பத்துத் தலைகளையும் இருபது கைகளையும் படைத்தவனாயினும், திக்கெட்டையும் வென்ற தீரனாயினும், கடலால் சூழப்பட்ட தீவில் பாதுகாப்புடன் வாழ்பவனாயினும், எல்லையற்ற ஆற்றல் படைத்தவனை மைந்தனாகப் பெற்றிருப்பினும் அவன் அழிந்தே தீருவான்— என்பது, ராமாயணத்தின் கருப்பொருள்.

ஒரு பெண்ணுக்குத் தீங்கிழைத்தால், பறவைகளும் மிருகங்களும்கூட போர்க் கோலம் கொள்ளும் என்ற உண்மையை உணர்த்தவே, பறவை வேந்தன் ஜடாயுவையும், வானர வேந்தன் சுக்ரீவனையும் ராமனுக்குத் துணை சேர்த்து, வைத்திருக்கிறார் வான்மீகி. இதைவிடவும் முற்போக்கு வேறு உண்டா? இது, சமூகத்திலே ஆணுக்குப் பெண் சமம் என்ற தத்துவத்தைக் காட்டுவதாகாதா?

வேற்றுமை கண்டது போதும்

இதுபோல, பொருளாதாரத்திலும் சமத்துவத்தைக் காட்டுகிறான் கம்பன். அவன் கண்ட அயோத்தியிலே, பொய்மை இல்லையாம்; கேள்வி ஞானம் பெருகியிருப்பதால், அறியாமை இல்லையாம்; ஏழை—பணக்காரன் என்ற வர்க்க வேற்றுமையின்றி எல்லோரும் எல்லாச் செல்வமும் பெற்று வாழ்கின்றனராம். வறுமை இல்லாததால், திருடர் இல்லையாம். கம்பனிலுள்ள சமய—சமூக பொருளாதார சீர்திருத்தக் கருத்துக்களையெல்லாம் தொகுத்து ஒரு தனி நூலாக்கலாம்.

உடன் பிறந்த தம்பியர் மூவரோடு உடன் பிறவா வேடர் தலைவன் குகனையும், வானரர் தலைவன் சுக்ரீவனையும் பகைவன் தம்பியும் அரக்கனுமான வீடணனையும் தன் தம்பியராகக் கொண்டானே ராமன், அதற்கிணையான சமத்துவநெறி வேறு உண்டா?

நண்பர் ஜெயகாந்தனும், கம்பனிலே ஆங்காங்கு பரவலாகக் காணப்படும் பொருளாதாரக் கருத்துக்களையெல்லாம் தொகுத்து ஒரு தனி நூலாக வெளியிடலாம்.

கம்பனிலே நாம் கருத்து வேற்றுமைகளைக் கண்டது போதும். அதிலே அதிக காலத்தைச் செலவழித்துவிட்டோம். இனி, கருத்து ஒற்றுமையைக் காண முயல்வோம். அதுவே, *தமிழை—தமிழரை வாழ்விக்க வழி!*

பெரிதும் பாராட்டுதற்குரியவன் இலக்குவனா, அனுமனா? •

"கம்ப ராமாயணத்திலே கடமையைச் செய்தவர்களுள் பெரிதும் பாராட்டுதற்குரியவர் இலக்குவனா, அனுமனா, கும்பகருணனா?" என்பது பட்டி மன்றத் தலைப்பு. இம்மூவரிலே கும்பகருணனைப் பட்டியலிலிருந்து நீக்கி விட்டனர் நோக்கர்கள். அவர்களை, செயல்வழி நோக்குமிடத்து "நீக்கர்கள்" என்றுஞ் சொல்லலாம்.

பட்டிமன்றத்தின் தலைப்பிலுள்ள "பெரிதும் பாராட்டு தற்குரியவர்" என்ற வாசகத்தினை மனத்துள் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அதன் பொருள் என்ன? இலக்குவன், அனுமன், கும்பகருணன் ஆகிய மூவருமே கடமையைச் செய்தவர்கள்தான். அதனால், அவர்கள் அனைவருமே இலக்கிய ரசிகர்களால் பாராட்டப்படத்தக்கவர்களே— அதில் ஐயமில்லை- ஆனால், "அவர்களுள் மிகுதியும் பாராட்டப் படத்தக்கவர் யார்?" என்பதே கேள்வி. அதற்கு விடை காணவே இங்கு மூவேறு அணியினர் விவாதித்தனர்.

நோக்கர்கள், மூவரில் ஒருவனாக கும்பகருணனைக்கொள்ள மறுத்து, அவனைப் பட்டியலிலிருந்து நீக்கியது, பட்டிமன்றத் தின் நடுவனான எனக்கும் உடன்பாடானதுதான். ஆனால், நீக்கியதற்கான காரணங்களை நோக்கர்கள் கூறவில்லை. அவர்கள் 49பேராதலால் அவ்வளவு பேரும் மேடையேறி காரணங்

• 13-5-79 அன்று புதுவை கம்பன் கலையரங்கத்தில் நடந்த கம்பர் விழாப் பட்டிமன்றத்தில் நடுவராக இருந்து அளித்த தீர்ப்பு.

களை விளக்கிப் பேசுவது சாத்தியமில்லை. அவர்கள் அனைவர் சார்பிலும் ஒருவரைப் பேச விடவும் சந்தர்ப்பமில்லை. அவர்கள் முடிவு எனக்கும் உடன்பாடானதால், அதற்கான காரணங்களை அவர்கள் சார்பில் நானே கூறுகின்றேன்.

கடமையைச் செய்தது யாருக்காக?

இலக்குவன், அனுமன், கும்பகருணன் ஆகிய மூவருமே இராம—ராவணப் போரில் கடமையைச் செய்திருக்கின்றனர் என்பதனை இங்கு விவாதம் நடத்தியவர்களிலே எவரும் மறுக்கவில்லை. ஆனல், அவர்கள் கடமையைச் செய்தது எதற்காக, யாருக்காக? இதுபற்றி நாம் முதலில் ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

கும்பகருணன் கடமையைச் செய்தது, அரக்கர் குலத்தின் வாழ்வுக்காக! அத்துடன், பிறன் மனைவியை வஞ்சித்துக் கவர்ந்த அண்ணன் இராவணனுடைய வெற்றிக்காக!

இலக்குவனும் அனுமனும் கடமையைச் செய்தது, பெண் குலத்தின் கற்புக்குக் காப்புத் தேட! அதற்காகக் களம்புகுந்தது இராமனுக்கு வெற்றியுண்டாக்க!

அதருமத்தைச் சார்ந்திருந்த கும்பகருணனை, தருமத்தைச் சார்ந்திருந்த இலக்குவன்—அனுமன் ஆகியோருடன் ஒப்பிட்டுப் பார்ப்பது முறையாகாது.

'இராவணனுக்காகக் கடமையாற்றியவர்களிலே மிகுதியும் பாராட்டற்குரியவர் கும்பகருணனு? அதிகாயனு? இந்திரஜித்தனு?' என்பது இப்பட்டி மன்றத்தின் தலைப்பாக இருந்தால், அம்மூவரில் எவரையும் நீக்க வேண்டிய அவசியம் இருக்காது.

அதுபோல, "இராமனுக்காகக் கடமையாற்றியவர்களிலே மிகுதியும் பாராட்டற்குரியவர், இலக்குவனு? அனுமனு? சுக்ரீவனு?" என்பது பட்டிமன்றத்தின் பொரு

ளானுல், இவர்களில் ஒருவரையும் நீக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அப்போது, நோக்கர்களே—அதாவது, நீக்கர்களே தேவைப்பட்டிருக்க மாட்டார்கள்.

நீக்கியது சரி

தருமத்தின் அணியில் நின்ற இலக்குவனேடும் அனுமனேடும் அதருமத்தின் அணியில் நின்ற கும்பகருணனைச் சேர்த்ததனுற்ருன், அவனை நீக்கி விட்டு, மற்ற இருவரை ஒப்பிட்டு நோக்கி முடிவுக்கு வர நோக்கர்கள் எனக்கு உதவி புரிந்திருக்கின்றனர்.

இப்படி நான் சொல்வதால், பட்டிமன்றத்தின் தலைப்பைத் தேர்ந்தெடுத்தவர்கள் தெரியாமல் தவறு செய்து விட்டார்கள் என்று நான் கருதுவதாக யாரும் எண்ண வேண்டாம். அனுமனேடும் இலக்குவனேடும் கும்பகருணனைச் சேர்த்தது தவறுதான். ஆனுல், அந்தத் தவறைப் பட்டிமன்ற அமைப்பாளர்கள் தெரிந்தே செய்திருக்கிருர்கள். மூவரில் ஒருவரை நீக்குவதற்கு 49 நோக்கர்களையும் நியமித்தார்கள். ஒருகால், நோக்கர்கள் கும்பகருணனை விட்டு விட்டு, அனுமனையோ, இலக்குவனையோ நீக்கியிருந்தால்?—என்று கேட்கிறீர்களா?

புதுவை கம்பர் விழாவின் நோக்கர்கள் கம்பராமாயணத்திலே நல்ல பயிற்சியுடையவர்கள். கல்வி—கேள்வி ஆகிய இருவகையாலும் கம்பனை நன்கு அறிந்தவர்கள் அதனுல், நீக்க வேண்டிய பாத்திரத்தையே நீக்குவார்கள். நோக்கர்கள் 49 பேரில் 32 பேர் கும்பகருணனை நீக்குமாறும், 12 பேர் இலக்குவனை அகற்றுமாறும், 3பேர் அனுமனை விலக்குமாறும் கூறியிருக்கிருர்கள். ஒருவர், வீடணனை நீக்குமாறு எழுதியிருக்கிருர்· வீடணன் பட்டிமன்றத்தலைப்பிலேயே இல்லையே! "இது கூடத்தெரியாதவரையா நோக்கராக நியமித்திருக்கிருர்கள்?" என்கிறீர்களா? நான் நினைக்கிறேன், யாரோ

ஒருவர் வேண்டுமென்றே அப்படி எழுதியிருக்க வேண்டும் என்று. எப்படியோ, அந்த வாக்கு செல்லுபடியாகாது.

நோக்கர்களிலே ஒருவர் தமக்குத் தந்த வாக்குச் சீட்டைப் பயன்படுத்தாமலேயே எடுத்துக் கொண்டு சென்று விட்டதாகத் தெரிகிறது. அதனால், அவருடைய கருத்து தெரியாமல் போய்விட்டது. அவசர வேலையாக வாக்கெடுப்புக்கு முன்பு இந்த அவையைவிட்டு அவர் வெளியே சென்றிருக்கலாம்.

அனுமனா, இலக்குவனா?

எப்படியோ, நீக்க வேண்டிய பாத்திரத்தை நீக்குமாறு கோரிய நோக்கர்களைப் பாராட்டுகிறேன். அவர்களுடைய கருத்துப்படி, கும்பகருணனை நீக்கிவிட்டு, மற்றுள்ள இலக்குவன், அனுமன் ஆகிய இருவரிலே மிகுதியும் பாராட்டத்தக்க வகையில் கடமையைச் செய்தவர் யார் என்பதனை நடுவர் என்ற முறையில் ஆராய்ந்து அறிவிக்க முயல்கிறேன்.

கம்ப ராமாயணத்திலே, ராமனுடைய வெற்றிக்காக இலக்குவனும் அனுமனும் செயற்கரிய காரியங்களைச் செய்திருக்கின்றனர். ஆகவே, அவர்கள் இருவரில் மிகுதியும் பாராட்டத்தக்க ஒருவரைத் தேர்ந்தெடுப்பது அவ்வளவு எளிதல்ல. மிகவும் சங்கடமானதுதான். ஆயினும், இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத்தானே ஆக வேண்டும்?

அனுமன், சீதை இராவணனால் சிறை வைக்கப்பட்டிருந்த இடத்தை அறிந்துவந்து சொன்னானே, அது என்ன சாதாரணமான செயலா? இராமனையும் இலக்குவனையும் காப்பதற்கு அனுமன் சஞ்சீவி பருவதத்தையே கொண்டு வந்தானே, அதற்கு இணை சொல்ல முடியுமா? சுக்ரீவனையும் இராமனையும் சந்திக்க வைத்து, அவர்களிடையே தோழமையை உண்டாக்கினானே அனுமன், அது குறைத்து மதிப்பிடக் கூடிய சாதனையா?

இவ்வளவு அரும்பெரும் செயல்களை அனுமன் ஆற்றி யிருந்தாலும், இராமனுடைய அவதாரத்திற்கான வெற்றி அவன் புரிந்த சாதனைகளோடு முடிந்து விடவில்லையே!

திருமால் அவதரித்தது ஏன்?

இராமாவதாரத்தின் அவசியம் என்ன? இராவணன் உள்ளிட்ட அரக்கர்களின் வதம்தான்! அந்த வதம் அனுமன் சீதையைக் கண்டு பிடித்து விட்டதனாலேயே முடிந்துவிட வில்லையே! சஞ்சீவி பருவதத்தைக் கொண்டு வந்து இராம—இலட்சுமணரை எழுப்பிவிட்டதோடு இராமாயணக் கதை முடிந்துவிட வில்லையே!

அனுமன் புரிந்த இந்தச் சாதனைகளுக்குப் பின்னும் கதை நீளுகிறது. அனுமனுடைய சாதனைகளுடன் போட்டி யிடத் தத்க வகையில் இலக்குவன் வீரப் போர் புரிகிறான். அதையும் கணக்கிலெடுத்துக் கொண்டுதான் பெரிதும் பாராட்டத்தக்கவன் அனுமனா, இலக்குவனா?—என்பதில் முடிவு காண வேண்டும்.

இலக்குவன் இராமனுக்கு உடன்பிறப்பாக இருப்பதனா லேயே இராம—இராவணப் போரில் அவன் புரிந்துள்ள வீர சாகசத்தைப் புறக்கணித்துவிட முடியுமா?

இலக்குவன் அனுமன் ஆகிய இருவரையும் ஒப்பு நோக்கி இவர்களிலே மிகுதியும் பாராட்டற்குரிய சாதனை புரிந்தவர் எவர் என்பதை முடிவுசெய்ய வேண்டுமானால். இராமாயணக் கதை முழுவதையும் நினைவில் கொள்ள வேண்டும். அதுதான் நியதி—நீதி. அக்கதையின் கருப்பொருளாக இருப்பது, இராவண வதம் அதாவது இராமாவதாரத்தின் வெற்றி! இதற்குப் பிரதான துணையாக அமைவது அனுமனுடைய சாதனையா இலக்குவனுடைய சாதனையா? என்பதே ஆராயத் தக்கதாகும். இவர்களில் ஒருவருடைய சாதனை மற்றொரு வருடைய சாதனைக்குத் துணையாக உள்ளது என்பதனையும்

மறந்துவிடக் கூடாது. ஆம்; கதையின் அமைப்பு அப்படி இருக்கிறது.

அனுமனின் சாதனைகள்

சீதை இருக்குமிடத்தை அனுமன் கண்டுபிடித்து வந்து ராமனுக்குச் சொன்னது, சாதாரண சாதனை அல்ல. இராமனைச் சார்ந்தவர்களிலே வேறு எவரும் சாதிக்க முடியாததாகும். அப்படியே, சஞ்சீவி மலையைக் கொண்டு வந்து இராம—இலக்குமணரை அனுமன் உயிர்ப்பித்ததும் சாதாரண சாதனை அல்ல. ஆயினும், இராவணன் உள்ளிட்ட அரக்கர் குலம் அழிக்கப்பட்டில்லையேல், சீதை இருக்குமிடத்தை அறிந்தும் பயன் என்ன? இராவணனை இராமன் வென்றில்லையேல், அவன் சஞ்சீவி பர்வதத்தால் உயிர் பெற்றதனால் என்ன பலன்? இவற்றையும் நினைவில் கொண்டு பெரிதும் பாராட்டத்தக்க பாத்திரத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பு இந்த பட்டி மன்றத்தின் நடுவர் என்ற முறையில் என்மீது சார்ந்திருக்கிறது.

இராமாயணத்திலே பிரதான போர் இராமனுக்கும் ராவணனுக்குமிடையே நிகழ்வதுதான் என்றாலும், கதையின் முடிவு இராவண வதத்தைத்தான் இறுதியாகக் கொண்டிருக்கிறதென்றாலும், பாத்திரப் படைப்பின்படி, போர்க்களத்திலே இலக்குவனும் இந்திரஜித்துமே பிரதான எதிரிகளாகப்படுகின்றனர். இராவணனை வீழ்த்துவதற்கு முன்னே அவனுடைய வீரமகன் இந்திரஜித்தை வீழ்த்தியாக வேண்டிய அவசியம் இராமன் கட்சிக்கு ஏற்பட்டு விட்டது. இராமாயணத்திலே இராம—இராவணப் போரை விடவும் இலக்குவன்—இந்திரஜித் போருக்கே கம்பர் முதன்மை தந்திருக்கிறார்.

அனுமன் — இந்திரஜித்தன் வாதம்

இந்திரஜித்துடன் போர்க்களம் புகுவதற்கு முன்பு அவன் தம்பி அதிகாயனுடன் போர் செய்து வெற்றி காண்கிறான்

இலக்குவன். அதைக் கண்ட வீடணன், "ஐயன் மந்திர சித்தியன்ன சிலைத் தொழில் வலி ஈது ஆயின், இந்திரசித்த ஞர்க்கும் இறுதியே இயைவது" என்று கூறுகின்றான். ஆம்; இந்திரஜித்தனை இலக்குவன் வெல்வது உறுதி என்ற முடிவுக்கு வீடணன் வந்து விடுகிறான், அவர்களிருவரும் களத்திற்கு வருவதற்கு முன்பே!

இந்திரஜித்தன் களத்தில் கால் வைத்தவுடனே போர் புரிவதற்கு இலக்குவனையே தேடுகிறான். தன்னுடன் போர் புரிய வந்த அனுமனை நோக்கி, "கல் எடுத்துப் போர் புரியும் அனுமனே! வில் பிடித்த வீரனை என் முன் வரச் சொல்!" என்று வீரம் பேசுகிறான். அதற்குப் பதிலளித்து அனுமன் பேசுகிறான்:

" வில்லெடுக்க உரியார்கள், வெய்யசில
வீரர் இங்குமுளர்; மெல்லியோய்!
கல்லெடுக்க உரியானும் நின்றனன்:
அதுஇன்று நாளையிடை காணலாம்;
எல்லெடுத்த படை இந்திராதியர் உனக்கு
இடைந்துஉயிர் கொடு ஏகுவார்;
புல்லெடுத்தவர்கள் அல்லம்; வேறுசில
போர் எடுத்து, எதிர் புகுந்துளோம்.

" என்னொடே பொருதியோ? அது அன்று எனின்,
இலக்குவப் பெயரின் எம்பிரான்
தன்னொடே பொருதியோ? உந்தை தலை
தள்ள நின்ற தனி வள்ளலாம்
மன்னொடே பொருதியோ? உரைத்தது
மறுக்கிலோம"...

"வில் பிடித்த வீரனைக் கூப்பிடு!" என்று இந்திரஜித்தன் வீரம் பேசியதற்கு, "உனக்கு எதிராக வில் எடுக்கவும் பல வீரருளர். போரில் நீ மாண்டபின் உனக்குக் கல்லெடுத்துக் கருமம் செய்யவும் ஒருவன் (வீடணன்) எங்களிடம் உளான்.

"நீ விரும்பினுல், என்னிடமே போர் செய்யலாம். விரும்பாவிடின், இளவல் இலக்குவனை எதிர்த்தேனும் போர் செய்யலாம். அதையும் விரும்பாவிடில், உன் தந்தையின் தலையைக் கொய்வதற்குக் காத்திருக்கும் எந்தை இராம பிரானுடனேனும் போர் செய்யலாம்.''

வீடணன் வாக்கு

இப்படிச் சொன்ன அனுமனுடன்தான் இந்திரஜித்தன் முதலில் போர் புரிகிருன். போரின் ஒரு கட்டத்தில் அனுமன் தளர்ந்து வீழ்ந்தான். அது கண்ட வீடணன், களத்தில் நிற்கும் இலக்குவனைப் பார்த்து,

'ஐய! ஈது அன்னதேயால்; ஆயிரம் கோடித் தேவர்
எயதினர்; எய்திஞர்கள் ஈடுபட்டு இரிந்த தல்லால்,
செயதிலர் இவனை ஒன்றும்; நீ இது தீர்ப்பின அல்லால்,
உயதிறன உணடோ,வேறிவ் உலகினுககு உயிரோடு? 'என்ருன்

"இந்திரஜித்தனிடம் நீ போர் செய்து அவனை வென்ருலொழிய இந்த உலகம் உய்யாது'' என்கிருன் வீடணன். இது ஒன்றே இராம_ராவணப் போரின் முடிவு. இலக்குவனுக்கும் இந்திரஜித்தனுக்கும் இடையிலான போரின் முடிவைப் பொறுத்ததுதான் என்பதைப் புலப்படுத்தும். இந்திரஜித்தனை அனுமனுல் வெல்ல முடியாத நிலையில்தான் இலக்குவன் களத்திற்கு வருகிருன். இதையும் நினைவில் கொள்ள வேண்டும். வீடணன் வேண்டிக்கொண்டபடி இந்திரஜித்தனை நெருங்குகிருன் இலக்குவன். இருவருக்கு மிடையே போர் தொடங்குகிறது. இந்தப் போரைக் காண தேவர்கள் பார்வையாளர்களாக விண்வெளியில் திரண்டு விடுகின்றனர்.

இந்த இடத்தில் மற்ருெரு செய்தியையும் நினைவூட்ட விரும்புகிறேன். இந்திரஜித்தன் தன்னுடைய தேரில் ஏறிக் கொண்டு இலக்குவனுடன் போர் தொடங்குகிருன். இலக்குவனுக்குத் தேர் ஏது? அந்தக் குறையைப் போக்க அனுமன்

தன் தோள்களைக் கொடுக்கிறான். அனுமனுடைய தோள் களில் ஏறிக் கொண்டு இந்திரஜித்தனுடன் இலக்குவன் போர் புரிகிறான். இந்த இடத்திலும் இலக்குவனைப் பிரதான பாத்திரமாக்கி அனுமனைத் துணைப் பாத்திரமாக்கி விடுகிறார் கம்பர்.

அனுமனுடைய துணை இந்திரஜித்தனை வெல்வதற்கு இலக்குவனுக்குத் தேவைப்படுகிறது. அந்த வகையில் அனுமனும் பாராட்டற்குரியவனாகிறான். ஆனால், இந்திர ஜித்தனை வென்று பெரிதும் பாராட்டுதற்குரியவனாவதற்கு அனுமனுக்கு வாய்ப்புக் கிடைத்தும், அதனை அவன் பயன் படுத்திக் கொள்ள முடியவில்லை. இந்திரஜித்தனை வெல்லப் பிறந்தவன் இலக்குவன்தானே!

தேவர்கள் 'நிர்வாணம்!'

இந்திரஜித்தனுக்கும் இலக்குவனுக்குமிடையே நிகழ்ந்த போரைப் பலபட வருணிக்கிறார் பாரத நாட்டின் பெருங் கவிஞரான கம்பர். இருவருமே ஒருவருக்கொருவர் சளைக் காமல் போர் புரிந்ததாகக் கூறுகிறார். போரிலே இந்திரஜித்த னுடைய தேர்கள் பலவற்றை ஒன்றன் பின் ஒன்றாக அழித்து விடுகிறான் இலக்குவன். விண் வெளியில் வேடிக்கை பார்க்கும் தேவர்களெல்லாம் தங்கள் மேல் துண்டை எடுத்து வீசி எறிந்து வெறி பிடித்தவர்களாகி, வெற்றி விழாக் கொண் டாடுகிறார்களாம், இந்திரஜித்தனின் தேர்கள் அழிந்த அளவிலே! இன்னமும் இந்திரஜித்தன் உயிரோடுதான் இருக்கிறான் என்பதனை மறந்து விண்ணவர்கள் விழாக் கொண்டாடுகிறார்கள்.

இந்திரஜித்தன் தேர்களை ஒன்றன்பின்ஒன்றாக இலக்குவன் அழித்தபோதெல்லாம் தேவர்கள்அவனுக்கு ஆசி கூறினராம். அவன்மீது மலர்மாரி பொழிந்தனராம்! இதிலிருந்து தெரி கிறது, இராமாவதாரத்தின் வெற்றி இந்திரஜித்தின்

வீழ்ச்சியை—அதாவது, இலக்குவனுடைய வெற்றியைப் பொறுத்ததுதான் என்பது.

எவரும் தன்னை எளிதில் வெல்ல முடியாத வகையில் இந்திரஜித்தன் சில விசேஷ சக்திகளையும் சாதனங்களையும் பெற்றிருந்தான். இந்த சக்திகள்—சாதனங்கள் பற்றிய ரகசியங்களை, மகப் பாசத்தையும் துறந்து, மாற்றானான இராமனுக்கு வீடணன் அறிவிக்கிறான். "துரோகம்" என்று அரக்கராதியரால் கருதத்தக்க இதை வீடணன் செய்யா திருந்தால், இந்திரஜித்தனை இலக்குவன் வீழ்த்தியிருக்க முடியாது. இதன்படிப் பார்த்தால், "பெரிதும் பாராட்டற் குரியவன் விடணனே" என்று நான் தீர்ப்பளித்துவிடலாம். ஆனால், பட்டி மன்றத்தில் விவாதிக்கப்படுபவர்களின் பெயர்ப் பட்டியலிலே வீடணன் இல்லையே!

இந்திரஜித்தன் நிகும்பலையாகத்தை முடித்திருப்பானேல், அவனை இலக்குவனால் வென்றிருக்க முடியாது. அந்த யாகம் பற்றிய இரகசியத்தை இலக்குவனுக்கு உரைத்து, அதைத் தடுத்துக் கெடுத்து, இலக்குவனுடைய வெற்றிக்கு வீடணன் துணை புரிந்தான். இந்த சாதனை அனுமனுடையதல்ல; வீடணனுடையதே!

இந்திரஜித்தனுடைய மகத்தான சக்தி நிகும்பலை யாக மென்றால், அவன் பெற்றிருந்த மாபெருஞ் சாதனங்கள் சிவன் தந்த தேரும் வில்லும் ஆகும். இந்த இரகசியத்தை வீடணன் மூலமே இலக்குவன் அறிந்து கொள்ளுகிறான். இதோ, அண்ணன் மகனை அழிப்பதற்கு, அன்னியனான இலக்குவனுக்கு வீடணன் அறிவிக்கும் இரகசியம் வருமாறு:

'ஆர் அழியாத சூலத்து அந்தணன் அருளின் ஈந்த
தேர் அழியாத போதும், சிலைகரத்து இருந்த போதும்,
போர் அழியான், இவ்வெய்யோன்; புகழ் அழியாத
வீர! இது ஆணை'... **[பொன்தோள்**

தேவர்களின் வியப்பு!

இந்த ரகசியத்தைப்பற்றி அறிந்த பின், வீடணன் துணை கொண்டு, இலக்குவன், இந்திரஜித்தின் தேரையும் வில்லையும் அழித்தான்! பின், சிவன் தந்த வில்லைப் பிடித்த கையையும் வெட்டி வீழ்த்துகிறான். அதுகண்டு, தேவர்கள் வியக்கின்றனர்.

"வானத்திலிருந்து சூரியன் வீழவில்லை; சந்திரன் வீழவில்லை; மேருமலையும் பெயர்ந்து வீழாமல் இருந்த இடத்திலேயே இருக்கின்றது. இந்திரஜித்தன் உடலிலிருந்து கை மட்டும் விடுபட்டு வீழுமோ?!' என்று கூறி, தேவர்கள் வியக்கின்றனர். "இந்திரஜித்தனின் தோளே துண்டுபட்டு விழுந்து விட்டதென்றால், யந்திரம் போன்ற மனித வாழ்க்கையை இன்னும் சிலர் விரும்புகின்றார்களே, எதற்கு?" என்றும் தேவர்கள் பேசுகின்றனர்.

அந்தரம் அதனில் நின்ற வானவர், 'அருக்கன் வீழா,
சந்திரன் வீழா, மேருமால் வரை தகர்ந்து வீழா,
இந்திரசித்தன் பொன்தோள் இற்று இடை விழுந்தது என்றால்,
எந்திரம் அனைய வாழ்க்கை இனிச்சிலர் உகந்தது என்?'
என்றார்.

இந்திரஜித்தனுடைய ஒரு கை துண்டிக்கப்பட்ட அளவிலேயே தேவர்களுக்கு அவ்வளவு மகிழ்ச்சி. கையை இழந்த நிலையிலும், 'உன்னை விட்டேனா பார்!' என்று வீரத்துடன் போர் புரிகிறான் இந்திரஜித்தன். "என்னை நீ கொல்லு முன், தேவர்கோன் தந்த சூலங் கொண்டு யான் உன் தலையைக் கொய்து முடிப்பேன்" என்று சபதஞ் செய்கிறான், இலங்கையின் இளவரசன்.

இனித் தன்னுடைய ஆற்றலை மட்டும் கொண்டு இந்திரஜித்தனை வெல்வது இயலாது என்பதனை இலக்குவன் உணர்கின்றான். இந்திரஜித்தனுடன் இன்னும் ஒரு கணம்

போர் நீடித்தால் தன் தலை போவது உறுதி என்ற முடிவுக்கும் இலக்குவன் வருகின்றான்.

இறையவன் இராமனா?

இந்நிலையில், சந்திர வடிவம் போன்ற ஒரு அம்பைக் கையிலெடுத்துக்கொண்டு, "வேதங்களெல்லாம் தேடத் தக்கவனும், அந்தணர்களால் வணங்குதற்கு உரியவனுமான பரம்பொருளானவன் என் அண்ணன் இராமன்தான் என்பது சத்தியமானால், இந்த அம்பு இந்திரஜித்தனைக் கொல்வதாக!" என்று சொல்லி, அந்த அம்பை ஏவினான். ஏவிய பாணம் இந்திரஜித்தன் தலையைக் கொய்தது.

இந்திரஜித்தன் தன் பகைவனான இலக்குவனுடன் வீரமாகப் போர் புரிந்த பின்பே வீழ்ச்சியுற்றான். அவன் போர் செய்த திறங்கண்டு, அவனது வீழ்ச்சியை விரும்பிய தேவர்கள்கூட அவனை,

> "வீரர்என் பார்கட் கெல்லாம்
> முன்னிற்கும் வீரர் வீரன்"

என்று வாயாரப் போற்றினார்களாம்!

> "தீரர், என்று அமரர் பேசிச்
> சிந்தினர், தெய்வப் பொற் பூ!"

என்று கம்பரும் பாடுகின்றார். ஆம்; இந்திரஜித்தன் மீது வானகத்தோர் பூ மழை பொழிந்தார்களாம். தன் பகைவர்களும் பாராட்டும் வகையில் இலக்குவனோடு வீரப் போர் புரிந்தான் இந்திரஜித்தன்.

இலக்குவன்கூட, "இவன் மாண்டால், இவனோடு ஆண்மைத் தொழிலும் அழிந்து போகும்" என்று கூறினான். இந்த அசகாயச் சூரனை வென்ற இலக்குவனை, பெரிதும் பாராட்டத் தக்க வகையில் கடமையைச் செய்தவன் என்று கூறாமல், வேறு யாரைக் கூறுவது?

இலக்குவனது அம்பால் கொய்யப்பட்டு தலை மண்ணில் வீழ்வதற்கு முன்பு, அவனது உடல் மண்ணில் சாய்ந்துவிட்டதாம்! அவன் தலை தரையில் விழுந்ததானது, சூரிய மண்டலமே வானத்திலிருந்து பெயர்ந்து பூமியில் வீழ்ந்ததுபோலிருந்ததாம்!

இந்திரஜித்தன் தலை வேறு முண்டம் வேருக வெட்டுண்டு வீழ்ந்ததைக் கண்ட தேவர்கள், தங்கள் இடுப்பில் அணிந்திருந்த ஆடையை அவிழ்த்தெடுத்து, அதைப் பந்துபோல் உருண்டையாக்கி, அந்தப் பந்தை வானத்தில் விட்டெறிந்து, அது கீழே வருங்கால் கையால் பிடித்து, பந்தாடி விழாக் கொண்டாடி, 'இனி, இராவணன் அரசு அழிந்தது' என்று கூறி ஆரவாரித்தார்களாம்.

தங்கள் இடுப்பிலுடுத்திய ஆடையை அவிழ்த்தெடுத்து விளையாடியபோது, கொல்லா விரதத்தைக் கடைப் பிடிக்கும் திகம்பர (நிர்வாண) சமணர்கள்போல் தேவர்கள் காட்சியளித்தார்களாம்! இதனை,

"வில்லாளர் ஆனுர்க் கெல்லாம் மேலவன் விளிதலோடும்,
செல்லாதவ் இலங்கை வேந்தற்குஅரசுஎனக் களித்ததேவர்
எல்லாருந் தூசு நீக்கிஏறிட ஆர்த்த போது,
கொல்லாத விரதத் தார்தங் கடவுளர்கூட்டம் ஒத்தார்."

என்ற செய்யுளில் கம்பர் காட்சிப்படுத்துகின்ருர். இந்திரஜித்தன் வீழ்ச்சியோடு இலங்கையில் ஆட்சிமாறி விட்டதாகத் தேவர்கள் கருதினுர்கள் என்ருல், இலக்குவனது வெற்றியைக் குறைத்து மதிப்பிட முடியுமா?

தந்தைக்கு அறிவுரை!

போரிலே இந்திரஜித்தனுக்கு இலக்குவன் இளைத்துவிடவில்லை. இராமனது வீரத் தம்பியுடன் போர் செய்து கொண்டிருந்த நிலையில், திடீரென ஒரு நேரத்தில் போரை நிறுத்தி

விட்டு, வானத்தில் மறைந்தவனுகி, தன் தந்தையிடம் செல்கிருன் இந்திரஜித்தன்.

சிவபெருமானிடம் இந்திரஜித்தன் பெற்ற வில்லேயும் தேரையும் இலக்குவன் அழித்தபோதே தனது வீழ்ச்சி திண்ணமென்பதை அரக்க வீரன் அறிந்து கொண்டான். அப்போதுதான் அவன் முதன் முதலாகத் தன் தந்தையின் செயலிலுள்ள தவறை உணர்ந்தான். உணர்ந்தவன், தந்தையிடம் வாதாடி மேலும் போர் நிகழ்வதைத் தவிர்க்கலாம் என்ற நம்பிக்கையோடு, களத்தை விட்டகன்று இலங்கை புகுந்து, இராவணனே அணுகினுன். வானவெளியில் மறைந்து இந்திரஜித்தன் இலங்கை திரும்பினுன் என்பதனுல், அவன் போர்க்களத்திற்குப் புறமுதுகு காட்டி ஓடிவிட்டதாகப் பொருளாகாது.

இலங்கை புகுந்தவன், தன் தந்தையை அணுகி, அறிவுரை கூறுகிருன். சீதைக்கு விடுதலேயளித்து, போரைத் தவிர்த்து, அரக்கர் குலத்தைக் காப்பாற்றுமாறு தந்தையை வேண்டுகிருன். அந்த அளவுக்கு இலக்குவன் தொடுத்த பாணங்கள் இந்திரஜித்தனுக்கு மனமாற்றத்தை ஏற்படுத்தி விட்டன. சீதையை விட்டு விடுமாறு முன்னர் வீடணன் கூறிய போது அதை இந்திரஜித்து எதிர்த்தான். அப்படிச் சொன்னதற்காக சிறிய தந்தையை ஏசினுன். ஆனுல், களம் புகுந்து இலக்குவனது வீரத்தைச் சந்தித்த பின்னர், சிந்தை மாறினுன்.

இலக்குவன் விடுத்த பாணங்களால் உடலி லிருந்து இரத்தம் பெருக்கெடுத்தோடும் நிலேயில் தன்னந் தனியாகத் தன்னே அணுகிய மைந்தனேப் பார்த்ததும், போர் முடியாத நிலேயில்தான் அவன் வந்திருக்கிருன் என்பதனே ராவணன் உணர்ந்து கொள்கிருன். 'மகனே! போர் முடியவில்லே யென்பதை உன் தோள்களின் மேல் பதிந்துள்ள அம்புகளே காட்டுகின்றன. ஆற்றல் மிக்க உன் உடல் தளர்ந்து நடுங்குகின்றது. கருடனுக்குப் பயந்து படமொடுங்கின பாம்புபோல் காணப்

படுகிருயே, என்ன நடந்தது கூறு' என்று கேட்கிருன், ராவணன்.

"தந்தையே! தங்கள் தம்பி வீடணன் நிகும்பலை யாகம் பற்றிய ரகசியத்தைப் பகைவருக்கு அறிவித்ததால், அந்த யாகத்தை நடத்த இயலாதபடி இலக்குவன் தடுத்து விட்டான். குலத்துரோகி செய்த கொடுமை இது.

"தேவர் மூலம் தந்த ஆயுதங்களை யெல்லாம் பிரயோகித்தேன். அவற்றையெல்லாம் இலக்குவன் அழித்து விட்டான். திருமால் தந்த படையே இலக்குவனைக் கொல்லாமல், அவனை வலம் வந்து போய்விட்டதென்ருல், அவனைக் கொல்ல வேறு ஆயுதம் ஏது?"

இப்படி, தந்தையை அணுகிய மைந்தன் இலக்குவனின் போர்த்திறனை வருணித்து, அவனை வெல்லத் தன்ஞல் இயலாது என்பதனைச் சொல்லாமல் சொல்லிவிட்டான். கம்பன் மேலுஞ் சொல்வான்:

'ஆதலால், அஞ்சினேன், என்று அருளலை; ஆசைதான் அச்
சீதைபால் விடுதியாயின், அனையவர் சீற்றந் தீர்வர்;
போதலும் புரிவர்; செய்த புன்மையும் பொறுப்பர்; உன்மேல்
காதலால் உரைத்தேன்' என்ருன் உலகெலாங்கலக்கிவென்ருன்.

இலங்கை வேந்தனின் சினம்

தன் வீர மைந்தன், இலக்குவனுக்குப் பயந்து, களத்தை விட்டோடி வந்து, சீதையை விடுதலை செய்து, போரைத் தவிர்த்து, இராமனிடம் மன்னிப்புப் பெறுமாறு கூறியது கேட்டு, இடி இடித்தது போல் கனைத்து, தன் இரு தோள்கள் குலுங்குமாறு சிரித்தான் இராவணன்.

"மகனே! நீ, அந்த மனிதர்களைப் பார்த்து மிகவும் பயந்து விட்டாய்! பயத்தோடு நீ இனி போருக்குப் போக மாட்டாய் என்பது தெரிகிறது. சரி, நானே போகிறேன்.

அந்த மனிதர்களை ஒரு அம்பால் வென்று திரும்புகிறேன்" என்று கூறினன். இராவணன் மேலும் கூறுகிருன்:

முன்னையோர் இறந்தோர் எல்லாம் இப்பகை முடிப்பர் என்றும்,
பின்னையோர் நின்றேரெல்லாம் வென்றவர்ப் பெயர்வர் என்றும்
உன்னை 'நீ அவரை வென்று தருதி' என்று உணர்ந்தும் அன்ருல்;
என்னையே நோக்கி யான்இந் நெடும்பகை தேடிக்கொண்டேன்.

பேதைமை உரைத்தாய் பிள்ளாய்! உலகெலாம் பெயர பேரா
காதையென் புகழினேடு நிலைபெற, அமரர் காண,
மீதெழு மொக்குள் அன்ன யாக்கையை விடுவது அல்லால்,
சீதையை விடுவது உண்டோ, இருபது திண்தோள் உண்டால்.

வென்றிலென் என்றபோதும் வேதமுள் ளளவும் யானும்
நின்றுளன் அன்றே, மற்றுஅவ் இராமன் பேர் நிற்கும் ஆயின்,
பொன்றுதல் ஒரு காலத்தும் தவிருமோ? பொதுமைத்து அன்றே?
இன்றுளார் நாளை மாள்வர்; புகழுக்கும் இறுதி உண்டோ?

விட்டனன் சீதைதன்னை, என்றலும் விண்ணேர் நண்ணிக்
கட்டுவது அல்லால், என்னை யான் எனக் கருதுவாரோ?
பட்டனென், என்றபோதும் எளிமையின் படுகிலேன் யான்
எட்டினேடு இரண்டும் ஆன திசைகளை எறிந்துவென்றேன்.

"முன்னர் இறந்த உன் தம்பி அதிகாயன், என் தம்பி கும்பகர்ணன் ஆகியோரெல்லாம் என் பகைவர்களான ராம—இலக்குமணர்களை வெல்வார்கள் என்று நம்பியோ, அவர்களுக்குப் பின் உயிர் வாழும் அரக்கர் குல மாவீரர்கள் எனக்கு வெற்றி தேடித் தருவார்கள் என்று கருதியோ, நீ போய் அவர்களை வீழ்த்திவிட்டு, சீதையை என் பக்கலில் சேர்த்து விடுவாய் என்று எண்ணியோ நான் இந்தப் பெரும் போரை ஏற்றுக் கொண்டேனில்லை" என்று வீராப்பு பேசுகிருன் இலங்கை வேந்தன்.

"எனக்கு வெற்றி கிட்டாவிட்டால்தான் என்ன? வேத முள்ளளவும் இராமன் புகழ் நிற்கும். அவனேடு சேர்ந்து என் புகழும் நிலை பெறும்.

"மரணம் என்ன, என்றேனும் ஒரு நாள் வரத்தானே போகிறது? இன்று வாழ்வார் நாளை மாளப் போவது உறுதி. ஆனால், புகழுக்கு இறுதி உண்டோ?

"மகனே! நான் சீதையை விடுதலை செய்து விட்டேன் என்ற செய்தி கேட்டதுமே இதுவரை எனக்கு அஞ்சிக் கிடக்கும் தேவர்கள் அச்சம் நீங்கி என்னை அணுகிவிட மாட்டார்களா? அப்புறம், என்னை இராவணனாக அவர்கள் எண்ணுவார்களா? அப்படித்தான் நான் மாள நேர்ந்தாலும், மகனே! எளிதில் மாண்டுவிட மாட்டேனேடா! எட்டுத் திசைகளுடன் விண்ணும் மண்ணும் சேர்ந்த பத்துத் திசைகளையும் வென்றவன் அல்லவா நான்?

"பல சொல்லிப் பயன் என்ன? நீ போய் உன் இருப்பிடத்தில் சேர். உன் உடம்பில் பதிந்துள்ள அம்புகளையெல்லாம் அகற்றி, போர்த் தொழிலில் நேர்ந்த இளைப்பைப் போக்கி இன்றிரவை அமைதியாகக் கழி. இதோ, நான் போகிறேன், களத்திற்கு."

இலக்குவனுக்கு அஞ்சித் தன்னிடம் அடைக்கலம் புகுந்த அருமை மைந்தன் இந்திரஜித்தனை எள்ளி நகையாடினான் இராவணன்.

தந்தை மனம் நொந்து கூறியதைக் கேட்ட மைந்தன் இந்திரஜித்தன் மனம் திருந்தினான். தந்தையின் திருவடிகள் இரண்டையும் தன் மலர்க் கரங்களால் பற்றி வணங்கினான். "என்மீது கொண்ட சினத்தை ஒழித்துஅருள்" என்று வேண்டினான். "நான் போர்க்களம் செல்கிறேன். மாள்வேன் என்பது உறுதி. நான் மாண்ட பின்னரேனும் இப்போது யான் சொன்ன நல்ல கருத்துக்களைச் சிந்தித்துப் பார்" என்று கூறி விட்டு, தன் கடைக் கண்களால் தந்தையை உற்று நோக்கி ஒருமுறை பார்த்து, கண்களில் நீரைப் பெருக்கவிட்டு, இலக்குவனைச் சந்திக்க இந்திரஜித்தன் திரும்பவும் களம் புகுந்தான்.

இந்திரஜித்தன் களத்திலிருந்து வெளியேறி, வானத்தில் மறைந்தவனாகி, இலங்கையை அடைந்து தந்தையைச்

சந்தித்ததும், தந்தையும் மைந்தனும் பரஸ்பரம் தோல்வி மனப்பான்மையுடன் வாதிட்டதும், இலக்குவன் வீரத்திற்குக் கம்பர் தரும் விளம்பரமல்லவா? இது ஒன்றே, பெரிதும் பாரட்டற்குரியவன் இலக்குவன் என்பதனை உறுதிப்படுத் தாதோ?

வெல்லப் பிறந்தவன்

வாழ்விலே, எல்லோரையுந்தான் பாராட்டி விடுகின் ரேம். ஆனல், அப்படிப் பாராட்டத்தக்க பலரிடமிருந்து ஒருவரைப் பிரித்தெடுத்துப் பெரிதும் பாராட்டுகிறே மென்றல், அவர் செயற்கரிய செய்தவராக இருக்க வேண்டு மல்லவா? அதுவும் பிறிதொருவரால் வெல்ல முடியாத செய லாகவும் இருக்க வேண்டுமல்லவா? அப்படிப் பார்க்கும்போது இந்திரஜித்தனை இலக்குவன்வென்ற செயலானது, அனுமனுல் செய்யக் கூடியதா? இந்திரஜித்தனை வெல்ல பதினன்காண்டு காலம் உணவும் உறக்கமும் இல்லாதவனுக இருக்க வேண்டு மாம்! அப்படி இருந்து இந்திரஜித்தனை வெல்லும் வரம் பெற்றவன் அனுமனல்ல; இந்திரஜித்தனே! இலக்குவன் இராமனுக்குத் தம்பி என்பதால், இந்திரஜித்தனை வென்ற அவனது செயல் குறைத்து மதிப்பிடத்தக்க தாகிவிடுமா, என்ன?

பதினன்கு ஆண்டு காலம் உண்ணுமல் உறங்காமல் விரதம் காத்தவனுக இருந்தும், இலக்குவன் இந்திரஜித்தனைத் தன் பலத்தைக் கொண்டு மட்டுமே வெல்ல முடியாமல் தவிக் கிருன். நிகும்பலை யாகத்தை அழித்த பின்னும், கரத்தைத் துண்டித்த பின்னும், இந்திரஜித்தனை வெல்வது இலக்கு வனுக்குச் சுலபமான காரியமாக இல்லை. கடுமையாகப் போராடி நம்பிக்கையை இழந்த நிலையிலே, தெய்வத்திடம் அடைக்கலம் புகுகிருன். நேராகத் தெய்வத்திடம் போகாமல் அண்ணன் இராமன் மூலமாக அடைக்கலம் புகுகிருன்.

அம்பொன்றைக் கையில் எடுத்துக் கொண்டு, ''என் அண்ணன் இராமன்தான் அந்தப் பரம்பொருள் என்பது உண்மையானால், இந்த அம்பு இந்திரஜித்தன் தலையைக் கொய்யட்டும்'' என்று சொல்லி, அம்பை இந்திரஜித்தன் தலையைக் குறிபார்த்து விடுகிறான். இதோ, அதைக் கம்பனே சொல்லுகிறான், கேட்போம்.

மறைகளே தேறத்தக்க வேதியர் வணங்கற் பால
இறையவன் இராமன் என்னும் நல்லற மூர்த்தி என்னில்
பிறையெயிற்று இவனைக் கோறி என்றொரு பிறைவாய் வாளி
நிறையுற வாங்கி விட்டான் உலகெலாம் நிறுத்தி நின்றான்.

இறைவன் வேதங்களெலாம் தொழத்தக்கவன், தங்கள் கல்வியாலும் விரதங்களாலும் மானிடர்களிலே சிறந்து விளங்கத் தக்கவர்களான அந்தணர்களால் தொழத்தக்கவன். இராமனும் அத்தகையவனே என்பது கம்பன் முடிவு. இதனை இலக்குவன் வாக்காக வெளிப்படுத்துகின்றான்.

இலக்குவன் விட்ட அம்பு சந்திரனைப்போன்ற வடிவ முடையது. தாக்கப்படுவோரின் தலையைக் கொய்யும் தன்மையுடன் கோரப் பற்களைக் கொண்டது.

இலக்குவன் எய்த அம்பு இந்திரஜித்தன் தலையைக் கொய்து கீழே வீழ்த்திவிடுகிறது. இதனால், இந்திரஜித் தனிடமிருந்து உலகத்தைக் காத்தான்; தன்னையும் காத்துக் கொண்டான் இலக்குவன். இதனை, 'உலகெலாம் நிறுத்தி நின்றான்'' என்ற வாசகத்தால் கம்பர் உணர்த்துகின்றார்.

இப்பொழுது சொல்லுங்கள், இந்திரஜித்தை வென்றது இலக்குவனா? இராமனா? இறைவனா? இலக்குவன் மானிடர் களில் சிறந்தவன்; ஆதிசேடனின் அவதாரம் – என்றாலும், இலங்கையின் இளவரசனான இந்திரஜித்தனை வெல்வது அவனாலும் முடியாதது என்பதனைக் கம்பர் இங்கு உணர்த்து கிறார் என்றால், அனுமனால் முடியக்கூடியதா? இராமனாலும் முடியாதது என்பதனை உணர்த்த நினைந்து இலக்குவனை

இறைவனிடம் சரண்புக வைக்கிறார். இலக்குவன் இராமனைத் துணைக்கிழுக்காமல் நேராகவே கடவுளிடம் சரண்புகும்படிச் செய்திருக்கலாம். அது, அவதார புருடனான இராமனுடைய பரத்துவத்திற்கு இழுக்கு என நினைந்து, தன் அண்ணனே இறைவன் என்ற முடிவுடன், "இறையவன் ராமன் என்னும் நல்லற மூர்த்தி என்னில்" என்று இலக்குவன் கூறுகின்றான்.

இப்படி, ஆதிசேடனின் அவதாரமான இலக்குவனாலும், திருமாலின் அவதாரமான இராமனாலும் இந்திரஜித்தனைக் கொல்ல முடியாதென்ற உண்மையை உணர்த்தி, இறைவனை—அதாவது, பரம்பொருளை நினைத்து, அம்பெய்து இந்திரஜித்தனைக் கொல்லச் செய்கிறான் கம்பன். இதனை அனுமன் சாதித்து இலக்குவனை விடவும் பாராட்டுக் குரியவனாகும் பேற்றினைப் பெற முடியுமா?

தூதுவர் கதி!

இலக்குவன் இந்திரஜித்துடன் போர் செய்யத் தொடங்கியபோது, "என் அம்பு நின் தலையைக் கொய்வது உறுதி" என்று சூளுரைத்தான். அப்படிச் சொன்னபோது களத்தில் இலக்குவனுடன் அனுமனும் இருந்தான். சூளுரைத்தபடி இந்திரஜித்தன் தலையை இலக்குவன் கொய்து முடித்தான்.

இந்திரஜித்தனது வீழ்ச்சி இராவணனுக்கு அறிவிக்கப்படுகிறது. அந்தச் செய்தியைச் சொல்ல வந்த தூதுவர் இருவரும், உடல் நடுங்க—வாய் நடுங்க—மண்ணில் ஊன்றிய கால் நடுங்க—இத்தனைக்கும் மேலாக உயிரே நடுநடுங்க இராவணனை அணுகினர். மைந்தன் மாண்ட செய்தியை தந்தைக்கு அறிவிப்ப தென்றாலே, யாருக்கும் நடுக்கம் இருக்கத்தான் செய்யும். அதுவும், இந்திரனை வென்றவன்—தேவர் மூவரையும் புறங்கண்டவன்—திக்கெட்டும் வெற்றி யுலாச் சென்றவன் மாண்ட செய்தியை அவன் தந்தைக்குக் கூறுவதென்றால், யாருக்குத்தான் நடுக்கம் வராது. துக்கச் செய்தி யாருக்குச் சொல்லப்படுகிறது? இறைவன் அமர்ந்துள்ள இமய மலையையே தன் ஒரு தோளால் தூக்கியெடுத்த

இராவணேசுவரனுக்கல்லவா, அவன் மகன் இந்திரஜித்தன் மாண்ட செய்தியைச் சொல்ல வேண்டியிருக்கிறது?

இராவணனை அணுகிய தூதுவர், "இந்திரஜித்தன் இறந்து விட்டான்" என்று வெளிப்படையாகச் சொல்லவில்லை. மாறாக, "இல்லையாயினன் உன் மகன், இன்று" என்று சொன்னார்கள். "இல்லையாயினன்" என்று சொன்னவர்கள் "இன்று" எனக் கால வரம்பு வைத்தனர். இந்திரஜித்தன் மாயத்தில் வல்லவன் என்பது தூதுவர்களுக்குத் தெரியுமல்லவா? 'இறந்து விட்டான்' என்று சொல்லி விட்டால், நாளை அந்த மாயாவி உயிரோடு வந்து விட்டால் என்ன செய்வது என்று பயந்தனர் தூதுவர்கள். அதனால், "இல்லையாயினன், இன்று" எனக் கூறினர். இவ்வளவு சாமர்த்தியமாகச் சொல்லியும் செய்தி கொண்டு வந்த தூதுவர்கள் கழுத்தைக் குறிபார்த்துத் தன் வாளை வீசிவிட்டான் இராவணேசுவரன்.

இராவணன் அலறல்!

மைந்தனது மரணச் செய்தியை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இந்திரஜித்தனோடு தன்னுடைய ஆற்றல், அந்தஸ்து, அதிகாரம் அனைத்தும் போய்விட்டதாக நினைத்து இராவணன் புலம்பினான். தன் இருபது கண்களிலும் நீரை ஆறாகப் பெருக விட்டு, பத்து வாய்களாலும் அலறி அலறி அழுகிறான். இதனை, பதின்மூன்று செய்யுட்களால் வருணிக்கிறார் கவியரசர் கம்பர்.

'மைந்தாவோ!' எனும்; 'மா மகனே!' எனும்;
'எந்தையே!' எனும்; 'என் உயிரே!' எனும்;
'உந்தினேன் உனை; நான் உளனே!' எனும்—
வெந்த புண்ணிடை வேல்பட்ட வெம்மையான்.

எழும்; இருக்கும் ; நடக்கும்; இரக்கம் உற்று
அழும்; அரற்றும்; அயர்க்கும்; வியர்க்கும்; போய்
விழும்; விழிக்கும்; முகிழ்க்கும் தன் மேனியால்,
உழும் நிலத்தை; உருளும் புரளுமால்.

இலக்குவனுல் கொல்லப்பட்ட இந்திரஜித்தன் ஒரு வகையில் அதிருஷ்டசாலி. வேறு எந்தக் காப்பியத்திலும் பத்துத் தலை படைத்த தந்தைக்கு மகனுக ஒரு பாத்திரத்தை நாம் பார்த்த தில்லையல்லவா? அந்த அதிருஷ்டத்தை இந்திர ஜித்தன்தான் பெற்ருன். அதனுல், கவியரசர் கம்பர் இராவணனுடைய பத்துத் தலைகளிலே ஒவ்வொரு தலையும் இந்திரஜித்தனுடைய பெருமைகளைச் சொல்லிச் சொல்லி அழுவதைப் புலமைத் திறத்தோடு கூறுகிருர். புலம்புவது வாய்தான் என்ருலும், அந்த வாயை அங்கமாகக் கொண்ட தலையே புலம்புவதாக வருணிக்கிருர்.

'அய்யனே!' எனும், ஓர் தலை; 'யான் இனம்
செய்வனே அரசு!' எனும், அங்கு ஓர் தலை;
'கய்யனேன், உனைக் காட்டிக் கொடுத்த நான்
உய்வெனே!' என்று உரைக்கும் அங்கு ஓர் தலை.''

இப்படி, இராவணனுடைய பத்துத் தலைகளும் அலறின; அரற்றின; அழுதன. இங்கு, கம்பர் தன் புலமைத் திறன் முழுவதையும் காட்டுகின்ருர். அந்த இராவணனுக்கு இன்னும் 90 தலைகள் இருந்திருக்குமானுல், அந்தத் தலைகளை யும் அழ வைத்து, இன்னும் 90 செய்யுட்களைப் புனைந்து கன்னித் தமிழின் திறத்தைக் கம்பர் காட்டியிருப்பார். அவன் பத்துத் தலைகளை மட்டுமே பெற்றிருந்தானே என்று நாமும் அங்கலாய்க்கிருேம்.

களத்திலே இராவணன் இந்திரஜித்தனின் உடலைத் தேடியபோது, முதலில் வில் பிடித்த கோலத்துடன் அவனது இடது கை மட்டுமே கிடைத்தது. பிள்ளைப் பருவத்தில் மகன் தன் கைகளால் தழுவியணைத்ததை இன்னும் ஒருமுறை அனுபவிக்க விரும்பியவன் போல, வெட்டுண்ட அந்தக் கையை மார்புறத் தழுவினுன்; கழுத்திலே சுற்றினுன்; சென்னியில் சூட்டினுன்; மூக்கால் முகர்ந்து சுவாசித்தான். இதனை,

"கல்திண் மார்பில் தழுவும்; கழுத்தினில்
சுற்றும்; சென்னியில் சூட்டும்; சுழல் கண்ணோடு
ஒற்றும்; மோந்துஉள் உருகும்; உழைக்குமால்!
முற்றும் நாளின் விடும் நெடுமூச்சினன்.'

பின்னர், களத்தில் தேடித் தேடித் தன் அருமை மகனின் தலையற்ற உடலையும் கண்டு பிடித்தான். அதன் மீது விழுந் தான். இதனை,

'கை கண்டான், பின் கரும் கடல் கண்டென
மெய் கண்டான், அதன் மேல்விழுந் தான் அரோ.''

என்கிறார் கம்பர்.

இந்திரஜித்தனின் உடலைக் கண்ட இராவணன், அந்த உடலில் இலக்குவனால் விடப்பட்டுப் பதிந்து கிடந்த அம்பு களை ஒவ்வொன்றாக அகற்றினான். 'என் மகனுடைய தலையைப் பகைவர்கள் கொண்டு சென்று விட்டார்களே' என்று சொல்லி ஆறாத்துயருற்றான். தலையையும் இடது கையையும் இழந்த உடலை எடுத்துக் கொண்டு, களத்திலிருந்து வெளி யேறி இலங்கை புகுந்தான்.

மாலியவான் அறிவுரை

இனி, பட்டி மன்றத்தின் பொருளுக்கு வருவோம். இந் திரஜித்தன் வதத்தை யான் இங்குச் சிறிது விரிவாகக் கூறி யது, இலக்குவனின் சாதனை மிகுதியும் பாராட்டற்குரியது என்பதனை உணர்த்தத்தான்.

இராவணன், தன் வீர மைந்தனின் மரணத்தால் இனி சீதையை அடைவது சாத்தியமில்லை என்ற முடிவுக்கு வந்து விடுகிறான். தனக்கும் இராமனுக்குமிடையே ஒரு கடும்போர் இருக்கிறதென்பதனை அவன் மறந்துவிடவில்லை யென்றாலும், அந்தப் போரிலே வெற்றி இராமனுக்குத்தான் என்பதனை அவன் உணர்ந்து கொண்டு விடுகிறான். ஆம்; இந்திரஜித்தன்

மாண்டதோடு, சீதையை அடைய முடியும் என்ற நம்பிக்கையும் மாண்டு போய்விட்டது. அதனால், தோல்வி உள்ளத்தனாகி,

"இத்துயர் நமர்கட்கு எல்லாம்
பொன் தழைத்தனைய அல்குல்,
சீதையால் புகுந்தது......"

"வன்தழைக் கல்லின் நெஞ்சின்
வஞ்சகத் தானை, வாளால்
கொன்று இழைத்திடுவன்"

என்று கூறிக்கொண்டு, உறையிலிருந்த வாளைக்கையிலெடுத்து சீதையை நோக்கி இராவணன் ஓடலானான்.

இதனைக் கண்ட இலங்கையின் முதுபெரும் அரசியல் வாதியான மாலியவான் குறுக்கிட்டு, இராவணனைத் தடுத்து நிறுத்தினான். சீதையை வெட்டுகின்ற நினைப்பிலிருந்து விடுதலை பெறுமாறு அறிவுரை கூறினான். அதனால், உலகுள்ள வரை பெரும் பழி நேரும் என்று கூறி எச்சரித்தான்.

இலக்குவன் இந்திரஜித்தனை வீழ்த்தியபோதே இராம—ராவணப் போரின் முடிவு தெரிந்து விட்டது; சீதையின் விடுதலை உறுதிப்பட்டு விட்டது; இராமாவதாரத்தின் குறிக்கோள் வெற்றி பெற்று விட்டது. இவ்வளவுக்கும் காரணமானவன் இலக்குவன்தானே!

'அனுமனைவிடவும் பாராட்டற்குரிய தகுதியை இலக்குவன் பெற்று விட்டானா?' என்பதுதான் பட்டிமன்றத்தின் பொருள். அனுமனை விடவும் மிகுதியும் பாராட்டற்குரியவன் இலக்குவன்தான் என்பதனை மைந்தனை இழந்த சோகத்தால் புலம்பும் இராவணனே கூறி விட்டான்.

மண்டோதரியின் புலம்பல்

அடுத்து, இராவணன் தருமபத்தினியான மண்டோதரியும் களத்திற்கு வருகிறாள், பெரிதும் பாராட்டுதற்குரியவன் இலக்குவன்தான் என்று சாட்சி சொல்ல!

மகன் இந்திரஜித்தன் மாண்டு விட்டான்—அவனை தலைவேறு கைவேறு, முண்டம் வேருகக் கூறுபடுத்தி இலக்கு வன் வீழ்த்தி விட்டான்—என்ற துக்கச் செய்தியைக் கேட்டு, தன் மகனின் உடலைக் காண விரும்பியவளாகி, களத்திற்கு ஓடி வருகிருள் தாய் மண்டோதரி. அவளது வருகைபற்றிக் கம்பர் வருணித்துள்ள செய்யுட்கள் வருமாறு:

தலையின்மேல் சுமந்த கையள், தழலின்மேல் மிதிக்கின்ருள் போல்
நிலையின்மேல் மிதிக்கும் தாளள், நேசத்தால் நிறைந்த நெஞ்சன்
கொலையின்மேல் குறித்த வேடன் கூர்ங்கணை உயிரைக்கொள்ள,
மலையின்மேல் மயில் வீழ்ந்தென்ன, மைந்தன்மேல் மறுகி வீழ்ந்தாள்!

இந்திரஜித்தனை மலையாகவும் அவனது தாய் மண்டோதரியை மயிலாகவும் கற்பனை செய்து, தன் மகனுடைய உடலின் மேல் மண்டோதரி வீழ்ந்ததனை நம் அகக் கண்களுக்குக் காட்சிப் படுத்துகிருர் அகில உலக மகாகவி. மகன்மேல் விழுந்த மண்டோதரியின் நிலையைக் கம்பர் வருணிக்கிருர்.

உயிர்த்திலள்; உணர்வும் இல்லள்; 'உயிர்இலள் கொல்லோ!' என்னப்
பெயர்த்திலள், யாக்கை: ஒன்றும் பேசலள்; விம்மி யாதும்
வியர்த்திலள்; நெடிதுபோது விம்மலள்; மெல்ல மெல்ல
அயர்த்தனள், அரிதின்தேறி, வாய்திறந்து அரற்றலுற்ருள்!

அரற்றுகின்ற மண்டோதரி தன் மகன் பிள்ளைப் பருவந் தொடங்கி காளைப் பருவம் வரை ஆற்றிய வீரச் செயல்களை யெல்லாம் சொல்லிச் சொல்லி வேதனைப்பட்டு விம்மியழுதாள்.

'அம்புலியை அழைக்க வா!'

தன் மகன் பிறந்த மறுகணத்திலேயே அவன் விண்ணில் உலாப் போகும் சந்திரனைப் பார்த்து, தன் இளம் கைகளை,

நீட்டி, "அம்புலியே, வா! என்னுடன் ஆட வா!" என்று அழைத்தானும். தாய் வயிற்றிலிருந்து பிறந்தபோது 'குவா', 'குவா' என்று குழந்தை அழுவது இயற்கை. ஆனல், பத்துத் தலைகளும், இருபது தோள்களும் படைத்த, தேவர் மூவரையும் வென்ற வீராதி வீரனை ராவணன் மகனை சாதாரண முறையில் வருணிக்க முடியுமா? அதனல், அப்போதுதான் பிறந்த பச்சைக் குழந்தையின் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட முறையில் இந்திரஜித்தன் தன் குழவிப் பருவத்தில் செய்த செயல்களைக் கம்பர் வருணிக்கிறார்.

'அம்புலி! அம்ம வா!' என்று அழைத்தலும், அவிர்வெண் திங்கள்
இம்பர் வந்தானை அஞ்சல் என இருகரத்தின் ஏந்தி,
வம்புறும் மறுவைப் பற்றி, 'முயல்- என வாங்கும் வண்ணம்,
எம்பெருங் களிறே! காண ஏசற்றேன் எழுந்திராயோ!

தன் வயிற்றிலிருந்து தரையில் வீழ்ந்த நேரத்திலே தன் அருமை மகன், 'அம்ம, வா!' என்று கூறி, அம்புலியை இந்த அவனிக்கு அழைத்தானும், தன்னோடு விளையாட! குழந்தைக்கு முதலில் வரும் வார்த்தை 'அம்ம' என்பது தானே! விண்ணகத்து அம்புலியை மண்ணகத்திற்கு அழைக்கும் அதிசயக் குழந்தையாயினும், 'அம்ம' என்னும் சொல் தான் அதற்கு முதலில் வரும் என்பதனைக் கம்பர் மறந்து விடவில்லை.

அம்புலியை அழைத்த அந்த அற்புதச் செயலைக் கடைசியாக ஒரு முறை கண்டு களிக்க விரும்பினள் மண்டோதரி. அதனைச் செய்து காட்ட, 'எம்பெரும் களிறே!' என மகனை விளித்தழைத்து, 'எழுந்திராயோ!' என்று கெஞ்சி அழுகிருள். தன் வீர மைந்தனுடைய பேராற்றலை நினைந்து நினைந்து, அவனை சாமான்ய மானிடனை இலக்குவன் கொன்று விட்டான் என்பதனை நம்ப முடியாதவளாகி, வேதனையுறுகிருள் மண்டோதரி.

'முக்கணன் முதலினோரை, உலகு ஒரு மூன்றினோடும்
புக்க போர் எல்லாம் வென்று நின்ற என் புதல்வன் போலாம்,
மக்களில் ஒருவன் கொல்ல மாள்பவன்? மானமேரு
உக்கிட, அணு ஒன்று ஓடி உதைத்தது போலும் அம்மா!'

இலங்கை வேந்தன் நாளை...

இந்திரஜித்தனை இலக்குவன் வீழ்த்தியதானது வான ளாவி வளர்ந்து நிற்கும் மேரு மலையை அணு ஒன்று தாக்கி வீழ்த்திவிட்டது போல மண்டோதரிக்குத் தோன்றுகின்றது. ஆம்; இலக்குவனுடைய சாதனையானது, அவளை வியப்பி லாழ்த்துகின்றது. பெரிதும் பாராட்டற்குரிய வீர சாக சத்தை இலக்குவன் செய்திருப்பதாக இராவணனுடைய தருமபத்தினியே நினைக்கிறாள். அடுத்த கட்டத்தில் தன் கணவனான இராவணன் களம்புக இருப்பதும் அவளுடைய கவனத்திற்கு வருகிறது. ஆனால், அவனும் தன் வீர மைந் தனைப் போல வீழ்ச்சியுறுவது உறுதி என்பதை உணர்ந்து அஞ்சுகின்றாள்.

'பஞ்சுஎரி உற்றதுஎன்ன அரக்கர்தம் பரவை எல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல, விளிந்ததே; மீண்டது இல்லை;
அஞ்சினேன் அஞ்சினேன்; அச்சீதைஎன்று அமுதாற்செய்த
நஞ்சினால், இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் அன்றோ?'

நாளைய போரிலே இந்திரஜித்தனைப் போன்று இராவண னும் செத்து மடிவான் என்று வாய்விட்டுச் சொல்லி அரற்றி அழுகிறாள் கற்பில் சீதையை யொத்தவளான மண்டோதரி.

பத்தினி ஒருத்தி தன் கணவன் உயிருடன் இருக்கும் போது, 'நாளையே அவன் சாவது உறுதி' என்று கூறமாட் டாள். உத்தம பத்தினியாகிய மண்டோதரி கூறினா ளென்றால், இலக்குவனுடைய பேராற்றலை அவள் சரியாக மதிப்பிட்டதுதான் அதற்குக் காரணம். இந்திரஜித்தன் மாண்டதோடு, அரக்கர் குலத்தின் வாழ்வு முடிந்து போய்

விட்டதென்ற முடிவுக்கு மண்டோதரி வந்து விடுகிருள் "இலங்கை வேந்தன் நாளை இத்தகையன்" என்று மண்டோதரி கூறும்போது, இராவணன் அவளருகில்தான் இருக்கிருன்; அவள் கூறுவதைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிருன்.

இனி, பெரிதும் பாராட்டற்குரியவர் யார் என்பதனை இராமாயணக் காப்பிய நாயகனுன இராமனைக் கொண்டும் அறிய முயல்வோம். இலக்குவனும் அனுமனும் கடமையைச் செய்தது இராமனுக்காகத்தானே!

இந்திரஜித்தனை வீழ்த்திய பின்னர், அந்த வெற்றிச் செய்தியைச் சொல்ல அண்ணன் இராமனை நாடி வருகிருன் இலக்குவன். இந்திரஜித்தன் சரமாரியாக விட்ட அம்புகள் அவனுடைய உடல் முழுவதிலும் தைத்திருக்கின்றன. அதனுல், இரத்தம் கொப்பளித்துக் காட்சியளிக்கிறது. செந்நிற இரத்தமும், வெண்ணிய அம்புகளும் நிறைந்த கோலத்தில் அவனுடைய உடலானது அடிவானத்திலிருந்து எழும் காலைக் கதிரவனைப் போன்று காட்சியளிக்கிறது.

இராமன் அளித்த தீர்ப்பு!

வீடணன் ஒரு புறமும் அனுமன் மற்ருெரு புறமும் தாங்கிய நிலையிலே இலக்குவன் நடக்க முடியாமல் வருகிருன். அவனுடன் இந்திரஜித்தனுடைய தலையைக் கையில் தாங்கியவனுகி, வாலியின் மகன் அங்கதனும் வருகிருன். அந்த அரிய காட்சியை இராமன் காண்கின்ருன். அவனுக்கு உவகை பொங்குகிறது. மகிழ்ச்சியைத் தாங்கிக்கொள்ள முடியாதவனுக இராமன் பேசுகின்ருன். ஆம்; தன் வீரத் தம்பியை வாயாரப் புகழ்ந்து பேசுகின்ருன்; செயற்கரிய செய்த மாவீரனை மனமாரப் பாராட்டுகிருன். இராமனுடைய புகழுரையைக் கூறு முன்னர், வெற்றியுடன் திரும்பி வந்த தன் வீரத் தம்பியைக் கண்ட இராமனது நிலையை கம்பர் வருணிப்பதைக் கூறுகின்றேன்.

தலையினை நோக்கும்; தம்பி கொற்றவை தழீஇய பொன் தோள்
மலையினை நோக்கும்; நின்ற மாருதி வலியை நோக்கும்;
சிலையினை நோக்கும்; தேவர் செய்கையை நோக்கும்; செய்த
கொலையினை நோக்கும்; ஒன்றும் உரைத்திலன், களிப்புக் கொண்டான்.

ஆம்; மகிழ்ச்சி மிகுதிப்பட்ட காரணத்தால் இலக்குவனைப் புகழ நினைக்கும் இராமனுடைய வாய் மூலம் வார்த்தை வெளிப்படவில்லையாம்! அதனால், ''உரைத்திலன் ஒன்றும்'' என்றார்.

தம்பியை நோக்கிய இராமனுடைய கண்கள் இமைக்கவில்லையாம்! இமையா நாட்டத்தவனாக தன் வீரத் தம்பியை விழியால் நோக்குகிறான் இராமன். கண்களில் தாரை தாரையாக நீர் சொரிகிறதாம்! அது, அன்பு நீரா? அழுகை நீரா? ஆனந்த நீரா? எலும்பு உருகியதால் பெருகிய கருணை நீரா? என்றெல்லாம் வினாக்கள் எழுப்பி, விடைகளைத் தராமல், 'இந்த வினாக்களுக்கு யார் விடை தரமுடியும்' என்று சொல்லி ஓய்ந்து விடுகிறார் கம்பர்.

வன்புலம் கடந்து மீளும் தம்பிமேல் வைத்த மாலைத்
தன்புலம் நயனம் என்னும் தாமரை சொரியும் தாரை
அன்புகொல்? அழுகணீர்கொல்? ஆனந்த வாரியே கொல்?
என்புகள் உருகிச் சோரும் கருணைகொல்? யார் அது ஓர்வார்.''

அங்கதன், தான் சுமந்து கொண்டு வந்த இந்திரஜித்தனின் தலையை இராமனுடைய திருவடிகளில் வைத்து, தரையில் வீழ்ந்து அந்த அவதார புருஷனை வணங்குகிறான். இலக்குவனும் அண்ணன் திருவடிகளில் விழுந்து தன் கண்கள் சொரிந்த நீரால் அவனது காலைக் கழுவி வழிபடுகிறான். இந்நிலையில், இராமன் தன் தம்பியைப் புகழ்ந்து பேசுவான்

"வான் தலைஎடுக்க, வேலை மண் தலையெடுக்க, வானோர்
கோன் தலைஎடுக்க, வேதக் குலம் தலையெடுக்க குன்றுத்
தேன் தலையெடுக்கும் தாராய் தேவரை வென்றான் தீய
ஊன் தலைஎடுத்தாய் நீ' என்று உரைத்தனன் உவமை
மிக்கான்.

"தென்தலை ஆழி சூழ்ந்த திண்மதில் இலங்கை காக்கும்
புன் தலைக் கள்வன் பெற்ற புதல்வனை இளவல் வீழ்த்த
வன்தலை எடுத்து நீயும் வருதலால் வானரேச
என் தலை எடுக்கலானேன் இனிக்குடை எடுப்பன் என்றான்.

இந்திரஜித்தனின் தலையைத் தன் கையில் வைத்திருக்கும் அங்கதனைப் பார்த்து, அவனிடம் பேசுபவனைப் போல, தன் தம்பியைப் புகழ்ந்து பேசுகிறான் இராமன். "இந்திர ஜித்தன் ஒருவனுடைய தலை வீழ்ந்துவிட்டதால், இனி வானுலகத் தேவர்கள் தலையெடுப்பார்கள்; மண்ணுலகி லுள்ள வேதகுலத்தார் தலையெடுப்பார்கள்; தேவர் கோனான இந்திரன் தலையெடுப்பான்: இனி, நானும் தலையெடுப்பேன். அடுத்து, கொற்றக் குடையெடுத்தும் அவனியை ஆள்வேன்" என்கிறான் இராமன்.

இந்திரஜித்தனை, 'புன் தலைக் கள்வன் பெற்ற புதல்வன்' என்று இராமன் குறிப்பிடுகிறான். தன் மனைவியைத் திருடிக் கொண்டு ஓடிப் போனவன் என்ற காரணத்தால் திக்கெட்டும் வென்ற தீரனைத் "திருடன்" என்கிறான் இராமன். "அந்தத் திருட்டுப் பயல் மகன் இந்திரஜித்தனின் தலை" என்று இழி மொழியால் பேசுகின்றான் இராமன். இதற்குப் பின், பெரிதும் பாராட்டற்குரியவன் யார் என்பதை இராமனே கூறிவிடுகிறான். இதோ, இராமன் பேசுகிறான் கேட்போம்:

கம்ப மதத்துக் களியானை காவல் சனகன் பெற்றெடுத்த
கொம்பும் என்பால் இனிவந்து குறுகினாள் என்று அகம்
குளிர்ந்தேன்

வம்பு செறிந்த மலர்க்கோயில் மறையோன் படைத்த
மாநிலத்தில்
''தம்பி யுடையான் பகையஞ்சான்''
என்னும் மாற்றம் தந்தனையால்''

''தம்பீ! இந்திரஜித்தனை நீ வீழ்த்தி விட்டதால், இனி சீதையை நான் அடைந்து விட்டது போலத்தான். பிரமன் படைத்த இந்த மல்லன்மா ஞாலத்திலே 'தம்பியுடையான் பகையஞ்சான்' என்னும் பழமொழியையே நீ படைத்து விட்டாய்!

மிகுதியும் பாராட்டற்குரியவன் இளவல் இலக்குவனே!

இது, தன் வீரத்தம்பி இலக்குவனுக்கு—செயற்கரிய செய்தவனுக்கு—இராமன் பெரிதும் உவந்து தந்த பாராட்டு. இதுதான், 'பெரிதும் பாராட்டற்குரியவர் யார்?' என்பது பற்றி இராமன் தந்த தீர்ப்பு. இனி, நான் வேறு தீர்ப்புச் சொல்ல வேண்டுமா?

இராமன் இலக்குவனைப் பெரிதும் பாராட்டியது, அனுமனை அருகில் வைத்துக்கொண்டுதான். அவன் காணு விடத்து, மறைமுகமாக அல்ல. அனுமன் பாராட்டுதற்குரிய வகையில் கடமைகளைச் செய்தான் இராமனுக்காக; அதனை நான் மறுக்கவில்லை. ஆனல், இந்திரஜித்தனை இலக்குவன் வீழ்த்தி இல்லையேல், அனுமனுடைய சாதனைகள் அனைத்தும் பயனற்றுப் போயிருக்கும். அனுமனுடைய சாதனைகளுக்கும், வீடணனுடைய சரணுகதிக்கும், சுக்ரீவனுடைய நட்புக்கும் பயன் தேடித் தந்தவன் இந்திரஜித்தனை வென்ற இலக்குவன் தான் என்பதனை நாம் மறந்து விடுவதற்கில்லை. ஆகவே, பாராட்டுதற்குரியவர்கள் பட்டியலிலே அனுமனுக்கும் இடம் உண்டு என்ருலும், மிகுதியும் பாராட்டற்குரியவன் இலக்குவன்தான் என்று தீர்ப்பளிக்கிறேன்.

சகோதரர்கள் சந்திப்பதேன்?

இராமாயணத்திலே வரும் கும்பகர்ணனும் வீடணனும் உடன் பிறந்தவர்களாவர். இவர்கள், இலங்கை வேந்தன் இராவணனுக்கு, உடன் பிறந்தவர்கள் மட்டுமல்ல; அமைச்சர்களுமாவர். இதனால், இரத்த பாசத்துக்கும் உத்தியோகக் கடமைக்குமிடையே தவிக்கலாயினர்.

தான் இலங்கை வேந்தனுக்கு அமைச்சன் என்பதைவிட, அவனுடைய உடன் பிறப்பு என்பதற்கே அதிக முக்கியத்துவம் தந்தான் கும்பகர்ணன். இதற்கு மாறாக, உடன் பிறப்பு என்பதை மறந்து, தான் அமைச்சர் என்பதையே நினைவில் கொண்டு அரசியலில் அறங்காக்க முயன்றான் வீடணன்.

பிறன் மனையாளை வஞ்சித்துக் கவர்ந்து வருவது மாபெரும் பாவம் என்பதிலே கும்பகர்ணனுக்கும் வீடணனுக்குமிடையே கருத்து வேற்றுமை இல்லை. அந்த வகையில், இராமன் மனைவியான சீதையை, அண்ணன் இராவணன் கவர்ந்து வந்ததனைக் குற்றமென்றே இவர்கள் கருதினர். இதனை, அண்ணன் இராவணனிடமே நெஞ்சை நிமிர்த்திக் கூறினர். திரும்பவும் சீதையை இராமனிடமே கொண்டுபோய்ச் சேர்த்து விடும்படியும் ஆலோசனை கூறினர். அந்தரங்கத்திலல்ல; அமைச்சரவைக் கூட்டத்திலேயே! ஆனால், இவர்கள் அறிவுரையை இராவணன் ஏற்காத போது, அதருமத்துடன் ஒத்துழைக்க மறுத்து, அமைச்சர் பதவியைத் துறந்ததோடு, தான் பிறந்த வீட்டை விட்டும் வீடணன் வெளியேறினான்.

கும்பகருணன், தன் அண்ணனைத் திருத்த முயன்று, அது முடியாதபோது, அவன் பக்கத்திலே நின்று போராடி,

இராமனுல் கொல்லப்பட்டு, மாண்டான். ஆம்; சகோதரத் துரோகத்திற்கு அஞ்சினுன் கும்பகர்ணன்.

வீடணனே, அண்ணனுடன் சேர்ந்து தருமத்துரோகம் செய்வதைவிட, இராமனுடன் சேர்ந்து, சகோதரத் துரோகம் செய்வதில் தவறில்லை யென்று கருதினுன். கும்பகர்ணனுடைய சகோதர வாஞ்சை, பாமரனும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க தாகும். வீடணனுடைய தரும உணர்வோ, அவனை யொத்த தருமவான்களுக்கே புரியக் கூடியதாகும்.

கும்பகருணனுடைய சகோதர வாஞ்சைக்கு வெற்றி கிடைத்திருந்தால்—அதாவது, இராவணன் வெற்றி பெற்றிருந்தால், ஒருவன் மனைவியை மற்ருெருவன் வஞ்சித்து எடுத்துச் சென்று வாழலாம் என்பது மனித உரிமையாகி விட்டிருக் கும். வள்ளுவன் தோன்றி ‘‘பிறன்மனை நயவாமை’’ என்ற அதிகாரத்தைப் படைத்திருக்கவே சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது.

இராமாயணப் பாத்திரப் படைப்பு வான்மீகியினுடைய தாகும். ஆம், கும்பகர்ணனும் வீடணனும் வான்மீகி படைத்த பாத்திரங்களே. ஆயினும், இந்த இரு பாத்திரங் களிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமையை வால் மீகியைவிடவும் கம்பரே நன்கு தெளிவுபடுத்துகின்ருர்.

வீடணன், ‘சகோதரத் துரோகமா? தருமத்துரோகமா?’ என்ற பிரச்சினை ஏற்பட்ட போது, சகோதரத் துரோகத்தை விடவும் தருமத் துரோகமே கொடியதென்று கருதினுன். சகோதரத் துரோகத்தால் அழிவது, இராவணனும் இலங்கை வாழ் அரக்கருந்தான்! தருமத்திற்குத் துரோகஞ் செய்ய வீடணன் முயன்றிருந்தால், அதனுல், தாய்க்குலமே பாது காப்பற்றுப் போயிருக்கும். வீடணன் ஒத்துழைத்திருந் தா லும் இராவணனை அழிவிலிருந்து காப்பாற்றியிருக்க முடி யாது. கும்பகருணனு லும் காப்பாற்ற முடியவில்லையல்லவா ?

வீடணன் சார்ந்து நின்ற தருமநெறியை மக்கள் நன்கு விளங்கிக் கொள்ளும் பொருட்டு, வால்மீகி ராமாயணத்தி லிருந்து வேறுபட்டு, ஒரு மாறுதல் செய்கிறார் கம்பர்.

வீடணனை மக்கள் புரிந்து கொள்வதற்காக, கும்பகருண னையும் வீடணனையும் போர்க்களத்திலே சந்திக்க வைக்கிறார். அவர்களிடையே ஒரு விவாதத்தையும் உருவாக்குகின்றார். இந்தச் சந்திப்பு வான்மீகியிலே இல்லை. ஆம்; வான்மீகியிலே கும்பகருணனும் வீடணனும் சந்திக்கவே இல்லை.

அசோகவனம் அனுமனால் அழிக்கப்பட்டதுமே, இராவ ணன் மந்திராலோசனை சபையைக் கூட்டுகின்றானல்லவா! அந்தச் சபையில் கும்பகருணனும் வீடணனும் கலந்து கொள்ளுகின்றனர். அங்கு கூடக் கும்பகருணனும் வீடண னும் பேசிக் கொள்ளவில்லை. மந்திராலோசனை சபையைப் பொறுத்த வரையில் வான்மீகியிலிருந்து கம்ப ராமாயணம் வேறு படவில்லை. ஆனால், கும்பகருணன் வதைப் படலத் திலே வான்மீகியிலிருந்து வேறுபட்டு, இராவணனின் சகோதரர்களை கம்பர் சந்திக்க வைக்கிறார். சுமார் 40 கவிதைகளைக் கொண்டு அமைந்திருக்கின்றது கும்பகருணன்—வீடணன் சந்திப்பு. தமையனுக்காகத் தருமத்தைத் துறந்த கும்பகருணனும், தருமத்துக்காகத் தமையனைத் துறந்த வீடணனும் சந்திக்கின்றனர். பகைவர்களாக அல்ல; பாச முள்ள சகோதரர்களாக!

தமிழ் மக்கள் எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பி னும், அப்பொருளில் மெய்ப்பொருள் காணும் ஆற்ற லுடையார் என்பது கம்பருக்குத் தெரியும். அதனால், வீடணன் தமையனுக்கு எதிராக அவனுடைய மாற்றருடன் சேர்ந்ததிலுள்ள நியாயத்தை வழிவழி தோன்றவிருக்கும் சந்ததியாருக்கு உணர்த்த கும்பகருணனையும் வீடணனையும் சந்திக்க வைக்கிறார். இந்தச் சந்திப்பு நிகழ்ந்திலலையேல், வீடணனை இலக்கிய உலகம் புரிந்து கொள்ள சந்தர்ப்ப மில்லை.

அண்ணனுக்கு எதிராகச் செல்ல நேர்ந்ததிலுள்ள நியாயத்தை விடணன் இராவணனிடமே கூறுகின்றான், மந்திரப் படலத்திலே! அது போதுமா? அது, தன்னிலை விளக்கந்தானே!

இராவணனை விட்டுப் பிரிந்ததோடு நில்லாமல், அவன் பகைவனும் படையெடுப்பாளனுமான இராமனோடு சேர்ந்து கொண்டு, தன் உடன்பிறந்தானைக் கொல்லத் துணிந்து விட்டான் வீடணன். இதற்கென்ன சமாதானம்? இந்த நிலையில்தான் கும்பகர்ணன்—வீடணன் சந்திப்பு நிகழ்கின்றது, போர்க்களத்திலே!

இராவணன் சகோதரர்களை கம்பர் சந்திக்க வைப்பதன் குறிக்கோள், வீடணன் நிலை சரிதான்—அதாவது, தருமத்திற்காக சகோதர பாசத்தைத் துறந்தது சரிதான் என்று கும்பகருணனைக் கொண்டே கூற வைக்கத்தான்.

வான்மீகியிலே வீடணப் பாத்திரத்திலுள்ள பலவீனம் கம்பருக்குத் தெளிவாகத் தெரிகிறது. அங்கு, வீடணன் மேற்கொண்ட நிலை சரிதான் என்று சொல்ல இலங்கையிலே ஆள் இல்லை. அவனைத் துரோகியென்று சொல்ல பலர் உண்டு. அவர்களிலே இந்திரசித்தனும் ஒருவன்.

வான்மீகியிலே, அண்ணனைத் துறந்து தன்னிடம் அடைக்கலம் புகுந்ததற்காக இராமன் வீடணனைப் புகழ்கின்றான். அனுமனும் வீடணனை உயர்த்திப் பேசுகின்றான். அங்கும், சுக்ரீவன் "துரோகி" ஸ்தானத்தில் வீடணனை வைத்துப் பேசுகின்றான். ஆனால், அனுமனோ, ராமனோ வீடணனை ஏற்றது ராஜதந்திரமாகி விடுகின்றது. போர்த் தந்திரம் என்றும் சொல்லி விடலாம். ஆகவே, இலங்கைவாழ் அரக்கராதியரிலே ஒருவன் தேவைப்படுகிறான், வீடணனின் நிலையை விளக்குவதற்கு! அவன், கொள்கையளவில் வீடணன் நிலையிலும் இருக்க வேண்டுமல்லவா?

அசோகவனம் அழிக்கப்பட்ட பின் இராவணன் தனது மந்திராலோசனை சபையைக் கூட்டியபோது, வீடணனுக்கும் முன்னதாகவே,

"வேறு ஒரு குலத்தோன்
தேவியை நயந்து, சிறை
வைத்த செயல் நன்றோ?"

என்று கும்பகர்ணன் கேட்டான். "இதைவிடவும் வேறு. பழி உண்டோ?" என்றும் இடித்துரைத்தான்.

"ஆசில்பர தாரம்அவை அஞ்சிறை அடைப்பேம்;
மாசில்புகழ் காதலுறுவேம்; வளமை கூரப்
பேசுவது மானம்; இடை பேணுவது காமம்;
கூசுவது மானிடரை; நன்று நம கொற்றம்!"

என்று, அண்ணன் ராவணன் பிறன்மனை கவர்ந்த செயலி லுள்ள அவமானத்தை வேதனையோடு எடுத்துரைத்தான். இன்னும்,

"சிட்டர் செயல் செய்திலை; குலச் சிறுமை செய்தாய்;
மட்டவிழ் மலர்க் குழலி ளாளை இனி, மன்ன!
விட்டிடுதுமேல் எளியம் ஆதும்,"

என்று கூறி, சீதையை விட்டு விடுமாறும் அண்ணனை வேண் டினன்.

தன் அறிவுரையை—அறவுரையை அண்ணன் ஏற்காத போது, அவனைக் கைவிடவோ, காட்டிக் கொடுக்கவோ மன மின்றி, அவனுக்காகவே உயிர் கொடுக்கப் போர்க்கோலம் பூண்டு களம் புகுந்தான் கும்பகருணன். அப்படிப்பட்டவன் வீடணனைப் பற்றி—அவன் தன் அண்ணனுக்கு எதிராக அன் னியனுடன் சேர்ந்து கொண்டது பற்றி—என்ன நினைத்தான் என்பதை இலக்கிய உலகுக்கு எடுத்துக் காட்டி, வீடணனின் அறவழி அரசியலை உலகுக்கு உணர்த்த கம்பர் விரும்பினர். அதற்காகவே போர்க்களத்தில் கும்பகர்ணனையும் வீடணனை யும் சந்திக்க வைக்கிறார்.

சீதையைக் கவர்ந்தது பற்றி இருவேறு சந்திப்புகளில் கும்பகர்ணன் தன் அண்ணன் இராவணனிடம் தன் கருத்தைத் தெரிவிக்கின்றான். இந்த இரண்டு சந்திப்புகளின் போதும் அவனுடைய கருத்தில் தடுமாற்றம் எதுவுமே இல்லை. பிறன் மனைவியைக் கவர்ந்து வந்தது குற்றம் என்று உறுதியாகக் கூறுகின்றான்.

முதன் முதலாக இராவணனுடைய மந்திராலோசனையில் கலந்து கொண்டு சீதை பற்றித் தன் கருத்தைக் கூறிய பின்னர் கும்பகர்ணன் உறங்கப் போய் விடுகிறான். உண்ணு வதும் உறங்குவதுமே இந்த மண்ணுலகில் அவன் பெற்ற "வாழ்க்கை"! இல்லை, அவன் பெற்றுவிட்ட சாபம்!

போர் உச்ச கட்டத்தை அடைந்துவிட்ட சந்தர்ப்பத் திலே கும்பகர்ணனைத் தூக்கத்திலிருந்து எழுப்பிக் கொண்டு வருமாறு ராணுவத்தினருக்கு ராவணன் ஆணையிடுகிறான் சாபத்தால் ஏற்பட்ட உறக்கமாதலால், அவனை எழுப்புவது அவ்வளவு எளிதான செயலாக இல்லை. எப்படியோ எழுப்பப்படுகிறான்.

எழுந்தவன் அண்ணனையடைந்து, தன்னை எழுப்பியதற் கான காரணத்தைக் கேட்கின்றான். தம்பியை மார்புடன் தழுவி அரவணைத்து, பின், அழைத்ததன் காரணத்தைக் கூறாமலேயே அவனுக்குப் போர்க்கோலம் செய்து விடுகிறான்' இராவணன்.

"போர்க் கோலம் செய்தது என்ன காரணத்தால்?" என்று கேட்கிறான் கும்பகர்ணன். அதற்கு ராவணன்,

" வானரப் பெருந் தானையர், மானிடர்,
கோ நகர்ப் புறம் சுற்றினர்; கொற்றமும்
ஏனை உற்றனர்; நீ அவர் இன் உயிர்
போனகத் தொழில் முற்றுதி, போய்"

என்று ராவணன் கூறுகின்றான்.

"வானரர்களும், இராமனுதியர் உள்ளிட்ட மானிடர் களும் இலங்கையை முற்றுகையிட்டு விட்டனர். அவர் களுடைய ஆயுளை முடிக்க நீ போ" என்பது கும்பகர்ணனுக்கு இராவணன் இட்ட ஆணை.

தம்பியைப் பார்த்து, "போய், வா" என்று கூருமல், "போ" என்று மட்டுமே கூறுகின்றுன். போகிறவன், திரும்பி வரப்போவதில்லை என்பது அவனுக்குத் தெரியும் அல்லவா!

"போர் மூண்டு விட்டது" என்று புரந்தரனை வென்ற தமையன் கூறக் கேட்ட கும்பகர்ணன் பேசுகின்றுன்.

" ஆனதோ வெஞ்சமம்? அலகில் கற்புடைச்
சானகி துயர் இனம் தவிர்ந்தது இல்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ? புகுந்ததோ, பொன்றும் காலமே?"

" கிட்டியதோ, செரு? கிளர் பொன் சீதையைச்
சுட்டியதோ? முனம், சொன்ன சொற்களால்,
திட்டியின் விடம் அன்ன கற்பின் செல்வியை
விட்டிலையோ? இது விதியின் வன்மையே!

" கல்லலாம் உலகினை; வரம்பு கட்டவும்
சொல்லலாம்; பெரு வலி இராமன் தோள்களை
வெல்லலாம் என்பது சீதை மேனியைப்
புல்லலாம் என்பது போலுமால்—ஐயா!"

கும்பகர்ணன் தனக்கு அறிவுரை கூறுவதை இராவணனுல் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. முன்னரே இளைய தம்பி வீடணன் தன்னை விட்டுப் பிரிந்து, தன் மாற்ருனை ராம னுடன் சேர்ந்து கொண்டதால் வேதனையடைந்திருந்த அவன், மற்றொரு தம்பியும் தன்னைச் சாடுவதை எங்ஙனம் சகித்துக் கொள்ள முடியும்?

சினங்கொண்டவனாகி, தம்பி கும்பகருணனை வெறுத்துப் பேசுகின்றான்:

" உறுவது தெரிய அன்று, உன்னைக் கூயது;
சி றுதொழில் மனிதரைக் கோறி, சென்று; எனக்கு
அறிவுடை அமைச்சன் நீ அல்லை, அஞ்சினை;
வெறுவிது, உன் வீரம"

" மானிடர் இருவரை வணங்கி, மற்றும் அக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு உய் தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்குமே கடன;
யான் அது புரிகிலேன்; எழுக, போக!''...

இதற்குமேல், "ஊன் சோற்றோடு வயிறு நிறைய கள்ளும் உண்டாய். இனி, போருக்கு நீ போவையோ? போ, கண்களை மூடிக் கொண்டு, இரவும் பகலுமாக உறங்கு!" என்று பழித்துப் பேசினான் பன்முக ராவணன்.

அண்ணனுடைய சினங்கண்டு அஞ்சினான் கும்பகருணன் 'ஐய! என் புன்மையைப் பொறுத்துக் கொள்'' என்று கெஞ்சினான். "ஒன்று கேட்கிறேன்" என்று முன்னுரை கூறி, "இதோ போருக்குச் செல்கிறேன். போரில் வென்றால், திரும்பி வருவேன். வெற்றியின்றேல், வீர மரணம் அடைவேன். சாவு என்னைப் பிடர்பிடித்துத் தள்ளுகின்றது. நான் செத்த பிறகேனும் சீதையை விட்டுவிடு." என்றான் சாகத் துணிந்துவிட்ட சகோதரன் கும்பகருணன்.

'களத்திலே கும்பகருணன்!

அண்ணனிடம் விடைபெற்றுக் கொண்டு போர்க்களம் செல்கிறான். அங்குதான் முன்பே அண்ணனால் வெறுக்கப் பட்டு. அறத்தின் நாயகனான ராமனிடம் சரணடைந்து விட்ட தம்பி வீடணனைச் சந்திக்கிறான். இந்தச் சந்திப்பு வான்மீகியில் இல்லாதது; கம்பனில் மட்டுமே காணப்படுவது. இந்தப் புதுமையைக் கம்பன் படைத்தது ஏன்?

பிறன் மனைவியைக் கவர்வது மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம் என்பதை எடுத்துக் காட்டி, சீதையை விட்டுவிடுமாறு அறிவுரை கூறித் தன் அண்ணனுடன் கும்ப கருணன் கருத்துப் போர் நடத்தினான். அதில் வெற்றிபெறத் தவறிய பின், சகோதர வாஞ்சை காரணமாக அண்ணனுக் காக உயிர்த் தியாகம் செய்யத் துணிந்து போர்க்களத்தை நாடிச்சென்றான். அவன் சென்றதுமே போர்க்களப் பிரதேசம் முழுவதையுமே இருள் கவ்விக்கொண்டு விட்ட தென்கிறார் கம்பர். காரணம், அவன் பெற்றிருந்த கரிய நிறந்தான்!

கும்பகருணன் போர்க்களத்திற்கு வருவதைக்கண்ட இராமன், பூவுலகத்தின் மத்தியிலுள்ள மாமேரு மலைக்குக் கால்கள் முளைத்து, அது நடைபோட்டு வருகிறதோ என்று ஐயுற்றானும். தன் அருகிலிருந்த வீடணனைப் பார்த்து, 'ஆர்கொலாம் இவன்?' என்று கேட்டான் இராமன்.

"அரக்கர் மன்னனான இராவணனே என்னைச் சார்ந்துள்ள குரக்கர் குலத்தை அழிக்க இம் மாற்றுருவில் வந்தானோ?" என்றும் கேட்டான். அதற்கு வீடணன்,

.........."ஐய!
பேரியல் இலங்கை வேந்தன் பின்னவன்;
எனக்கு முன்னோன்
காரியல் காலன் அன்ன கழல் கும்பகருணன் என்னும்
கூரிய சூலத்தான்"

என்று கூறினான்.

"இந்த உலகத்தோர் இன்னமும் உயிருடன் வாழ்கின்றார் கள் என்றால், அதற்குக் காரணம், இந்தக் கும்பகருணன் உறங்கிக் கொண்டே இருப்பதுதான்" என்றான் வீடணன் "இவன் திருமாலை வென்றவன்; இவனை நினைந்து நினைந்து இந்திரன் நடுங்கிக் கொண்டிருக்கிறான். சிவபெருமான் தன் சூலாயுதத்தை இவனுக்குத் தந்து விட்டான்" என்று கூறி, தன் இளைய அண்ணன் கும்பகருணனைத் தனக்கு அடைக்கலம் தந்த இராமனுக்கு அறிமுகப் படுத்தினான் வீடணன்.

வீடணன்—கும்பகருணன் சந்திப்பு

வான்மீகியிலே இதற்குமேல் கும்பகருணனுக்கும் ராமனுக்கும் கடும்போர் நடக்கிறது. அப்போரில் கும்பகருணன் வதைக்கப்படுகிறுன். கம்பர், இந்த இடத்திலே வான்மீகியிலிருந்து வேறுபட்டு, வீடணனையும் கும்பகருணனையும் சந்திக்க வைத்து, அவர்களிடையே விவாதம் நிகழச்செய்கிறுர்.

கும்பகருணனைப் பற்றி வீடணன் கூறக் கேட்ட ராமன், அம்மாவீரனைத் தன் கட்சிக்கு இழுத்துக் கொண்டு, இராவணனுக்கு எதிராக அவனைப் பயன்படுத்தவிரும்புகிறுன். அதனுல்,

“ இவனை இன்று
கொன்று ஒரு பயனும் இல்லை;
கூடுமேல், கூட்டிக்கொண்டு
நின்றது புரிதும்; மற்று, இந்
நிருதர்கோன் இடரும் நீங்கும்;
'நன்று' என நினைந்தேன்”

என்கிறுன் இராமன்.

“இராமன் கட்சியில் சேர்ந்து கொள்ளுமாறு அழைக்க கும்பகருணனிடம் யார் செல்வது என்பது பிரச்னையாகி விட்டது. 'அவனிடம் ஏகுதற்கு உரியர் யாரே?' என்று கேட்கிறுன் இராமன்.

“ஆகின், மற்று அடியனே சென்று அறிவினுல், அவனை உள்ளம்
சேகு அறத் தெருட்டி, ஈண்டுச் சேருமேல் சேர்ப்பன்”

என்று இராமனிடம் வீடணன் கூறுகிறுன். அதுகேட்டு, 'நன்று, போக' என்று விடை தந்தான் இராமன்.

கவிஞரின் அறிவுமிக்கோன்!

வீடணன், கும்பகருணனை நோக்கி விரைந்து சென்றுன். தன்னைப் போலவே 'சீதையை விட்டுவிடு' என்று அண்ண

னுக்கு எடுத்துரைத்தவனுதலால், நம்பிக்கையுடன் கும்ப கருணனை நாடினுன் வீடணன். கும்பகருணனை அடைந்ததும் அவனுடைய காலில் விழுந்து வணங்கினுன். வணங்கிய தம்பியைத் தன் இரு கைகளாலும் எடுத்து நிறுத்தினுன் கும்பகருணன்.

பின், உச்சி முகர்ந்தான். ஈருடலும் ஒருயிரும் என்று சொல்லத் தக்க வகையிலே தம்பி வீடணனின் உயிரோடு தன்னுயிரும் கலக்கும் வகையில் அவனைத் தழுவிக் கொண்டான். பின்பு, அன்பு கனிந்த குரலில்,

"உய்ந்தனை, ஒருவன் போனுய் எனமனம் உவக்கின்றேன் தன்
சிநதனை முழுவதும் சிந்த தெளிவிலார் போல மீள
வந்தது என, தனியே?"

என்று கேட்டான் கும்பகருணன்.

"தம்பி! நீ ஒருவனேனும் மரணத்திலிருந்து தப்பி உயிர் பிழைத்திருப்பாய் என்று மகிழ்ச்சியோடு இருந்தேனே? சிந்தனை மாறித் தெளிவில்லாத மக்கள் போல நீ திரும்பி வந்தனையே,காரணம் என்ன?" என்பது கும்பகருணனின் வினு.

"கவிஞரின் அறிவு மிக்காய்!
காலன் வாயக் களிக்கின்றேம்பால்
நவை உற வந்தது என், நீ?
அமுது உண்பாய் நஞ்சுண் பாயோ?"

என்றும் கும்பகருணன் கேட்டான்.

இந்தச் செய்யுளிலே அறிவிலே கவிஞர்களை விடவும் மேலானவன் என்று கூறி, வீடணனின் மேதாவித்தனத்தைப் புகழ்கின்ருன் கும்பகருணன்.

"இறப்பு எனும் பயத்தை விட்டாய்;
இராமன் என்பானைப் பற்றிப்
பிறப்பெனும் புன்மை தீர்ந்தாய்;
நினைந்து, என்கொல் பெயர்ந்த வண்ணம்?"

என்று கேட்டான்.

'பிறர்மனை நோக்கும் கொடியவர்களான எங்களோடு இன்னமும் உறவு கொண்டாட விரும்புவையோ?' என்றும் கேட்டான். "சாதியின் புன்மை இன்னும் தவிர்ந்திலை போலும், தக்கோய்" என்றும் கேட்டான். "நாங்கள் எல்லாம் அழிந்து முடிந்த பின்னர், எங்களுக்கெல்லாம் எள்ளும் நீரும் வழங்க உன்னைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்?" என்றும் கேட்டான்.

'வேதநாயகன் அழைக்கிறான்!'

இவ்வளவும், தன்னையணுகிய வீடணன் வாய் திறந்து பேசுவதற்கு முன்பே கும்பகருணன் மனம் நொந்து நிகழ்த்திய நீண்ட சொற்பொழிவு ஆகும். இதன் பின்னர், இராமன் கட்சியில் சேர்ந்து கொள்ள தன்னுடன் வருமாறு கும்பகருணனை வீடணன் அழைக்கின்றான்.

"வேத நாயகனே உன்னைக்
கருணையால் வேண்டி, விட்டான்;
காதலால், என் மேல் வைத்த
கருணையால், கருமம் ஈதே;
ஆதலால், அவனைக் காண,
அறத்தொடும் திறம்பாது, ஐய!
போதுவாய் நீயே"

என்று, ராமன் சார்பில் கும்பகருணனுக்கு அழைப்பு விடுத்து, அவன் திருவடிகளில் மீண்டும் ஒரு முறை விழுந்து, அவனுடைய கால்களிரண்டையும் தன் கையால் பற்றிக்கொண்டு கெஞ்சினான். வீடணன் மேலும் பேசுவான்:

"எனக்கு அவன் தந்த செல்வத்து
இலங்கையும் அரசும் எல்லாம்
நினக்கு நான் தருவென்; தந்து,
உன் ஏவலின் நெடிது நிற்பென்;

உனக்கு இதின் உறுதி இல்லை;
உத்தம! உன்பின் வந்தேன்
மனக்கு நோய் துடைத்து,
வந்த மரபையும் விளக்கு வாழி!''

இராமனிடம் வீடணன் அடைக்கலம் புகுந்தபோது, இராவண வதத்திற்குப் பிறகு, இலங்கையின் அரியணையை வீடணனுக்கு வழங்குவதாக இராமன் உறுதி கூறியிருந்தான்.

இப்போது கும்பகருணனும் இராமன் கட்சியில் சேர்ந்து விட்டால், வீடணனினும் மூத்தவனான கும்பகருணனுக்கே அரியணை உரியதாக வேண்டுமல்லவா? இந்தச் சிக்கலை முன் கூட்டியே தீர்த்து வைக்கிறான் வீடணன்.

விசுவாசத் தம்பியின் வீரவுரை!

''போர்க்களம் புகுந்து விட்ட நீ உயிரோடு திரும்பிப் போவது அரிது. திரும்பிப் போனாலும் புகலிடம் இல்லை. அதனால், சாதல் உறுதி. அதிலிருந்து தப்பித்துக் கொள்ள என்னுடன் வந்து ராமனிடம் சரண் புகுவதே வேத மரபுக் கேற்ற ஒழுக்கம்'' என்றும் வீடணன் சொன்னது கும்பகருண னுக்கு வேதனை தந்ததென்றாலும், தன்னுடைய வேதனையை அடக்கிக் கொண்டு, தம்பி வீடணனைத் தன் இரு கைகளா லும் எடுத்து மார்புறத் தழுவி, தன் கண்களில் நீர் மல்க, கூறுகின்றான்:

நீர்க்கோல வாழ்வை நச்சி, நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டாற்கு உயிர்கொடாது,
அங்குப் போகேன்;
தார்க்கோல மேனி மைந்த! என் துயர் தவிர்த்தியாகின்,
கார்க்கோல மேனியானை, கூடுதி, கடிதின் ஏகி.

கருத்திலா இறைவன் தீமை கருதினால், அதனைக் காத்துத்
திருத்தலாம் ஆகின் அன்றே? திருத்தலாம் தீராதாயின்,
பொருத்துறு பொருளுண்டாமோ பொருதொழிற்கு உரியராகி
ஒருத்தரின் முன்னஞ் சாதல் உண்டவர்க்கு உரியதம்மா!

தும்பியந் தொடையல் வீரன் சுடுகணை துரப்பச் சுற்றும்
வெம்புவெஞ் சேனையோடும் வேறுள கிளைஞ ரோடும்
உம்பரும் பிறரும் போற்ற ஒருவன மூவுலகை யாண்டான்
தம்பியை இன்றி மாண்டு கிடப்பனோ, தமையன் மண்மேல்?

வீடணனை நோக்கி கும்பகருணன் சொன்ன இக்கருத்துக்கள் இராவணனிடம் அவனுக்கிருந்த ரத்த பாசத்திற்குச் சிறந்த சான்றாகும்.

அண்ணன் தவறு செய்தால், அந்தத் தவறை எடுத்துக் காட்டித் திருத்த முயலலாம். திருந்தானாயின், அவனுக்காகப் போர்க்களத்தில் உயிர்த் தியாகம் புரிவதுதான் ஒரு தாயின் முலைப்பாலையுண்ட சகோதரத் தன்மைக்கு ஏற்றதாகும்.

இது, கும்பகருணன் வாதம்.

செஞ்சோற்றுக் கடனா?

"உண்டவர்க்கு உரியதம்மா" என்னும் வாசகத்திற்கு "செஞ்சோற்றுக் கடன்" என்று பொருள் கொள்கின்றனர் புலவர்கள். இது பொருந்தா உரை. துரியோதனனுக்குக் கருணன் செஞ்சோற்றுக் கடன் கழித்த செயல் இங்கு எடுத்துக் காட்டப்படுகிறது. இதுவும் பொருந்தா உவமை.

கருணன் பாரதப் போர் முடியும் வரை தேரோட்டி மகனாகவே துரியோதனாதியரால் கருதப்பட்டான். அதனால், அவன் செஞ்சோற்றுக் கடன் கழிக்க துரியோதனனுக்காக உயிர் கொடுக்கத் துணிந்தது பொருந்தும்.

கும்பகருணன் இராவணனுடைய உடன்பிறப்பு. இவர்கள் இருவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். சொத்துக்கும் சுதந்தரத்துக்கும் சம பங்காளிகள். ஆகவே, "உண்டவர்க்கு உரியதம்மா!" என்று கும்பகருணன் கூறியது மகாபாரதத்தில் வரும் கருணனைப் போன்று செஞ்சோற்றுக் கடனை நினைப்பூட்டியதாகாது. ஒரு தாயின் முலைப்பாலை

உண்டு வளர்ந்த சகோதரர்கள் என்று பொருள் கொள்வது தான் பொருந்தும்.

இப்படிச் சொன்ன கும்பகருணன், தம்பி வீடணனுக்குத் தன்னுடைய முடிவையும் தெரிவித்து விடுகிறான்.

செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர் செல்வந்தேறி
வம்பிட்ட தெரியல் என்முன் உயிர்கொண்ட பகையை வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னங்கொண்ட புண்ணுடை நெஞ்சோடு, ஐய!
கும்பிட்டு வாழ்கிலேன் யான் கூற்றையும் ஆடல் கொண்டேன்!

"அழகிய லங்காபுரியை அழித்து முடித்து, அண்ணன் இராவணனைக் கொன்று, அரக்கர் குலத்தை யெலாம் இரக்க மின்றி எமன் உலகுக்கு அனுப்பி விட்டு, அதன்பின் இலங்கையில் இராமன் என்னை அரியணையில் அமர்த்தி வைப்பான். அதற்காக நன்றி காட்டும் வகையில் அவனுக்கு வாழ்த்து கூறி. மன வேதனையோடு நான் அரசாட்சி புரிவதோ? அது ஒரு போதும் முடியாது. போர்க்களத்திலே கூற்றுவனையும் வெற்றி கொள்வேன். இது உறுதி."

இது, கும்பகருணன் கூற்று.

இராமன் கட்சிக்கு அழைத்து வந்துவிட முடியும் என்ற நம்பிக்கையோடு கும்பகருணனை அடைந்த வீடணன் ஏமாற்றத்தோடு பாசறை திரும்பினான். ஆயினும், வீடணன் இராவணனைக் கைவிட்டு இராமனிடம் சரண் அடைந்தது அவனுடைய தரும ஒழுக்கத்திற்கு ஏற்ற செயல்தான் என்பதைக் கும்பகருணனைக் கொண்டு கம்பர் இலக்கிய உலகுக்குப் புலப்படுத்திவிட்டார். இதனால், வீடண பாத்திரத்தின் தரம் உயர்ந்துவிட்டது.

பாத்திரப் படைப்பில் மகாகவி கம்பருக்குள்ள திறமைக்குக் கும்பகருணன்—வீடணன் சந்திப்பு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

வாலி வதமா? மோட்சமா?

கம்ப ராமாயணத்தில் இராவணனுடன் போர் செய்து அவனை வென்று சீதையை மீட்பதற்காகச் சுக்ரீவன் துணையை நாடுகிருன் இராமன். சுக்ரீவனும், வாலியுடன் போர் செய்து, அவனை வென்று, அவனுல் அபகரிக்கப்பட்ட தன் மனைவி ருமையை மீட்கவும், கிஷ்கிந்தை ஆட்சியை அடையவும் இராமனுடைய துணையை நாடுகின்ருன். இதனுல், இராமனுக்கும் சுக்ரீவனுக்குமிடையே ஒரு "பரஸ்பர உதவி உடன்படிக்கை" ஏற்படுகின்றது. இது கொள்கை அடிப்படையில் ஏற்பட்ட கூட்டுதானு?

வாலியை நாடாததேன்?

சுக்ரீவனைச் சந்திப்பதற்கு முன்பே வாலி என்று ஒருவன் இருப்பது இராமனுக்குத் தெரியும். வாலி இராம பக்தனும் ஆவான். இதனை, தாரை—வாலி வாதத்தால் அறிகிருேம். இராவணனை விடவும் வலிமை மிக்கவன் வாலி. இராவணனைத் தன் வாலால் கட்டியிழுத்து, அவனது ஆணவத்தை வாலி அடக்கினுன் என்று இராமனுக்குச் சுக்ரீவன் கூறுகிருன். இதனை யறிந்த பின்பும் இராமன் ராவணனை வதைப்பதற்கு வாலியின் உதவியை நாடாமல், அந்த வாலிக்குப் பயந்து மலை முழையில் ஒளிந்து கொண்டிருக்கும் சுக்ரீவன் உதவியை நாடினுனே, அது ஏன்?

"கவந்தனும் சபரியும் சுக்ரீவனின் உதவியை நாடுமாறு ராமனுக்கு ஆலோசனை கூறியதனுல் அவன் சுக்ரீவனை அணுகினுன்" என்று சமாதானம் கூறலாம். கவி விரும்பியிருந்தால், அந்த கவந்தனையும் சபரியையும் கொண்டே வாலியின் துணையை நாடுமாறு ராமனுக்குக் கூறவைத்திருக்கவாந்தானே! அப்படிக் கூருதது ஏன்?

இராவண வதம் இராமாவதாரத்திற்கு இன்றியமையாது தேவைப்படுகிறது. அதுபோல, வாலி வதம் தேவைப் படவில்லை. கவி விரும்பியிருந்தால் அதனைத் தவிர்த்திருக்க லாம். முதல் நூலிலிருந்து எத்தனையோ வகையில் வேறு பட்டு வழிநூல் செய்த கம்பர், வாலி வதத்தைத் தவிர்த் திருக்க முடியும். தவிர்த்திருந்தால், அண்ணன்—தம்பி சண்டையில் அன்னியனான இராமன் தலையிட்டான் என்ற இழுக்கிலிருந்தும், தன் பக்தனான வாலியை மறைவில் இருந்து அம்பு விட்டுக் கொன்றான் என்ற பழியிலிருந்தும் அவனைக் காத்திருக்கலாம். ஆனால், கம்பரும் வாலி வதம் இராமாயணக் கதைக்கு தேவை என்றே கருதிவிட்டார்.

வாலி வதம் தேவைப்பட்டதேன்?

கம்பருக்கு ஏற்பட்ட பெரும் புகழுக்கு வாலிவதைப் படலத்தில் அவர் வெளிப்படுத்தியுள்ள புலமைத் திறனும் முக்கிய காரணமாகும். இதனைத் தமிழிலும் வடமொழியிலும் நிறை புலமை பெற்றிருந்தவரான வ. வே. சு. ஐயர் வாக்கா லேயே அறிவோம்.

"கிஷ்கிந்தா காண்டத்தின் பிரதான பாகமான வாலி வதை ராமாயணத்தின் வஸ்துவுக்கு அவயசம்பந்தம் வாய்ந்த தன்றாதலால் அதை எடுத்து விட்டதனால் கதைக்கு யாதொரு ஊனமும் வராது. ஆனால், கம்பன் தன் நாடகத் திறமை யனைத்தையும் இந்த வாலிவதைப் படலத்தில் கொட்டி வைத்து விட்டான். இந்த வாலி வதை உபாக்கியானத்தை மாத்திரம் எழுதி வைத்துவிட்டு வேறொன்றும் எழுதி வையாமல் இறந்திருந்தாற் கூட அறிஞர் அவனை உலகத்து மகாகவிகளின் வர்க்கத்தில் சேர்க்காமல் விடத் துணியார். அத்துணைச் சிறப்பு வாய்ந்தது கம்பனுடைய வாலிவதை உபாக்கியானம்."

['பால பாரதி', மார்ச், 1925]

இராமாயணத்திற்கு வாலிவதமானது இன்றியமையாது தேவைப்படுகிறதென்று கம்பர் கருதியது எதனால்? "கூட்டு

ஒருவரையும் வேண்டாக் கொற்றவ!'' என்று வாலியாலேயே வருணிக்கப்படும் இராமனுக்கு, சுக்ரீவனுடைய கூட்டு தேவைப்பட்டது, தன் மனைவியைக் கவர்ந்து சென்ற ராவணனை வதைத்து, அவளை மீட்பதற்காகத்தான்! இதற்கு வாலியின் துணையைப் பெறுவது சாத்தியமில்லை. ஏனெனில், அவன் சுக்ரீவனின் மனைவியாகிய ருமையைக் கவர்ந்து கொண்டவன். தன் மனைவியை இராவணன் கவர்ந்து கொண்டது அதருமமான செயல் என்று கருதும் இராமன், அதே அதருமத்தைச் சுக்ரீவனுக்கு இழைத்த வாலியுடன் கூட்டு சேருவது நியாயமாகுமா? அப்படிச் சேர்ந்திருந்தால் அது கொள்கை அடிப்படையிலான கூட்டு ஆகியிருக்காது.

ஒரு அநீதியை எதிர்க்க இன்னொரு அநீதிக்கு ஆதரவா?

இருவேறு அரசர்கள் தங்களுடைய பொதுப் பகைவனை வீழ்த்துவதற்குக் கூட்டு சேருவது இயற்கை. ஆனால், அது தரும வழியிலும் அமையவேண்டும். ஒரு அதருமத்தை எதிர்ப் பதற்காக, அதே அதருமத்தைச் செய்த இன்னொருவனுடன் கூட்டு சேருவது தருமமாகாது. இதனை உணர்த்துவதற்காகத் தான் வாலிவதைப் படலத்தை இராமாயணத்திலே வைத் திருக்கிறார் வான்மீகி முனிவர். கம்பரும் வாலிவதையின் தேவையை உணர்ந்து அதனை நீக்காததோடு, வான்மீகியை விடவும் சிறந்த முறையில் வாலிவதைப் படலத்தை உருவகப் படுத்தியிருக்கிறார்.

இங்கு மற்றொன்றையும் நினைவில் கொள்ள வேண்டும். இராவணன் வாலியின் பகைவன் அல்லன். அவனைக் கொல்ல வேண்டுமென்ற எண்ணம் வாலிக்கு இருக்கவில்லை. அதனால் தான் தன்னிடம் இராவணன் ஆணவத்துடன் நடந்து கொண்டபோது, அவனுடைய ஆணவத்தை அ -க்கும் வகை யில் அவனை அவமதித்ததோடு வாலி விட்டுவிட்டான். ஒரு பொதுப் பகைவனை வெல்வதற்கு இருவேறு அரசர்கள்

கூட்டு சேருவதிலுள்ள நியாயம் இராவணன் விஷயத்தில் இராமனுக்கும் வாலிக்கும் இடையில் இருக்கவில்லை.

சுக்ரீவன் தன் மனைவி ருமையை அண்ணன் வாலியிடம் பறிகொடுத்தவன். அதனால் தன் அண்ணனை வீழ்த்துவதற்கு அன்னியனான இராமனுடைய துணையை நாடினான். பிறன் மனைவியை அபகரிக்கும் அநீதிக்கு முதல் நம்பர் விரோதியாவான் ராமன். அந்த வகையில், சுக்ரீவனுக்கும் ராமனுக்கும் பொது எதிரியாகிவிட்டான் வாலி. ஆகவே, வாலியை வீழ்த்துவதற்கு சுக்ரீவனும் இராமனும் கூட்டு சேர்ந்தது முறையான செயல்தான்.

இராமனைச் சந்திப்பதற்கு முன்பு சுக்ரீவனுக்கும் ராவணனுக்கும் இடையில் பகை இருந்ததாகத் தெரியவில்லை. ஆயினும், வாலியிடம் தன் மனைவியை இழந்ததன் காரணமாக, பிறன் மனைவியை அபகரிக்கும் கொடுமையை சுக்ரீவனும் மனமார வெறுத்தான். அதன் காரணமாக ராவணனைத் தன் பகைவனாகவும் கருதினான். அந்தப் பொதுப் பகைவனை வீழ்த்துவதற்கு இராமனுடன் கூட்டு சேர்ந்தான். சுக்ரீவனும் ராமனும் செய்து கொண்ட பரஸ்பர உதவி உடன்படிக்கையானது கொள்கை அடிப்படையில் அமைந்ததுதான்.

வான்மீகியும் சரி, கம்பரும் சரி; ராவணன் சுக்ரீவன் ஆகிய இருவரையும் விட வாலியே ஆற்றல் மிகுந்தவன் என்று கூறுகின்றனர். வாலிக்கும் இராமனுக்குமிடையே இராவணனை விழ்த்தும் விஷயத்தில் உடன்படிக்கை ஏற்படுமானால், அது மற்றொரு பிரச்சினையைத் தோற்றுவித்திருக்கும். அது என்ன?

கடமை யாருக்கு?

சீதையை மீட்க வேண்டிய கடமை இராமனுக்குத்தான் உண்டு. இராமனே தன்னை மீட்க வேண்டு மென்றுதான் சீதையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருள். இதனை,

"அல்லன் மாக்கள் இலங்கையது ஆகுமோ?
எல்லை நீத்த உலகங்கள யாவுமென்
சொல்லினுல் சுடுவேன்; அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு எனறு வீசினேன்."

என்று சீதை அனுமனிடம் கூறுவதால் அறிகிறேம். தானே தன்னைவிடுவித்துக்கொள்வதுகூட ராமனுடைய கோதண்டத்திற்கு இழுக்கு தரும் செயல் என்று சீதை கருதுகிருள். அப்படியென்ருல் இராமன் அல்லாத பிறிதொரு ஆடவனுன வாலி தன்னை மீட்பதனை அவள் எங்ஙனம் ஏற்பாள்? இராமனுக்கு வாலி துணை வந்திருப்பானுனல், இராம—இராவணப் போர்நிகழ்ந்திருக்காது தன்னுடைய ஆற்றலைமட்டுமே பயன் படுத்தி இராவணனை வென்று சீதையை மீட்டுத் தந்திருப்பான் கிஷ்கிந்தை மன்னனுன வாலி.

வால்மீகியில், "சீதையை மீட்பதற்கு எனது உதவியை நீ கோரியிருப்பாயானுல், ஒரே நாளில் அவளை நான் மீட்டு வந்திருப்பேன். இதில் ஐயமில்லை" என்று வாலி கூறுகின்ருன். கம்பனிலும், "சீதையை மீட்பதற்காக சிங்கம் போன்ற எனது துணையினை நாடாமல் சிறுமுயல் போன்ற எனது தம்பியின் உதவியை நாடினுயே!" என்று கேலியாகக் கூறுகின்ருன் வாலி.

இதனுலும், பேராற்றல் மிக்கவனுன வாலியினுடைய துணை கொண்டு சீதையை மீட்பது தனது ஆண்மைக்கு இழுக்கு தரும் செயலாகுமென்று இராமன் கருதியிருக்க நியாயம் உண்டு. தன்னினும் பல மடங்கு ஆற்றல் மிக்கவனுடன் சேருவது சமநிலையில் ஏற்படும் கூட்டு ஆகாது.

கூட்டு என்ருல் அதனைச் செய்து கொள்பவர்களுடைய சம பலத்தில் அது அமைய வேண்டும். அதனுல்தான் ராமனுக்கும் வாலிக்குமிடையே கூட்டு ஏற்படுத்தாமல் இராமனுக்கும் சுக்ரீவனுக்குமிடையே வால்மீகியும் கம்பரும் கூட்டு ஏற்படுத்தினர். இது கொள்கை அடிப்படையிலான கூட்டு. ஓரளவு சமநிலையில் உள்ளவர்களின் கூட்டு. பிறன் மனைவி

யைக் கவரும் கொடுமையை மனித சமுதாயத்திலிருந்தே ஒழித்துக் கட்டும் தரும அடிப்படையில் அமைந்த கூட்டு. திரும்பவும் சொல்லுகிறோம், ராமனானவன் வாலியினுடைய உதவியைக் கொண்டு சீதையை மீட்க முயன்றிருப்பானானால், அது ஒரு அநியாயக்காரனை ஒழிப்பதற்கு இன்னொரு அநியாயக்காரனுடன் கூட்டு சேர்ந்தது போலாகியிருக்கும்.

கொள்கை அடிப்படையில் கூட்டு

அரசியல் வாதிகளிடையே அமையும் கூட்டு கொள்கை அடிப்படை உடையதாக இருக்க வேண்டும் என்பதற்கு வால்மீகியும் கம்பரும் வாலிவதைப் படலத்தின் மூலமாக இன்றைய அரசியல் உலகுக்கு வழிகாட்டியிருக்கின்றனர்.

வாலிவதம் சம்பந்தமாக மற்றொரு பிரச்சினையும் எழுகின்றது. வாலிக்கும் சுக்ரீவனுக்கும் போர் நிகழ்வதை—சுக்ரீவன் சார்பில் இராமன் மறைந்திருந்து வாலியின் மீது அம்பு எய்வதை—கூறும் படலம், "வாலி வதைப் படலம்" என்று பெயர் பெற்றிருக்கிறது. இது சரிதானா என்பது பிரச்சினை.

இரணியன் வதைப்படலம், இராவணன் வதைப்படலம், கும்பகருணன் வதைப்படலம் என்ற தலைப்புகள் சரியானவை. பகைவர்களைக் கொன்றால், அது வதைதான். ஆனால், வாலியானவன் இராமனுக்குப் பகைவன் அல்லன்; பக்தன். அவனை வதைத்தாக வேண்டிய அவசியம் இராமனுக்கோ, இராமாயணக் கதைக்கோ இருக்கவில்லை.

கவந்தன் என்பவன், இராம லக்குமணரைக் கவர்ந்து கொள்கிறான். அவனுடன் போர் புரிந்து மீளுகின்றனர் இராம லட்தமணர். ஆனால், சாபம் காரணமாகத்தான் கவந்தன் பூத வடிவம் பெற்றான். இராமன் எய்த அம்பால் அவன் அந்த சாபத்திலிருந்து விடுபடுகிறான். பிறகு இராமனை

பக்தியுடன் வழிபட்டு முத்தியடைகிறான். இந்த நிகழ்ச்சியைக் கூறும் பகுதிக்கு "கவந்தப் படலம்" என்றே பெயர் தந்திருக்கிறார் கம்பர். ஆம்; கவந்தன் வதைப்படலம்' என்று கூறவில்லை. ராமனுக்குப் பகைவன்போல கவந்தன் வந்தது, அவன் விருப்பத்தாலன்று; சாபத்தால்! அதனால், அவனுடைய முடிவை 'வதம்' என்று சொல்லவில்லை கம்பர்.

இதைவிடவும் சிறந்தது வாலியின் நிலை. இராமனுடைய அம்புக்கு இரையாகும் முன்பே வாலியானவன் இராமனுடைய பக்தன் என்பதனைக் கம்பர் அறிவித்துவிடுகிறார். இராமனும் தன்னுடைய திருநாமம் பொறிக்கப்பட்ட அம்பைத்தான் வாலியின் மார்பில் பதிய வைக்கிறான். ஆம்; தன்னுடைய செம்மைசேர் நாமந்தன்னால் வாலியின் வினையைத் தீர்க்கிறான். சிறிது நேரம் ராமனுடன் வாலி வாதம் செய்தானென்றாலும், இறுதியில் அவனைப் பல பாடல்களால் பக்தி செய்து வழிபட்டான்; இறுதியில் முக்தியும் பெற்றான் என்பது கதை. அதனால், "வாலி வதைப் படலம்" என்பதை விட, ' வாலி மோட்சப் படலம்" என்பதே பொருந்தும்!

சில ஏடுகளில் 'வாலி மோட்சப் படலம்' என்றும் இருப்பதாக கம்பராமாயண உரையாசிரியர் திரு. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் கூறுகின்றார்.

கம்பனிடம் யான் கற்ற அரசியல் *

இன்று யான் பேசுவதற்கு ஏற்றுக்கொண்டுள்ள பொருள் "கம்பனிடம் யான் கற்ற அரசியல்" என்பதாகும். புதுவை கம்பர் கழகச் செயலாளர் திரு.அருணகிரி அவர்கள், அரசியல் பற்றிப் பேச என்னை ஏன் அழைத்தார் என்பது தெரியவில்லை. ஒருவேளை, நான் அரசியல் வாதியாக இருப்பதால், கம்பனி லுள்ள அரசியல் நுட்பங்களை, புலவர்களைவிட நான்தான் சிறப்பாக எடுத்துக் காட்ட முடியும் என்று அவர் நம்பினார் போலும்!

கட்சி அரசியல் பேசலாமோ?

நான் கம்பனிலுள்ள அரசியலைச் சொன்னால், கட்சி அரசியலைப் பேசுவதாக உங்களில் சிலர் முணுமுணுக்கக் கூடும். 'இலக்கிய மேடையில் அரசியல் கட்சிப் பிரசாரமா?' என்று உங்கள் உள்ளங்களில் வினா எழலாம். கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட புலவரொருவர் இந்தப் பொருள்பற்றிப் பேசினால், அவர் அறிந்தோ, அறியாமலோ கட்சி அரசியலைக் கலந்து பேசினாலும் நீங்கள் முணுமுணுக்க மாட்டீர்கள்.

"கம்பனிடம் யான் கற்ற அரசியல்" என்னும் பொருளை நான்கு மாதங்களுக்கு முன்னர் எனக்குத் தந்திருந்தால், 'இந்தக் கம்பன் கழகச் செயலாளர் என்பால் நல்லெண்ண மில்லாதவரோ?' என்று யான் அவரை ஐயுற்றிருப்பேன். நல்ல வேளையாக, நாட்டில் "நெருக்கடி அரசியல்" அகன்ற

---

* புதுவையில் நடந்த கம்பர் விழாப் பட்டிமன்றத்தில் நடுவராக இருந்து அளித்த தீர்ப்பு.

பிறகு "கம்பன் அரசியல்" பற்றிப் பேச யான் அழைக்கப் பட்டிருக்கிறேன். இன்று நான் நடைமுறை அரசியலோடு கம்பனில் காணப்படும் அரசியலை ஒப்பிட்டு விமர்சித்துப் பேசலாம்.

"கம்பனிடம் யான் கற்ற அரசியல்" பற்றிப் பேசுவதா யிருந்தால் இன்றைய அரசியலை உவமைகாட்டாமல் பேசுவது முறை, அப்படிப் பேசுவதுதான் இலக்கிய மேடைக்கு அழகு. ஆனால், "கம்பனிடம் யான் கற்ற அரசியல்" என்று எனக்குப் பொருள் தந்திருப்பதால், இன்றைய அரசியல் வாதிகள் கற்பதற்கும் கம்பனிலே அரசியல் நெறிகளும் நிபதிகளும் இருக்கின்றன என்பது புலனாகிறது. இன்றைய அரசியலில் வழுக்கி விழுந்தவர்களை நினைப்பூட்டினால்தான் கம்பனில் நாம் கற்கவேண்டிய அரசியல் எது என்பது தெளிவாகத் தெரியும். எடுத்துக் கொண்ட தலைப்புக் கேற்பப் பேசு வேன். பிழையிருந்தால், அவையினர் மன்னிக்க வேண்டும்.

அதிகார அரசியல்

கம்பனிடத்தில் யான் கற்ற அரசியல், அவன் அதிகார அரசியலுக்குத் தன்னை அடிமைப் படுத்திக் கொள்ளாததாகும். கம்பன் காலம் எதுவென்பதைப் புலவர்களும் ஆராய்ச்சி யாளரும் இன்னமும் நமக்கு முடிவு கட்டிச் சொல்லவில்லை. அவர்களுக்குள்ளேயே அதில் ஒருமித்த கருத்தில்லை. அதற்குக் காரணம், அவன் தன் காலத்தில் வாழ்ந்த மன்னன் எவனை யும் தனது காப்பியத்தில் சேர்க்காததுதான். "வடமொழிக் காப்பியத்திற்குத் தமிழில் படைத்த வழி நூலிலே தமிழ் நாட்டு வேந்தனை எப்படிப் புகுத்த முடியும்!" என்று யாரும் வினா எழுப்ப முடியாது. தனக்கு வாழ்வளித்த சடையப்ப வள்ளலை இராமாயணத்திலே புகுத்திய அந்தக் கவிச் சக்கர வர்த்திக்குத் தன் காலத்தில் வாழ்ந்த சோழச் சக்கரவர்த் தியைப் புகுத்தத்தானா முடியாது? பொன்னியின் புனிதத்தை

—பொருநை நதியின் பெருமையை—வடவேங்கடத்தின் அருமையை—பொதிகை மலையின் சிறப்பைச் சொல்பவன், அவற்றைச் சொல்லுந்தோறும், தமிழிடத்தும் தமிழ் நாட்டிடத்தும் தமிழ் இனத்திடத்தும் தனக்குள்ள பற்றுதலை, பாசத்தை வெளிப்படுத்துபவன், சோழ மன்னனின் பெருமை பேசத்தானா முடிந்திருக்காது?

மன்னன் புகழ் பாடாதவன்

உண்மை என்ன? கம்பனுடைய அரசியல் மன்னன் புகழ் பாடுவது அல்ல என்பதுதான். அதனால், இன்றைய ஆராய்ச்சியாளர்களால் கம்பன் வாழ்ந்த காலத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அவன், தன் காலத்து மன்னனைச் சொல்லியிருந்தால், அவன் காலமே கம்பன் வாழ்ந்த காலம் என்பது உறுதிப்பட்டிருக்கும். மற்ற புலவர்களிலே—நீதிநூல் படைத்தவர்களைத் தவிர—எல்லோரும் தத்தம் காலத்து மன்னனைத் தங்கள் இலக்கியங்களிலே நுழைத்தார்கள். இதற்கு விலக்கானது, கம்பனுடைய அரசியல். உண்மை என்னவென்றால், மகாகவி கம்பனுடைய அரசியல் அரியணைக்குத் துதி பாடுவது அல்ல. அதிகாரத்தை வழிபடுவதும் அல்ல.

'இராமாயணத்தலைவனே சக்ரவர்த்தித் திருமகன்தானே! கோசல நாட்டின் இளவரசன்தானே! அவனுடைய காப்பியத்திற்கு வழிநூல் படைத்தது, அதிகாரத்திற்குச் செய்த வழிபாடு ஆகாதா?' என்று கேட்கலாம். "ஆகாது" என்பதே எனது பதில. அரியாசனத்தை இழந்த பின்புதானே இராமன் காப்பியத்தின் தலைவனாகிறான்? இராமாயண காப்பியத்தின் பெரும்பகுதியில் அரியாசனத்தை இழந்த வனவாசியாகத் தானே இராமனைக் காண்கிறோம்? மணிமுடியையும் செங்கோலையும் கொற்றக் குடையையும் துறந்த வானப்பிரஸ்தனாகத் தானே இராமனை உலகம் பார்க்கிறது? அவனை அரியாசனத்தில் ஏற்றி வைத்த பின் கதை நீளவில்லையே! அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்த, பரதன் வெண்

குடை கவிக்க, இலக்குவனும், சத்துருக்கனும் கவரி வீச இராமன் அரியணையில் அமர்வதைக் காட்டி விட்டு, கம்பர் கதையை முடித்து விடுகிறாரே! அதற்குமேல், வான்மீகியைப் போல் இராமராஜ்யத்தை கம்பன் நமக்குக் காட்ட வில்லையே!

கம்பனிலே, சக்கரவர்த்தியான தயரதன் உயிர் துறக்கிறான், வாய்மையைக் காக்க! அவன் மகன் ராமன் முடி துறக்கிறான், தன் தந்தையானவன் சிற்றன்னைக்குத் தந்த இருவரங்களை, அவளும் அவள் மைந்தனான பரதனும் அனுபவிக்க! அவன் தம்பி இலக்குவன், அண்ணனைப் பின்பற்றி அரண்மனை வாழ்வை—நகர வாசத்தை வெறுத்து வனஞ் செல்கிறான்! மற்றொரு தம்பி சத்துருக்கன், 'அரியணை ஏறி, ஆட்சி புரியடா தம்பி!' என்று சின்னண்ணா பரதன் சொன்னதுகேட்டு,

"கான் ஆள நிலமகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்து, பின்பு
போனானும் ஒருதம்பி; "போனவன்
தான் வரும் அவதி போயிற்று" என்னா,
ஆனாத உயிர் விட என்று அமைவானும்
ஒருதம்பி! அயலே நானாது,
யானும் இவ் அரசு ஆள்வென்?" என்னே;
இவ் அரசாட்சி, இனிதே அம்மா!"

என்று சொல்லி, அரியணை ஏற மறுத்தான். அரசபதவியை ஏற்குமாறு இராமன் இட்ட கட்டளையை ஏற்ற பரதனும், அரியணை ஏறாமல், மணிமுடி அணியாமல், அயோத்தி நகரத்திற்குள் நுழையாமல், அரண்மனை வாழ்வை வெறுத்து, அயோத்திக்குப் புற நகரான நந்தியம்பதியில் இருந்தபடி, அரச கடமைகளைச்செய்தான். இவ்வளவும் அதிகாரவேட்டை அரசியல் அல்ல; அதிகாரத் துறப்பு அரசியல்!

கோசல நாட்டின் சக்கரவர்த்தியான தயரதன் மாண்டான்; இளவரசன் இராமன் வனம்புகுந்தான்; இளவல் இலக்குவனும் இராமனைப் பின்பற்றிச் சென்றான்; பரதனும் அரியணை

யேற மறுத்து, அதன் மீது இராமனுடைய பாதுகைகளை வைத்து அவற்றின் பெயரால் ஆட்சி நடத்தினான். இவ்வளவு நிகழ்ந்த நிலையிலும் கோசல நாட்டில்—அதன் தலைநகரான அயோத்தியில்—அராஜகம் தோன்றவில்லை; அமைதியே நிலவியது. செங்கோல் மன்னர்களை வழிவழி காணும் பேறு பெற்ற நாட்டிலே, அவர்களில் ஒருவனுடைய பாதுகையும் ஆட்சி புரியும்; அந்த ஆட்சியிலேயும் அமைதி நிலவும்.

இப்படி யெல்லாம் சொல்லும் கம்பன், அதிகார அரசியலை அல்லாமல், அறவழிப்பட்ட அரசியலையே நமக்குக் கற்பிக்கிறான். அறநெறிகளை அழித்துத்தான் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்றால், அதைவிட அதிகாரத்தைத் துறப்பதே அரசியல் நெறி என்று கற்பிக்கிறான் கம்பன்.

இது, கம்பனிடம் யான் கற்ற அரசியல்! இன்னுமுண்டு சொல்கிறேன், கேளுங்கள்:

அந்தப்புர அரசியல்!

இராமாயணத்தில், அரண்மனையின் அந்தப்புரத்தி லிருந்து தான் அரசியல் அதிகார வேட்டை தொடங்கு கின்றது. அங்கும் கூனியிடமிருந்துதான் கோசல நாட்டின் அரசியலில் ஒரு திருப்பம் ஏற்படுகிறது. எங்கு அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றனவோ அங்கு அரசியல் "கூனி"களும் "கூனர்"களும் தோன்றத்தான் செய்வார்கள். இது, ஆட்சி பீடம் பெற்று விட்ட சாபம் போலும்! "அரியணை" என்று இருந்தாலே, இச்சகம் பேசுவோர் அதனைச் சுற்றத்தொடங்கி விடுகிறார்கள். இது, இன்றைய ஆட்சியாளர்கள் கம்பனி லிருந்து கற்க வேண்டிய அரசியல்.

தயரதச் சக்கரவர்த்தியானவன் சம்பராசுரனுடன் போர் செய்தபோது, அவனுடைய இளைய மனைவியான கைகேயி அவனுக்குத் தேரோட்டினாள். இந்தச் செய்தியை நினைக்குந் தோறும் எனது நெஞ்சு இனிக்கிறது. கொடிய அசுரனை

எதிர்த்துப் போர் முனை புகுந்த கணவனுக்கு மனைவி தேரோட்டினுள்; போரிலே வெற்றி தேடித் தந்தாள். இந்த நிகழ்ச்சிக்கு உவமை ஏது? இதற்கு உவமையாக, கள்வன் என்னும் பழிச் சொல்லிலிருந்து தன் கணவனை மீட்க ஒரு வல்லரசையே—பாண்டி நாட்டின் பேரரசையே—எதிர்த்துப் போரிட்ட கண்ணகியைத்தான் சொல்ல முடியும் என்றால்! பின்னல் கைகேயி தீயவளாகிவிடுகிறுள் என்பதனுலேயே தன் கணவன் சம்பராசுரனுடன் நடத்திய போரில் அவனுக்குத் தேரோட்டியாக இருந்து அவள் காட்டிய வீரசாகசத்தை நாம் மறந்து விட முடியுமா?

தேரோட்டி பெற்ற வரம்!

களம் புகுந்துவிட்ட ஒரு சக்கரவர்த்திக்கு பெண்ணொருத்தித் தேரோட்டுவ தென்பது சாதாரண நிகழ்ச்சி யல்ல. பாரதப் போரிலே, பார்த்தனுக்குக் கண்ணன் தேரோட்டியதனுற்றுன் அவன் வெற்றி பெற முடிந்தது. இதனை உணர்ந்ததனுற்றுன், கைகேயியின் நெஞ்சுறுதியை—தொழில் திறத்தை—மெச்சி, அவளுக்கு இரண்டு வரங் கொடுத்தான் தயரதன். இதனை, கணவன் மனைவிக்குத் தந்த பரிசாகக் கருதலாகாது. போரில் புகுந்த சக்கரவர்த்தி யானவன், தனது தேரோட்டியின் தொழில் திறத்தை மெச்சித் தந்த பரிசாகத்தான் கருதவேண்டும். இது, கணவனுக்கும் மனைவிக்குமான அந்தப்புர விஷயமல்ல; அரசனுக்கும் தேரோட்டிக்குமான அரசியல் விஷயம்.

சம்பராசுரனுடன் போர் செய்த காலத்தில் கைகேயிக்கு தயரதன் தந்த இரண்டு வரந்தானே, கோசல நாட்டின் அரசியலில் ஒரு திருப்பம் ஏற்படக் காரணம் ஆகின்றது?

கைகேயி இயல்பாகவே தீயவளாக இருந்திருப்பின் கணவன் கொடுத்த இரண்டு வரங்கள் அவளுடைய நினைவில் இருந்திருக்கும். அதற்கு மாறுக, அந்த வரங்களை அவள் அன்றே மறந்து விட்டாள். அவ்வளவு தூய்மையானது தயர

தனிடம் அவள் வைத்திருந்த அன்பு, உத்தமமான ஒரு மனைவி கணவனுக்காக தான் செய்த சேவைக்குப் பிரதிபலனை எதிர் பார்க்க மாட்டாள்தானே! கூனி நினைப்பூட்டியபோதுதான் அந்த நிகழ்ச்சி அவளது நினைவுக்கு வருகிறது.

இராமனுக்கு முடிசூட்டி விட்டு அரசு பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளத் தயரதன் முடிவெடுக்கிறான். அதற்குக் குறுநில மன்னர்களின் அங்கிகாரத்தைப் பெறுவ தற்கு, அவர்களைக் கூட்டுகிறான். இந்நாளில், மத்தியில் ஆளுவோரை மாற்றுவதற்கு மாநிலங்களின் அனுமதியைக் கோரினால் எப்படியோ, அப்படி! மாநிலங்களில் ஆளுவோரை மாற்ற மத்திய அரசு முயல்வதுபோல அல்ல!

பதவி நினைப்பற்றவன்!

இங்கொரு செய்தி. வான்மீகியில் தயரதன் இராமனைத் தேர்ந்தெடுப்பது, அரச பதவிக்கு அல்ல; இளவரசு பட்டத் திற்காகத்தான்! வான்மீகியிலே அரச பதவியைத் துறக்குமள வுக்குப் பண்பட்டவனல்ல தயரதன்! அங்கு, அதிகாரத்தைத் துறக்க விரும்பாத தயரதனையே பார்க்கிறோம். அதிகார போதையற்ற அரசியலைச் சொல்லும் கம்பனிலேதான் அரச பொறுப்பை மகனிடம் தந்து விட்டு, வானப்பிரஸ்தனாகி வனஞ் செல்ல விரும்பும் தயரதனைப் பார்க்கிறோம். இங்கும், கம்பன் அறவழிப்பட்ட அரசியலையே எனக்குக் கற்பிக்கிறான்.

மூத்த மகன் இராமனை அழைத்து, தன் அருகில் அமர்த் திக் கொண்டு,

> "நீண்டதோள் ஐய! நிற்பயந்தெடுத்த யான், நின்னை
> வேண்டி, எய்திட விழைவது ஒன்று உளது"

என்று முன்னுரை கூறிவிட்டு,

> "புனையும் மாமுடி புனைந்து, இந்தநல் அறம் புரக்க
> நினையல் வேண்டும்; யான் நின்வயின் பெறுவது ஈது"

என்கிறான். "சக்கரவர்த்திப் பதவியை என்னிடமிருந்து

ஏற்றுக் கொள்வது பற்றி நினைத்தி'' என்று வேண்டுகின்றான்— இல்லை, தன் மைந்தனைக் கெஞ்சுகின்றான் தயரதன். ''நினையல் வேண்டும்'' என்றதனால், சக்கரவர்த்தியாக வருவது பற்றிய நினைப்பு இராமனுக்கு அதுவரை இல்லை யென்பது கம்பர் காட்டும் அரசியல். இந்நாளில் பிரதமருக்கு டெபுடி பிரதமர் ஏற்படுத்தி விட்டால், போதும்; அந்த டெபுடி சதா தான் பிரதமராவது பற்றியே நினைத்துக் கொண்டிருக்கும்.

பண்டை நாளில் இளவரசு பதவியில் இருப்பவன், தான் அரச பதவிக்கு வரும் நாளை நினைத்துக்கொண்டே இருப்பான். அறவழிப்பட்ட அரசியல் வாதியான இராமனோ, அந்த நினைப்பே இல்லாதவனாக இருக்கிறான்; அதனால்தான், ''அரச பதவியை ஏற்றுக் கொள்'' என்று ஆணையிடாமல், ''ஏற்பது பற்றி நினைப்பாயாக!'' என்று வேண்டுகிறான் தயரதன்.

மத்தியில் ஆளுவோர் மாறுவதறிந்து மாநிலங்கள் மகிழ்ந்தால் எப்படியோ, அப்படி, சிற்றரசர்களெல்லாம் தங்கள் பேரரசுப் பதவியில் நபர் மாற்றம் ஏற்படப் போவது குறித்து மகிழ்ந்து, அவர்களிலே ஒவ்வொருவரும் தன் தன் தலையில் கையை வைத்துத் தடவினராம்! ஏன் தெரியுமா? இராமன் தலையில் ஏறவிருக்கும் மணிமுடியானது, தன் தன் தலையில் ஏறப்போவது போல, அவர்களெல்லாம் நினைத்தார்களாம்! மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே அந்த அளவுக்கு உறவு நல்லவிதமாக இருந்தது, அந்நாளிலே!

கம்பனிலே, 'வில்லன் அரசியலை'யும் நான் கற்றிருக்கிறேன். ஆனால், கடைப்பிடித்ததில்லை. பெண்வடிவில் வரும் வில்லன் கைகேயி. அவள் இயற்கையிலே நல்லவள். அவளுக்கு வாய்த்த தோழியான கூனிதான் கொடியவள். இதனை உணர்த்த அவளுக்குக் ''கொடு மனக் கூனி'' என்று பட்டந் தருகிறார் கம்பர். கூன் விழுந்தது, அவள் உடலில் மட்டும் அல்ல: உள்ளத்திலுந்தான் என்கிறார்.

கூனியின் கோபம்!

இராமனுக்கு முடிசூட்டவிருப்பதை அறிந்து, "தத்தமக்குற்ற அரசென்று மகிழ்ந்தனர்" நல்லவர்கள். ஆனால், கொடுமனக் கூனி மட்டும் அப்படி நினைக்கவில்லையாம். அவள் நிலையை வருணிக்கும் கம்பர்,

" தோன்றிய கூனியும்
 துடிக்கும் நெஞ்சினள்;
ஊன்றிய வெகுளியாள்;
 உளைக்கும் உள்ளத்தாள்;
கான்று எரி நயனத்தாள்;
 கதிக்கும் சொல்லினள்."

என்றெல்லாம் கூறிவிட்டு,

"மூன்று உலகினுக்கும் ஓர்
 இடுக்கண் மூட்டுவாள்"

என்கிறார். இராமனுக்கு அவள் இழைத்த தீமையை விண்—மண்—பாதாளம் ஆகிய மூன்று உலகினுக்குமே இழைத்ததாகக் கம்பர் கருதுகின்றார். நல்லோரிலே எவருக்குத் தீங்கிழைத்தாலும், அதனை உலகம் முழுவதற்கும் இழைத்த தீமையாகவே கருத நியாயமுண்டு.

இராமன் முடிசூட்டிக் கொள்வதிலே, கூனிக்கு ஏன் அவ்வளவு கோபம்! அவள் அரசியல் வாதியல்லவே, பொறாமைப்பட! அரண்மனையில்தான் இருக்கிறாள் என்றாலும், அரச குடும்பத்தில் பிறந்தவள் அல்லவே! அரசியரில் ஒருத்தியான கைகேயின் தோழிதானே!

வேறொன்றுமல்ல; இராமன் சிறுவனாக இருந்தபோது, விளையாட்டுத்தனமாக மந்தரையின் முதுகிலுள்ள கூனிலே கவர்ச்சியுற்று, அதன்மீது தன் வில்லால் உண்டை எறிந்து மகிழ்ந்தானாம்! அது, இராமன்பால் அவளுக்கு வன்மத்தை

ஏற்படுத்தி விட்டது. அந்த நிகழ்ச்சி, இராமனுக்கு முடிசூட்ட விருக்கும் நல்ல நேரத்திலே நினைவுக்கு வந்து விட்டது கூனிக்கு! இதனை,

''தொண்டைவாய்க் கேகயன் தோகை கோயில்மேல்
மண்டினுள்—வெகுளியின் மடித்த வாயினுள்,
பண்டை நாள் இராகவன் பாணி வில் உமிழ்
உண்டை உண்டதனைத் தன் உள்ளத்து உள்ளுவாள்''

என்ற செய்யுளில் கவிஞர் நினைப்பூட்டுகிறார். இராமன் மந்தரையின் முதுகில் உண்டை எறிந்தது 'பண்டை நாளில்' என்பதால், அவன் விளையாட்டுப் பிள்ளையாக இருந்தபோது என்பது புலனாகின்றது.

விளையாட்டே வினையானது!

அரசியல் வாதிகள் விளையாட்டாகச் செய்யும் சிறு தவறு கூட, தேசத்தையே பாழ்படுத்தும் பெருந்தீமையைத்தோற்று-வித்து விடும் என்பது, கம்பனிடம் நான் கற்ற அரசியல். இதனை, இராமனைக் கொண்டும் சொல்ல வைக்கிறார் கம்பர்.

இராமன், கிஷ்கிந்தையில் வாலியை வதைத்த பின்னர், அவனுடைய வாரிசாக அரியணை ஏறும் சுக்ரீவனுக்கு "அரசியல்" போதிக்கிறான்.

''சுக்ரீவ! எளியரென்று யாரையும் அலட்சியமாக நினைத்து, அவர்களுக்குத் தீமை செய்யாதே! அது அரசியல் ஆகி, நாட்டிற்கும் அரசுக்கும் கேடிழைக்கும். நான் சிறுவனாக இருந்தபோது, குறும்புத்தனமாக மந்தரையின் முதுகிலுள்ள கூன்மீது உண்டை எறிந்து மகிழ்ந்தேன். அதுதானடா, அரியணையேற வேண்டிய நான், வனத்தில் வாழக் காரண மாகி விட்டது.'' என்று கூறுகிறான். அதனை, கம்பன் வாக்காலேயே கேட்போம்:

சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல்; மற்று,இந்-
நெறிஇகழ்ந்து, யான்ஓர் தீமை இழைத்தலால், உணர்ச்சி
நீண்டு,,
குறியது ஆம் மேனி ஆய கூனியால், குவவுத் தோளாய்!
வெறியன எய்தி நொய்தின் வெந்துயர்க் கடலில் வீழ்ந்தேன்.

தனக்கு ஏற்பட்ட வனவாசத்தை, "வெந்துயர்க் கடலில் வீழ்ந்த"தென்று இராமனே வருணித்து, அதனுல், தனக்கு நேர்ந்த வேதனையை வெளிப்படுத்துகிருன்.

உண்மையில், ஆற்றல் மிக்கவர்கள் அழிவதெல்லாம் சாமான்யர்களிடத்தில்தான்! இராவணன், இராம—லட்சு மணரை, "இந்த மனிதப் பசங்கள் என்னை என்ன செய்துவிட முடியும்?"என்று இறுமாந்தான். அந்த ஆணவம்தான் அவனை அழித்தது. இரணியன், 'எனக்குப் பிறந்த இந்தச் சிறுபயல் பிரகலாதனு, எனக்கு அறிவு சொல்வது?' என்று இறுமாந் தான். அதனுல், அழிந்தான்.

அரசியல் வாதிகள்—குறிப்பாக, அரசாள்வோர், 'எளிய ரிடம்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சாமான்யர் களின் எளிய கட்சிகூட சரித்திர நாயகர் தலைமை தாங்கும் பெரிய கட்சியையும் வீழ்த்தி விட முடியும். இந்த உண்மை யைத்தான் கூனியை அரசியல் சாகசக்காரியாக்கி உலகாள் வோருக்கு உணர்த்துகின்ருர் கம்பர்.

ராசதந்திரி கைகேயி!

கூனியை விடவும் பெரிய ராஜ தந்திரியாகி விடுகிருள் கைகேயி. தயரதனிடம் கூனி கேட்கச் சொன்ன வரம் இது தான்:

'இருவரத்தினில், ஒன்றினுல் அரசுகொண்டு, இராமன்
பெருவனத்திடை ஏழ்இரு பருவங்கள் பெயர்ந்து
திரிதரச் செய்தி, ஒன்றினுல்; செழுநிலம் எல்லாம்
ஒருவழிப்படும் உன்மகற்கு; உபாயம் ஈது"

இவ்வளவுதான் கைகேயிக்கு மந்தரை சொன்ன அரசியல் ஆலோசனை. கைகேயி, கூனி சொல்லித் தந்தபடித்தான் தயரதனிடம் இரண்டு வரங்களைக் கேட்டாள்.

"ஏயவரங்கள் இரண்டின், ஒன்றினால், என்
சேய் அரசு ஆள்வது, சீதை கேள்வன் ஒன்றால்
போய்வனம் ஆள்வது"

இதிலே, இராமன் வனத்தில் வாழ வேண்டிய காலத்திற்கு வரம்பு கட்டவில்லை கைகேயி. 'என் சேய் அரசாள வேண்டும்' என்று சொன்னவள் 'உன்சேய் வனம் ஆள வேண்டும்' என்று சொல்லவில்லை. சொன்னால், தயரதனுக்கு மகப்பாசம் வந்து விடுமென்று அஞ்சி, 'சீதை கேள்வன்' என்று சொல்கிறாள், அரசியல் சாகசக்காரி! ஆம்; தனக்கு அரசியல் கற்றுக் கொடுத்த கூனியையே விஞ்சுமளவுக்கு அரசியலில் "மேதை"யாகி விட்டாள் கைகேயி.

தயரதனிடம் கேட்டபடி—அவன் தந்த வரங்களை—இராமனிடம் கூறவில்லை கைகேயி. இதோ, கைகேயி இராமனிடம் கூறுவதைக் கேளுங்கள்:

ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆள, நீபோய்,
தாழ்இருஞ்சடைகள் தாங்கி, தாங்க அருந்தவம் மேற்கொண்டு
பூழிவெம் கானம் நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழ்இரண்டு ஆண்டில்வா' என்று இயம்பினன அரசன

தயரதனிடம் இராமன் வனம் போகத்தான் வரம் பெற்றாள் கைகேயி. அதை இராமனிடம் சொல்லும்போது, "ஏழ் இரண்டு ஆண்டு" என்று காலத்தைக் கணித்துக் கூறுகின்றாள். மொத்தமாகப் "பதினான்கு ஆண்டு" என்று சொல்லி விட்டால், இராமன் அச்சத்தால் வனஞ்செல்ல மறுப்பானோ என்றஞ்சி, "இரண்டு ஏழு ஆண்டு" என்று சாகசமாகச் சொல்லுகிறாள்.

"வனத்திற்குச் செல்" என்றால் இருள் செறிந்த பயங்கரக்காடு இராமன் நினைவிற்கு வருமோ, அதனால், அவன்

கானகஞ் செல்ல மறுத்துவிடக் கூடுமோ?—என்று கவலை கொண்டவளாகி, "அகன் கானிடை வைகி" என்கிருள் கைகேயி.

சாகசக்காரி!

வனம் என்றுலே, அங்கு வாழும் மிருகங்கள் இராமனுடைய நினைவுக்கு வருமே என்றஞ்சி, அகன் கானகத்திலே "மாண்ட மாதவரோடு வைகி" என்கிருள். பெருமை மிக்க தவசியர்களோடு கானகத்தில் வாழ குருகுலக் கல்வி கற்று அனுபவமுடைய இராமன் விரும்புவான்தானே!

கைகேயியின் சாகச அரசியல் இத்துடன் நிற்கவில்லை; இன்னும் சொல் ஜாலம் செய்கிருள், கூனியின் சிஷ்யை!

அகன்ற கானகத்திலே இரண்டு ஏழாண்டுகள் மாதவர்களோடு இராமன் வாழ்வதென்றுல், பொழுதுபோக்காக அல்லவாம்; அவர்களோடு தவஞ்செய்ய வேண்டுமாம்! அதுவும் எப்படித் தெரியுமா? தலைமுடி தரையைத் தொடும் வகையில் தாழ்ந்துவளரும்படியாகவாம்! "தாழிருஞ்சடைகள் தாங்கி. தாங்க அருந்தவமேற் கொண்டு" என்ற ;வாசகத்திலே, இராமனை. திரும்பவும் அரியணையை நினைக்க முடியாத முனிபுங்கவனுக்கி விட முயல்கிருள் கைகேயி. இவ்வளவும் சொன்னவள். "ஏழிரண்டாண்டில் வா' என்று இயம்பினன் அரசன்" என்கின்றுள்.

வனம்புகுந்து, அங்கு. 14 ஆண்டுகள் தலைமுடி தரையைத் தொடும்படியாக தவஞ்செய்து, முனிவர்களோடு முனிவனுக மாறிய பின்பு, திரும்பவும் அரசை விரும்பி அயோத்திக்கு வரமாட்டான் இராமன் என்பது கைகேயியின் முடிவு. ஆகவே, வரமாட்டான் என்ற துணிவோடு ஒப்புக்கு—உபசாரமாக "மீண்டும் நீ வரல் வேண்டும்" என்கிருள்.

அதையும் தான் சொல்வதாகச் சொன்னுல் இராமன் வனஞ்செல்ல மறுப்பானே என்றஞ்சி, "இயம்பினன் அரசன்" என்றுள். "தந்தையின் ஆணை" என்பதைவிட, "அரசன்

ஆணை'' என்றால், மீற முடியாததாதலால், அப்படியே சொல்கிறாள்.

வல்லவர்களும் நல்லவர்களும்

வல்லவர்கள் நல்லவர்களாக இருப்பதில்லை. நல்லவர்கள் வல்லவர்களாக இருப்பதில்லை. இது, உலக இயற்கை. ஆனால், ராமன் நல்லவன் மட்டுமல்லன்; வல்லவனுமாவான். "இயம்பினன் அரசன்" என அவள் சொன்னதிலுள்ள சூழ்ச்சியை அவன் புரிந்து கொண்டான். அவனுக்குத் தெரிகிறது, சிற்றன்னை தான் தன்னை வனத்திற்கு விரட்ட சூழ்ச்சி செய்கிறாள் என்பது. தந்தைக்கு அவள்பால் உள்ள காதல் மயக்கத்தையும் அவன் அறிவானாதலால், அவன் அவளது சூழ்ச்சிக்கு இரையாகியிருக்கக் கூடுமென்பதையும் இராமன் உணர்கிறான். ஆகவே கைகேயியைப் பார்த்து, "நீ சொன்னால் வனம் போகமாட்டேன் என்று அஞ்சியா, தந்தையின் மேல் பழியைப் போடுகிறாய்' என்கிறான். "ஓகோ, அரச பதவி பறிபோய் விடுகிறதே என்று கவலைப்படுவேன் என்று கருதினாயா? என் தம்பி பெறும் பதவி யான் பெற்ற தாகாதா, தாயே?" என்று கூறி, "இனியும் தாமதியேன், இதோ புறப்படுகிறேன் வனத்துக்கு" என்று சொல்லிவிட்டு, கைகேயியின் மனையை விட்டு, அன்னை கோசலையின் அரண்மனைக்குச் .செல்கிறான் வல்லவனும் நல்லவனுமான இராமன். நல்லவளல்லாத வல்லவளான கைகேயியிடம் இராமன் விடை பெறுவதை கம்பன் வாக்காலேயே அறிவோம்:

மன்னவன் பணி அன்றாகின், நும்பணி மறுப்பெனோ? என்
பின்னவன் பெறறசெலவம் அடியனேன் பெற்ற தனறோ?
என் இனி உறுதி அப்பால்? இபபணி தலைமேல கொணடேன்,
மினைஒளிர் கானம் இன்றே போகின்றேன; விடையும்
கொண்டேன்

அமைச்சர் அறுபதினாயிரவர்!

கம்பனிலே 'அமைச்சியலை'யும் கற்க முடிகிறது. மன்னன் தயரதனுக்கும் அமைச்சரவை இருந்திருக்கிறது. அமைச்சர்

களின் மொத்தஎண்ணிக்கை அறுபதினாயிரமாம்! ஆம்; கோசல நாட்டுப் பேரரசனுக்கு மனைவியர் கூட அறுபதினாயிரவர்! அவன் ஆட்சி புரிந்த ஆண்டுகள் அறுபதினாயிரம் என்கிறார் கம்பர். அறுபதினாயிரம் என்ற எண்ணிக்கையிலே அவருக் கொரு மோகம்!

மனைவியர் அறுபதினாயிரவர் என்பது கற்பனைதான்!— அதாவது, எண்ணிக்கையை மிகுத்துச் சொல்வதுதான்! உண்மையில் ராமாயணத்திலே தயரதனின் நடமாடும் மனைவியர் மூவர்தான்! அவர்கள், கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகியோராவர். பலதாரக் கொடுமையை உணர்த்துவதற்காக, மனைவியரின் எண்ணிக்கையைப் பெருக்கிக் காட்டுகிறார். மகன் இராமன், ஏகபத்தினி விரதன். தந்தை தயரதன் அறுபதினாயிரம் மனைவியரைக் கொண் டவன்.

அரசரானோர், எத்தனை மனைவியரையும் மணந்து வாழ உரிமை பெற்றிருந்தனர், அந்நாளிலே! அதனை வெறுத்து, அரசரேயானாலும், ஏகபத்தினி விரதராகத்தான் இருக்க வேண்டும் என்ற நீதி இராமனைக் கொண்டு மன்னருலகுக்கு உணர்த்தப்படுகிறது இராமாயணத்திலே! 'ஒருத்திக்கு ஒருத்தன்' என்பது பெண் கற்பானால், அதுபோல, 'ஒருத்த னுக்கு ஒருத்தி' என்ற ஆண் கற்பும் இராமனைக் கொண்டு வலியுறுத்தப்படுகிறது.

தயரதனுடைய அமைச்சர் அறுபதினாயிரவர் என்பதும் கவியின் கற்பனைதான்! ஆனால், அவர்கள் அத்தனை பேரும் ஒரு மித்த கருத்துடையவர்களாக இருந்தனராம்? "ஆளுக்கொரு அபிப்பிராயம்" என்ற நிலை அமைச்சரவையில் இருந்ததில்லை யாம். அவர்கள், "ஒருமையே மொழியும் நீரார்" என்கிறார் கம்பர். தலைமகனான மாமன்னன் தயரதன் தங்கள்பால் வெகுளி காட்டினாலும், உண்மையைச் சொல்வதற்கு அந்த அமைச்சர்கள் அஞ்சியதில்லையாம். இதனை, "உண்மை

விடாது நின்று உரைக்கும் வீரர்'' என்ற வாசகத்தா லுணர்த்துகின்முர் கம்பர்.

இராவணன் அமைச்சரவை

இராவணனுக்கும் அமைச்சரவை இருந்தது. இராமன் வானர சேனையுடன் இலங்கை மீது படையெடுத்தபோது, இராவணன் தனது அமைச்சரவையைக் கூட்டி, மேலே செய்ய வேண்டியவை பற்றி அமைச்சர்களுடன் கலந்து ஆலோசிக்கிருன். இராவணனின் உடன் பிறந்தாரான கும்பகருணனும், வீடணனும், அவன் மகனுன இந்திரசித்தன் ஆகியோரும் அமைச்சரவையில் இருக்கின்றனர். இவர்க ளன்றி, வேறு பெண்களும் அமைச்சரவையில் இருந்திருக் கின்றனர் என்று கருத இடம் இருக்கிறது. ஏனெனில், போர் பற்றி ஆலோசிக்க அமைச்சரவையைக் கூட்டிய போது, பெண்களை வெளியேற்றி விட்டான் என்கிருர் கம்பர். "சீதை" என்ற பெண் சம்பந்தமாக எழுந்துள்ள போராத லால், அவர்களிலே பெண்களானேர் தனக்கு எதிராக நடந்து கொள்ளக் கூடுமென்று இராவணன் பெண் அமைச் சர்களைச் சந்தேகித்திருக்கலாம். அது இயற்கைதானே!

இளைஞர்களையும் அமைச்சரவையிலிருந்து தற்காலிகமாக வெளியேற்றினுனும். போர் பற்றி நடத்தும் மந்திராலோ சனையாதலால் இளைஞர்கள் பொறுப்போடு ஆலோசனை சொல்லத் தகுதியற்றவர்கள் என்று கருதி, அவர்களை வெளி யேற்றினுன் போலும்! அப்படியும் ஒரு இளைஞனை அவையி லிருக்க அனுமதித்துவிட்டான். அவன் வேறு யாருமில்லை; இந்திரசித்தன்தான்! அவன் இளவரசனுதலால், அவனை வெளியேற்றுவதெப்படி? அத்துடன் அவன் இராவண னுடைய மகனுதலால், அவனைச் சந்தேகிப்பதற்குச் சந்தர்ப் பமேது?

இராவணனுடைய அமைச்சரவையிலே, அவன் பகை யினத்தைச் சார்ந்தவரான தேவர்களிலேயும் சிலர் இருந்

தனர். நேர்ந்திருக்கும் போரிலே அவர்கள் சந்தேகிக்கத் தக்கவராதலால், அவர்களையும் வெளியேற்றி விட்டானாம்! அமைச்சரவை கூடுமிடத்திலே காற்றும் இல்லாதபடி செய் தானாம்! வாயு தேவனும் வானுலகத் தேவர் இனத்தைச் சார்ந்தவனல்லவா? அவனை எப்படி நம்புவது? அமைச்சரவை யில் பேசப்படும் விஷயங்களில் ஏதேனும் காற்றோடு கலந்து வெளியாகி விட்டால் என்ன செய்வது?

அமைச்சர்களுடைய தகுதி பற்றி தயரதனுடைய அமைச் சர்களை அறிமுகப்படுத்தும் போது கம்பர் கூறுகின்றார். அதற்கு, "மந்திரப் படலம்" என்றே பெயர் கொடுத்தார். இலங்கேசுவரனுடைய அமைச்சரவை கூடும்போது அமைச் சர்களின் தகுதிபற்றிக் கூறவில்லை. அமைச்சரவை கூடும் சூழ்நிலைபற்றி மட்டுமே வருணிக்கின்றார்.

இராவணனுடைய அமைச்சரவை ஒரே விஷயத்தைப் பற்றி ஆலோசிக்கத்தான் இராவணனால் கூட்டப்படுகிறது. அது, "படையெடுத்து வந்திருக்கும் இராமனை எப்படி முறியடிப்பது?" என்பது பற்றித்தான். இராவணன், சீதையைக் கவர்ந்து வர நினைத்தானே, அப்போது அமைச்சர வையைக் கூட்டி, தான் நிகழ்த்தப்போகும் செயலுக்கு அனுமதி கோரவில்லை. தன் தங்கையான சூர்ப்பனகை, 'சீதையைக் கவர்ந்து வா' என்று சொன்ன அளவிலேயே, அவன் அதனை நிறைவேற்றினான்.

'சீதையைக் கவர்ந்து வந்த பிறகேனும் அமைச்சர் அவையைக் கூட்டி, அதற்குத் தகவல் தந்தானா?' என்றால், அதுவுமில்லை. இப்போது அவன் அமைச்சரவையைக் கூட்டி யிருப்பது, ஏற்கனவே தான் கவர்ந்து வந்த சீதையை இராமன் மீட்டுக் கொண்டு போவதைத் தடுப்பதற்கு ஆலோசனை கேட்கத்தான்! சீதையை விட்டுவிடுவதற்கு ஆலோசனை கேட்க அல்ல. இவ்வளவு எச்சரிக்கையாக அவன் அமைச்சர வையைக் கூட்டியும், அதிலே அவனுக்கு எதிர்ப்பு ஏற்பட்டு

விடுகிறது. எதிர்ப்பவர் யாரோ அல்ல: உடன் பிறந்தானுன வீடணனே.

இராமாயணத்திலே, இராவணன் மூத்த தம்பியான கும்பகருணனும் இளைய தம்பியான வீடணனும் அநீதியை வெறுப்பவர்கள். அநீதி செய்பவன், தன் அரசனுகவே—அண்ணனுகவே இருப்பினும், அவனை எதிர்க்க அஞ்சாதவர்கள். "தலைமகன் வெகுண்ட போதும் உண்மை விடாது நின்று உரைக்கும் வீரர்" என்று கோசல நாட்டு அமைச்சர் அனைவரையும் பற்றிக் கம்பர் கூறியது, இலங்கை அமைச்சர்களிலே கும்பகருணனுக்கும் வீடணனுக்கும் பொருந்தும். ஆனுல், ஒரு விஷயத்திலே கும்பகருணனுக்கும் வீடணனுக்கு மிடையில் வேறுபாடு காட்டுகிருர்.

கும்பகருணன், "பிறன் மனைவியைக் கவர்ந்தது தவறு" என்பதை உணர்கிருன். உணர்ந்த நிமிடத்திலேயே, அதனைத் தன் அண்ணனிடம்—அரசனிடம் உரைக்கிருன். சீதையை இராமனிடம் ஒப்படைத்துப் போரைத் தவிர்க்குமாறு ஆலோசனை கூறுகிருன். தன் ஆலோசனை எடுபடாதபோது, அண்ணன் சார்பிலேயே—அரசன் கட்சியிலேயே நின்று இராமனை எதிர்த்துப் போர் செய்து மாளுகிருன்.

வீடணன் நிலை

வீடணனின் நிலை இதிலிருந்து வேறுபட்டதாகும். வேறுபட்டது மட்டுமல்ல; முரண்பட்டதுமாகும்.

வானரப் படைகளுடன் இராமன் இலங்கையின் எல்லையை அணுகுவதற்கு முன்பே இராவணன் சீதையைக் கவர்ந்து வந்தது வீடணனுக்குத் தெரியும். அவன் மகள் திரிசடையைத்தானே இராவணன் சீதைக்குக் காவல் போடுகிருன்! அப்படித் தெரிந்திருந்தும், ஆரம்பத்திலேயே அதனை எதிர்த்து அண்ணனுக்கு ஆலோசனை கூறவில்லை வீடணன்.

பின்னர், இலங்கையைஅழிக்க அனுமன் முற்பட்டபோது, அவன், நாகாஸ்திரத்தால் கட்டப்பட்டு, இராவணன் அவைக்குக் கொண்டு வரப்படுகிறான் இந்திரசித்தனால். அப்போது, அனுமனைக் கொல்லுமாறு ஆணையிடுகிறான் இராவணன். அந்த நேரத்தில், வீடணன் தலையிட்டு, "அனுமன் தூது வந்தவன்; தூதனைக் கொல்வது அரசு நெறி யாகாது. அத்துடன், இவனை உயிரோடு அனுப்பினால் நமது ஆற்றலை இராமனுக்கு உரைப்பான்; அதைக் கேட்டு நம் மேல் போருக்கு வர இராமன் அஞ்சுவான்" என்கிறான்.

சீதையைக் கவர்ந்து வந்தது தவறு என்று இராவண னுக்கு ஆலோசனை சொல்லுவதற்கு அரிய வாய்ப்பு கிடைத்தும், அதைச் சொல்லத் தவறி விட்டான் வீடணன். அதற்கு மாறாக, சீதையைக் கவர்ந்து வந்த அண்ணன் செய லுக்கு உடன்பாடு காட்டுபவன் போலப் பேசுகிறான்.

இராமன் வானரப் படையுடன் போருக்கு வந்து, இலங் கையின் எல்லையிலே முகாம் செய்திருப்பதை அறிந்த பின் கூடும் அமைச்சரவையிலேதான் சீதையை விட்டுவிடுமாறு இராவணனுக்கு வீடணன் முதன் முதலாக ஆலோசனை கூறு கின்றான். ஆம்; இதனால், தன்னைவிட கும்பகருணன் நியாய வான் என்பதைக் காட்டி விடுகிறான். இந்த ஒரு குறைபாடு காரணமாக, வீடணனின் அரசியல் ஒழுக்கத்தை விவாதத் திற்குரியதாக்கி விட்டார் கம்பர்.

கம்பனிடம் நான் கற்ற அரசியலிலே, வீடணனின் அற வழிப்பட்ட அரசியலை நான் மதிக்கிறேனென்றாலும், சகோதரத் தன்மைக்கு—தேசத்திற்கு—தேசாதிபதியான தன் மன்னனுக்குத் துரோகஞ் செய்யாத அரசியல் ஒழுக்கமே என்னை அதிகமாகக் கவர்கின்றது. கும்பகருணன், "தம்பியை இழந்துமண்மேல் கிடப்பனோ தமயன்?" என்றும், "ஒருத்தரின் முன்னஞ் சாதல் உண்டவர்க்கு உரியதம்மா" என்றும் போர்க் களத்தில் வீடணனுடன் பேசுவது, இன்றைய கட்சி மாறும் அரசியல் வாதிகளுக்குச் சிறந்த பாடமாகும்.

இதுவரை நான் கூறியவை மட்டுமின்றி, இன்னும் எத்தனையோ வகையான அரசியல் நெறிகளை, நியதிகளை நாம் கம்பனிடமிருந்து கற்க முடிகிறது.

நான் கம்ப ராமாயணத்தைப் படிப்பது, அந்த மகாகவி யின் புலமையைச் சுவைப்பதற்காக மட்டுமல்ல; முடிந்த வரை அவன் போதிக்கும் நெறிகளை வாழ்க்கையில் பின்பற்று வதற்காகவுந்தான்! அந்த வகையில் கம்பனிடம் யான்கற்றது, அறத்தோடியைந்த அரசியல்!

சீதை பாடிய ஒப்பாரி !*

கம்பர் மகாகவி என்பதற்குச் சான்முக அவர் பாடிய பன்னீராயிரம் பாடல்களிலே ஒரு பாடலை மட்டுமே எடுத்துக் கொண்டு பத்து நிமிட அளவிலே அந்தப் பாவின் நயத்தை விளக்க வேண்டுமென்பது புதுவை கம்பர்கழகத்தின் கட்டளை. எனக்கு முன் பேசியவர்களிலே இருவர், கம்பரின் புலமைக்கு அவர் காப்பியத்தில் உள்ள ஒப்பாரிப் பாக்களின் நயத்தைக் காட்டினர். நானும் ஒப்பாரிப் பாடல் பற்றித்தான் பேசப் போகிறேன். எவள் அழுதால் மானிட சமுதாயமே இரக்கம் காட்டுமோ—ஏங்கி அழுமோ, அப்படிப்பட்டவளான சீதை அழுததைப் பற்றித்தான் நான் இங்கு பேசப்போகிறேன்.

அயோத்தியை விட்டுப் பிரிந்த சீதை கங்கைக்கரையிலே கணவன் இராமனேடும், மைத்துனன் இலட்சுமணனேடும் தங்கியிருக்கிருள். அண்ணன் இராமனை அயோத்திக்கு அழைத்துச் செல்வான் வேண்டி அங்கு வந்த பரதன் மூலமாக தயரதனின் மரணச் செய்தியை அறிகிருள் சீதை. அந்த நாளிலே மாமனர் இறந்துவிட்டால் மருமகள் அழுகின்ற வழக்கம் இருந்ததுபோலும்! அதனல், சீதை வாய்விட்டு அரற்றி, வேதனைப்பட்டு விம்மி அழுகின்ருள். இதுதான் சீதையின் முதல் அழுகை. ஒருவன் நடத்தும் முதற்போரை 'கன்னிப்போர்!' என்பார்கள். அதுபோல,இதுதான் சீதையின் 'கன்னி அழுகை'. இதற்கு முன்பு அவள் அழுததே இல்லை.

அழுதிருப்பாள், இராமன் சிவதனுசை வளைத்து மண மாலை சூட்டத் தவறியிருந்தால்! வில் வளைப்பதற்கு முன்னதாகவே இராமனும் சீதையும் பரஸ்பரம் காதலித்துவிட்டார்களாதலால், இராமன் சிவதனுசைவளைக்கத் தவறியிருந்தால்.

---

*10—5—70ல் புதுவை கம்பர் விழாவில் பேசியது.

மணமே நடக்காமல் வாழ்நாள் முழுவதும் அழுதிருப்பாள். ஒருகால், தான் காதலித்த இராமனன்றி, வேருெருவன் வளைத்திருந்தால், அழுதழுது ஆவியைத் துறந்திருப்பாள். அப்படி அழாமல் செய்துவிட்டது இராமனின் தோளாற்றல்!

இரண்டாவதாக, கைகேயின் ஆணைப்படி வனஞ் செல்லப் புறப்பட்ட இராமன், சீதை விரும்பியபடி அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்ல மறுத்திருப்பானுனல், அவன் திரும்பவும் அயோத்தி புகுமளவும், பதினன்கு ஆண்டு காலம் அழுதிருப்பாள் சீதை. இராமனின் அன்புள்ளம் அந்த அழுகையையும் தவிர்த்துவிட்டது.

இப்படி, அழுதே அறியாத—அழுவதற்கான வாய்ப்பு களைத் தவறிவிட்ட சீதையானவள், மாமனுருக்காகத்தான் முதன் முதலாக அழுதாள்! அது அவளுடைய முதல் அழுகையாயினும், அதுவே இறுதி அழுகையாகிவிடவில்லை.

'ஒத்திகை!'

மாய மானுக வந்த மாரீசன் ''இலக்குமணு'' எனக் குரல் கொடுத்த நேரந் தொடங்கி, இராவணன் சிறைவைத்த அசோகவனத்தில் கழித்த பத்துமாத காலமும் அழுகையையே ஆபரணமாகக் கொண்டிருந்தாளல்லவா! அந்தப் பெரும் அழுகைக்கு ஒத்திகையாக அமைந்தது கங்கைக் கரையிலே மாமனுரான தயரதனுக்காக சீதை அழுதது.

தந்தையின் மரணச் செய்தியை பரதன் கூறக் கேட்டதும், பல பாக்கள் பாடி இராமன் அழுவதனை நமக்குக் காட்சிப்படுத்திக் காட்டுகின்ருர் கம்பர். அதுபோல, தன் மாமனுருக்காக சீதை அழுததை அந்த மகாகவி காட்சிப் படுத்தவில்லை. அவள் அழுதாள் என்ற செய்தியை மட்டுமே நமக்குத் தருகின்ருர். அந்தச் செய்தியைக் கூறும் செய்யுளின் பின் இரண்டடிகள் வருமாறு :

மண்ணெனும் செவிலிமேல்
வைத்த கையினள்
பண்ணெனும் கிளவியால்
பன்னி ஏங்கினள்

ஏனோ சீதை அழுததை கம்பன் காட்சிப்படுத்தவில்லை. ஆம்; நாடகக்காரர்கள்கூட ஒத்திகையை மக்கள் காண நடத்துவதில்லை யல்லவா? இங்கே சீதை அழுவதும் பின்னால் அசோக வனத்தில் நடக்கவிருக்கும் அவல நாடகத்துக்கு ஒத்திகையாதலால் அதனைக் காட்சிப்படுத்தவில்லை போலும்!

வடக்கேயுள்ளவர்களும் இழவு நேரங்களிலே அழுகின்றார்கள். ஆனால், இசைபாடி அழும் வழக்கம் அங்கில்லை. சீதை வடபுலத்தில் பிறந்தவள்தான் என்றாலும், கம்பனுடைய காப்பியத்தின் மூலம் தமிழகத்தில் புகழ் மணக்க வாழ்வு பெறப் போகிறவள். ஆதலால், அவள் இசைபாடி அழுமாறு செய்து விடுகிறார் கம்பர்.

இழவுச் செய்தி கிடைத்தால் எந்த ஒரு பெண்ணும் தனித்து நின்று அழமாட்டாள். இன்னொரு பெண்ணைத் தழுவி அழுவதிலேதான் நாட்டங்கொள்வாள். ஆனால், கங்கைக் கரையிலே சீதை கட்டி அழுவதற்கு இன்னொரு பெண் இல்லை. அவளுடைய மாமிமார் மூவரும் பரதனோடு வந்திருக்கிறார்கள். ஆயினும், இன்னமும் படகை விட்டு இறங்கி வந்து சீதையை அவர்கள் சந்திக்கவில்லை. ஆதலால், சீதை பெண் துணையின்றி இருக்கிறாள்.

நிலமகளைத் தழுவினள்!

இந்த சங்கடத்தைத் தவிர்க்க நிலமகளைத் தழுவி அழும்படிச் சீதைக்கு ஆணையிடுகிறார் கம்பர். சீதைக்கு நேர்ந்த துக்கத்திலே பங்குகொள்ள மண்மகளுக்கு உரிமையுண்டா? அவளுக்கும் சீதைக்கும் என்ன உறவு? :என்ற வினாக்கள் எழும் அல்லவா! இதற்கு விடையளிப்பதுபோல, "மண்மகளானவள்

சீதையை வளர்த்த செவிலித் தாய்'' என்ற செய்தியைச் சொல்லுகின்றார் கம்பர்.

சீதை பூமியிலிருந்து கண்டெடுக்கப்பட்டவள் என்றொரு கதை உண்டு. அதனை நினைவில் வைத்தே சீதையை வளர்த்த செவிலித் தாயாக நிலமகளை வருணிக்கின்றார் கம்பர். இதனை, ''மண்ணெனும் செவிலி'' என்னும் சொற்றொடரால் நமக்கு உணர்த்தி வைக்கின்றார்.

சீதையானவள் மண்மகளைத் தழுவிய காட்சியை தான் கண்டதுபோல. படிக்கின்ற நமக்கும் காட்ட வேண்டி ஓவியம் வரைகின்றார். காவியக் கலைஞரான கம்பர் இங்கே ஓவியக் கலைஞராகவும் மாறுகின்றார். 'மண்ணெனும் செவிலி மேல் வைத்த கையினள்' என்ற சொற்றொடரிலே நான் சொன்ன பொருளனைத்தும் புதைந்து கிடக்கின்றது. சீதையும் மண் மகளும் பரஸ்பரம் தழுவி அழும் ஓவியத்தையும் காண் கின்றோம்.

பொருளற்ற புலம்பல்!

சீதையானவள் தமிழ்நாட்டுப் பெண்களைப் போலப் பாடியழுகிறாளேயன்றி. பாட்டிலே இலக்கண அமைதியில்லை. எதுகை இடராமல். மோனை முறியாமல், சீர் சிதறாமல் இலக் கணக் கட்டுக்கோப்புடன் அவள் பாடும் கவிதை அமைய வில்லை. பாட்டின் பொருளும் அப்படித்தான். சொன்ன தையே திரும்பத் திரும்பச் சொல்லி அழுகின்றாள். இப்பொழுதுதானே ஒப்பாரிக் கலை வளரும் தென்திசை நோக்கி யாத்திரை தொடங்கினாள். அதற்குள் பொருள் செறிந்த பாட்டைப் பயின்றுவிட முடியுமா? முடியவில்லை என்பதை உணர்த்துவான் வேண்டி, ''பண் எனும் கிளவியால் பன்னி ஏங்குவாள்'' என்பது கம்பர் தரும் வாசகம். 'பன்னி' என்ற சொல், திரும்பத் திரும்பச் சொல்லுவதனைக் குறிப்ப தாகும்.

எனக்கு முன்னே பேசிய புலவர் ஒருவர் போர்க்களத் திலே இந்திரஜித்துக்காகவும்,இராவணனுக்காகவும்மண்டோ

தரி அம்மையார் இரங்கி அழுவதைக் கூறினர். அது மண்டோ தரியின் முதல் அழுகையன்று; இறுதி அழுகை! நான் இங்கே குறிப்பிடும் சீதையின் அழுகை முதல் அழுகை! இனி, பின்னல் ஓராண்டு காலம் அழவிருப்பதற்கு முன்னோடி அழுகை! சீதையை அழவைத்து தான் மட்டும் ஒத்திகை பார்க்கிருர் கம்பர். ஒத்திகையிலே அவள் முழுத் தேர்வு பெறவில்லை. அசோக வனக் காட்சியிலே ஒப்பாரிக் கலையில் தேர்ச்சி யுடைய சீதையைக் காண்போம்.

தயரதன் மறைந்த செய்தி கேட்டபோதுதான் சீதை முதன் முதலாக அழுதாள் என்பதனை,

> " மன்னவன் துஞ்சினன்
> என்ற மாற்றத்தால்
> அன்னமும் துயர்க்கடல்
> அடிவைத் தாளரோ!"

என்ற வரிகளில் கம்பர் உணர்த்துகின்ருர். இதுகாறும் அழுதறியாமல் இன்பக் கடலில் நீந்தி மகிழ்ந்தவள், இப்போதுதான் முதன்முதலாக அழுதாக வேண்டிய அளவு துயரக் கடலில் அடிவைத்தாளாம்!

இரண்டே வரிகள்!

நான்கு வரிகள் உள்ள பாடலைத்தான் பேச எடுத்துக் கொண்டேன். ஆயினும், கம்பருடைய பெரும் புலமையை இரண்டு வரிகளிலேயே காட்டி விட முடியுமென்று நம்பி, பின்னிரண்டு வரிகளைப்பற்றி மட்டுமே பேசினேன். ஒரு வரி யின் நயத்தைக் கூறியே கம்பர் உலக மகாகவி என்பதை உணர்த்தலாம். ஆனல், அவ்வளவு புலமை எனக்கு இல்லை யல்லவா!

பா நலம் கூறப் பத்து நிமிட நேரம் தந்தனர் கம்பர் கழகத்தார். அவ்வளவு நேரங்கூடத் தேவையில்லையாதலால், அதற்கு முன்னுடியே முடித்துவிட்டு கம்பரின் கவி நயத்தைப் பெருமைப்படுத்த விரும்புகிறேன்.

அயோத்தி நகரில் தேர்தல் சூழ்ச்சி !

'அரசியல்' என்பது முள்செறிந்த ரோஜா மலர் போன்றது. இன்று மட்டுமல்ல; அது தோன்றிய நாள் தொட்டே! ஆளுவோர் எவ்வளவுதான் நல்லவராயினும் தீயோர் அவர்களைச் சூழ்ந்து விடுகின்றனர். ஆட்சி பீடத்தில் நிலைத்திருக்கும் ஆசைகாரணமாக,ஆளுவோர் அத்தீயோர்க்கு அடிமைப்பட்டு விடுகின்றனர்.

இன்றைய அரசியலில் சாதாரண மனிதர்களே சக்தி பெற்றவர்களாக விளங்குகின்றனர், வயது வந்தோருக்கு வாக்குரிமை கிடைத்துவிட்ட காரணத்தால்! ஆட்சித் தலைவரை மிரட்டத் தெரிந்துவிட்டால் போதும்! அவன் தான் சக்திமான்.

எங்கெங்கும் வில்லன்கள்!

மறைநா ஓசை அல்லது மணி நாஓசை கேட்டறியாத பாண்டிவேந்தன் நெடுஞ்செழியன் அரண்மனையிலே பொய் சொல்லும் பொற்கொல்லன் அடைக்கலம் புகுந்திருந்தான். அந்த ஒரு பொய்யனுல், கோவலன் உயிரிழந்தான்; கண்ணகி வாழ்விழந்தாள்; மாதரி தீக்குளித்து மாண்டாள்; கவுந்தியடி கள் உண்ணுநோன்பிருந்து உயிர் நீத்தார்; கண்ணகி—கோவலன் தாயர் உயிர்த் தியாகம் புரிந்தனர்; தந்தையரோ துறவு கெண்டனர்.

இவையன்றி, பொய் சொல்லும் பொற்கொல்லனுக்கு அடைக்கலம் தந்த காரணத்தால் மதுரை மன்னன் உயிர் துறந்தான். அரசியும் ஆவிநீத்தாள். அணி மதுரையே தீக்கிரையானது. இவ்வளவும் அரசியலை தன்னலத்துக்குப் பயன்படுத்த நினைத்த ஒரு பொற்கொல்லனுல்!

மகாபாரதத்தில் சர்வ கொடுமைகளின் பிறப்பிடமும் இருப்பிடமுமான சகுனி என்பான் அரண்மனையிலே தான் புகலிடம் பெற்ருன். துரியோதனுதியரின் ஆலோசகனுகவும் இருந்தான். அந்த மாபாவியால், பங்காளிகளான பாண்டவரும் கௌரவரும் பகைவர்களாயினர் பாரதப் பெரும் போர் மூண்டு பிற்கால பாரதத்துக்குத் தவருன முறையில் வழி காட்டிவிட்டது.

இராமாயணத்திலே அரசியல் சூழ்ச்சி புரிந்த வளைந்த முதுகுடைய கூனி அரண்மனையில்தான் அடைக்கலம் புகுந்திருந்தாள். அந்தக் கொடுமனக் கூனி செய்த கலகத்தால், கைகேயியின் தூய சிந்தையும் திரிந்தது! இராமன் அரசிழந்தான், தயரதன் ஆவி துறந்தான்; பரதன் துயருழந்தான். இத்தனை கேடும் அரண்மனையின் அந்தப்புரத்தில் அடைக்கலம் புகுந்திருந்த கூனி ஒருத்தியால்! ஆம்; காப்பிய உலகம் காட்டும் அரசியல் கயவர்கள் மதுரை பொற்கொல்லனும், அஸ்தினுபுரத்துச் சகுனியும், அயோத்தி நகரத்துக் கூனியும்! ஆனல் அன்றைய பாண்டிய நாட்டில் அரசியல் கயவன் ஒரு பொற்கொல்லன்தான். அஸ்தினுபுரத்திலும் ஒரு சகுனி தான். அயோத்தி நகரிலும் ஒரு கூனிதான். இன்ருே, பொய்யுரைக்கும் பொற்கொல்லர்களும் சூதாடும் சகுனிகளும் கோளுரைக்கும் கூனிகளும் பெருகி விட்டனர். இது இருபதாம் நூற்ருண்டுக்குள்ள "பெருமை" போலும்!

ஆட்சி பீடத்தில் உள்ளவர்கள் நல்லவர்களாக இருந்தால் மட்டும் போதாது. வல்லவர்களாகவும் இருக்க வேண்டும். பற்றுதல்—பாசம் ஆகியவற்ருல், ஆளுவோர் பலவினர்களானுல், அதுவே அரண்மனையிலே அடைக்கலம் புகுந்துள்ள தீயவர்களின் பலமாகிவிடுகிறது.

ஆளுவோரின் பலவீனம்

பாண்டிவேந்தன் நெடுஞ்செழியன் தன் அவையிலே நடனமாடிய மங்கையரின் ஆடல்—பாடல்—அழகு ஆகிய

வற்றில் மயங்கி, தன்னை மறந்தான். அதன் விளைவாக, ஆடலரசி அவன் மீது கோபங்கொண்டு அந்தப்புரம் சென்றாள். அவளுடைய ஊடல் தீர்க்கக் காமபரவசனாகி அந்தப்புரம் நோக்கி மன்னன் சென்று கொண்டிருந்த நேரத்தில் அரண்மனைப் பொற்கொல்லன் சேட்டை புரிந்தான்.

மகாபாரதத்தில் வரும் துரியோதனாதியர், தம்முடைய பங்காளிகளான பாண்டவர்களின் புகழ்கண்டு பொறாமையுற்றனர். அவர்களுடைய பெ ருள்களையும் கவர்ந்து கொள்ள விரும்பினர். இந்தப் பொறாமையும் பொருளாசையும் தீயோனான சகுனியின் பகடைக்காய்களாகி விட்டன.

இராமாயணத்திலும் இதே நிலைதான். இளைய மனைவியான கைகேயியிடம் எல்லையற்ற மோகம் கொண்டிருந்தான் கோசலநாட்டு மன்னன் தயரதன். அந்த மோகத்தை மூலதனமாக்கி அரசியல் வாணிபம் நடத்தினாள் கூனியிடம் உபதேசம் பெற்ற கைகேயி. சிலப்பதிகாரம், மாபாரதம்' இராமாயணம் ஆகிய காப்பியங்கள் காட்டும் செய்திகளால் இந்த நூற்றாண்டு அரசியல்வாதிகளுக்கு ஒரு பாடம் கிடைக்கின்றது. அது அரசியல் ஆதிக்கம் பெறும் தனி நபர்கள் தங்கள் ஐம்புலன்கள் மீதும் ஆதிக்கம் பெறும் அளவுக்கு ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டுமென்பது. இந்த ஆற்றல் பெறாதவர்கள் தங்களை நாசப்படுத்திக் கொள்வதோடு, தாங்கள் ஆதிக்கம் பெற்றுள்ள நாட்டையும், நாட்டு மக்களையும்கூட நாசப்படுத்திவிடுகிறார்கள்.

கோசல நாட்டு மன்னன் தயரதனிடம் இன்னொரு பலவீனத்தையும் நாம் காண்கிறோம். அது தனக்குப் பிறகு கோசல நாட்டு அரியாசனத்துக்குப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதிலே அவன் செய்ததாகப் புலவர்கள் கூறும் ஒரு சூழ்ச்சியாகும். தயரதன், மூன்றாவது மனைவியாக கைகேயியை மணக்க விரும்பியபோது, அவளுக்குப் பிறக்கும் மகனுக்கே அரசுரிமை தருவதாக கேகய நாட்டின் மன்னனுக்கு உறுதிமொழி கொடுத்தான். இதனை,

"கெடுத்தொழிந்தனை உனக்கரும் புதல்வனை, கிளர்நீர்
உடுத்த பாரகம் உடையவன் ஒருமகற்கு எனவே
கொடுத்த பேரரசு, அவன் குலக்கோமைந்தர்தமக்கும்
அடுத்த தம்பிக்கும ஆம்; பிறர்க்கு ஆகுமோ?''......

என, கூனி என்று அழைக்கப்பட்ட மந்தரையானவள் கைகேயிக்குப் போதித்த மந்திரத்தால் அறிகிறோம். ஆம்; 'நின் ஒரு மகற்கு எனவே கொடுத்த பேரரசு' என்னும் வாசகத்தால், முன்னர் கைகேயியின் தந்தை கேகய மன்னனுக்குத் தயரதன் கொடுத்த உறுதிமொழியை நினைப்பூட்டு கின்றாள் மந்தரை.

தேர்தல் சூழ்ச்சி!

அயோத்தியின் அரியாசனத்துக்குத் தயரதனின் வாரிசைத் தேர்ந்தெடுப்பதிலே நடந்த சூழ்ச்சி மிகவும் சுவையான தாகும். ஆம்; தேர்தல் சூழ்ச்சி, மகா விஷ்ணுவே மனித வடிவம் தாங்கி மண்மேல் நடந்த அந்தக் காலத்திலும் உண்டுபோலும்! இராமன் முடிசூட்டிக் கொள்வதற்கு எதிராக மந்தரையும் கைகேயியும் கூட்டாக நடத்திய சதி அரசியல் சூழ்ச்சிதான். ஆனல், அது அசல் சூழ்ச்சியன்று; ஏற்கெனவே தயரதன் புரிந்த சூழ்ச்சிக்கு எதிர் சூழ்ச்சியாம்!

அரச பதவியிலிருந்து தான் விலகிக் கொள்வதை அரசவையிலே திடீரென அறிவிக்கிறான் கோசல மன்னன் தயரதன். இதுபற்றித் தனியாக அமைச்சர்களிடம்கூட முன் கூட்டி அவன் ஆலோசிக்கவில்லை. மந்திரிகளும், சிற்றரசர் களும், சான்றோர்களும் குழுமியிருந்த பேரவையில்தான் தனது முடிவை முதன்முதலாக அறிவிக்கிறான் தயரதன். அப்போதும் தன் கருத்தை ஒரு ஆலோசனையாகக் கூறி, முடிவெடுக்கும் பொறுப்பை பேரவைக்கு விடாமல், தன்னுடைய உறுதியான முடிவு என்றே கூறிவிடுகிறான்.

"உன்னியும் அரும்பெறல் உறுதி ஒன்று உளது;
என் உணர்வு அனைய நீர் இனிது கேட்டிரால்!'

என்பது, தன் பேரவையில் அரசன் வெளியிட்ட அறிக்கை. இதில், "உறுதி ஒன்று உளது" என்னும் வாசகத்தில் தான் அறிவிப்பது தன்னுடைய இறுதி முடிவு என்கின்றான் தயரதன்.

" கன்னியர்க்கு அமைவரும் கற்பின் மாநிலம்
தன்னை இத்தகைய தாய்த் தருமம் கைதர,
மன்னுயிர்க்கு உறுவதே செய்து வைகினேன்'
என் உயிர்க்கு உறுவதும் செய்ய எண்ணினேன்"

என்பது தயரதன் செய்த பிரகடனம். மன்னுயிர் காக்கும் பொறுப்பிலிருந்து விலகி, தன்னுயிர்க்கு நலம் தேட முடிவு செய்து விட்டதாக அறிவித்தவன், அத்துடன் நிற்கவில்லை. தனக்கு அடுத்தபடி அரியாசனத்தில் அமரக்கூடிய இராமன் பெயரையும் அவனே அறிவித்துவிடுகிறான்.

" ஆதலால், இராமனுக்கு அரசை நல்கி, இப்
பேதமைத் தாய்வரும் பிறப்பை நீக்கும்
மாதவம் தொடங்குவான் வனத்தை நண்ணுவேன்
யாது நும் கருத்து"

என்று தனது முடிவை அறிவித்துவிட்டு, பேரவையின் அபிப்பிராயத்தையும் சம்பிரதாயப்படி கேட்கலானான். ஒரு அரசன் பதவி துறந்தால், அவனுடைய ஆண் மக்களிலே மூத்தவன் அரியாசனத்தில் அமருவது அந்நாளைய அரசியல் நெறியாகும்.

பரதனைக்காணோம்!

இராமனிடம் கொண்ட அன்பாலும் பேரவையினர் தயரதன் அறிவித்த முடிவை ஏற்றுக் கொள்கின்றனர். இதற்குமேல் கணமும் தாமதியாமல் முடிசூட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்யுமாறு பிரதமர் சுமந்திரருக்கு ஆணையிடுகின்றான் தயரதன். மறுநாளே மணிமுடி இராமன் சிரசில் அணிவிக்கப்படுமென அயோத்தி வாழ் மக்களுக்கு அறிவிக்கப் படுகிறது.

கோசல நாட்டின் அரசாங்க முத்திரை பெற்று முடிசூட்டுவிழா பற்றிய செய்தி அனைவருக்கும் அறிவிக்கப் படுகிறதென்றாலும், தயரதன் முடிவிலும் சூழ்ச்சி கலந்து விடுகிறது. தயரதனுடைய மூத்த மகன் இராமனுக்கு முடி சூட்டு விழா என்றால், அந்த விழா அரங்கிலேயே இராமனின் நேர் இளவலான பரதனுக்கு இளவரசுப் பட்டம் வழங்கி யாக வேண்டும். இந்த ஒரு காரணத்திற்காகவேனும் இராமன் முடிசூட்டு விழாவிலே பரதன் கலந்து கொள்ள வேண்டும். பரதனுடைய பாட்டன் கேகய மன்னனும் விழாவுக்கு வர வேண்டியது நியதி. ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை.

இராமனுக்கு முடிசூட்டு விழா நடப்பதற்கு முடிவெடுக்கு முன்னரே, இள்வரசுப் பட்டத்துக்குரிய பரதன் அவனுடைய தோழனும் தம்பியுமான சத்துருக்கனோடு கேகய நாட்டுக்கு அனுப்பப்பட்டு விடுகிறான். அவனுக்கு அழைப்பு போய், அவன் அயோத்திக்கு வந்து விழாவில் கலந்து கொள்வதற்கு அவகாசமில்லாத அவசரத்தில் பரதனுக்கு அழைப்பு அனுப் பாமலே இராமன் முடிசூட்டிக் கொள்வதற்கான நாளும் வந்துவிட்டது.

சூழ்ச்சியும் எதிர் சூழ்ச்சியும்

பரதன் அயோத்தியில் இருந்தால் முன்னர் தான் கேகய மன்னனுக்குக் கொடுத்த உறுதிமொழிப்படி அவனுக்கு அரசுரிமை தர வேண்டி ஏற்படும் என்று அஞ்சியே முன்கூட்டி அயல் நாட்டுக்குப் பரதனை விரட்டிவிட்டு, அவசர அவசர மாக இராமனுக்கு முடிசூட்ட முனைந்தான் தயரதன் என்பது இந்நாளைய புலவர்களிலே ஒரு சாராரின் கருத்து. ஆம்; தயரதனும் தேர்தல் சூழ்ச்சியிலே ஈடுபட்டான். அதற்கு எதிர் சூழ்ச்சியைத் தோற்றுவித்தாள் கூனி. இவை, எதிரும் புதிருமாக அயோத்தியில் நடைபெற்ற சூழ்ச்சிகள்.

வியாசர், வான்மீகி, கம்பர் ஆகிய மகாகவிகள் எவ்வளவு சுவையாக வருணித்திருப்பினும், அஸ்தினபுரத்து சகுனியும் அயோத்தி நகரத்துக் கூனியும் செய்த அரசியல் சூழ்ச்சிகள் இந்த இருபதாம் நூற்றாண்டுச் சகுனிகளும் கூனிகளும் செய்யும் சூழ்ச்சிகளுக்கு இணையாக முடியுமா? இது விஞ்ஞான உலகம். அதனால், தேர்தல் சூழ்ச்சிகளும் 'விஞ்ஞான' ரீதியாக நடக்கின்றன போலும்!

['செங்கோல்', 4 – 12—66]

மனச்சாட்சி அரசியல்

பெருங்காப்பியங்களைப் படைத்த மகா கவிகள் தனி மனிதர்களுடைய மனோபாவங்களிலுள்ள வேற்றுமைகளை நன்கறிந்த மனோதத்துவ நிபுணர்களாவர். மனோதத்துவ சாத்திரம் இப்போது தனிப்பாடமாகக் கல்லூரிகளில் போதிக்கப்படுகின்றது. அதற்கென அறிஞர்கள் பல நூல்களை இயற்றி வருகின்றனர். பண்டை நாளில், தமிழிலும் சரி; வடமொழியிலும் சரி; மனோதத்துவத்தைப் போதிக்கும் நூல்கள் தனியாக இயற்றப்படவில்லையென்று தெரிகிறது. ஆயினும், இராமாயணம், மகாபாரதம் போன்ற காப்பியங்களிலே, தாங்கள் படைத்த பாத்திரங்களைக் கொண்டு, மனோபாவங்களின் வேறுபாடுகளை கவிஞர்கள் நமக்கு விளக்கியுள்ளனர். அதிலே, இந்த விஞ்ஞான சகாப்தத்தில் வாழும் மனோதத்துவப் பேராசிரியர்களை யெல்லாம் வென்றுவிடக் கூடிய ஆற்றலை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

அமைச்சர்களிடையில் கருத்து வேற்றுமை

வடமொழியில் தோன்றிய ஆதி காவியமான இராமாயணத்திலே கும்பகருணன், வீடணன், இந்திரஜித்தன் ஆகிய மூவரையும் கொண்டு மூவேறு மனோபாவங்களை வான்மீகி வெளிப்படுத்தியிருக்கிறார். தமிழிலே ராமாயணம் படைத்த கம்பரும் இந்த மூவேறு பாத்திரங்களின் மன வேறுபாடுகளை நன்கு காட்டியுள்ளார்.

இராவணன் அயலான் ஒருவனுடைய மனைவியை வஞ்சனையால் கவர்ந்து வந்த வில்லன் பாத்திரமாக இராமாயணத்தில் படைக்கப் பெற்றிருக்கிறான். ஆனால், இந்நாளைய நாடகங்களிலும் திரைப்படங்களிலும் வரும் வில்லன்களைப்

போன்று குணக்கேடுகளை மட்டுமே கொண்டவனல்லன். அவன் சிறந்த சிவபக்தன்; இசையிலே மேதை; ஐம்புலன்களை யும் ஒடுக்கித் தவஞ்செய்த ஞானி; இவ்வளவு நல்ல குணங் களைப் பெற்றிருந்தும், மிகுதியான ஆற்றலைப் பெற்றிருந்த காரணத்தால். ஆணவக்காரனுகவும் இருந்தான். காமுகனுக வும் விளங்கினன் அந்த ஆணவமும் காமமுந்தான் சீதையைக் கவர்ந்து வரும்படி அவனைத் தூண்டி விட்டன.

பொதுவாக, இந்நாளைய கதைகளில் வரும் வில்லன் பாத்திரங்களி லிருந்து முற்றிலும் வேறுபட்டவனுவான் இராவணன். எல்லையற்ற ஆற்றல் படைத்திருந்தாலும் தனது அரண்மனையைச் சேர்ந்த அசோகவனத்தில் தன்னல் சிறை வைக்கப்பட்ட சீதையைப் பலாத்காரமாக அணுகுவ தற்கு அவன் முயன்றுன் இல்லை. இது ஒன்றே உலக மகாகவி கள் படைத்த வில்லன்களிலே இராவணன் நல்ல குணங்களும் படைத்த ஒரு நவீன வில்லன் என்பதை விளக்கும்.

கும்பகருணனும் வீடணனும் இராவணனுக்கு உடன் பிறந்த தம்பியர் ஆவர். அத்துடன், அவ்விருவரும் இராவண னுக்கு அமைச்சர்களாகவும் இருந்தனர். இந்திரஜித்தன் என்பான் இராவணனுடைய அருமை மகன். அவனும் அமைச்சரவையில் அங்கம் பெற்றிருந்தான்.

கும்பகர்ணன். வீடணன், இந்திரஜித்தன் ஆகிய மூவரை யும் குண வேறுபாடுகளுடைய பாத்திரங்களாகக் காட்டுகிருர் கம்பர். இந்த மூவருமே மூவேறு கட்டங்களில் தங்கள் மாமன்னனுன இராவணனிடம் கருத்து வேறுபாடு காட்டு கின்றனர். ஆம்; சீதையை விடுதலை செய்து இராமனிடம் கொண்டுபோய்ச் சேர்க்குமாறு அவர்கள் ஒருமனப்பட்டு ஆலோசனை கூறுகின்றனர். இவர்கள் ஆலோசனைப்படி நடக்க இராவணன் மறுத்தபோது இந்த மூவரும் முரண்பட்ட மூவேறு நிலைகளை மேற்கொள்கின்றனர்.

வீடணன், இராமனோடு சேர்ந்து, போரிலும் பங்கு கொண்டு. இராவணனுதியராகிய அரக்கர் குலமே அழிவதற்குத் துணைபுரிந்து விடுகிறான்.

கருத்து ஒன்று: முடிவு மூன்றுவிதம்!

கும்பகர்ணன், தன் ஆலோசனையை இராவணன் கேட்க மறுத்தபோது, அவனை வாயார வைகிறான். ஆயினும், உடன் பிறந்த பாசத்தால் கட்டுப்பட்டு தன் விருப்பத்திற்கு மாறாக போர்க்களம் புகுந்து உயிர் துறக்கிறான்.

இந்திரஜித்தனோ, போரின் நடுக்கட்டம் வரை தன் தந்தை சீதையைக் கவர்ந்து வந்ததிலுள்ள குற்றத்தை உணராதவனாகிறான். சீதையை விட்டுவிடுமாறு தன் சிற்றப்பனான வீடணன் இராவணனுக்கு ஆலோசனை கூறியபோது, அதனை எதிர்க்கிறான். "இராமனுடன் போர் செய்தே ஆக வேண்டும்" என்று வீரம் பேசுகிறான். தான் ஒருவனே போருக்குச் சென்று இராமனை வீழ்த்துவதாகக் கூறுகின்றான். ஆனால், போர் முடியவிருக்கும் கட்டத்திலே இந்திரஜித்தன் மனமாற்றம் அடைகிறான். போர்க்களத்திலிருந்து இலங்கைக் குத் திரும்பி, தன் தந்தையைச் சந்தித்து, சீதையை விடுவித்து அரக்கர் குலத்தில் எஞ்சியுள்ளவர்களையேனும் காப்பாற்று மாறு வேண்டுகிறான். அதற்கு இராவணன் இணங்காததால் திரும்பவும் போர்க்களம் சென்று உயிர் துறக்கிறான். கடைசி வரை தன் சிற்றப்பனான வீடணனைத் 'துரோகி' என்றே கருதினான் இந்திரஜித்தன். கும்பகருணனோ, வீடணன் மாற்றானுடன் சேர்ந்தது சரி என்றே கருதினான்.

மகாபாரதத்திலும் ஒரே அணியில் தரும நியாயம் காரணமாகக் கருத்து வேற்றுமை ஏற்படுவதைப் பார்க் கிறோம்.

விதுரனும் பலராமனும் தங்கள் தங்கள் தரப்பினரோடு சேர்ந்து போர்க்களம் புக முடியாதவர்களாயினர். இவர்கள் இருவருமே போருக்குப் பயந்தவர்களல்லர். சிறந்த

போர் வீரர்கள். ஆயினும், பலராமனும் விதுரனும் தரும நியாயந் தெரிந்தவர்கள். தருமம் வேறு; நியாயம் வேறு. 'என்னடா, இவன் தரும நியாயம் பேசுகிறுன்' என்று சொல்லக் கேட்கிறேும் அல்லவா: தருமமும் நியாயமும் ஒருவரிடத்திலிருக்குமாஞல், எந்த நேரத்திலும், எதிலும் அவரை ஆதரித்து நிற்பதில் தரும—நியாயம் பார்ப்பவர்களுக்குச் சங்கட மேற்படுவதில்லே. ஆனல், பெரும்பாலும் அப்படி இருப்பதில்லே. தருமம் இருப்பவரிடத்தில் நியாயம் இருப்பதில்லே; நியாயம் இருப்பவரிடத்தில் தருமம் இருப்பதில்லே. இது, உலக இயற்கை. இதனே வியாசர் படைத்த மகா பாரதப் பாத்திரங்களிடத்திலும் பார்க்கிறேும்.

தரும நியாயம்

பாண்டவர் தரப்பில் தருமம் இருந்தது. ஆனல், நியாயம் இல்லே என்று படுகிறது பலராமனுக்கு! அதனல், பாண்டவர் தரப்பில் போரில் ஈடுபட அவன் மனம் விரும்பவில்லே. பாரதப் போர் தொடங்கியதுமே பலராமன் தீர்த்த யாத்திரை புறப்பட்டு விடுகிறுன்!

விதுரன், பாண்டுவுக்கும் திருதராஷ்டிரனுக்கும் தம்பி. அதனல், பாண்டவருக்கும் துரியோதனதியருக்கும் சிறிய தந்தையாவான். ஆயினும், அவன் இளமை முதல் தன் அண்ணன் திருதராஷ்டிரனுடன் இருந்து அவன் அரண்மனேயில் உணவுண்டு வாழ்ந்தான். அதன் காரணமாக, விதுரன் பாரதப் போரில் துரியோதனதியர் சார்பில் இருக்கக் கடமைப்பட்டிருந்தான். ஆனல், துரியோதனதியர் பக்கத்தில் தருமம் இல்லேயென்பதனே விதுரன் தெள்ளத் தெளிய உணர்ந்திருந்தான். அதனல், பாரதப் போர் தொடங்கியதுமே—அதில் கலந்து கொள்ள மறுத்து—அவன் தீர்த்த யாத்திரை சென்று விட்டான்.

"பாண்டவர் சார்பில் தருமம் இருந்தது. ஆனல், நியாயம் இல்லே" என்று பலராமன் கருதக் காரணமென்ன?

பாண்டவரான ஐவருக்குக் குடும்பச் சொத்தில் பங்கு தரத் துரியோதனுதியர் மறுத்ததாகவும், அதனுற்றுன் மகா பாரதப் போர் மூண்டதாகவும் உலகம் நம்புகிறது. பாரத காப்பியத்தை நன்கு படித்தவர்கள்கூட அப்படித்தான் நம்பு கிருர்கள். இது தவறு. திருதராஷ்டிரனும் அவன் மக்களான துரியோதனுதியரும் பாண்டவர்களுக்கு நாடுகளையும் பிற சொத்துக்களையும் பங்கு பிரித்துக் கொடுத்து விட்டார்கள். "இந்திரப் பிரஸ்தம்" எனப் புதிதாக ஒரு நகரையே நிர்மாணித்துக் கொடுத்தார்கள். பாண்டவர்களும் இந்திரப் பிரஸ்த நகரில் இருந்து கொண்டு ஆட்சி நடத்திஞர்கள். அத்துடனன்றி, தான் சக்கரவர்த்தியாகிவிட வேண்டு மென்ற ஆசையால், "இராசசூய யாகம்" நடத்தி சக்கரவர்த்தியானுன் தருமன்.

இதனுல், துரியோதனனுக்குப் பொருமை ஏற்பட்டது. சகுனியின் யோசனைப்படி பாண்டவரைச் சூதாட அழைத் தான். அந்நாளில், ஒரு அரசன் இன்னெருு அரசனைச் சூதாட அழைத்தால், அழைக்கப்பட்டவன் மறுக்கக் கூடாது. மறுப்பது அவமானம்! அதனுல், தருமன் சூதாட இசைந்தான்; ஆடினுன்; நாடு, நகர், பிற சொத்துக்கள் அனைத்தையும் தோற்றுன்; தன்னையும் தம்பியரையும் தோற்றுன். ஐவருக்கும் மனைவியான பாஞ்சாலியையும் பந்தயம் வைத்துத் தோற்றுன். பின், சூதில் தான் இழந்தவற்றையெல்லாம் திருப்பித் தருமாறு தருமன் கேட்டான். தர மறுத்தான் துரியோதனன். இதுதான் பாரதப் போருக்குக் காரணம்.

பலராமன் — கண்ணன் வேறுபாடு

"பாண்டவர் பக்கம் தருமம் இருந்தது என்னவோ உண்மைதான். ஆனுல், நியாயம் இருக்கவில்லை" என்று பலராமன் கருதியது சரிதான். "சூதாட்டத்திற்குத் தருமன் இசைந்ததே தவறு. ஆடிய பின்னர், அதிலே தோற்ற பொருள்களைத் திருப்பித் தருமாறு கேட்பது என்ன நியாயம்? வெற்றி பெற்றவன் மனமிரங்கி எதையேனும் திரும்பக்

கொடுத்தால் தோற்றவன் பெற்றுக் கொள்ளலாம். கொடுக்க மறுத்தால் அதற்காக போர் செய்யப் புறப்படுவதா? அது என்ன நியாயம்?'' என்று கேட்டான் பலராமன். தன் தம்பி கண்ணனைப் பார்த்து, ''இதையெல்லாம் நீ பொறுத்துக் கொள்வாய்; நீ யாருடனும் சேர்ந்து கொள்வாய். அது என்னால் முடியாது. நான் தீர்த்த யாத்திரை போகிறேன்'' என்று சொல்லி, விதுரனுடன் சேர்ந்து கொண்டு போய் விட்டான்.

விதுரன் நன்றி கெட்டவன் அல்லன். துரியோதனன் தந்தையிடம் காட்ட வேண்டிய மரியாதையை விதுரனிடம் காட்டியிருந்தால் அவன் நிச்சயம் கௌரவர் சார்பில் போர்க் களம் சென்றிருப்பான். ஆனால், கண்ணனைத் தன் மனையில் வைத்து விருந்தளித்து உபசரித்ததற்காக, துரியோதனன், விதுரனை 'வேசி மகனே!' என்றுஏசினான். அது பொறுக்காமல், விதுரன் தன் கையிலிருந்த வில்லை முறித்துவிட்டு, போரில் கலந்து கொள்ள மறுத்து, தீர்த்த யாத்திரை சென்று விட்டான். விதுரன் வில்லை முறித்ததற்குத் துரியோதனன் அவனை ஏசியது மட்டும் காரணமல்ல; அத்துடன், 'தருமம் இல்லாத கட்சியில் சேர்ந்து போருக்குப் போகாதே!' என்று அவன் மனச் சாட்சி வற்புறுத்தியதும் மற்றொரு காரண மாகும்.

விதுரனின் வில் சிவ தனுசுக்கு நிகரானது. அவனும் சிறந்த வில்லாளன். அதனால், ''வில் விதுரன்'' என்றே வியாசரும் வில்லியும் அவனைக் குறிப்பிடுகின்றனர். ஆயினும், பகை நட்பாக் கொண்டொழுகும் பண்பாளன். அந்த வகை யில்தான் விதுரன் வலுவில் தன் வீட்டுக்கு வந்த கண்ணனை உபசரித்தான். அரசனான் துரியோதனன் அரண்மனைக்குச் செல்வதற்கு முன் விதுரன் வீட்டுக்குக் கண்ணன் சென்றதிலே சூழ்ச்சி இருக்கலாம். விதுரன் மீது துரியோதனனுக்கு சந்தேகம் ஏற்படுத்த வேண்டுமென்ற உள்நோக்குடன் கண்ணன் விதுரன் வீட்டுக்குச் சென்றிருக்கலாம். ஆனால், கண்ணனை வரவேற்று உபசரித்ததிலே விதுரனுக்கு உள்

நோக்கம் எதுவுமில்லை. துரியோதனனுக்குத் துரோகஞ் செய்ய வேண்டுமென்ற எண்ணம் விதுரனுக்கு இருக்கவில்லை. ஆனல், துரியோதனன் தனது சுபாவப்படி விதுரனைச் சந்தேகித்தான்.

பலராமன்—விதுரன் தீர்த்த யாத்திரை !

பாரதக் கதையிலே பீஷ்மர், துரோணர், கிருபாச்சாரியார் போன்ற சான்றோர்கள் துரியோதனன் பக்கம் நியாயமிருந்தும் தருமமில்லை என்பது தெரிந்தும், மனதைத்தேற்றிக் கொண்டு, செஞ்சோற்றுக் கடனுக்காக அவன் சார்பில் போர்க்களம் புகுந்தனர். ஆம்; மனச்சாட்சிக்கு விரோதமாக! ஆனல், விதுரன் நியாயத்தை விடவும் தருமத்திற்கே முதன்மை தந்தான். மனச்சாட்சியையே பெரிதாக மதித்தான். அதனல், துரியோதனனுக்காகப் போர்க்களம் புக மறுத்து, தனது வில்லை முறித்தெறிந்து, பலராமனுடன் சேர்ந்து தீர்த்த யாத்திரை சென்முன்.

தரும—நியாயம் பார்த்துச் செயல் புரிவதில் பலராமனும் விதுரனும் மகாபாரதத்திலே "இரட்டையர்"கள். அதனல், அவர்கள் இருவருமே போரை வெறுத்து தீர்த்த யாத்திரை செல்வதிலே கூட்டுச் சேர்ந்து கொண்டார்கள். ஆம்; இருவருமே ஒருவருக்கொருவர் துணையாக தீர்த்த யாத்திரை சென்ருர்கள்.போர் முடியவிருந்த தருணத்தில்தான் அவர்கள் தீர்த்த யாத்திரையை முடித்துக் கொண்டு அத்தினபுரத்திற்குத் திரும்பி வந்தார்கள்.

பலராமனிடமும் விதுரனிடமும் மற்ருெரு சிறந்த குணத்தையும் காண்கின்ருேம். அவர்கள் கட்சி மாறவில்லை. பாண்டவரிடம் நியாயமில்லை யென்பதற்காக பலராமன் துரியோதனனுதியருடன் சேர்ந்து கொள்ளாமல் போரில் நடுநிலைமை வகித்தான். அதுபோல, துரியோதனனதியரிடம் நியாயமிருந்தும் தருமம் இல்லை யென்பதனை உணர்ந்த விதுரன் பாண்டவர் கட்சியில் சேர்ந்து கொண்டானில்லை. மாருக, நடுநிலைமை வகித்தான். இவ்வாறு விதுரனும் பலரா

மனும் பண்பில் ஒத்திருந்த காரணத்தால் வியாசரும் வில்லி யாரும் அவர்களைக் கூட்டு சேர்த்து தீர்த்த யாத்திரைக்கு அனுப்புகின்றனர்.

பலராமனையும் விதுரனையும் கொண்டு மனச் சாட்சிப்படி நடப்பவர்களுக்குள்ள சங்கடத்தை—அவர்கள் 'நடுநிலை'யிடம் அடைக்கலம் புக வேண்டியவர்கள்தான் என்பதனை—வியாசர் உலகுக்கு உணர்த்துகின்றார்.

மனச்சாட்சிக்கு மதிப்பேது?

பாண்டவர் பக்கத்தில் தருமம் இருந்ததென்றாலும், அவர்கள் துரியோதனாதியரை வீழ்த்துவதற்குக் கடைப் பிடித்த நடைமுறைகளை யெல்லாம் நியாயப் படுத்திவிட முடியாது. கருணனையும் துரோணரையும் வெற்றிகாண கண்ணனும் தருமனும் கடைப்பிடித்த நடைமுறைகளில் சில நியாயமற்றவை யாகும். மனச்சாட்சிப்படி நடக்க விரும்பு வோர் ஆதரிக்க முடியாதவையாகும். அதனாற்றான், பலராமன், "நீ எதுவும் செய்வாய்; யாருடனும் சேர்ந்து கொள்வாய் என்றால் அப்படிச் செய்ய முடியாது" என்று கண்ணனைப் பார்த்துக் கூறி, போரிலிருந்து ஒதுங்கிக்கொண் டான். கொடியவர்களான துரியோதனாதிபர் தருமக் குறை வாக நடந்து கொண்டதைப் போலவே கொடுமையானது தருமவான்களான பாண்டவர்கள் போர்க்களத்தில நியாய மற்ற முறைகளைக் கையாண்டது.

மனச்சாட்சிப்படி வாழ்வதென்பது, அதையும் அரசியலில் இருந்து கொண்டு கடைப் பிடிப்பதென்பது எளிதல்லதான்! ஆனால், அப்படி வாழ்பவர்களை ஆர்ப்பாட்ட அரசியல் வாதிகள் சரித்திரத்திலிருந்து ஒதுக்கி விட முடியாது. அவர் களும் சரித்திரத்தில் சிறப்பிடம் பெறுகிறார்கள். போராட்ட அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்ட பலராமனும் விதுரனும் கூட வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுவிட்டனர்.

பொதுவாக, இராமாயணத்தில் வரும் வீடணன், கும்ப கருணன் ஆகிய இருவரிலிருந்தும் விதுரனும் பலராமனும் பல வகையில் வேறுபட்டவர்களாவர். ['செங்கோல்', 13-12-77]

கம்பர் புகழ் வளர்ந்த வரலாறு

கம்பர் தோன்றி இராமாயணத்திற்குத் தமிழில் வழி நூல் படைத்த பின்னர், அந்த மாகாப்பியத்திற்கும் அதனைப் படைத்தளித்த கம்பருக்கும் புகழ் தேடும் பணி தொடர்ந்து நடந்து விடுகிறது. அதனை, கம்ப பக்தர் குழாத்தின் யாத்திரை என்றே சொல்ல வேண்டும். அதிலே சர்வ சமயத்தினரும் கலந்து வந்திருக்கின்றனர்.

கம்பநாடர், இளங்கோவடிகளைப் போன்று முதற் காப்பியம் படைக்கவில்லை. வள்ளுவரைப் போன்று "சமுகாயச் சட்டம்'' எனத்தக்க சர்வதேச நீதிநூல் எதையும் தரவில்லை. ஆயினும், திருக்குறளில் வரும் நீதிகள் அனைத்தையும் தழுவி வான்மீகி இராமாயணத்தின் வழி நூலாகக் கம்ப இராமாயணம் படைத்தார்.

காப்பிய அமைப்பிலே, கதா பாத்திரங்களிலே கம்ப ராமாயணம் வழி நூல்தான் என்றாலும், புலமையிலே, பொருட் செறிவிலே முதல் நூல் என்று சொல்லத்தக்க தகுதியைப் பெற்றுவிட்டது. இதனை வான்மீகி ராமாயணத்தில் ஆழ்ந்த புலமையுடைய வடமொழிப் புலவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

சிலம்பிலே இராம காதை

மகாகவி கம்பருக்கு முன்னேயும் வான்மீகி படைத்த இராமாயணக் கதை தமிழ் ஏடுகளிலே, தமிழர் வீடுகளிலே வழங்கி வந்துள்ளது. குறிப்பாக, சங்க இலக்கியங்களில் இலங்கைவேந்தன் இராவணனைப் பற்றிய குறிப்புகள் பல்வேறிடங்களில் வருகின்றன. சிறப்பாக, இராம—ராவணன் போர் பற்றிப் புறநானூறு (378) கூறுகின்றது. சிலப்பதி

காரத்திலே, இராமாயணக் கதை பற்றிய குறிப்புகள் ''ஊர் காண் காதை.'' ''ஆய்ச்சியர் குரவை'' ஆகியவற்றில் இடம் பெற்றிருக்கின்றது.

இடைக்காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்களிலும் இராம காதை பல்வேறிடங்களில் குறிப்பிட்டுள்ளது. ஆழ்வாராதிபரின் பிரபந்தப் பாடல்களிலே இராமகாதை பக்தி பூர்வமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வரலாற்றின் அடிச்சுவட்டில் நின்றுதான் வான்மீகி இராமாயணத்தைத் தமிழிலே படைத்தார் மகாகவி கம்பர்.

தமிழகத்துக்கு வந்து, தமிழ் மொழி பயின்று, தமிழ்ப் புலவர்களாக சிறப்புப் பெற்ற பி. யு. போப் போன்ற கிறித்துவப் பாதிரிமார்களும் கம்ப இராமாயணத்திலே கவர்ச்சி அடைந்தனர். அந்த மகாகவியின் புலமைக் கடலிலே நீந்தி விளையாடினர். 'வீரமாமுனி' என்னும் புனை பெயர் பெற்ற பெஸ்கி பாதிரியார், கம்பருடைய புலமையைத் தமது மனத்தில் வாங்கிக்கொண்டு, அதனைப் பிரதிபலிக்கும் வகையில் ''தேம்பாவணி'' என்னும் கிறித்து மதக் காப்பியத்தைப் படைத்தார். இஸ்லாமியரான உமறுப் புலவர் போன்ற முஸ்லிம் புலவர்களும் கம்ப இராமாயணத்தை விரும்பிப் படித்தனர். உமறுப் புலவர் இஸ்லாம் சமயத்திற்கென யாத்தளித்த சீறுப் புராணத்தைப் படிப்போர், கண்ட கண்ட இடங்களில் எல்லாம் கம்ப நாடரின் கவிதை நயத்தைக் காண்கின்றனர்.

தமிழகத்திலே கம்யூனிஸ்டுகளின் ஆரம்ப கால இலக்கியக் கொள்கை எதுவாக இருப்பினும், அண்மைக் காலத்திலே அவர்களும் கம்ப ராமாயணத்திலே கவர்ச்சியடையலாயினர். அவர்களிலே தோழர் ப. ஜீவானந்தம் போன்ற சிலர், கம்பர் விழாக்களிலேயும் கலந்துகொண்டு, அந்த மகாகவிக்கு ஆண்டுதோறும் அஞ்சலி செலுத்தி வந்துள்ளனர்.

ஐயரின் அரும்பணி

இந்திய விடுதலைப் புரட்சிக்கு வித்திட்டு, அத்துறையிலே வெற்றியும் கண்டு, விடுதலை தேடித் தந்த பாரம்பர்யத்தின் பிரதிநிதித்துவ அமைப்பென்று இன்னமும் தன்னைக் கூறிக் கொள்ளும் காங்கிரஸ் மகாசபைக்கும் கம்பன் புகழ் பாடிய பெருமையிலே பங்கு உண்டு.

உயிர் விடும்போது 'ஹரே ராம்' என்று இராம நாமத்தைச் சொல்லி அமரரான அண்ணல் காந்தியடிகளும், மகா கவி கம்பரையும் அவர் தந்த காப்பியத்தையும் கேள்வி அளவிலேனும் அறிந்து வைத்திருந்தார். இதனை, அவர் எழுதியுள்ள கடிதம் ஒன்றால் அறிகிறோம். இதனை, ராஜாஜி எழுதிய "சிறையில் தவம்" என்ற நூலில் காண்கிறோம்.

தமிழக விடுதலை வீரர்களின் பாசறை விளக்கெனத் திகழ்ந்த 'வீர விளக்கு' வ. வே. சு. ஐயர், 'கம்ப ரசனை' என்னும் பெயரிலே, கம்ப ராமாயண விமர்சன நூல் ஒன்றை ஆங்கிலத்திலே இயற்றி, அந்த மகா கவியின் பெரும் புகழை உலக நாடுகள் அறிந்து கொள்ள வழிசெய்தார். அந் நூலிலே வான்மீகி தந்த முதல் நூலோடு கம்பர் படைத்த வழி நூலை ஒப்பிட்டு முன்னதினும் பின்னதே பெருமையுடையது என்பதனை ஆராய்ச்சி பூர்வமாக அறிவித்தார்.

வ. வே. சு. ஐயர், பிரெஞ்சு—கிரேக்கம்—ஆங்கிலம்—லத்தீன் ஆகிய உலக மொழிகளிலே தமக்குள்ள பெரும் புலமையைப் பயன்படுத்தி, உலக மகா கவிகளிடையே தமிழ்க் கவிஞன் கம்பனே பெருங் கவிஞனுவான் என்று அறை கூவல் விடும் வகையில் அழுத்தமாகச் சொன்னுர்.

இவருக்கு முன்னேடியாக, 'கமலாம்பாள்' நாவலாசிரியர் திரு. பி. எஸ். ராஜம் ஐயரவர்கள், "உலக மகா கவிகளின் மத்தியிலே கம்பநாடரே தலைமை பெற்று விளங்குகிருர்" என்று உறுதியாகச் சொன்னுர்.

தேசியக் கவிஞர் பாரதியாரோ, கம்பரை மானிடர் களிலேயே சிறந்தவராகக் கருதி, மனித குலத்தின் மாணிக்கம் என நினைத்து, 'கம்பனென்றொரு மானிடன் வாழ்ந்த' பெருமையைப் பெருமிதத்துடன் பாடினார்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்...பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்று பாடினார்.

கம்பர் தோன்றி, தமிழ் மொழியின் வளத்தைப் புலப் படுத்தும் வகையில்—தமிழ் மொழியின் ஆழத்தை அளந்து காட்டும் வகையில் மாகாப்பியம் படைத்ததனால் தமிழ்ச்சாதி அழிவிலிருந்து தப்பிவிட்டதாக பாரதியார் பகர்கின்றார்.

தமிழரசுக் கழகத்தின் தொண்டு

தமிழரசுக் கழகம் கலாச்சார இயக்கமாகவே தோன்றிய தால், கம்பன் புகழ் பாடி கன்னித் தமிழ் வளர்ப்பதனைத் தன் கடமையாகக் கருதி வந்துள்ளது. கம்பரின் காப்பியத்துக்குத் தோன்றிய எதிர்ப்புக்கு எதிர்ப்புக் காட்டி, அந்த மகா கவியின் புகழிலே மாசு படாமல் காத்து வந்துள்ளது.

அந்த எதிர்ப்பியக்கமும் கம்பன் புகழ் வளரப் பயன் பட்டிருக்கிறது என்பதனை மறந்து விடுவதற்கில்லை.

"கம்பர் கவியின்பம்" என்னும் ஆராய்ச்சி நூலொன்றை யும் அந்த மகா கவிக்குக் காணிக்கையாக்கியுள்ளது தமிழரசுக் கழகம். இன்னும் கம்பரோடு வள்ளுவரையும் இளங்கோவை யும் பாசறைக் கவிஞர் பாரதியாரையும் ஒப்பிட்டு ஆயிரமா யிரம் மேடைகளிலே பேசியும் நூற்றுக் கணக்கான கட்டுரை களை எழுதியும் கம்பர் புகழை வளர்த்து வந்துள்ளனர் தமிழரசுக் கழகத்தார்.

தமிழகத்தின் இலக்கிய வரலாற்றிலே கம்ப பக்தர்கள் நடத்தி வந்துள்ள இந்த நீண்ட யாத்திரையிலே கம்ப ராமாயணத்தை வெறுப்பவர்களையும் அவர்கள் சந்திக்க நேர்ந்திருப்பதனை இங்கே நினைப்பூட்ட வேண்டிய அவசியமும் இல்லை.

ஆண்டுக்கொருமுறை தமிழ்நாட்டில் பல ஊர்களிலே கம்பர் விழா நடைபெறுகின்றது. அந்த விழாக்களிலே 'கம்பன் புகழ் பாடி, கன்னித் தமிழ் வளர்ப்போம்' என்று ஒலி எழுப்பப்படுகிறது. ஒலி எழுப்புவோர் சாமான்யர்கள் அல்லர்; தமிழாய்ந்த புலவர்கள்; தமிழால் வாழ்பவர்கள். ஆனால், தமிழை வாழ வைத்தார்களா?

கம்பர், தாம் படைத்த காப்பியத்தால் உண்மையிலேயே தமிழை வளர்த்தார். அவரது இராமாயணம் தோன்றியில்லை யானால் தமிழ்மொழியின் பெருமையை அளந்துகாட்ட அப்படி ஒரு காப்பியம் தமிழில் இல்லாமலே போயிருக்கும். இதனாற் றான், கம்பனால் தமிழ்நாடு பெருமை பெற்றுவிட்டதென்ப தனைக் கூறவேண்டி, "புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்று கூறினார் பாரதியார். ஆனால், கம்பருக்குப் பின்னே தமிழ் வளர்ந்ததா? தமிழ்ப் புலவர்கள் என்போர் தமிழை வளர்த் தார்களா? இல்லை, இல்லை என்று பாரதியார் பறை சாற்று கின்றார்.

பாரதியாரின் பணி

தமிழ் வளர்ந்த காலத்தை அளந்து காட்டப் புகுந்தவர், வள்ளுவர் காலந்தொட்டு கம்பர் காலம்வரை தமிழ் வளர்ந்த தென்பதைக் காட்டி விட்டு, அதற்கப்பால் தமிழ் வளர வில்லை என்பதையும் சொல்லிக் காட்டுகிறார். 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங் கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்று பாடியுள்ளார் பாரதியார். தனது 'சுய சரிதை'யிலும்,

> "கம்ப னென்றொரு மானுடன் வாழ்ந்ததும்
> சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
> தெய்வ வள்ளுவன் வான மறை செய்ததும்"

என்று முப்பெரும் புலவர்களைப் பட்டியல் போட்டுக் காட்டி, கம்பனுக்குப் பிற்பட்ட காலத்தை சூன்யமாக விட்டுவிடு கிறான். ஏன், இந்த அவலநிலை என்பது பற்றிக் கம்பர் விழா

மேடைகளில் ஆராய்ந்த துண்டா? பட்டி மன்றங்களிலேனும் விவாதித்ததுண்டா?

பாரதியார், இளங்கோவும் கம்பனும் தோன்றிக் காப்பி யங்கள் தந்தமையால் தமிழ்த்தாய் மரணத்திலிருந்தும் தப்பி யதாகப் பெருமிதத்தோடு கூறுகின்றார்.

"கள்ளையுந் தீயையுஞ் சேர்த்து நல்ல
காற்றையும் வான வெளியையுஞ் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப் புலவோர்கள்—பல
தீஞ்சுவைக் காவியஞ் செய்து கொடுத்தார்"

என்று கூறி,

"இந்தக்கணம் மட்டுங் காலன்—என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்"

என்னும் வரிகளிலே இளங்கோ தந்த சிலம்பும், கம்பர் தந்த இராமகாதையும் தமிழ் மொழியானது கால வெள்ளத்தால் அழிந்து போகாமல் காத்தனவென்று கூறுகின்றார். ஆனால், கம்பனுக்குப் பின்னே சமூகக் காப்பியம் தோன்றியதா? இளங்கோ தந்த சிலம்பு ஒரு சமயக் காப்பியமன்று; சர்வ சமயக் காப்பியம். கம்பன் தந்த இராமாயணமும் மதக் காப்பியமன்று. மக்கள் காப்பியம். அப்படி ஓர் மக்கள் காப்பியம் கம்பனுக்குப் பின் தோன்றாதது ஏன்?

கம்பர் விழாக் கொண்டாடுவோர், 'கம்பன் புகழ் பாடி, கன்னித் தமிழ் வளர்ப்போம்', என்று ஒலிப்போர் இதுபற்றிச் சிந்தித்ததுண்டா? கம்பனுக்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளிலே உலகம் சுருங்கிக்கொண்டு வந்திருக்கின்றது. விஞ்ஞான அறிவு பெருகி வளர்ந்திருக்கின்றது. மொழியியல் துறை தோன்றி எழுத்துக்கும், சொல்லுக்கும் கூட விஞ்ஞான ரீதியான விளக்கங்கள் தரப்படுகின்றன. 'கம்பியூட்டர்' கருவி கிடைத்து, மொழித் துறையிலே என்னென்னவோ புதுமைகள் நிகழ்ந்து வருகின்றன.

கம்பருக்குப் பின் தமிழ் வளர்ந்ததா ?

வள்ளுவர் காலத்திலே அவர் படைத்த நீதி நூல் தமிழ் மொழியின் வளர்ச்சியைக் காட்டுவதாக இருந்திருக்கலாம். இளங்கோ காலத்தில் அவர் தந்த சிலப்பதிகாரம் உலகோர் நெஞ்சையள்ளி யிருக்கலாம். கம்பர் காலத்திலே அவர் படைத்த இராமாயணம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குச் சான்றாக இருந்திருக்கலாம். சமயப்போர் நிகழ்ந்த சேக்கிழார் காலத்திலே அவர் தந்த திருத்தொண்டர் புராணம் தமிழுக்கு வாழ்வளித்திருக்கலாம். ஆனல், நாம் வாழ்வது வள்ளுவர்—இளங்கோ — சேக்கிழார்—கம்பர் போன்ற மெஞ்ஞானியர் காலமன்று; விஞ்ஞானியர் காலம்! இந்தக் காலத்திலே தமிழை வளர்க்க வேண்டுமானல், தமிழைக் கொண்டு தமிழினத்தார் தலை எடுத்து வாழவேண்டுமானல், வெறும் கவிதைகள் போதா; காப்பியங்கள் போதா. விஞ்ஞான அறிவியல் நூல்கள் தமிழிலே பெருக வேண்டும். பெருகினல், அதுதான் தமிழ் வளர்ப்பாகும். இதனை பாரதியாரே கூறுகின்றார் :

இன்றொரு சொல்லினைக் கேட்டேன்! —இனி
ஏது செய்வேன்? —என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்;

புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேறகே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவும் கூடுவ தில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை;
மெலலத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்

என்றந்தப் பேதை உரைத்தான் — ஆ!
இந்த வசைஎனக் கெய்திட லாமோ?
சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவுமகொணர்ந்திங்கு சேர்ப்பீர்!

தந்தை அருள்வலி யாலும்—இங்கு
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தபெரும்பழி தீரும் — புகழ்
ஏறிப் புவிமிசை யென்று மிருப்பேன்.

இதனை, தமிழ் தாயின் கூற்ருகக்கூறியுள்ளார் பாரதியார். புத்தம் புதிய விஞ்ஞானக் கலைநூற்கள் தமிழ் மொழியில் தோன்றவில்லை யானுல், நம் தாய்மொழி செத்தொழியும். அதற்கு மாற்ருக, தமிழ் வழங்கிய பிரதேசத்தில் ஆங்கில ஆதிக்கம் நிலைபெறும் என்று ஒரு ஆங்கிலேயன் சொன்னுன். அவன் கூற்றிலுள்ள உண்மையை பாரதியார் மறுக்கவில்லை. வள்ளுவன் தந்த குறளை, இளங்கோ தந்த சிலம்பை, கம்பன் தந்த இராம காதையை வைத்துக் கொண்டு இரண்டாயிர மாண்டு காலம் தமிழ் மொழி - நம் தாய் மொழி வாழ்ந்தது உண்மைதான். கால வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகாமல் காலூன்றி வளர்ந்து நின்றதும் உண்மைதான். ஆனுல், இந்த விஞ்ஞான யுகத்திலே வள்ளுவனுக்கோ, இளங்கோவுக்கோ, கம்பனுக்கோ புகழ் பாடினுல் மட்டும் கன்னித் தமிழ் வளர்ந்துவிடாது. தேவைப்படுவது, விஞ்ஞான நூற்கள். அவையும் தமிழிலே வந்தாக வேண்டும். அவற்றைக் கொண்டே தமிழினத்தார் விஞ்ஞான அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் தமிழ் வளர்ச்சி. தமிழன் வாழ்வு.

வியப்பென்ன வென்ருல், கம்பனுக்கு விழா எடுப்போர் கம்பன் புகழ்பாடி கன்னித் தமிழ் மறக்கின்றனர். வெளிப் படையாகச் சொல்வதானுல், அவர்களிலே சிலர், விஞ்ஞானப் பாடங்களுக்குக் கல்லூரிகளிலே தமிழ் போதனு மொழி யாவதை எதிர்க்கின்றனர். மாணவர்களைத் தூண்டி விட்டு,

தமிழுக்கு எதிராக ஊர்வலம் நடத்துகின்றனர். இவர்கள் கம்பனுக்குப் புகழ்பாடி கன்னித் தமிழ் வளர்ப்பதாகச் சொல்கின்றனர். ஆலயத்துள்ளே வடமொழி; அரசாங்க அலுவலகங்களிலே ஆங்கிலம்; பல்கலைக் கழகங்களிலே பரங்கி மொழி; வடக்கே வேலை பார்க்க இந்தி மொழி; இன்பத் தமிழுக்கு எங்கே இடம்? இதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவும் மறுப்பவர்கள்; சிந்திப்போரையும் பழிப்பவர்கள் கம்பனுக்குப் புகழ் பாடுகின்றனர். மகாகவி கம்பன் இன்று வருவானானால், 'கம்பன் புகழ்பாடி கன்னித் தமிழ் வளர்ப்போம்' என்ற ஒலியைக் கேட்டு எள்ளி நகையாடுவான். 'இதுவா தமிழ் வளர்க்கும் வழி?' என்று கேட்பான். 'அறிவுக் கோயிலிலே தமிழுக்கு ஆதிக்கம் இல்லை என்றால், தமிழ் அழிந்து போகாதா?' என்று கேட்பான்.

கம்பனுடைய புலமையைப் போற்றக் கூடாதென்றோ, போற்றுவதற்காக விழா எடுக்கக் கூடாதென்றோ நான் கூறவில்லை. கம்பனைப் போற்றவேண்டும். உலக மொழிப் புலவர்களை எலாம் ஒன்றுகூட்டி அவர்களுக்குக்கெல்லாம் கம்பனுடைய புலமையின் ஆற்றலை எடுத்துச் சொல்லி, இலக்கிய உலகிலே கம்பனுக்கு ஏற்றங் காண வேண்டும். ஆனால், ஒன்றை மறந்துவிடக் கூடாது. தமிழ் மொழியின் பெருமையைப் போற்றுவது வேறு; அதன் உரிமையைப் பேணுவது வேறு. கம்பனுக்கு விழா எடுப்பதால் அவன் புகழ் ஓங்கலாம்; ஆனால், தமிழின் உரிமை ஓங்க, அது மட்டும் போதாது. அரசின் அலுவலகங்கள் அனைத்திலும் ஆட்சி மொழியாகவும், அனைத்துக் கல்லூரிகளிலும் அனைத்துப் பாடங்களுக்கும் பயிற்சி மொழியாகவும், நீதிமன்றங்களிலே நிர்வாக மொழியாகவும் தமிழ் கொண்டு வரப்படுமானால் அதுதான் இந்த நூற்றாண்டுக்கேற்ப தமிழை வளர்த்ததாகும்.

கம்பன் புகழ் பாடுவோரே கன்னித் தமிழின் வளர்ச்சியைப் புறக்கணித்துவிட்டால், அப்புறம் தமிழுக்கு வாழ்வு ஏது?

இந்த இருபதாம் நூற்றுண்டிலே இத்தாலி, ஜெர்மனி, பிரெஞ்சு, ருஷ்யம் ஆகிய மொழிகள் எந்தெந்தத் துறைகளில் ஏற்றங்கண்டுள்ளனவோ, அந்தத் துறைகளிலெல்லாம் தமிழை வளர்த்திருக்கிறோமா? வளர வழி வகுத்தோமா? தமிழுக்குத் தமிழனே பகையானுல், அதன் துரதிருஷ்டத்தை என்னென்பது? இந்த நிலையில் கம்பன் பெயரால் விழா நடத்தி, கன்னித் தமிழ் வளர்ப்போம் என்று கோஷம் எழுப்பினுல் உலகம் சிரிக்காதா?

கம்பன் புகழை வளர்ப்பது போல, கன்னித் தமிழையும் வளர்ப்போம் மெஞ்ஞானத் தமிழ் வளர்ந்தது போதும்; விஞ்ஞானத்திலும் தமிழை வளர்ப்போம்! எங்கும் எதிலும் தமிழ் வளருமானுல், அப்போது கம்பன் வளர்வான்—வாழ்த்துவான்.

[செங்கோல், 18-4-71]

கம்பனும் மதுவிலக்கும்

"கம்பன் வாழ்ந்தது 12ஆம் நூற்றாண்டில்! அவன் காலத்திலே மதுவிலக்குச் சட்டம் இந்தியாவின் எந்தப் பகுதியிலும் அமுலில் இல்லை. ஆகவே, கம்பன் மதுவிலக்கு பற்றி ஆதரவாகவோ, எதிராகவோ எதுவும் சொல்லச் சந்தர்ப்பம் ஏது?" என, "கம்பனும் மதுவிலக்கும்" என்னும் தலைப்பைப் படித்ததும் வாசகர்கள் நினைக்கலாம். உண்மையில் கம்பன் காலத்தில் மதுவுக்கு எதிராக நாட்டில் சட்டம் இல்லைதான். ஆனால், சாத்திரம் இருந்தது. அது, இந்நாளைய சட்டத்தை வி -வும் வலிமை வாய்ந்தது.உண்மையில் குடிப்பழக்கத்திற்கு எதிராக சாத்திரம் பிறந்தது, தமிழ் நாட்டில்தான்—தமிழிலேதான்!

தமிழா, குடிக்காதே!

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் மதுப்பழக்கத்தைத் தடுக்க சாத்திரம் பிறந்து விட்டது! 'சாத்திரம்' என்று சொன்னேனு, அது தவறு. 'வேதம் பிறந்துவிட்டது' என்று சொல்ல வேண்டும். ஆம்; தமிழருக்கு வேதம் திருக்குறள்தானே!

அந்தத் திருக்குறள்கூறுகிறது, 'குடிப்பது குற்றம்' என்று. 'அது, மன்னிக்க முடியாத குற்றம்'என்றும் கூறுகிறது. எதையும் மன்னிப்பவள் தாய். அந்தத் தாய்கூட, 'குடிக்கும் மகனை மன்னிக்கமாட்டாள்; மன்னிக்கக் கூடாது' என்கிறது வள்ளுவர் வகுத்த சட்டம்! "ஈன்றாள் முகத்தேயும் இன்னாது" — அதாவது, குற்றங்களை மன்னிக்கும் தாயும் மன்னிக்க முடியாதது மதுப் பழக்கம்" என்கிறது.

குடிக்கவும் அனுமதிக்கிறது, வள்ளுவர் சட்டம், ஒரு நிபந்தனையோடு! அதாவது, சான்றோரால் தான் மதிக்கப்பட வேண்டும் என்று விரும்பாதவன் எவனோ, அவன் குடித்துத் தொலையட்டும்'' என்கிறது திருக்குறள்.

''உண்ணற்க கள்ளை'' என்று சொன்ன வள்ளுவர், திரும்பவும் ''உண்ணுக'' என்றும் சொல்கிறார். குடிப்பவனை சான்றோர்கள் பாராட்ட மாட்டார்களாம்! ஏன், பழிக்கவும் செய்வார்களாம்! அதனால் சொல்கிறார், 'குடியடா, மகனே! குடி! சான்றோரால் பாராட்டப்படுவதை விரும்பாவிடில் குடி! குடித்துத் தொலை!'' என்கிறார் குறளாசிரியர். 'எவனொருவன் குடிப்பழக்கத்தை மேற்கொள்ளுகிறானோ, அவன் செத்தாருள் வைக்கப்படுவான்!' என்கிறார். 'என்று குடிக்கத் தொடங்குகிறானோ, அன்றே அவன் செத்தான்' என்கிறார்.

இவ்வளவுஞ் சொல்லி, இந்தக் கொடிய பழக்கத்தை நாட்டிலிருந்தே ஒழிப்பது அரசின் கடமை என்பதை உணர்த்த விரும்பி, ''கள்ளுண்ணாமை'' என்ற அதிகாரத்தை பொருட்பாலில் வைத்தார் வள்ளுவர். அதனால், அதனை 'சட்டம்' என்கிறேன். மது ஒழிப்புச் சட்டம் தமிழர் வேதமான திருக்குறள்.

வட மொழியிலுள்ள வேதத்தின் வழி வந்தது, ஆகமம். வேதத்தை விடவும் ஆகமத்திற்கே அதிக மதிப்புண்டு அந்தணரிடையிலே! அதுபோல, மதுவிலக்கு பற்றிய வேதம் திருக்குறள் என்றால், அதை யொட்டி வந்த ஆகமம் சிலப்பதிகாரம்!

சிலம்பிலும் மதுவுக்கு எதிர்ப்பு!

சிலம்பிலே, மக்கள் கள் விற்பதும் குடிப்பதும் கூறப்படுகின்றது, நிகழ்ச்சிப் போக்கில்! நாகரிகமற்ற எயினர்கள் குடித்துவிட்டுக் கூத்தாடுவது காட்சிப்படுத்தப் படுகிறது ஆனால், அதே சிலப்பதிகாரத்தின் இறுதியில் கவிக் கூற்றாக

"கள்ளும் களவும்
காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும்
விரகினில் ஒழிமின்"
(சிலம்பு. 30; 197-99).

என்று கூறுகிறார், இளங்கோவடிகள்.

"மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்!" என்று குரல் கொடுத்து உலகோர் அனைவரையும் கூவி அழைத்து, கள்ளுண்ணல் உள்ளிட்ட பஞ்சமா பாதகங்களையும் ஒழிக்குமாறு வேண்டுகின்றார்! ஐந்து பாதகங்களிலே கள்ளுக்கே முதன்மை தந்திருக்கிறார்!

வேதத்தை அடுத்தது ஆகமம் என்றால், அதனை அடுத்தது சாத்திரம் என்பர் சமயவாதிகள். அதுபோல, திருக்குறள் வேதத்தையும் சிலப்பதிகார ஆகமத்தையும் அடுத்து கம்ப ராமாயண சாத்திரமும் குடிப் பழக்கத்தை எதிர்க்கிறது. இதில் ஒரு வகையில் திருவள்ளுவரிடமிருந்தும் இளங்கோவிடமிருந்தும் கம்பர் வேறுபடுகின்றார்.

குடிப்பழக்கம் நாட்டில் இருப்பதை ஒப்புக்கொண்டு அதன் கேடுகளை விளக்கி, அதனை விற்போரையும் குடிப்போரையும் காட்டிவிட்டு, பின்னர் குடிப் பழக்கத்தை ஒழிக்குமாறும் இளங்கோ கூறுகின்றார். கம்பரோ, குடிப் பழக்கமே இல்லாத பாரத நாட்டைக் காட்டுகின்றார், தமது ராமாயணத்திலே!

மதுவருந்தாத இராமன்

வான்மீகியிலேவரும் இராமன் குடிப்பழக்கமுடையவன். ஆனால், கம்ப ராமாயணத்திலே அவன் குடிப்பழக்கத்தை விட்டுவிடுகிறான். தமிழ்நாடு—தமிழர் நாகரிகம் குடிப்பழக்கத்திற்கு எதிரானது என்பது கம்பரது நம்பிக்கை. அதனால், குடிப்பழக்கமுடைய வான்மீகி ராமனை குடியொழித்த

ராமனுகக் காட்டுகின்ருர்.தெய்வமே மானிடனுக வந்தாலும், அவன் குடிப்பழக்க முடையவனுனுல் தமிழ் நாட்டில் நடமாட முடியாது என்று கம்பர் சொல்லாமல் சொல்லுகிருர்.

இராவண வதம் முடிந்து, சீதை மீட்கப்பட்டு, அவள் ராமன் எதிரேவந்து நிற்கும்போது அவளை அவன் ஏற்க மறுக் கிருன். அதற்கு அவன் சொல்லும் காரணங்களுள் ஒன்று, அவள் இலங்கையில் இருந்த காலத்திலே குடிக்கப் பழகியிருப் பாள் என்பதாகும். 'இலங்கையில் நீ மது அருந்திய தோடன்றி, அதனை எங்களுக்கும் விருந்து வைக்க வந்தனையோ' என்கிருன் இராமன்.

குடிகார சுக்ரீவன்

கம்பர், தமது காப்பியம் முழுவதிலும் அரக்கரிடமும் குரக் கரிடமுமன்றி மற்றுள்ள மானிடரிடம் மதுப் பழக்கத்தைக் காட்டவில்லை. குரக்கர், நாகரிகமற்றவராதலால், கிஷ்கிந்தை யிலே அவர்களிடம் குடிப்பழக்கம் இருந்ததைக் காட்டுகிருர். ஏன், குரக்கர் குலத்தவனும் கிஷ்கிந்தை மன்னனுமான சுக் ரீவனே குடித்துவிட்டு நினைவிழந்து கிடப்பதாகக் கூறுகிருர்.

அதுபோல, கொடிய குணங்கள் எத்தனை யுண்டோ அத்தனையையும் கடைப்பிடிக்கும் அரக்கர்களிடமும் குடிப் பழக்க முண்டு என்பதனை, இலங்கை வேந்தன் தம்பியான கும்பகருணனைக் கொண்டே காட்டுகிருர். மற்றபடி, அயோத்தி, மிதிலை ஆகிய நகரங்களிலே, குறிப்பாக, மானிடர் களிடையிலே குடிப்பழக்கத்தை கம்பர் காட்டவில்லை.

பாலகாண்டம் உண்டாட்டுப் படலத்தில், மிதிலை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் தயரதன் கூட்டத் தாரிடை குடிப்பழக்கத்தைக் காண்கின்ருேம்.

"இந்தப் படலம் இராமாயணக் கதைக்குத் தேவை யற்றது!' என்கிருர், மகரிஷி வ.வே.சு. ஐயர். "இந்தப் படலம்

கம்பர் பாடியதல்ல, இடைச்செருகல் என்கிறார், ரசிகமணி டி.கே.சி.

உண்மையில், இந்த ஒரு படலத்தில் தவிர நாகரிக மனிதர்கள் குடிப்பழக்கத்தைக் கொண்டிருந்ததற்குக் கம்ப ராமாயணத்தில் வேறெங்கும் சான்றில்லாததால் உண்டாட்டுப் படலம் இடைச் செருகல் என்றே சொல்லி விடலாம்.

கம்பர், தாம் காண விரும்பிய நல்ல நாட்டை தமது இராமாயணத்திலே கற்பித்துக் காட்டுகிறார். ஆம்; கொடுப் பாரும் கொள்வாருமில்லாத நாட்டைக் காட்டுகிறார். அது போல, குடிப்பாரும் குடி விற்பாரு மில்லாத நாட்டையும் 'கம்பனி'லே காண்கின்றோம்.

சுக்ரீவன் வாயிலாகக் கம்பர் மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார், கிஷ்கிந்தைப் படலத்திலே! அண்ணன் வாலி யானவன் தன் தம்பி சுக்ரீவனுக்குக் குடிப்பழக்கம் உண்டென் பதை ஒப்புக்கொள்கிறான். குடிபோதையில் அவன் கடமை தவறக் கூடியவன் என்பதையும் இராமனுக்கு உணர்த்து கின்றான். அந்தச் சமயத்தில் தனக்குவிட்ட இராம பாணத் தைத் தன் தம்பிக்கு விடுவதில்லை என்று உறுதி கூறுமாறும் வாலி இராமனை வேண்டுகிறான்.

'ஓவிய உருவ! நாயேன்
உளதொன்று பெறுவ துன்பால்;
பூவியல நறவம மாந்தி
புந்திவேறு உற்ற போழ்தில்
தீவினை இயற்று மேனும்
எம்பிமேல் சீறி, என்மேல்
ஏவிய பகழி என்னும்
கூற்றினை ஏவல்' என்றான்.

இது, கம்பர் வாக்கு. இதிலே 'பூவியல் நறவம்' என்று கம்பர் குறிப்பிடுவது போதை தரும் மதுவைத்தான்! வலிக

ஐயுற்றது போல குடி போதையால் கடமை தவறினன் சுக்ரீவன். கார்காலம் கடந்ததும் சீதையைத் தேடுவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதாக இராமனிடம் கூறிவிட்டு கிஷ்கிந்தைக்குள் புகுந்த சுக்ரீவன் மதுபோதையால் அதனை மறந்து விடுகிருன். அந்த நேரத்தில் இராமனுல் அனுப்பப் பட்டு ஆற்ருெணுச் சினத்துடன் கிஷ்கிந்தையில் பிரவேசிக் கிருன் இலக்குவன்.

அங்கதனுல் இலக்குவனின் வருகையை அறிந்த சுக்ரீவன் தனது தவறுக்கு வருந்துகிருன். இதனை ஒரு வாய்ப்பாகக் கொண்டு, ஒன்பது செய்யுட்களில் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்கிருர் கம்பர்.

கம்பர் விரும்பியிருந்தால், சுக்ரீவன் குடிபோதையிலே யிருந்த நிலையை விரிவாக வருணித்திருக்கலாம். அவர் அப்படிச் செய்யவில்லை.

குரக்கர் தலைவன் குடிபோதையி லிருந்ததையே சுவைபட வருணிக்க விரும்பாதவர், நாகரிகத்தில் சிறந்த அயோத்தி நகர மாந்தர் குடித்து மகிழ்ந்தார்கள் என்று 57 செய்யுட் களில் உண்டாட்டுப் படலத்தில் வருணிப்பாரா?

மதுவிலக்குப் பிரசாரம்

சுக்ரீவன் குடிப்பழக்கத்தால் வரும் கேடுகளை விவரித் துரைப்பதைக் கேட்போம்:

உறவுண்ட சிந்தை யானும் உரை செய்வான்;
    ஒருவற்கு இன்னம்
பெறல உண்டோ, அவரால் ஈண்டு
    யான் பெற்ற பேர் உதவி? உற்றது
இறல் உண்டோ? என்னின் தீர்வான
    இருந்தபே ரிடரை எல்லாம்
மறவுண்டு மறந்தேனை; காண
    நாணுவல், மைந்த' என்ருன்.

'இராமன் செய்த பேருதவியை மதுப் போதையால் மறந்தேன்' என்கிறான் சுக்ரீவன். இப்படி அவன் சொல்வது தன் மைந்தன் அங்கதனிடம்.

மது மயக்கத்தால் ஏற்படும் ஒழுக்கக் கேடுகளையும் சுக்ரீவனைக் கொண்டு சொல்ல வைக்கிறார் கம்பர்.

'ஏயின இது அலால், மற்று,
ஏழைமைப் பாலது என்னோ!
'தாய் இவள், மனைவி' என்னும்
தெளிவு இன்றேல், தருமம் என்னும்?
தீவினை ஐந்தின ஒன்று ஆம்;
அறிவும், திருக்கு நீங்கா
மாயையின மயங்குகின்றோம்:
மயக்கின்மேல் மயக்கும் வைத்தாம்!

இந்தக் கவிதையிலே, 'குடியால் அறிவை இழந்தவனுக்குத் தாய்க்கும் தாரத்திற்கும் வேற்றுமை தெரியாது' என்கிறான் சுக்ரீவன். 'இந்த ஒழுக்கக்கேடு உலகில்வளருமானால், அப்புறம் தருமத்தின் கதி என்ன ஆகும்?' என்றும் கேட்கிறான் கிஷ்கிந்தை மன்னன். மற்று, குடியானது பஞ்சமா பாதகங்களுள் ஒன்று என்பதனை "தீவினை ஐந்தின் ஒன்று ஆம்" என்னும் வாசகத்தில் கூறுகின்றான்.

மதுவிலே நெளியும் புழுவை எடுத்தெறிந்துவிட்டு அதனைக் குடிக்கும் இழிசெயலை,

"நெளிந்து உறை புழுவை நீக்கி,
நறவு உண்டு நிறைகின்றேனல்"

என்ற வரிகளில் வருணிக்கிறான்.

"கள்ளுண்ட மயக்கத்தால் கேடு வரும் என்று நான் கேள்விப்பட்டதுண்டு. அதனை இப்போது அனுபவத்தின் வாயிலாக அறிந்து கொண்டேன்." என்கிறான் சுக்ரீவன்.

''கேட்டனென், 'நறவால் கேடுவரும்
என; கிடைத்த அச்சொல்
காட்டியது;''

என்பது சுக்ரீவன் சொல்.

சுக்ரீவன் பிரதிக்ஞை!

மதுபோதையால் வரும் கேடுகளை மேலும் விளக்குகிருன், கம்பன் கைப்பட்ட சுக்ரீவன்.

வஞ்சமும் களவும் பொய்யும்
மயக்கமும் மரபில் கொட்பும்
தஞ்சம் என்ருரை நீக்கும்
தன்மையும், களிப்பும் தாக்கும்!
கஞ்சமெல் அணங்கும் தீரும்
கள்ளிஞல்! அருந்திஞரை
நஞ்சமும் கொல்வது அல்லால்
நரகினை நல்காது அன்றே?

இத்துடன் மதுவிலக்குப் பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு, குடியிலிருந்து தன்னை சுக்ரீவன் விடுவித்துகொண்டதாகப் பிரகடனம் செய்கிருன்.

'ஐய! நான் அஞ்சினேன், இந்
நறவினின் அரிய கேடு;
கையிஞல் அன்றியேயும்
கருதுதல் கருமம் அன்ருல்;
வெய்யதாம் மதுவை இன்னம்
விரும்பினேன் என்னின், வீரன்
செய்ய தாமரைகள் அன்ன
சேவடி சிதைக்க' என்ருன்

இந்தச் செய்யுளிலே 'இனி மது அருந்தமாட்டேன்' என்று சூளுரைக்கிருன். ''அருந்திஞல் இலக்குவனுடைய

கால்கள் என்னை மிதித்துக் கொல்லட்டும்'' என்றும் சொல்லுகிறான்.

சுக்ரீவனைப் பயன்படுத்தி கம்பர் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்வதுபோல, வேறு எந்தக் காப்பியத்திலும், தமிழ்க் கவிஞரிலே எவரும் இவ்வளவு தீவிரமாக மதுவிலக்குப் பிரச்சாரம் செய்ததில்லை.

கும்பகருணன் குடித்து மகிழ்வதைக் கூறுமிடத்து, ஒரு செய்யுளிலே, அதிலும் ஒரு வரியிலே, அந்த வரியிலும் ஒரு சொல்லிலே அதைச் சுட்டிக் காட்டுகிறார்—அவ்வளவுதான். அதற்குமேல் வருணிக்க முயலவில்லை. மது உண்டு மயங்கியோர் நிலையை விரிவாக வருணிப்பதுகூட, அதிலே ஒரு கவர்ச்சியை உண்டாக்குவதாகு மல்லவா! அதனால்தான் சுக்ரீவனிடமோ, கும்பகருணனிடமோ வருணனையைக் வைத்துக் கொள்ளவில்லை.

கும்பகருணனும் குடிகாரனே!

ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுந்த கும்பகருணன் சீதையை விட்டுவிடும்படி அண்ணன் இராவணனுக்கு அறிவுரை கூறுகிறான். அதுகேட்டு சினங்கொண்ட இலங்கை வேந்தன்,

> ''உறுவது தெரிய அன்று,
> உன்னைக் கூயது;
> சிறுதொழில் மனிதரைக் கோறி,
> சென்று; எனக்கு
> அறிவுடை அமைச்சன் நீ
> அல்லை, அஞ்சினை;
> வெறுவிது, உன்வீரம்' என்று;
> இவை விளம்பினன்.

'மறம்கிளர் செருவினுக்கு
உரிமை மாண்டனே;
பிறங்கிய தசையொடு
நறவும் பெற்றனே;
இறங்கிய கண்முகிழ்த்து
இரவும் எல்லியும
உறங்குதி போய்' என,
உளையக் கூறினன்.

"நிறைய புலாலையும் போதை தரும் மதுவையும் உண்ட நீ, போருக்குப் போவாயா? மாட்டாய். இன்னும் புலாலை உண்டு, மதுவை அருந்திவிட்டுத் தூங்கு, போ!" என்று இராவணன் சொன்னன். இந்த அளவிலே கும்பகருணனின் குடிப்பழக்கத்தைச் சுட்டிக்காட்டுவதோடு கம்பர் விட்டு விடுகிறார்.

இதையும் ஓர் சான்றாகக் கொண்டால், உண்டாட்டுப் படலத்திலே 57 செய்யுட்களிலே அயோத்தி வேந்தனின் பரிவாரத்தார் மது அருந்தி, அதனல் அறிவிழந்து, காமவெறி பிடித்து ஆடுவதாக வருணிக்கப்படுகிறதே, அந்த வருணனை கம்பனுடையதாக இருக்க முடியுமா? இருக்காது. அது, ரசிக மணி டி.கே.சி.யும், வ.வே.சு. ஐயரும் கூறுவதுபோல இடைச் செருகலாகத்தான் இருக்க முடியும். கம்பன் மது அருந்துவோர் இல்லாத கோசல நாட்டைத்தான் நமக்குக் காட்டுகிறன். இராமனைப் பெற்ற நாடு வேறு எப்படி இருக்கும்?

கவியரசர் கம்பரும் வ. வே. சு. ஐயரும்

வ. வே. சு.ஐயர் விடுதலைப் போராட்ட காலத்திலே ஒரு கட்டம்வரை ஆயுதப் புரட்சியிலே அளவற்ற நம்பிக்கை வைத்திருந்தார். பின்னர், காந்தி சகாப்தம் தோன்றியதும் அகிம்சைப் புரட்சியிலே பற்றுக்கொள்ளும் அளவுக்கு மனமாற்றம் அடைந்தார்.

அந்தப் பெரியார், தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் பிரெஞ்சு, கிரேக்கம், ஜெர்மன், இன்னும் பல மொழிகளிலே ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார். அந்தப் புலமைத் திறனைக் கொண்டு, கம்பருடைய புலமையைத் திறனாய்வு செய்தார். தம்முடைய "பால பாரதி" என்ற மாத இதழிலே 'கம்ப ராமாயணம்' என்னும் தலைப்பில் தொடர் கட்டுரை எழுதி வந்தார். அத்தொடர் கட்டுரை முடியும் முன்னே ஐயரின் வாழ்வு முடிந்து விட்டது.

வ. வே. சு. ஐயர், கம்பரிடம் கரைகாணாக் காதல் கொண்டிருந்தார். வால்மீகி ராமாயணத்தோடு கம்ப ராமாயணத்தை ஒப்பிட்டு ஆராய்ந்து, வால்மீகியினும் கம்பரே திறமான புலவர் என்பதனைத் திடமாக வற்புறுத்தினார்.

ஒப்புநோக்கு

இராமாயணத்தின் கருப் பொருளிலே, முதனூல் தந்த வால்மீகிக்கும் வழி நூல் வழங்கிய கம்பருக்கும் உள்ள ஒற்றுமை பற்றி ஐயர் வெளியிட்ட கருத்து வருமாறு:

"ராவண வதத்தையே ராமாயணத்தின் வஸ்து வாக வால்மீகி பகவான் அமைத்தது போலவே கம்பனும் அமைத்திருக்கிருன். இவ்வஸ்துவின் ஒருமையைக் கம்பன் மறப்பதே யில்லை. முக்கியமான கட்டங்களில் எல்லாம் அவன் தனக்கும் படிப் போருக்கும் அதை நினைவுறுத்திக் கொண்டே செல்லுகிருன்."

['பால பாரதி', நவம்பர்—1924.]

'கருப்பொருள்' என்பதனை, வடமொழியிலே 'வஸ்து' என்கிருர் ஐயர். இந்தக் கருப்பொருளைக் கொண்டு இராமாயணக் கதை எப்படி அமைந்திருக்கிற தென்பதனையும் ஐயர் அழகுபட வருணிக்கிருர். இதோ, அந்த வருணனை:

"இந்த வஸ்து, ஒருமை உணர்ச்சி அயோத்தியா காண்டத்திலிருந்துதான் உண்டாகிறது. அயோத்தியா காண்டத்தினின்று கதையானது மத்தகஜத்தின் நடையோடு, கங்காப் பிரவாகத்தின் கமனத்தோடு ராவண வதம்வரை செல்லுகிறது. உபாக்யானங்களுக்காக வேனும், மந்திராலோசனைக்காகவேனும் கதை நிற்கிறதே என்ருல், அது இயற்கையை ஒட்டியே அவ்வாறு நிற்கின்றது. வனராஜனுன கஜேந்திரனும் அங்கங்கே ஆகாரத்துக்காக நிற்கிருன். அங்கங்கே இளைப்பாறுகிருன். கங்கா நதியும் சமதடத்தில் வேகம் குறைகிறது. யமுனை முதலிய உப நதிகளின் நீரை ஏற்றுக் கொள்ளுகையில் வேகத்தைத் திரும்பப் பெற்றுக் கண்டோர் வியக்கச் செல்லுகிறது. கிளை நதிகளையும் கால் வாய்களையும் நிரப்பிக் கொண்டு சற்று ஆலசியமாக நடக்கிறது. ஆனுல், ஆலசிய மெல்லாம் அடுத்த கட்டத்தில் இரண்டு பங்கு வேகமாகச் செல்லுவதற்காகத்தான். கடைசியில் சமுத்திர ராஜனேடு கலப்பதற்கு முன் கங்காதேவியின் அழகையும் காம்பீர்யத்தையும் வாயால் வர்ணித்துச் சொல்ல ஒண்ணுமோ? தேவர்களும் கண்டானந்திக்கத் தகும் காட்சி யன்ருே கங்கா தேவியின் சமுத்திர சங்கமம்! இத்தகைய

வேகமும் ஓட்டமும் பொலிவும் இருக்கிறது கம்பராமா யணத்தில்."

[பால பாரதி, நவம்பர், 1924.]

வால்மீகியினுஞ் சிறந்தவர்

இப்படி வ. வெ. சு. ஐயர், ரசனையிலே வால்மீகியின் காப்பியத்தை விடக் கம்பன் தந்த காப்பியம் சிறந்து விளங்குகிறதென்பதற்கு எத்தனை எத்தனையோ சான்று களைத் தம்தொடர் கட்டுரையிலே எடுத்துக்காட்டி, கவிஞர் குலத்தின் சக்கரவர்த்தி என்னும் சிறப்பை கம்பருக்குத் தருகிறார். இன்னொரு சான்று பார்ப்போம்:

"வால்மீகியின் ரசனைக்கும் கம்பனுடைய ரசனைக்கும் பேதத்தைச் சற்று ஆழமாகக் கவனித்தல் பயனுடைய தாகும். வால்மீகியில் ராமன் தசரதனுடைய சன்னிதிக்கு வந்த பிறகு பதினெட்டு சுலோகங்களால் என்ன நேர்ந்திருக் கலாம் என்று தனக்குள் தானே ஆலோசித்துக் கொண்டு கைகேயியைக் கேட்கிறான். என்ன என்று கேட்டதற்கு கைகேயி பழங்கதை யெல்லாம் சொல்லிவிட்டு, எட்டு சுலோ கங்களால் நீ அரசன் வார்த்தையை நிறைவேற்றுவாயா என்று கேட்கின்றாள். பிறகு, தான் வரங்களைப் பெற்ற வரலாற்றை கைகேயி சொல்லிக் காட்டுக்குப் போ என்று ஆஞ்ஞாபிக்கிறாள். ராமனுடைய பதிலும் வள வள என்றே யிருக்கிறது. இத்தகைய நிகழ்ச்சியினால் கதை தொய்ந்து போய் விடுகிறது.

"கம்பனிலோ ராமன் வருவதும், கைகேயி ஆணையிடு வதும், ராமன் ஒரு வார்த்தையில் மறு மொழி கூறிவிட்டு விடைபெற்றுக் கோசலை கோயில் போவதும் அதிவேகமாக, மிகக் கெடுபிடியாக நடப்பதால் கதை நாணேற்றின வில்லைப்போல வன்மை யுடைத்தாய் நடக்கிறது."

['பால பாரதி', நவம். 1924.]

வால்மீகியினும் கம்பர் திறனுடையவர் என்பதற்கு இன்னொரு சான்று தருகிறார் ஐயர். அதையும் பார்ப்போம்:

"ராமன் காட்டுக்குச் செல்லுகையில் யாத்திரா தானம் செய்கிறதை வால்மீகி வெகு விஸ்தாரமாக வர்ணிக்கிறான். இந்த இடத்தில் கதையின் வேகத்தைக் குறைப்பது சரியாக வில்லை. ஆதலால், கம்பன் கதையை இத்தகைய வர்ணனையினால் நிற்கச் செய்யாமல் உரிய வேகத்துடன் செல்லச் செய்கிறான். இங்கே கம்பனுடைய கதை அசுவகதியில் செல்லுகிறது. அதாவது கம்பீரமாயும், வேகமாயும் ஒரே மூச்சில் வெகு தூரம் செல்லுகிறது. பிறகு சிறிது நேரம் ஆசுவாசம் செய்து கொள்ளுகிறதற்காகக் குதிரை நிற்குமே அதுபோலச் சற்று விளம்பமான வர்ணனைகளுடன் தேங்குகிறது. ஆனால், உடனே பழைய வேகத்துடனும், உக்ரத்துடனும் கிளம்பி வெகுதூரம் கட்டுக்கு அடங்காது போலச் செல்லுகிறது."

['பால பாரதி', நவம். 1924.]

ஆரண்ய காண்டத்தை வால்மீகியினிடமிருந்து இரவல் பெற்ற கம்பர் தம்முடைய கவிதைத் திறமையால் முதனூலாசிரியர் படைத்ததை விடவும் சிறப்பாகப்படைத்துள்ளார். இதுபற்றி வ. வெ. சு. ஐயர் செய்துள்ள விமர்சனம் வருமாறு:

"ஆரண்ய காண்டம்தான் ராமாயணத்தின் மத்திய பாகம். கிஷ்கிந்தா காண்டம் கேவலம் உபாக்யானமேயானதால், கதையின் காண்ட வரிசையிலும் ஆரண்ய காண்டத்தையேதான் மத்திய காண்டமாகக் கொள்ள வேண்டும். இதில்தான் ராம—ராவணரின் பகைமைக்கு நேரான காரணமான சீதாபஹரணம் நிகழ்கின்றது. ஆதலால், ராம கதையாகிற கன்னிகையின் மேகலாபரணமாக விளங்குகிற இக்காண்டத்தின் ரசனை மிக அழகாக அமைந்திருத்தல் வேண்டும்.

"இக்காண்டத்தில் முதல் 224 விருத்தங்கள் வரையில் கதை ஆலசியமாகத்தான் நடக்கிறது. விராதன் வதைப்

படலம் மாத்திரம் சிறிது வேகத்தைத் தாங்கி நிற்கிறது. ஆனால், அது—விராதனுடைய ஸ்தோத்திரம் இருப்பினுங் கூட—வேதாளக் கதையின் ஜாதியைச் சேர்ந்ததேயொழிய, மகா காவிய ஜாதியைச் சேர்ந்ததன்று.

"ஹோமர் எழுதிய ஒதூஸியத்தில் வரும் குக்ளோப உபாக்கியானம், விர்கிலியனுடைய ஏனியத்தில் வரும் ஹார்ப்பியரின செய்தி ஆகிய இவைகளோடுதான் இந்த விராதன் கதையையும் இக்காண்டத்தின் கடைசியில் வரும் அயோமுகியின் கதையையும் ஒப்பிடலாகும்.

"சரபங்கர் பிறப்பு நீங்கு படலம் கதைக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை—அதை எடுத்து விட்டதனால் கதைக்கு எவ்வித நஷ்டமும் ஏற்படாது. அகத்தியப் படலத்தின் விஷயத்தை ஐரோப்பிய கவிஞர் அது கம்பனில் தோன்றுமிடத்தில் கூறமாட்டார்கள். கதையின் பிற்பாகத்தில் யாராவது இரண்டு நாயகர்கள் சம்பாஷிக்கும்போது இவ் விஷயம் உபாக்கியரானமாக வரும்படி செய்வது அவர்களுடைய முறையாகும். அவ்வாறு செய்திருந்தால் இவ்விடத்தில் உள்ள ரசனையைவிட உயர்ந்த ரசனையாயிருந்திருக்கும். ஆனால், சூர்ப்பநகையின் பிரவேசத்திலிருந்து கம்பனுடைய ரசனை மேனாட்டுக் காவியங்களின் சுவையில் தோய்ந்தவருக்கும், கீழ்நாட்டுக் காவியங்களின் ரஸத்தைப் பருகி அனுபவிப்பவருக்கும் சமமான இன்பத்தைத் தரும்.

'சூர்ப்பநகையை அரங்கத்தில் தோற்றுவிக்கும் அழகைத் தான் என்னென்று சொல்லலாம்! வால்மீகியில் சூர்ப்பநகையின் வரவு சாமானியமாகத்தான் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ராமன் ரிஷிகளோடும் சீதா லக்ஷ்மணர்களோடும் உட்கார்ந்துகொண்டு அவர்களுக்குக் கதைகள் சொல்லிக் கொண்டிருக்கும் காலத்தில் சூர்ப்பநகை சிவந்த தலைமயிரும், கொடிய கண்களும், நரை திரை உள்ள உடலும் முதலிய அலங்காரங்களுடன் ராமனிடம் வந்து, பத்தினியோடு கூட அந்தப் பிரதேசத்திற்கு வந்த நீ யாவன், உன்னுடைய விருத்

தாந்தங்க ளெல்லாம் என்ன என்று கேட்கிறாள் சூர்ப்ப நகை கேட்டதும் ராமன் தன்னுடைய பூர்வோத்தரத்தைச் சொல்லிவிட்டுச் சூர்ப்பநகையின் பூர்வோத்தரத்தைக் கேட்பதும், சூர்ப்பநகை தான் ராமனைக் காப்பதாக முதலெடுத்ததுமே வெள்ளையாகச் சொல்லிவிடுவதும் வேலைப் பாடில்லாமல் மொட்டையாக இருக்கிறது. ஆனால் கம்பனில் சூர்ப்பநகை மோகனமான உருவத்தைத் தரித்துக் கொண்டு நூபுரம் மேகலை முதலிய ஆபரணங்கள் குலுங்க, ராமன் தனியே இருக்கும் இடத்தை நோக்கிவர, அவ் உருவத்தைக் கண்ட எம்பெருமான்,

"பாருழையின் இல்லது ஒரு
மெல் உருவு பாரா,
ஆருழை அடங்கும்?
அழகிற்கு அவதி உண்டோ?"

என்று நினைக்கிறான். அவள் வந்து, வெவ்விய நெடுங்கண் அயில் வீசி, அயல் பார்த்து, நவ்வியின் ஒதுங்கி. இறை நாணி அயல் நின்றதும், ராமன் அவள் செய்தியை விசாரிக்கிறான். சம்பாஷணை வெகு ருசிகரமாக இயற்கையில் நடைபெறுவது போல. நடக்கிறது. இடையில்தான் அமுதின் வந்த அருந்ததிக் கற்பின், அஞ்சொல் வேயினை தோளினளான சீதை ராமனிடம் வருகிறாள். இந்தச் சிறு, ஆனால் ரசனைத் திறம் அனைத்தையும் காட்டுகின்ற, தந்திரத்தினால். சீதையை ஓர் அரக்கி என்று சூர்ப்பநகை கூறும்படி செய்வதும், ராமன் அதைக் கண்டு சிரித்துச் சூர்ப்பநகையின் தன்மையைப் பரிபூரணமாகத் தெரிந்துகொண்டு விடும்படி செய்து கதையை அழகுபட அமைப்பதும் கவிக்குச் சாத்தியமாகிவிடுகிறது."

['பால பாரதி', டிசம், 1924]

தமிழ் வெறியர் அல்ல!

வ. வெ. சு. ஐயர் வடமொழியில் உள்ள வால்மீகி ராமாயணத்தைப் பழுதற ஓதிப் பயின்றவர். அப்பழுக் கற்ற அந்தணராதலால், இந்தியாவின் கலாச்சாரப் பொது மொழியான வடமொழியிடமும் பற்றுதலும் கொண்டவர். தாய் மொழியான தமிழிடத்துப் பற்றுக் கொண்டவரா யினும், இன்னொரு மொழியை இழித்துக் கூறுமளவுக்கு தமிழ் வெறி கொண்டவரல்லர். இவ்வளவிருந்தும், புலமைக் காதல் காரணமாக நெஞ்சை நடுவு நிலையில் நிறுத்தி, வால்மீகியை யும் கம்பனையும் ஒப்பு நோக்கி, தமது மனத்தில் பட்ட உண்மைகளை வெளியிட்டுள்ளார்.

கம்ப ராமாயணத்திலே, மாயமானின் பின் இராமன் சென்றதும், அந்த வஞ்சக மான் இராமனுடைய அம்புக்கு ஆற்ருது அலறியபோது, 'இலட்சுமணு!' என்று குரல் கொடுத் ததும், அதன்பின், லட்சுமணனைப் பற்றிச் சீதை தெரிவிக்கும் கருத்தும் இலக்கிய ரசிகர்களுக்கு விருந்தாகும். ஐயரும் அந்த இடத்தை விட்டுவிடவில்லை. இதோ, ஐயர் கூறுகிருர்:

"மாய மான் விஷயத்தில் லக்ஷ்மணன் ஆட்சேபித்ததும் ராமன் சமாதானம் கூறிவிட்டு வேட்டைக்குப் புறப்பட்டுச் சென்று விடுகிருன் என்று வால்மீகி செய்திருக்கும் ரசனையில் லக்ஷ்மணனுடைய சாமர்த்தியமும் முன் யோசனையும் வற்புறுத்திக் காட்டப்படவில்லை. லக்ஷ்மணன் ராமனை அவ் வேட்டையினின்று விலக்கப் பன்முறையும் முயன்று பார்த் தால்தான் படிப்போருடைய மனதில் லக்ஷ்மணனுடைய கூரிய அறிவையும் ராமபக்தியையும் விளக்கிக் காட்ட முடியும் என்று கம்பன் ராமலக்ஷ்மண சம்வாதத்தை மிக வேலைப் பாடோடு அமைத்திருக்கிருன்.

"சீதை லக்ஷ்மணனைச் சீறி ராமனை நோக்கிப் போகச் செய்யும் கட்டத்தில் வால்மீகியின் வேலைப்பாட்டுக்கும் கம்ப னுடைய கை நயத்துக்கும் உள்ள தாரதம்மியம் மற்றெங்கே யும் விட அதிக விசதமாக விளங்குகிறது.

"இந்தக் கட்டத்தை வால்மீகியிலும் கம்பனிலும் ஆதியோடந்தமாய்ப் படிக்குமவர்க்கு வால்மீகி ராமாயணமானது இடைக்கிடை தங்கக் கொடிகள் கொழுத்து ஓடினாலும் பூமியிலிருந்து அப்படியே பாறையோடு வெட்டியெடுக்கப்பட்ட கட்டியைப் போன்றதுதான் என்றும், கம்ப ராமாயணம் அத் தங்கத்தை எடுத்து உருக்கி, மாசுபோக்கி, வார்த்த சொர்ண விக்ரகமாகும் என்றும் தோன்றும்."

['பால பாரதி', டிசம். 1924.]

தன்னிகரற்ற விமர்சகர்

கம்ப ராமாயணத்திற்கு அருமையான விமர்சனம் எழுதிய அறிஞர் பெருமக்கள் பலராவர். நம் ஐயருக்குப் பின்னே தோன்றிய விமர்சகர்களோடு ஒப்பிடுமிடத்து, ஐயருக்குள்ள தனிச் சிறப்பை வேறு யாரும் ஆக்கிரமித்து விடவில்லை என்று சொல்லலாம். ஈடு இணையற்ற கம்ப ராமாயண விமர்சகரான வ. வெ. சு. ஐயர் கம்பருடைய தரம் பற்றியும் திறம் பற்றியும் செய்துள்ள விமர்சனத்தை இன்னும் சிறிது பார்ப்போம்:

"உபாக்கியானங்கள் அமைப்பதில் ஹோமரைத்தான்—அவனும் இலியாதைப் பாடுகையில்தான் – மிகச் சாமர்த்திய சாலி என்னலாம். அவன் எழுதிய ஒதூஸியம் என்னும் காவியத்தை உண்மையாக மகா காவியமென்று சொல்லக்கூடாது. அதை அனேக உபாக்கியானங்களின் சேர்க்கையென்று சொல்லுவதே முறையாகும். ஆனால், இலியாதிலுள்ள அவனுடைய உட்கதைகள் சிறியனவாயும் அவயவங்களுக்கு அளவில் பொருத்தமாயும் இருக்கின்றன. கதையும் உபாக்கியானங்களும் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு, கதைக்கு இடஞ்சற் படுத்தாமல் பெரும்பாலும் எடுக்க முடியாதனவாய் இருக்கின்றன.

...

"ராமாயணத்தில் உபாக்கியான அமைப்பு இலியாதின் அமைப்புக்குத் தாழ்ந்ததன்று; இங்கேயும் பாலகாண்டத்தி

லுள்ள உட்கதைகளை நீக்கிவிட்டுப் பார்த்தால் உபாக்கியானங்களும் மூலகதையும் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு, இணைந்து கொண்டு இருக்கின்றன. இரணியன் கதையைத்தான் கதைக்குக் கேடின்றி எடுத்துவிடக்கூடும். ஆனால், திசை திறந்து அண்டம் கிறிச் சிரித்த செங்கட் சீயத்தின் காம்பீர்யம் நிறைந்த உபாக்யானத்தை—அமைப்பில் பாகவத கதையையும், விஷ்ணு புராண கதையையும் வென்றுவிட்டு ராமாயணமாகிற வைரமணி மாலையில் இந்திர நீல மணியைப் போல விளங்கும் இந்த அற்புதமான உட்கதையை —யாரோ ராமாயணத்தினின்று எடுக்க ஒருப்படுவர்?''

['பால பாரதி', மார்ச்சு, 1925]

வாலி வதைப் படலம் இராமாயண விமர்சகர்களிடையே கடுமையான கருத்து வேற்றுமையைத் தோற்றுவித்துள்ள பகுதியாகும். அது பற்றியும் ஐயரவர்கள் விமர்சித்துள்ளார்:

“கிஷ்கிந்தா காண்டத்தின் பிரதான பாகமான வாலி வதை ராமாயணத்தின் வஸ்துவுக்கு அவயவ சம்பந்தம் வாய்ந்ததன்றாதலால், அதை எடுத்து விட்டதினால் கதைக்கு யாதொரு ஊனமும் வராது. ஆனால், கம்பன், தன் நாடகத் திறமை அனைத்தையும் இந்த வாலி வதைப் படலத்தில் கொட்டி வைத்துவிட்டான். இந்த வாலி வதை உபாக்கியானத்தை மாத்திரம் எழுதி வைத்துவிட்டு வேறொன்றும் எழுதி வையாமல் இருந்திருந்தாற்கூட அறிஞர் அவனை உலகத்து மகா கவிகளின் வர்க்கத்தில் சேர்க்காமல் விடத் துணியார். அத்துணைச் சிறப்பு வாய்ந்தது கம்பனுடைய வாலி வதை உபாக்கியானம்.''

['பால பாரதி', மார்ச்சு, 1925.]

சுந்தர காண்டம் பற்றி...

வால்மீகி இராமாயணத்திலுள்ள சுந்தர காண்டம் ஏனைய காண்டங்களைவிடச் சிறப்புடையதாகவும், இராம

பக்தர்கள் பாராயணம் செய்யத் தக்கதாகவும் பயன்பட்டு வருகின்றது. துளசிதாசர் புனைந்த இராமாயணத்திலுள்ள சுந்தர காண்டப் பகுதி இந்தி மொழி வழங்கும் மாநிலங் களிலே பக்தி இலக்கியமாகவே பாவிக்கப்படுகிறது.

ஐயரவர்கள் சுந்தர காண்டத்தைத் தமக்கேயுரிய தனிப் போக்கில் விமர்சித்துள்ளார். அது வருமாறு:

"கவி தன் அருமையை யெல்லாம், தன் சக்தியை யெல்லாம், தான் சிறையிருந்து உலகை விடுவிக்க வந்த எம் பெருமாட்டியான சீதா பிராட்டியின் பெருமைகளை வர்ணிக்கும் இந்தச் சுந்தர காண்டத்திலேயே வரையாமற் செலவு செய்திருக்கின்றான். சிறையிருந்தாளின் சீற்றத்தைக் கூறுகின்றதுதான் ராமாயணம் என்று ஸ்ரீ பிள்ளை லோகா சாரியார் சொல்லியதும், ஸீதாயாச் சரிதம் மகத் என்னும் வால்மீகி ராமாயணப் பாயிரத்தின் சூத்திரத்திற்கு இலக்கிய மாக விளங்கும் வால்மீகி ராமாயண சுந்தர காண்டத்தையும், அதற்கு நான் தோற்றேனில்லை என்று துவஜம் கட்டி நிற்கும் கம்ப ராமாயணத்தின் சுந்தர காண்டத்தையும் கருதியே யாகும்."

['பால பாரதி', மார்ச், 1925.]

"ஊர்தேடு படலத்தில் கம்பனுடைய செழுமையுள்ள பாவனா சக்தி கரைபுரண்டோடி இலங்கையை சுவர்க்கத் திற்கும் விழுமியதோர் பூமியாக்கி விடுகிறது. பின்னே வர இருக்கும் சீதையின் சோகத்திற்கும், இலங்கைத் தீவின் ஆவேசத்திற்கும் இது மணியின் ஜொலிப்பைத் தூக்கிக் காட்டும் வர்ணத் தகட்டைப் போல அடிநிலமாக விளங்கு கிறது."

['பால பாரதி,' மார்ச்சு, 1925.]

"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்பது வள்ளுவர் வாக்கு. இதுபோல, காப்பிய உலகிலே முதனூல் செய்த வால்மீகியும் வழி நூல் செய்த கம்பரும், தந்தையும் மகனுமாக விளங்குகின்றனர். பிற்காலத்தில் தோன்றியதனுலும், வால்மீகியிடம் ஆழ்ந்த பக்தி கொண்டு புலமைத் தேனைப் பருகியதாலும், தந்தையினும் அதிக புலமை மிக்கவராக விளங்குகின்றார் கம்பர்.

இதோ, உரைநடையிலே கவிதைக்குரிய அழகைப் புலப் படுத்தி வான்மீகியையும் கம்பரையும் ஒப்பிட்டுக் காட்டி, தந்தையினும் மகனே திறனுடையான் என்று தீர்ப்புக் கூறு கின்றார் ஐயர்.

"ஒரு உத்கிருஷ்டமான கவிக்குப் பிறகு இன்னொரு கவி அதே கதையைப் பாடினு னுனல், முதல் கவியின் போக்கும் வாக்கும் பின்னவன் காலைச் சுற்றி நிற்கும் ஈயத்தளைபோலாகி விடுகின்றன. ஆனல், கம்பன் பூ மண்டலத்தை ஓர் தலையால் தாங்கும் ஆயிரந்தலை ஆதிசேஷன் போல வால்மீகியின் கனத்தை அலட்சியமாய்த் தாங்கி நடப்பதோடு, அவனது கதையையும் தனக்குக் குற்றவேல் செய்து தன் உத்பிரேக்ஷை களை அலங்கரிக்கும் மணிப் பூண்களாகச் செய்துவிடுகிறான்.

"பிறருடைய கதைகளை சுவீகரித்து, அவற்றை முதனூ லாசிரியன் போலவே சுதந்திரமாகவும் கம்பீரமாகவும் நடத்திக்கொண்டு போவதில் கம்பன் ஹோமரின் கதைகளைச் சுவீகரித்துக் கையாண்ட எஸ்கூலனுக்கும் ஸோபோகிள னுக்கும் ஓர் படி உயர்ந்தவன் எனவே அறிஞர் கண்டு கொள்வர்."

['பால பாரதி,' மார்ச்சு, 1925.]

கம்பன், உலக மகாகவி!

உலக மகாகவிகள் அவையிலே தலைமை தாங்கும் தகுதியை ஒரு மகாகவி பெற முடியுமானல், அவர் தமிழ் மொழி தந்த கம்பராகத்தான் இருக்க முடியும் என்பதனை, பன்

மொழி பயின்ற பெரும் புலவரான வ. வெ. சு. ஐயர் வாக்கால் அறிவோம் :

"ரஸவாதிகளுக்கும் அகப்படாத ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்துக்கிணையான கம்பீரமான செய்யுள்களும், அவற்றைப் பொருந்த அமைத்து வைக்கும் ரசனைத் திறனுமே கம்பனைப் பிராகிருதமான கவிகளினின்றும், அவன் சாதியைச் சேர்ந்த கலைவலாளரான வால்மீகி, வியாசன், ஹோமர்,மில்தன் முதலியோரினின்றும் வேறுபடுத்தித் தனிச் சிறப்புத் தருகின்றன."

கம்ப ராமாயணத்தை விமர்சிக்கும் புலவர்களிலே எவரும் யுத்த காண்டத்தில் ஆழ்ந்துவிடும் வழக்கமில்லை. அதிலே கம்பனுடைய புலமையிலே ஆழமில்லை என்று கருதுவோரும் உண்டு. ஆனால், வ. வெ. சு. ஐயர் வேறுவிதமாகக் கருதுகிறார். அதனை அவரே கூறக் கேட்போம்:

"கம்பனுடைய யுத்த காண்டம் ஒன்று மாத்திரம் அளவில் மேனாட்டுப் பெரிய காவியங்களுக்கு ஏறத்தாழச் சரியாக இருக்கிறது. சாதாரணப் பதிப்புகளில் யுத்த காண்டத்தில் 4358 விருத்தங்கள் காணப்படுகின்றன. ஹோமர் எழுதிய இலியாதில் 15,693 அறுசீர்வரிகளே இருக்கின்றன என்று கணக்கிடுகிறார்கள். ஆதலால், கம்பனது யுத்தகாண்டம் இலியாதைவிடப் பெரிதாகவே இருக்கிறது. அவ் இலியாதில் உள்ள சகல சுவைகளையும் இக்காண்டத்தில் நாம் காணலாகும்.

"இக் காண்டமே கம்ப ராமாயணத்தின் இறுதிக் காண்டம். இதில்தான் கதையின் வஸ்து சம்பூர்ணமாகிறது. சாதாரணமாக நமது பண்டிதர் யுத்த காண்டத்தை மற்ற ஐந்து காண்டங்களையும் படிக்கும் கவனத்துடன் படிக்கிறதில்லை. அவர்கள் இதில் மற்ற காண்டங்களில் உள்ள சுகம் இல்லை என்ற ஓர் எண்ணத்தை உண்டாக்கி படிப்போருக்கு இதன்மீது ஓர் அசிரத்தை ஏற்படும்படி செய்து விட்டார்கள்.

ஆனால் கம்ப ராமாயணத்தின் பெருமை எல்லாம் இவ் யுத்த காண்டத்தில்தான் காணப்படும். இதுதான் கம்ப ராமாயணமாகிற விஸ்தாரமான துர்க்கத்தில் அரசன் உகந்து வாழும் அரண்மனை யாகும்.

"ஆகையால் கம்பன், தனது ரசனைத் திறன் அனைத்தை யும் இங்கே காட்டியிருப்பான் என்று எதிர் பார்ப்பது முறையே யாகும் கம்பனும் அவ்வாறு உண்மையில் தம் சக்தி அனைத்தையும் இக் காண்டத்தில் காட்டியுள்ளான்.

"போரை வர்ணிப்பதில் ஹோமரேதான் சிறந்த கவி என்ற மேனாட்டு ஆசிரியரின் கூற்றுக்களைக் கண்டும், ஹோமரின் உத்கிருஷ்டமான யுத்த வர்ணனைகளைப் படித்துப் பார்த்தும் நாம் மயங்கிப்போய், ஹோமரின் போர்ச் சித்திரங் களைவிட, உயர்ந்த சித்திரங்கள் கிடையா என மதித் திருந்தோம். ஆனால், கம்பராமாயணத்தின் யுத்த காண்டத் தைப் படித்துப் பார்த்ததும், கம்பன் போர் வர்ணனையில் ஹோமருக்குத் தாழ்ந்தவனில்லை என்றும், சில இடங்களிலும், சில விஷயங்களிலும் ஹோமரது போர் வர்ணனையை வென் றிருக்கிறானென்றும் கண்டு கொண்டோம்."

['பால பாரதி, மே, 1925]

கம்ப ராமாயணந் தவிர...

ஐயரவர்கள் வால்மீகியை விடவும் கம்பரைச் சிறப் பித்துத் தமது 'பால பாரதி மாத இதழிலே எழுதிவந்த காலத்திலேயே பலர் அவரைக் குறை கூறினர். சிலர் கோபத் தையும் வெளிப்படுத்தினர். அதற்கெல்லாம் அவர் அஞ்ச வில்லை. தமக்கு எதிராக எழுந்த கண்டனங்களுக்கு அவர் சமாதானம் கூறினர். ஆயினும் வால்மீகியினும் கம்பனே சிறந்தவன் என்னும் தமது கருத்தை உறுதிப்படுத் தினர். வை.சேஷகிரி ஐயர் என்பவருடைய கண்டனத்துக்கு வ. வெ. சு. ஐயர் பதிலளித்தபோது,

"இரசனைச் சுகம் கம்பராமாயணத்தில் அதிகம் காணப்படுகிறது என்பதே எனது கட்சி! வால்மீகியில் இரசனைச் சுவை இல்லவே இல்லை என்று நான் கூறுவதாக ஒருநாளும் ஆகாது. மற்று ரசனைச் சுவையில் வால்மீகி ராமாயணம் கம்பராமாயணத்தைத் தவிர மற்றெல்லா மகா காவியங்களையும் விட உயர்ந்தது என்பதே எனது தாழ்ந்த அபிப்பிராயம்."

['பால பாரதி'; மார்ச், 1025.]

இப்படி, உலக மகாகவிகளின் அவையிலே தமிழ்மொழிப் புலவனான கம்பன் தலைமை தாங்குகின்றான்; மகாகவிகள் மத்தியிலே அவன் சக்ரவர்த்தியாக விளங்குகின்றான் என்ற உண்மையினை உலகறியச் சொல்லி. தமிழ் மொழிக்குப் பெருமை தேடினார் வ. வெ. சு. ஐயர். அவர், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகச் செம்மல்; தேசியவாதி என்பதனை நினைக்கும்போது எனது இதயம் பூரிக்கின்றது.

['செங்கோல்', 22-3-70]

கம்பனும் இளங்கோவும்

இராமாயணம் தந்த கம்பருக்கு ஆயிரமாண்டுகளுக்கு முற்பட்டவர் சிலப்பதிகாரம் தந்த இளங்கோ. இளங்கோவுக்கும் சற்றேறக்குறைய இரண்டாயிரமாண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் வடமொழியில் இராமாயணந் தந்த வான்மீகி.

வான்மீகி இராமாயணத்தை இளங்கோ அறிந்திருந்தார். அவர் காலத்தில் தமிழகத்தில் இராம கதை பரவியிருந்தது. சங்க இலக்கியங்களில் ஒன்றிரு இடங்களிலேதான் இராமாயணம் பற்றிய குறிப்புகள் காணக் கிடக்கின்றனவென்றாலும், சங்க காலத் தமிழர்—குறிப்பாக, தமிழ்ப் புலவர்கள் இராம கதையை அறிந்திருந்தார்கள் என்பதற்கு சிலப்பதிகாரத்திலே சான்றுகள் உள்ளன.

பழைய கதை !

பூம்புகாரை விட்டு மதுரை போந்த துன்பத்திற்கு வருந்தும் கோவலனுக்கு ஆறுதல் கூறும் கவுந்தியடிகள்,

> "தாதை ஏவலின் மாதுடன் போகிக்
> காதலி நீங்கக் கடுந்துப ருழந்தோன்
> வேத முதல்வன் பயந்தோ னென்பது
> நீயறிந் திலையோ? நெடுமொழி யன்றோ!"

என்கிறார். இதிலே, "நெடுமொழி" என்று கவுந்தி கூறுவதால், சிலப்பதிகாரம் பிறப்பதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே இராம கதை தமிழ் நாட்டில் வழங்கி வந்ததென்பது புலனாகின்றது.

வான்மீகி பாரத நாட்டின் கலாசார ஒருமைப்பாட்டை உறுதிப் படுத்தவே இராமாயணத்தைப் படைத்தார்.

காப்பிய நாயக, நாயகியரான இராமனையும் சீதையையும் பாரதத்தின் தென்கோடி வரை—அதற்கப்பாலும் இலங்கை வரை உலவ விட்டு, இந்திய உப கண்டத்திலுள்ள நாடுகளிடையே கலாசார ஒருமைப்பாட்டை வளர்க்க முயன்றார்.

இதனை இளங்கோ நன்கு உணர்ந்திருந்தார். ஆனால், "கலாசார ஒருமைப்பாடு" என்பது 'ஒரு வழிப் பாதை'யாகி விடக் கூடாதென்பதற் காக,சிலப்பதிகாரக் காப்பியத்தைப் படைத்து, வான்மீகியின் கலாசார ஒருமைப்பாட்டுக் கனவு நனவாக உதவி புரிந்தார்.

மிதிலைச் செல்வியாம் சீதையைத் தென்பாரதத் தமிழருக்கும் அறிமுகப்படுத்தி, பாரத நாட்டின் பொதுத் தெய்வமாக்கி, பாரத சமுதாயத்தை ஒருமைப்படுத்த முயன்றார் வான்மீகி. அதுபோல, பூம்புகார்ச் செல்வியான கண்ணகியை வட பாரதத்திற்கு அறிமுகப்படுத்தி, அந்தக் கற்புக் கனலியையும் பாரதப் பெருநாட்டின் பொதுத் தெய்வமாக்க முயன்றார் இளங்கோ. இதனை,

"கொங்கச் செல்வி, குடமலை யாட்டி,
தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து,
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி..." [வேட்டுவ வரி, 47—50]

என்ற வரிகளால் அறிகிறோம்.

வடபுலத்திலே கண்ணகியை யாரறிவார்?

வான்மீகியின் கனவு பலித்தது. வடபுலத்து மிதிலையில் பிறந்த சீதை தென் கோடித் தமிழகத்தாரும் கற்புக்கு வழிபடும் கடவுளாகி விட்டாள். ஆனால், கண்ணகியின் பெயரை—பெருமையை வடக்கே யாரறிவார்? வடபுலத்து வான்மீகிக்கு தென் புலத்தில் ஒரு கம்பர் கிடைத்தார், சீதையின் புகழைச் செந்தமிழில் பாட! அதுபோல, தென்புலத்து இளங்கோவுக்கு வடபுலத்தில் ஒரு கம்பன் தோன்றவில்லை

வடமொழியில் கண்ணகி புகழ்பாட! எதிர்காலத்திலேனும் தோன்றக் கூடுமென்ற நம்பிக்கையோடு காத்திருப்போமாக!

தமிழ் மொழி உயர் ஆரியத்திற்கு நிகரானதென்றார் பாரதியார். அந்த உயர் மொழி கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடியினரான தமிழினத்தவரின் தாய்மொழி, தன்னை அழித்துக்கொண்டு, தேசிய ஒருமைப்பாட்டிற்கு உதவி புரியாது. திரும்பவும் சொல்லுகிறேன், "தேசிய ஒருமைப்பாடு" என்பது ஒரு வழிப் பாதையல்ல! வட புலத்து சீதையைத் தென்புலத்தார் ஏற்று வழிபடுவதுபோல, தென்புலத்துக் கண்ணகியை வட புலத்தாரும் ஏற்று வழிபடும் நாள் வரவேண்டும். கொண்டும் கொடுத்தும் உறவாடுவதுதான் உரிமையை இழக்காத ஒருமைப்பாடு!

கம்பராமன் தமிழிறிந்தவன்!

இராமனைத் தமிழ் நாட்டவரும் வழிபடும் தெய்வமாக்கிய கம்பர், அந்தக் காப்பிய நாயகன் தென்மொழியான தமிழில் புலமையுடையவன் என்கிறார்.

"தென்சொற் கடந்தான்
வடசொற் கலைக்கு
எல்லை தேர்ந்தான்"

என்பது கம்பர் வாக்கு, தமிழ் நாட்டிலே இராமன் செல்வாக்கு பெற வேண்டுமானால், அவனும் தமிழில் புலமை பெற வேண்டுந்தானே! இராமன் 'தென்சொற் கடந்தான்' என்பது, கம்பனின் கற்பனையாக இருக்கலாம். அந்தக் கற்பனையின் வாயிலாக வட நாட்டறிஞரொருவர் தமிழ் நாட்டில் தலைமை பெற வேண்டுமானால், தமிழில் புலமை பெற்றாக வேண்டுமென்பது கம்பன் கருத்தாகும்.

இளங்கோ தந்த சிலப்பதிகாரக் காப்பியத் தலைவியின் தலைவனான கோவலன் வடமொழி அறிந்தவன். அந்தண மாதொருத்தி தன் கணவன் தந்த வட மொழி வாசக

மெழுதப்பட்ட ஓலையொன்றைக் கோவலனிடம் காட்ட, அவன் அதைப் படித்து புரிந்துகொண்டு, ஓலை கொடுத்த அந்தண மாதுக்குப் பொருள் கொடுக்கிறான். இதனால், கோவலன் வடமொழி அறிந்தவனென்பது புலனாகின்றது. சிலப்பதிகாரக் கோவலன் வடபுலத்திலும் புகழ்பெற வேண்டுமென்ற ஆர்வத்தாலேயே அவனை வடமொழி படித்தவனாக அறிமுகப்படுத்துகிறார் இளங்கோ.

இன்னொரு முறையும் சொல்லுகிறேன், 'ஒருமைப்பாடு' என்பது ஒரு வழிப் பாதையன்று. வடக்கும் தெற்கும் கொண்டும் கொடுத்தும் இலக்கியப் பரிவர்த்தனை செய்து, கொண்டால் மாத்திரமே கலாசார ஒருமைப்பாடு சாத்தியமாகும்.

இராமனை தெய்வமாக்கியவர் கம்பரல்ல; இளங்கோவே!

கம்பன் இராமனைத் திருமாலின் அவதாரமாகக் கற்பித்துப் பாடினான் என்று சிலர் கருதுகின்றனர். கம்பனுக்கு ஆயிரமாண்டுகட்கு முன்பே இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரக் காப்பியத்திலே, இராமனை, "வேத முதல்வனைப் பயந்தோன்" என்கிறார். ஆம்; "பிரம்மாவை ஈன்ற திருமாலே இராமனாக அவதரித்தான்" என்கிறார்.

கம்பன் கண்ட சீதை, இராவணனால் தான் அபகரிக்கப்பட்ட பின்னரும், தன் தலைவன் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள் அசோகவனத்திலே! இதைக் காட்டி, தன் கணவனைக் கொன்ற பாண்டிய மன்னனின் தலைநகரான மதுரையை கண்ணகி கொளுத்தியது தவறு என்கின்றனர் சிலர். இது, ஆராய்ச்சியற்ற வாதம். கொடுங்கோலனின் நாட்டைக் கொளுத்த வேண்டுமென்பதிலே கண்ணகிக்கும் சீதைக்கும் கருத்தொற்றுமை உண்டு. அனுமனிடம்.

"அல்லன் மாக்கள் இலங்கைய தாகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன் அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்"

என்கிறாள் சீதை.

"நான் விரும்பினால், எனக்குக் கொடுமை செய்த இராவணனுடைய இலங்கையையேயன்றி, இந்தக் கொடுமையைப் பார்த்துக் கொண்டிருக்கும் உலகங்கள் அனைத்தையுமே சுட்டுப் பொசுக்குவேன்" என்பது சீதையின் வாக்கு.

இலங்கையை எரிக்க நியாயமிருந்தும்—எரிக்க ஆற்றலிருந்தும், அதைச் செய்யாமல் சீதை பொறுத்திருந்தாளென்றால், அவள் கணவன் இராமன் உயிரோடிருந்ததுதான் காரணம்.

'கம்பன் என் பாட்டன்!'

நான் இளங்கோவை விரும்புகிறேன் என்பது உண்மை. அதற்காகக் கம்பனை வெறுக்கிறேன் என்று யாரும் கருத வேண்டாம். எனது இலக்கியக் குடும்பத்திலே, பாரதி என் அப்பன்; கம்பன் என் பாட்டன்; இளங்கோவும் வள்ளுவனும் என் முப்பாட்டன்மார்! தமிழ்ப்பற்று காரணமாகவும் நான் பாரதி, கம்பர், இளங்கோ, வள்ளுவர் ஆகிய மகா கவிகளை நேசிக்கிறேன். அவர்களை, தமிழ் வளர்த்த—தமிழினத்திற்கு வாழ்வளித்த தமிழர்களாக நான் கருதுகிறேன்.

கம்பன், தமிழ் மொழியை வளர்த்தான்; அதனால், அந்த மொழிக்கு வாழ்வளித்தான். அப்படித்தான் இளங்கோவும். தமிழ்மொழிக் காவலர்களாகவே அவர்களை நான் காண்கிறேன். அதற்காகவே அவர்களை நான் வணங்குகின்றேன்.

அவர்களுடைய வாரிசுகளாக நாம் வாழவேண்டும், தமிழிலுள்ள பழைய சொற்களைப் புதிய பொருளோடு பயன் படுத்த வேண்டும். தோன்றி வரும் புதுப் புதுப் பொருள் களைச் சொல்லத் தேவைப்படும் புதிய புதிய சொற்களையும் படைக்க வேண்டும்.

வாழ்க, கம்பன் புகழ்!
வாழக, இளங்கோ புகழ்!

['செங்கோல், 21-5-72]

ஏகத் தலைமையா, கூட்டுத் தலைமையா?

இன்றைய இந்திய அரசியலில் ஒரு சுவையான விவாதம் நிகழ்ந்து வருகிறது. அது, "தனித் தலைமையா? கூட்டுத் தலைமையா?" என்பதாகும். தனித் தலைமையைச் "சர்வாதிகாரம்" என்று வருணிக்கின்றனர், கூட்டுத் தலைமை வேண்டுவோர். "கூட்டுத் தலைமை வெற்றிக்கு வழிகாட்டாது" என்கின்றனர், தனித் தலைமை விரும்பிகள்!

இராமன் ஏகத்தலைவன்!

இந்தப் பிரச்னையிலே இந்தியக் காப்பியங்கள் ஏதேனும் வழிகாட்டுகின்றனவா என்று பார்த்தால், வான்மீகி ராமாயணமும், வியாச பாரதமும் நம்முடைய நினைவுக்கு வருகின்றன. சமயக் கண்கொண்டு பார்க்கும்போது, இந்த இரண்டு காப்பியங்களிலுமே திருமாலின் அவதாரம் எனப் படும் இராமனும் கிருஷ்ணனுமே தனித் தலைவர்களாகின்றனர். ஆனால், இலக்கியக் கண்கொண்டு காணும்போது காட்சி மாறுபடுகின்றது.

இராமாயணத்திலே இராமன்தான் ஏகத்தலைவன். இதிலே, கருத்து வேறுபாட்டிற்கு இடமிருக்கவில்லை. இராமனை ஈன்ற தாயான கோசலையும், அவனை ஆன்றவிந்தடங்கிய சான்றோனாக்கிய தயரதனும், மனித குலத்தின் மாணிக்கமாகக் கருதி, அவனுக்கு மரியாதை செலுத்துகின்றனர். அந்தணோத்தமரான பிரதமர் சுமந்திரரும், மாமன்னனாக மட்டுமின்றி, அந்தணரினும் மேம்பட்ட செந்தண்மையாளனாகவும் கருதி, அவனுக்குப் பணிபுரிகிறார்.

ஆரண்யத்தில் வாழும் அகத்தியர் உள்ளிட்ட முனிவர்கள் எல்லாம் அவனையே தங்கள் புகலிடமாகக் கொண்டு அரக்கர்

களிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ள முயல்கின்றனர். இந்திரன் முதலான வானுலகத் தேவர்களும் இராமனை ஒப்புயர்வற்ற உத்தமனுகக் கருதுகின்றனர்.

இப்படி, இராமாயணத்தில் தனக்கு இணை யாருமற்ற ஏகத் தலைவனுக விளங்குகிறுன் இராமன். இந்தக் காப்பியத்திற்கு அவன்தான் ஏகத் தலைவன். அடுத்த அந்தஸ்தில் கூட இன்னெருவன் இல்லை.

மாபாரதக் கண்ணன்...?

வியாசர் படைத்த மாபாரதத்தை இப்படிச் சொல்வதற்கில்லை. அங்கே அவதார புருஷனுன கண்ணன் பாண்டவர்களுடைய வணக்கத்திற்குரியவனுகக் காட்சியளிக்கிறுன். ஏன்? வில்லர்களான துரியோதனுதியர் கூட, கண்ணனை மரியாதைக்குரிய மாமனிதனுகக் கருதுகின்றனர். ஆயினும், அவன் மாபாரதக் காப்பியத்தின் ஏகத் தலைவன் என்று சொல்வதற்கில்லை. பாண்டவருக்கும், கௌரவருக்கும் அப்பாற்பட்ட மூன்ருவது மனிதனுகவே பல்வேறிடங்களில் கண்ணன் நடிக்கிறுன். பாண்டவர் சார்பில் துரியோதனுதியரிடம் கண்ணன் தூது சென்றது மூன்ருவது மனிதனுகத்தான்.

மாபாரதப் போரிலே பாண்டவர் சார்பில் ஆயுதத்தை ஏந்துவதில்லையென்று துரியோதனுதியரிடம் கண்ணன் உறுதி மொழி தருவதும் தான் மூன்ருவது மனிதன் என்பதை உறுதிப்படுத்தத்தான். ' கண்ணனை மாபாரதக் காப்பியத்தின் ஏகத் தலைவனுகக் கருதாவிட்டால், பின், அந்த இடத்தில் யாரை வைப்பது? தருமனையா?'' என்று கேட்டால், அவன், காப்பியத்தின் பல்வேறிடங்களில் கண்ணனிடம் அடைக்கலம் புகுகிறுன். தனது வெற்றிக்குத் துணைபுரியுமாறு வேண்டுகோள் விடுக்கிறுன். மாபாரதப் போரின் போதும், அதற்கு முன்னும் பல்வேறிடங்களில் தன்னுடைய தம்பியரால் தருமன் எதிர்க்கப்படுகிறுன்—ஏசவும் படுகிறுன்.

துரியோதனுதியரை அழிப்பதற்குப் பாண்டவரிலே ஒவ்வொருவரும் தன் தன்னையே ஏகத் தலைவன் என்ற நிலையில் நினைத்துக் கொண்டு சூளுரைக்கின்றனர். பாஞ்சாலியும் இதற்கு விலக்கு அல்ல.

தருமனுடைய தம்பியர் தனித் தனித் தந்தையருக்குப் பிறந்தவர் என்பதால், உடன்பிறப்புக்கள் எனற அளவில்கூட அவர்கள் மீது சம அளவில் தருமனுக்கு உரிமை இருக்கவில்லை. அவனுடைய மனைவியான பாஞ்சாலி ஐவருக்கும் பொதுவாகி விட்டதால் அவள் மீதும் முழு உரிமை தருமனுக்கு இருக்கவில்லை. போர்க்களத்திலே தன்னுடைய வாய்மையைக் காத்துக் கொள்ளும் உரிமை கூட இல்லாமல் கண்ணனுல் நிர்ப்பந்திக்சப்பட்டு வாய்மை தவறுகிறுன். இத்துணைக் குறைபாடுகளுடைய பாத்திரமாகிவிட்ட தருமனும் காப்பியத்தின் ஏகத் தலைவனுக இருப்பதற்கில்லை.

கௌரவர் அணியிலே ..

மாபாரதத்திலே பாண்டவர் அணியின் பகைவர்களான துரியோதனுதிய ரிடையிலும் தனித் தலைமைக்குத் தகுதியுடையவர் எவருமில்லை. ஆம்; அரவக் கொடியோனுன துரியோதனன் கூட, தன்னேரில்லாத் தலைவன் அல்லன்; அவனுடைய சிற்றப்பனுன விதுரன் வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் அவனை வாயாரப் பழிக்கிறுன். துரியோதனன் தன் பகைவனுகக் கருதும் கண்ணனை தன்வீட்டிற்கு அழைத்து அவனை விருந்தினனுக ஏற்கிறுன். போர் மூளவிருந்த தருணத்திலே துரியோதனுதியருக்கு வெற்றி தேடித் தரும் ஆற்றல் படைத்த தனது வில்லையும் முறித்து எறிகிறுன் விதுரன். துரியோதனனின் தம்பியான விகர்ணன் கூட, தமையனுடைய போக்கு பிடிக்காமல் அவனைக் கடிந்து கொள்ளுகிறுன்.

கௌரவர் அணியிலே அரசியல் ரீதியிலான தலைவன் துரியோதனன்தான் என்ருலும், அவனினும் செல்வாக்கு மிக்கவர்களாக பீஷ்மரும், துரோணரும், கிருபரும் விளங்கு

கின்றனர். இது, துரியோதனனின் தன்னேரில்லாத் தலைமைக்குரிய தகுதியைக் குறைத்துவிடுகிறது.

கர்ணன் பேராற்றல் மிக்கவன்தான் என்றாலும், செஞ்சோற்றுக் கடன் தீர்க்கத்தான் அவன் துரியோதனனுதியரைச் சார்ந்திருக்கிறான். துரியோதனன் ஒருவனைத் தவிர கௌரவர்களிலே வேறு எவரும் கர்ணனைத் தங்கள் அரச வம்சத்தவனாகக் கருதவில்லை. "தேரோட்டி மகன்" என்று சொல்லியும் அவனை ஏசுகின்றனர்.

வியாசர் படைத்த மாபாரதத்திலே ஒரு பெருங்காப்பியத்திற்குரிய தன்னேரில்லாத் தலைவனாகக் கொள்ளத் தக்க பாத்திரம் ஒன்றுகூட இல்லை. சுருங்கச்சொன்னால், மாபாரதத்திலே, பாண்டவர் தரப்பிலும் கூட்டுத் தலைமைதான்! துரியோதனனுதியர் தரப்பிலும் கூட்டுத் தலைமைதான்!

இராமாயணத்திலே இந்தச் சிக்கல் இல்லை. இங்கு, இராமன்தான் தன்னேரில்லாத் தலைவன். இந்தக் காலத்து அரசியல் வாதிகளுக்குப் புரிகின்ற பாஷையில் சொல்ல வேண்டுமானால், ஏகத்தலைவன் இராமன்!

ஒரு தலைவன் அவனுடைய பகைவனாலும் ஆட்சேபிக்க முடியாத—அங்கீகரிக்கத்தக்க—தலைமைத் தகுதியைப் பெற்றவனாக இருக்க வேண்டும். அவனைத்தான் "தன்னேரில்லாத் தலைவன்"—அதாவது, "ஏகதலைவன்" என்று சொல்லலாம். இராமாயணத்திலே இராவணேசுவரனும் போர் முடியும் தருவாயில் இராமனுடைய தலைமையைப் புகழ்ந்து பேசுகிறான், மாலியவானிடத்திலே!

கண்ணனும் இராமனும்

மாபாரதத்திலே, கண்ணனை அரச குலத்தவனாகவே அங்கீகரிக்க மறுக்கிறான்; "இடைப்பயல்" என்று ஏசுகின்றான் ஜராசந்தன். கண்ணனுடைய நடைமுறைகளை அவன் அண்ணனான பலராமனே ஆட்சேபிக்கிறான். போரில் கலந்து

கொள்ள மறுத்து, போர் முடியும்வரை திரும்புவதில்லை யென்று சூளுரைத்துத் தீர்த்தயாத்திரை போகிறான். கூட்டுத் தலைமையுடைய அணியிலே எவ்வளவு குழப்பங்கள் ஏற்படும் என்பதற்கு மாபாரதம் சிறந்த சான்று!

கூட்டுத் தலைமையின் கீழ் நடந்த பாரதப் போரில் பாண்டவர் வென்றனர் என்றாலும், அந்த வெற்றி அவர் களுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. அது, குருகுலத்தையே அழித்து முடித்த வெற்றியாகி விட்டதல்லவா! இதுதான் கூட்டுத் தலைமையின் பலன்! கௌரவர் குலத்தைப் போன்று தேசம் அழிய வேண்டுமானால், அதற்குத் தேவைப்படுவது கூட்டுத் தலைமைதான்!

ஏகத் தலைமை பெற்ற இராமாயணத்திலே மனித குலத்தின் வழிபடு தெய்வமாக இராமன் அறிமுகமாகிறான்; அரக்கர்களை அழித்து முடிக்கிறான்; அதன் பலனை மனித குலத்திற்கும் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் அளிக்கிறான். இது, ஏகத் தலைமையின் சிறப்பு!

மாபாரதமானது குடும்பச் சண்டையைக் கருப் பொருளாகக் கொண்டது. அதனாற்றான், அங்கு கூட்டுத் தலைமையைப் படைத்தார் வியாச முனிவர். இராமாயணத் திலே, இராம—ராவணப் போர் குடுமபச் சண்டையல்ல, அது ஒருவிதமான வர்க்கப் போர்! அசுர வர்க்கத் திடமிருந்து மானுடவர்க்கத்திற்கு விடுதலை தேடித்தரும் போர்! அநீதியை அழித்து நீதியை நிலைநாட்டும் போர்!

வர்க்க ரீதியான போரைச் சந்திக்கும் எந்தச் சமுதாயமும் கூட்டுத் தலைமையைப் பெறுவது சாத்திய மில்லை; ஏகத் தலைமையைத்தான் பெற்றாக வேண்டும். சுரண்டுகின்ற வர்க்கத்திடமிருந்து, சுரண்டப்படும் வர்க்கத் தைக் காப்பாற்ற நடக்கின்ற போராட்டத்திலே, கூட்டுத் தலைமை பயன்படாது. ஏகத் தலைமையே வெற்றி தரும்!

தன்னடக்கத் தலைமை!

இங்கே ஒரு உயர்ந்த நெறியை நான் நினைப்பூட்டியாக வேண்டும். ஏகத் தலைமை என்பது தத்துவ ரீதியாக சரியானதுதான் என்றாலும், அது தருமத்துக்கும் பொருந்து வதாக இருக்க வேண்டும்.

பெருங் காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்த தண்டியார் கூட, அது, ''தன்னேரில்லாத் தலைவனைக் கொண்டதாக இருக்க வேண்டும்'' என்று விதி வகுத்திருக்கிறார். இதைத் தான் 'ஏகத் தலைமை' என்கின்றனர் இந்நாளிலே! தன்னேரில் லாத் தலைமையேயானாலும் தருமத்தின் வழி செயல்பட வேண்டும். ஏகத் தலைவனான இராமனிடம் இந்த உயர் குணத்தைப் பார்க்கிறோம். அவன் திருமாலின் அவதாரம். என்பதனை அவனைச் சுற்றியுள்ள எல்லோரும் உணர்கிறார்கள். அவனுடைய பெற்றோர்கூட இந்த உணர்வுக்கு விலக்கல்ல. ஆயினும், அவன் அந்த உணர்வைப் பெற்றிருக்கவில்லை. தன்னை ஒரு மனிதனாகவே கருதுகிறான். அதனாற்றான், அவனை ஏகத் தலைவனாகப் பெற்றவர்களுக்கு, அதனால் ஒரு கேடும் விளையவில்லை. இது, ஏகத் தலைமைக்குத் தேவைப்படும் இன்றியமையா ஒழுக்கமாகும்.

['செங்கோல்', 26-3-78]

தத்துவ மேதை கம்பர்!

கவியரசர் கம்பருக்குத் தமிழ் நாடெங்கும் விழா நடக்கின்றது. "விழா எடுக்குமளவுக்குக் கம்பர் என்ன அவ்வளவு பெரும் புலவரா?" என்று கேட்பவர் தமிழ் நாட்டில் இது வரை பிறக்கவில்லை; இனியும் பிறக்கப் போவதில்லை.

எழுதப் படிக்கத் தெரியாத தமிழர்கூட, கேள்வி ஞானத்தாலேனும் கம்பருடைய பெரும் புலமையை, பேராற்றலைத் தெரிந்து வைத்திருக்கக் காண்கிறோம். இராமாயணக் காலட்சேபம் நிகழ்த்தும் புராணிகர்கள், கம்ப நாடரின் புலமையையும் பெருமையும் பன்னூறாண்டுகளாகப்பரப்பி வந்துள்ளனர். அதனால், 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' என்ற பழமொழி படிக்காதவர்களிடையேயும் வழங்கக் கேட்கின்றோம்.

"கம்பநாடர் புலமையிலே மிக்கவரென்றால், தமிழ் மறைதந்த வள்ளுவரை விடவா? அவர் வழியில் தோன்றிச் சிலம்பொலித்த இளங்கோவை விடவா?" என்று கேட்போர் இருக்கலாம். வள்ளுவரும் இளங்கோவடிகளும் தோன்றித் தத்தம் காலத்தில் தமிழ் மொழியை வளர்த்திலரேல், இன்று நாம்காணும் கம்பர் இல்லையென்று சொல்லிவிடலாம். முந்தையோர் புகழையெல்லாம் தன்புகழாக்கிக் கொண்டு புலமையின் சிகரத்திலே நிற்கின்றார் கம்பர்.

மும்மூர்த்திகள்!

மனித வாழ்க்கைக்குத் தேவைப்படும் இம்மைப் பயன்களான அறம், பொருள், இன்பம் என்னும் முந்நெறிகளையும் நீதி போதனைகளாகப் புகட்டினார் வள்ளுவர். அவற்றையே தனி மனிதர்களின் சாதனைகளாகக் காட்டி, சாதித்த பெரு

மக்களின் சரித்திரத்தைச் சிலப்பதிகாரக் காப்பியமாக்கினார் இளங்கோவடிகள்.

திருவள்ளுவர் புகட்டிய போதனைகளையும் இளங்கோ காட்டிய சாதனைகளையும் பிணைத்து, இனி பாரத சமுதாயம் காண வேண்டிய புதுமைகளையும் இணைத்து 'இராம கதை', வழங்கினார் கம்பர்.

இந்த மூவருமே தமிழ் வளர்த்த—தமிழினத்தவருக்கு வாழ்வு தந்த—மும்மூர்த்திகளாவர். இந்த மும்மூர்த்திகள் இல்லையானால், முத்தமிழுக்கு இன்றுள்ள பெருமை ஏது? இந்த உண்மையை உணர்த்தவே,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை
வெறும் புகழ்ச்சியில்லை;"

என்றும்,

"கம்ப னென்றொரு
மானிடன் வாழ்ந்ததும்
சேரன் தம்பி
சிலம்பை யிசைத்ததும்
தெய்வ வள்ளுவன்
வான்மறை செய்ததும்"

என்றும் பாடினார் பாரதியார்.

ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனியே தேசியக் கொடி, தேசிய கீதம், தேசிய சின்னம் இருக்கக் காண்கின்றோம். அதுபோல, தமிழ் நாட்டின் தேசியக் கனிகளாக மா, பலா, வாழை என்னும் முக்கனியைக் கூறலாம். தேசியக் கவிஞர்களாக வள்ளுவர், இளங்கோ, கம்பரைக் கூறலாம்...

எதிலும் மூன்று!

தமிழினத்தார் ஒவ்வொன்றிலும் மும்மூன்றைப் பெற்றவர். ஆதலால், தேசியக் கனிகளையும் தேசியக் கவிஞர்களையும் கூட மும்மூன்றாகப் பெற்றதில் வியப்பில்லையல்லவா!

இன்னும் தமிழர் நாடு மூன்று; அவை, சேர—சோழ—பாண்டிய நாடுகள்.

கொடி மூன்று; விற்கொடி. புலிக்கொடி, மீன்கொடி!

மொழி மூன்று; இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ்!

மருந்துக்கான மூலப் பொருள் மூன்று; அவை சுக்கு. மிளகு, திப்பிலி!

இசைக் கருவி மூன்று; அவை, யாழ், குழல், முழவு!

இப்படியே. தமிழினத்தின் தேசியக் கவிஞர்கள் மூவர்; அவர்கள் வள்ளுவர், இளங்கோ, கம்பர்!

மகாகவி கம்பருக்கு நாடெங்கும் விழா நடைபெறுகிறதென்றால். சமயப் பற்றுடையோர், கம்பருக்கு விழா எடுப்பதன் வாயிலாக இராம பக்தரை வழிபடுகின்றனர். தாய் மொழிப் பற்றுடையோர். கம்பருக்கு விழா நடத்தி கன்னித் தமிழ் மொழியை வழிபடுகின்றனர். இலக்கிய ரசிகர்கள், பட்டிமன்றம் அமைத்து. கம்ப நாடரின் பாத்திரப் படைப்பிலுள்ள சுவை வேறுபாடுகளைத் துய்க்கின்றனர்.

சொல்லுக்குச் சொல் சுவை பேதம் காட்டி, கவிதைக்குக் கவிதை கருத்தாழம் கண்டு. இடையிடையே சிந்தையைக் கவரும் வகையில் சந்தங்களையும் மாற்றிப் பாடும் ஆற்றல் கம்ப நாடரிடம் நாம் காணும் தனித் திறமையாகும்.

உயிரும் படிக்கும்!

அவருடைய கவிதைகளிலே, சுவையுண்டு; சொல் அலங்காரமுண்டு; கருத்து ஆழமும் உண்டு. கம்ப ராமாயணத்தைப்

படிக்குங்கால், நம் புறக் கண்கள் கம்பருடைய கவிதைகளைக் காணும்; அகக் கண்களோ, இராமாயணக் காட்சிகளைக் காணும். இது, நாம் பெற்றுவரும் அனுபவம். யோகத்தில் மூழ்கும் மெய்ஞ் ஞானியருக்கு புறக் கண்கள் மூடும்போது தான் அகக்கண்கள் திறக்கும். கம்ப ராமாயண ரசிகர்களுக்கோ, புறக்கண்களும் அகக்கண்களும் ஏக காலத்தில் திறந்து காட்சி தரும்.

இராமாயணக் காப்பியத்தைப் படிக்கப் புகுந்தால் நமக்குள்ள சூழ்நிலையை நாம் மறந்துவிடும்படிச் செய்துவிடுகின்றார் கம்பர். ஆம்; கம்பநாடரின் கவிதைகளோடு நாம் இரண்டறக் கலந்துவிடுங்கால், நம் நாவொன்றோ? இல்லை; நாவோடு ஊன் படிக்கும்! உளம் படிக்கும்! உயிர் படிக்கும்! உயிருக்கு உயிராக விளங்கும் உள்ளுணர்வும் படிக்கும்! கம்பர், வெறும் மானிடரல்ல; மகான்!

கம்பர், முத்தமிழைக் கற்றுணர்ந்த வித்தகர் மட்டுமல்ல, தத்துவக் கலைகளின் மொத்த வடிவம். பாரதப் பெருநாடு கண்ட தத்துவங்கள் எத்தனையுண்டோ அத்தனையிலும் புலமையுடையவர்!

உலாவியற் படலத்துள்...

பால காண்டம் உலாவியற் படலத்துள், மிதிலை வீதிகளிலே உலாப் போகும் இராமனை பரமான்மாவாகவும், அவனைக் காணும் மிதிலை மாநகர் கன்னியர்களை அப்பரமான்மாவோடு ஐக்கியமாவதற்குப் பக்குவம் பெற்ற ஜீவான்மாக்களாகவும் கற்பனை செய்து முக்தி நெறித் தத்துவத்தைப் போதிக்கின்றார்.

'கைகேயி சூழ்வினைப் படலத்'துள் தான் ஈன்ற சேயை மறந்த தாயாகக் கைகேயியை அறிமுகப்படுத்தி, தாயர் குலத்தை எச்சரிக்கிறார்.

'மந்தரைச் சூழ்ச்சிப் படலத்'துள், அரண்மனைச் சோற்றைத் தின்று வளர்ந்து, அரச குடும்பத்துக்கே கேடு

செய்யும் மந்தரையைக் காட்டி, அரசியல் கோட்டம் ஒவ்வொன்றிலும் மந்தரை போன்ற வஞ்ச(கர்)கியர் மறைந்து வாழக் கூடுமென்பதனை நினைப்பூட்டுகின்றார்.

'கங்கைப் படலத்'துள், உணர்ச்சி வடிவமான குகனைக் காட்டி, வஞ்சநெஞ்சக் கூனிகள் மறைந்து வாழும் அரசியல் குகைகளுக்குள் குகன் போன்ற தொண்டுள்ளம் படைத்த தோழர்களும் உண்டென்றுரைத்து, அரசியலில் இன்னலுறும் நன்னெறியாளர்களுக்கு ஆறுதல் கூறுகின்றார்.

'வாலி வதைப் படலத்'துள், இராமனைப் பரமான்மா வாகவும், வாலியை பக்குவம் எய்தியுள்ள ஜீவான்மா வாகவும் கற்பித்துக் கொள்ளுகின்றார் கம்பர். பரமான்மா வானது, பக்குவப்பட்டுவிட்ட ஜீவான்மாவை முதலில் மறைந்திருந்து சோதித்து, பின்னர் எதிர்வந்து ஆட்கொள்ளு மென்பர் சமய வாதிகள். அதுபோல, வாலிமீது மறைந் திருந்து அம்பெய்து, பின்காட்சியளித்து மோட்சந் தரும் இராமனை நமக்குக் காட்டி, ஜீவான்மா—பரமான்மா தத்துவத்தைப் போதிக்கிறார்.

இப்படி, இராமாயணம் முழுவதிலும் எத்தனை எத்தனையோ இடங்களில் இகபர தத்துவங்களை இலைமறை காயெனக் காட்டுகின்றார் கம்பர். ஆம்; கம்பராமாயண கதையைப் படிப்பது வேறு; கம்பனுடைய புலமையைப் படிப்பது வேறு. இராம கதையை எல்லோரும் படித் தறியலாம். ஆனால், அந்த இராம கதையிலே கம்பன் மறைத்து வைத்துள்ள தத்துவப் பொருள்களை எல்லோரும் அறிந்துகொள்வது சாத்தியமில்லை. ஒழுக்கமும் உள்ளொளி யும் உடைய ஒருசிலரே அவற்றை உணர முடியும். அவ்வளவு மாமேதை கம்பர்!

ஒரு ஆயுள் போதாது!

கம்பர், பன்னீராயிரம் பாடல்களால் 'இராமகதை'யைப் பாடினார். அந்தப் பன்னீராயிரம் பாடல்களை, 110 படலங்

களாக வகுத்தார். அவற்றையும் ஆறு காண்டங்களாகத் தொகுத்தார். இவ்வளவையும் ஒரு ஆயுளிலே சாதித்தார். கம்ப ராமாயணத்தை முற்றிலும் படித்து முடிப்பதற்கே—கம்பர் புலமையைச் சுவைத்து முடிப்பதற்கே—ஒரு ஆயுள் போதாதென்ருல், அந்த மாகாப்பியக் கடலைப் படைத்து முடிக்க ஒரு ஆயுள் போதுமா? போதுமானதாக இருந்தது கம்பருக்கு!

செயற்கரிய செய்தாரைக் கண்டு நாம் வியப்புறும்போது, "ஆ! இவரென்ன மனிதரா?" என்று நம்மை நாமே கேட்டுக் கொள்கிறோம். ஆம், மனிதரல்ல; தேவர் என்ற விடையும் அந்த வினவுக்குள்ளேயே மறைந்துகிடக்கின்றது. அதுபோல, ஒரு மனித ஆயுளில் சொல்லுக்குச் சொல் சுவையேறும் பன்னீராயிரம் பாக்களால் இராம கதையைப் பாடி முடித்த கம்பருடைய சாதனையை வியந்து, "கம்பனென்ஞெரு மானிடன்' என்கிருர் பாரதியார். அதிலேயே, 'அவன் மானிடரிலே தேவன்' என்ற பொருளையும் மறைத்து வைத்தார்.

சமய வேற்றுமைகள் மலிந்து வளர்ந்திருந்த காலத்திலே வாழ்ந்த கம்பர், சர்வ சமயத்தினரும் ஏற்கத்தக்க வகையில் படைத்தல்—காத்தல்—அழித்தல் ஆகிய முத்தொழில் புரியும் சக்திக்கு, எல்லாம் அழிந்த பின்னரும் தான்மட்டும் அழியாது நிலைத்து நிற்கும் பரம்பொருளுக்குக் காப்புச் செய்யுள் பாடினர். அவர், காலத்தை வென்ற கவிஞர்!

கம்பர் வாழ்ந்த காலத்திலே, பாரதப் பெருநிலம் ஐம்பத்தாறுக்கும் மேற்பட்ட அரசர்களால் ஆளப்படும் பல நூறு அரசியல் திட்டுகளாகவும் தீவுகளாகவும் காட்சியளித்தது. அந்த நிலையிலே,

"வைத வைவின் மராமரம் ஏழ்துளை
எய்த எய்தவற் கெய்திய மாககதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயந்தே"

என்று பாடி, பாரதம் முழுவதும் ஒரே தேசம் என்பதனை உணர்த்தினர். அவர், உண்மைத் தேசியவாதி!

கம்பர் தேச பக்தர்!

கம்பர் காலத்திலும் வடமொழி--தென்மொழிப் புலவர்களிடையே போட்டியும் பூசலும் இருந்ததுண்டு. அந்தச் சூழ்நிலையிலும் இராம கதையை வடமொழியில் பாடிய வான்மீகியை, 'பொய்யில் கேள்விப் புலமையினோன்' என்கின்றார். வடமொழியைத் 'தேவ பாஷை' என்றும், வான்மீகியைத் 'தெய்வமாக் கவி' என்றும் போற்றிப் புகழ்கின்றார் கம்பர். அவர், தாய்மொழிப் பற்றுடையவர். ஆனால், பிற மொழிப் பகையற்றவர்!

சாதி, சமயம், நாடு, மொழி ஆகிய பேதங்களைக் கடந்து காப்பியஞ் செய்த அபேதவாதி கம்பர்!

பாரத நாட்டின் வட பகுதிக்கும் தென்பகுதிக்குமிடையே கலாசாரப் பாலமிட்டு தேசிய ஒருமைப்பாட்டிற்கு வழிவகுத்தவர் கம்பர். மலாசியா, இந்தோனேசியா ஆகிய தூரகிழக்கு நாடுகளிலும் இன்று இராமாயணக்கதை பரவியிருக்கிறதென்றால், அதற்காகத் தொண்டாற்றிய பெருமக்கள் தமிழகத்தின் வழியாகத்தான் அந்த நாடுகளுக்குச்சென்றனர். அவர்களில், தமிழரும் இருந்திருக்கக்கூடும்! தமிழில் கம்பர் படைத்த இராம காதையையும் அவர்கள் பயன்படுத்தியிருக்கக் கூடும். கம்பரை தன் பிரசாரக் கருவியாகப் பெற்ற இராமன் மிக்க அதிர்ஷ்டசாலி!

வாழ்க, கம்பர் புகழ்!
வளர்க, கன்னித் தமிழ்!

['செங்கோல்' 21-4-68]

★